உன்னுடையசுண்டாயம் நானறிவன்என்று கீழ்ச்சொன்னத்தாலே இப்ரபமவாதாகமும் கண்ணி ணையும் செவ்வாய்முறுவலுமென்று கீழ்ப்பாட்டிலேசொன்னத்தாலே த்விதீயவாதாகமும் நின்னருள்சூடு வாரென்று கீழச்சொன்னத்தாலே இவ்வுத்தராயத்திணகமும் வாநராகமன்றோவென்ன ஸவதரிப்பிக் கிறார் (இப்படியித்யாதியால) விநீதனுயருளிசசெய்தவென்றது - நான் ஜாத்யாதிஸவ்யதியாகையாலே குழ லூதுகிறேனததனைபோக்கிப் பெண்களையழைக்கைக்காகவோ நான் குழலூதுகிறது, உன்னையல்லது நானறி வேனோ? குழலூதுபோயிருந்தென்று நீ சொல்லுவானேன்? என்னைப்போலே சிலவார்த்தைகளை யருளிச்செ ய்தவரேயென்றபடி. வாத்வத்தைக்காட்டிலும் ப்ரஹ்லாதநிர்வயிகவளருய்தம் அவனுக்குப்பிறக்கை யாலும் விநீதனுயருளிச்செய்கையாலும் முன்பு சொன்னவற்றையே பின்னையுமிப்பாட்டிலே ஸ்காராந்த ரேண சொல்லுகிறாளென்றுகருத்து. ப்ரபமவாதத்தையுரைக்கிறார் (இவற்றையெல்லாமித்யாதியால்) உன் னாலே யென்னவேண்டியிருக்க பெருமானாலேயென்று பரோக்ஷத்தில்போலே சொல்லக்கூடுமோ என்ன? அவன்சொன்னதுக்கு உத்தரத்தைச்சொல்லிப் பின்னையும் வாராஹவியாய்க்கொண்டு தானாக ஸம்வாதமயிக்கி றாளென்று ஸமர்த்திப்பிக்கிறார் (உபாலம்பித்துவைத்தென்று) த்விதீயவாதத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கி றார (உன்னுடையவித்யாதியால்) ஸ்வரூபஸ்யோதநத்தைச்சொல்லுகிற த்ருதீயவாதத்துக்குத் தாத்பர்யமருளிச்

ச—பண்ணுகைக்காகவவற்றைதூரத்திலேபோகவிட்டென்றபடி. குழலூத ஸஹ்யம். குழலூதவேபெண்களெ ல்லாம் உன்தாற்கீழே வந்துவிழுவாரென்றிவள். சொன்னத்தைகக்கேட்டவன் இங்கே இருந்தே யூததகடங்கின வாறே சொல்லுகிறாள். போயிருந்து - உன்னுடைய விஷயங்கள்வந்து சேரும்படியானஸ்தாநங்களிலே போ யிருந்தென்றபடி. குழலூதென்றுகீழோடேசுவயம். உன்னுடையவிஷயங்கள்வநது சேருகைக்கிறே நானுபா யஞ்சொன்னது. உனக்கிங்கு விஷயங்களில்லையே என்றுகருத்து. * ।உ॥

நின்புள்ளுவம் - உன்னுடைய கள்ளவார்த்தைகளை, புள்ளுவம் - கள்ளவார்த்தை. அறியாதவர்க்கு - புதிதா க உன்னோடு கலந்தவர்களாகையாலே அறியாதிருக்கும்பெண்களுக்கு, இதுக்குஉரையென்கிறத்தோடே சுவ யம். போயிருந்து — உன்பொய்களை யறிநதிருக்கிற எங்கள் முகப்பினின்றும் போய்அவையறியாதபெண்கள் கோஷ்டியிலே யிருநது, உரை — சொலலு, நீ சொலலுகிறவையெல்லாம் சொல்லு என்றபடி. நம்பி - பூர்ணை னே, உனக்கெங்களால ஸவெக்ஷயுண்டோ வென்றுகருத்து, நின் - உன்னுடைய, செய்யவாய் - ஸாராகமாயிரு க்கிற, இரும் - பெரியதான, ஸ்ராவ்யமானவென்றபடி. கனியும் ஷைமுபம்; வி பஷைமுமென்றபடி. கண்களும் ஜோவநங்களும், இந்நாள் - இப்போது, விபரீதம் - வாத்வமொருககாலத்திலுமில்லாத ப்ரஹ்லாதவிகா ரவ ஸாவியாயிராநின்றது வேய்- மூங்கிலிற்காட்டிலும், இரும்- ஸதிஸயிதமான, ஸ்ரூதுவாஸ ஸௌந்தர்யத்திற் காட்டிலும் வக்ரமையாலே ஸதிஸயிதமான, வென்றபடி. தடம் - விசாலமான, ஸாவஷமானவென்ற படி. தோளினார் - தோள்களையுடையவராய், இதுக்குப்பெறுவார் என்கிறத்தோடே சுவயம். மா - ஸ்யாமளமான. ஸ்யாமளமானவென்றபடி. இரும் — விசாலமான, ஸதிவிஸாலமானமென்றபடி. கடலை - ஸமுத்ரத்தை, கடைந்த

மூ—க்கடைந்தபெருமானாலே* ||௩||

ஆலினிலையாயேழுலகுமுண்டன்றுநீ கிடந்தாயுன்மாயங்கள்* மேலைவானவருமறியாரினியெம்பரமே*
வேலினேர்தடங்கண்ணினார்விளையாடுசூழலைச்சூழவேநின்று* காலிமேய்க்கவல்லாயெம்மைநீகழறேலே* ||௪||

ஆறா— ஸர்வஜ்ஞ [illegible] ஸர்வஶக்தியாய் [illegible] பெரியபிராட்டியாரோடன்று கலந்தகலவியாலும் பிறந்ததில்லை, இப்படி பெரியபிராட்டியிற்காட்டிலும் முனைக்கவிதேசகளாய் உன்னை ஸாக்ஷிச்சப்பிறந்தவர்களாரோவென்கிறாள். ||௩||

(ஆலினிலை) நம்முடைய விஸ்ம்ருதிறே விவனுடைய விவ்வதிஶயத்துக்கு காரணமென்றுபார்த்து நான் பரதந்த்ரனல்லனோ? எனக்குப்பசுமேய்க்கப்போகவேண்டாவோ? நீ நினைத்தபோதே வரலாயிருக்குமோ ஆகையால்விளம்பித்தேன், மற்றொன்றால் விளம்பித்தேனல்லேன் என்றிவனருளிச்செய்ய ஸர்வலோகங்களையுமமுதுசெய்து ஓராலிலையிலே கண்வளர்ந்தருளின விசேஷாஶ்சர்யத்தையுடையவுனக்குப் பசுமேய்க்கப்போனேனென்றொருபொய்யைக் கேட்டார்க்கு மெய்யென்றிருக்கும்படிசொல்லுகை யாஶ்சர்யமோ? பசுமேய்க்கப்போனமை பொய்யோவென்னில்? வேலினேர்தடங்கண்ணினார்விளையாடும் மணல்குன்றுகளிலேநின்றன்றோ

இ—செய்கிறார் (திருப்பாற்கடலிலே உதாஹரிப்பால்) இத்திருவருள்பெறுவாராயவர்என்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இப்படிபெரியவிதாரிபால்) இவனுக்கிந்த ப்ரணயித்வாதிகளெல்லாம் நம்மையவர்களாகவு த்துவந்தென்று நிரூபித்துச்சொல்லுகிறாளென்றுகருத்து. ||௩||

✳ நாலாம்பாட்டு. ✳

க்ருஷ்ணனைக்குறித்து வார்த்தைசொல்லாநிற்கச்செய்தே வடதளஶாயிவ்ருத்தாந்தத்தைச்சொல்லுகை ஸம்பந்தமன்றோவென்ன அதுக்குத் தாத்பர்யஞ்சொல்லுகைக்காக அவதாரிப்பிக்கிறார் (நம்முடையவிதாரிபால்) பரதந்த்ரனல்லனோவென்றது - விதுராதிகளுக்கென்றுகருத்து. வாக்யார்த்தத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸர்வலோகங்களையுமிதாரி ஆஶ்சர்யமோஎன்றுமளவாலே) பொய்யையென்கிறதற்குச்சொல்லுகையென்கிறதோடே அந்வயம். நீ பசுமேய்த்ததுபொய்யென்றுசொன்ன இவள் காலிமேய்க்கவல்லாயென்று

ப—ரமபதம்பண்ணினவனுன, பெருமானாலே ஸ்வாமியாலே - இத்திருவருள்-இந்த ஸ்ரீக்ருஷ்ணசேஷ்டையை, தங்கள்தோளழகைக்கண்டால் அப்ரதிமஸௌந்தர்யமான ஸ்ரீஸௌந்தர்ய ஸம்பந்தத்திற்காட்டிலும் அதிஶயித பரவனுக்கண்டு உகந்தருளுகையாகிற இந்த க்ருஷ்ணசேஷ்டையையென்றபடி. பெறுவார் - அடைந்திருக்கிறவர்கள், யவர்கொல்- எந்தமஹாபாக்யவதிகளோ, நாமவர்கள்அல்லோமே? இவனிங்ஙனே ஸாதிக்கிறானென்றபடி.

ஏழுலகும் - ஸர்வலோகங்களையும், உண்டு - வயிற்றிலே வைத்துக்கொண்டு, அன்று - அந்த ப்ரளயகாலத்திலே, ஆலின் - வடவ்ருக்ஷத்தினுடைய, நீள் - நீளாநிற்கிற அக்காரதலைமேல கழிந்து அப்போதுதான்நீளாநிற்கிற வென்றபடி. ஆலின்நீள் என்கிறவிடத்தில் னகாரஸ்ய நகாரோவர்ண வர்ணவிகாரஸ்யாவா: [உத்தரஸ்யவர்ணவிகாராதேஶவா] இலைவதத்திலே, நீ - ப்ரளயார்ணவத்தில் விழுவோமென்றறியமாட்டாதபடியான ஶைஶவத்தையுடையவனான நீ, கிடந்தாய். கண்வளர்ந்தருளினாய், உன்மாயங்கள் - உன்னுடைய ஆஶ்சர்யங்களை, மேலைவானவரும் - ப்ரஹ்மாதிகளைக்காட்டிலும் மேலான நித்யஸூரிகளும், அறியார்-அறியமாட்டார்கள், இனி - அவர்களுங்கூட அறியமாட்டாத பின்பு, எம்பரமே - எங்களுடைய பாரமோ, எங்களுக்கறியப்போமோ வென்றபடி. வேலின்-வேலுக்கு, வேலென்கிற ஆயுதவிஶேஷத்துக்கு, வேலென்று ஸாதகமான ஶஸ்த்ரத்துக்குப்பேர். ஏர் - ஸத்ருஶமான, வேல்போலே ஸக்ருத்தர்ஶனத்தாலே பரபக்ஷிணையழிக்கத்தக்கதான வென்றபடி. தடம் - விஶாலமான, கண்ணினார் - கண்களையுடையவர்களான - பெண்களானவர், விளையாடு - விளையாடுகிற ஸ்தலமான, சூழலை - ஸ்தானங்களை, பாஷிகஸ்தானங்களையென்றபடி. சூழவேநின்று - அவ்விடங்களை விட்டுப்போகமாட்டாதே அவற்றைச்சுற்றிக் கொண்டேநின்று என்றபடி. காலி-மொக்களை, மேய்க்கவல்லாய் - வயிறுநிறைக்கைக்கு ஸமர்த்தனானவனே, இது உபாலம்பகர்மான ஸம்போதி. த்ருணமுமில்லாத ப்ரதேஶங்களிலே பசுக்களைமேய்க்கை ஸம்பாவிதமோவென்று கருத்து. நீ - ஸர்வஜ்ஞதாதிகளுமே ஸ்வபாவமான நீ, எம்மை - உன்னுடைய க்ருத்யங்களையறிந்திருக்கிறவெங்களை, கழறேலே- அஸத்யவார்த்தைசொல்லாதே கொள், கழறுகை - அஸத்யவார்த்தைசொல்லுகை. * ||௪||

ரு—கழறேல்நம்பியுன்கைதவமண்ணும்விண்ணுநன்கறியுந்திண்சக்கர* நிழறுதொல்படையாயுனக்கொன்றுணர்த்துவனான்* மழறுதேன்மொழியார்கணின்னருள்சூடுவார்மனம்வாடிநிற்கவெங்* குழறுபூவையொடும்

ஆ—காலிமேய்ப்பது, இந்தப்பொய்களெங்களுக்குச் சொல்லவேண்டாவென்கிறாள். ॥ சுஅ

(கழறேல்) இப்படிதன்னையுபேக்ஷித்து மேன்மேலிவள் சொன்னவார்த்தைகளையே தனக்குப்பற்றாசாகக்கொண்டு இவளுடைய கிளிகளையும் பூவைகளையுமெடுத்து அவற்றைக்கொண்டு திருநாமங்களைச்சொல்லுவித்துக் குழலிசைவுகொண்டு "எண்பக்கல்பொய்யுண்டோ" என்று தானருளிச்செய்ய, உன்னுடையபொய்யை யறியாதாருண்டோ? பகலையிரவாக்கவல்லவனலலையோ? அதுநிற்க ஒருவிஷயஞ்சொல்லக்கேள், அதெதென்னில், உன்திருநாமங்களைக்கேட்கவிருந்தாயாகில் நின்னருள்சூடுவார் மனம்வாடிநிற்க, இங்ஙனேநின்று [illegible]

ஈ—சொல்லுகை பலமமதன்றோவென்ன அவதரிப்பிக்கிறார் (பகமேய்க்கப்போனமைபொய்யாவென்னவென்று) எம்மைக்கழறேலென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இந்தப்பொய்களிஷ்யமில்) ॥ சுகூ

ஐந்தாம்பாட்டு

உன்மாயங்களிஷ்யமாலே உனக்குகூடுமிவைகள் சுவநகங்களுண்டென்கிறவர்த்தம் இப்பாட்டிலேசொல்லியிருக்க உன்கைதவவிஷயமாலே, இப்பாட்டிலுமிவ்வர்த்தத்தைச்சொல்லுகையும் இவளுடையபூவைகிளிகள் சுகவிஷயவஸ்துக்களாயிருக்கையாலே இவனவற்றையெடுக்கமாட்டிற்றிலன் என்று ஆவேசமுத்தமேசொல்லியிருக்கக் குழறுபூவையொடுங் கிளியோடுங் குழகேலென்கையும ஸங்கதமோவென்ன அவதாரிப்பிக்கிறார். (இப்படிவிஷயமால்) ஆசங்காவிஷயத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (உன்னுடையவிஷயமால்). திண்சக்கரநிழறுதொல்படையாயென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (பகலையிஷ்யமால்) உனக்கொன்றுணர்த்துவனானென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஆகாசிக்கவிஷயமால்) குழறுபூவையென்றும்

ஙா—நான்சொன்னதெல்லாம் பொய்யமெய்யாக உபபாதித்ததாக்கியென்னை இப்படிகூடுமிவனோடுசொல்லலாமோ.வென்றிவன் அருளிச்செய்தவாறே சொல்லுகிறாள் (கழறேலநம்பியென்று) நம்பி — பெரியவனே! கழறேல் - கவிழவித்து வாதைசெய்யாதே கொள், பெரியவனென்றுகொண்டு எங்களை கவிழவித்து வாதைசெய்யாதே கொள்ளென்றபடி. உன்கைதவம் - உன்னுடையபொய்யை, மண்ணும் - லீலாலோகமும், விண்ணும் - பரமபதலோகமும், நன்கு-நன்றாக, அறியும் - அறிந்திருக்கும். திண் - த்ருடமான ஐபத்யபத்தினுன்னைப் பகலை யிரவாக்க வேணுமென்றுநீயொரு பொய்யிலே. துணிந்தால் அதைத்தலைக்கட்டித்தரவல்ல ஸாமர்த்த்யத்தை யுடைத்தானவென்றபடி. நிழறு - தேஜஸ்ஸுப்ரகாசியான, நிழறுகை - தேஜஸ்ஸுகள் ப்ரகாசிக்கை. சக்கர - சக்ராயுதத்தை யுடையாய்- ஸாமாவிகமான ஆயுதத்தை யுடையவனே, தொல் - ஸ்வாபாவிகம். படை - ஆயுதம் புடையுடையவன் படையான். படையா யென்று ஸம்போதிப்பது. பகலையிரவாக்கின உன்னுபாயமே உன்பொய்க்குஸாக்ஷியன்றோவென்று கருத்து. ஐயத்ரவதரணம் இந்த மொழிகைக்கு ஸம்ஸ்ருஷ்டனானு ஞ்சநவமொழிகளும் நானாவதவிதமென்று உணராததற்கு। வியதலாத்தி தாவிஷ்ணுமாயையென வருடெப்பிரமஷ்ணாது காஞ்சனமே என்றுக்ருஷ்ணனுடைய ஸம்ஹாராதவாரிகளையும ஆமியின்னிலையென்றிவனுடைய வஞ்சகசெய்திகளும், அவனுடைய ப்ரஸாதவிஶேஷத்தாலேயறிந்து சொல்லுகிறாப்போலே இந்த ஸவித்ருஜனத்தையும் அப்படியே யறிந்து சொல்லுகிறாளாதல்? ப்ராசீநவாக்யத்தில் ஸ்வஷாவகாரத்திலேயுண்டான ஜயத்ரதவதாணத்தை யறிந்துசொல்லுகிறாளாதல்? ஆகையாலேவிரோதமில்லை. உனக்கு - எங்கள் பூவைகிளிகள்முகத்தாலே உன்திருநாமங்களைக் கேட்க ஆசைப்படுகிற உனக்கு, ஒன்று - ஒருவிஷயத்தை, நான் உணர்த்துவன் - நான் அறிவிக்கிறேன்? ஸாவதாநமாகக்கேளென்று கருத்து. மழறு - மழலையான, அவ்யக்தமதுரமாகையாலே மதுரமானவென்றபடி, தேன்மொழியார்கள் - தேன்போலே இனிதான உக்திகளையுடையவர்களான, மொழி - உக்தி. நின்னருள்சூடுவார் - உன்னுடைய க்ருபையை ஶிரஸா [illegible]வர்கள், ஸாதரம் பந்தாநாஸம்பாதநமேதம் அநந்யப்ரயோஜநரான பெண்களை [illegible] நீ விரும்பினதால் மனஸ்ஸு வாடும்படியிருக்க, இதுக்குக் குழகேலென்கிறதோடே [illegible] வழிவிட்டால் பின்னை நீ அத்தைக்கண்டுபொறுக்கமாட்டாய், கிடாயென்றுகருத்து. [illegible], குழறு - நன்றாகவார்த்தை சொல்லவறியாததான, பூவையொடும் - ஶாரிகை களோடேயும்

மூ—கிளிமொய, டுங்குழகேலே* ௭

குழகியெங்கள்குழமணன்கொண்டுகோயின்மைசெய்துகன்மமொன்றில்லை* பழகியாமிருப்போம்பரமேயி
த்திருவருள்கள்* அழகியாரிவ்வுலகமூன்றுக்குந்தேவிமைதகுவார்பல நளர்*

ஆ—உங்களுடைய பூவைகளையும் கிளிகளையும் உன் திருநாமங்களைச் சொல்லுவித்துக்கொண்டு சேராதே உன்னுடைய மழறுதேன்மொழியார்களைச் சொல்லுவித்துக்கொண்டு போவென்கிறாள். ௭

(குழகி) முற்பட இவளையணுகக் கூசியிருந்த எம்பெருமான் இப்படி இவள் தன்னைக் குறித்துச் சில வார்த்தைகளைச் சொன்னவாறே அதுவே பற்றாசாக நிலையனாய்ச் சென்றணுகி இவளோடேயிருந்த குழமணனை யெடுத்தருள "குழகியெங்கள் குழமணன்கொண்டு அடிக்கழிவு செய்தானுனக்கென்ன ப்ரயோஜநமுண்டு" என்றிவள் சொல்ல, என்னுடைய ஆஜ்ஞாபாலநமாக வெடுத்தேனென்று அவன் அருளிச்செய்ய, நாங்களிப்போது உனக்குப் பழகியோமல்லோமோ? உன்னுடைய இந்த நிரவதிகமான ஸந்நிவேசத்துக்கு நாங்கள் விஷயமாகப் போதுவோமோ? என்றிவள் சொல்ல, நீ பலவுமமற்றெனக்கு ஸூசகமணி பவிஷ்யமுண்டோ?

இ— மழறுதேன்மொழியென்றும் வாஸ்வாரஸ்யத்தொமிகமாக விசேஷணம் வைத்ததுக்கு அபிப்ராயமருளிச்செய்கிறார் (எங்களுடையவித்யாதியால) சேஷாஸ்ஷம். ௭

இப்பிராட்டி விஶ்லேஷபாயிருக்கையாலே கிட்டமாட்டாதே ஸீதனாயிருந்த இவன் இப்போதும் இவள் அபிஸந்தியன்றிக்கேயிருக்க இவளுடைய குழமணனையெடுக்க ப்ரஸக்தியில்லாமையாலே இப்ப்ரஸங்காவாதத்தில் உக்தி அஸம்கதமன்றோவென்ன அவதாரிப்பிக்கிறார் (முற்படவித்யாதியால்) பாடே - ஸமீபத்திலே, ப்ரஸங்காவாதத்தையுரைக்கிறார் (குழகியித்யாதியால்). அடிக்கழிவு - ஶப்தமோஹம், அதாவது:- இவர்களுடைய ஸங்கல்பமும் நம்முடையகையிலே யகப்பட்டபின்பு விவாதம்தீர்ந்ததென்று ஜயித்தவனுடைய ஜயவாதம் வாக்வேலாதாரவாக்யங்களொன்றோடும் அநயிக்கவில்லையேயென்ன அவதாரிப்பிக்கிறார் (என்னுடையவித்யாதியால்) பழகியாமிருப்போமென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நாங்களித்யாதியால்) பரமேயித்திருவருள்களென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (உன்னுடையஇந்த நிரவதிகமானவித்யாதியால்) உனக்குஸ்தாபதமெசுகள் அநேகரென்று விஸ்வஸ்கரித்து கீழே ஸங்க்ருஹசொல்லியிருக்க பலருண்ர் என்றிப்போது ஸாயிக்கிறப்போலே சொல்லுகை அஸம்கதமன்றோவென்ன அவதாரிப்பிக்கிறார் (நீ அல்லதித்யாதியால) இவ்வுலகமூன்றுக்கும் அழகியாரென்றநயித்துக்கொண்டு த்ருதீயவாதத்துக்குத் தாத்பர்ய-

அ—கிளிபோடும - ஸங்கங்களோடேயும், குழகேல் - ஸ்நேஹம் கொண்டாடாதே கொள். குழகுகை - ஸ்நேஹம் பண்ணிப்பழிக்கை, எங்குழறுபூவை - நின்னருள்சூடுவார் - தேன்மொழியார்கள் - என்கிறவிவை ஸாஹித்யநிஷேதாங்கள். இப்பூவைகிளிகள் எங்களதாகையாலும் இவை உனக்கு ஸௌஹ்ருதம்படி வார்த்தைசொல்லவறியாமையாலும் அவர்கள் நின்னருள்சூடுவார்களாகையாலும் தேன்மொழியார்களாகையாலும் இவற்றைப்போகட்டு விட்டு அவர்கள் ஸந்நிதிக்கே போகையேயுனக்கு ஹிதமென்று ஆஶயம். இங்குபூவையும் கிளியுமென்கிறது ஸாவஷேஶத்திலே ஆழ்வாருக்கு உசாத்துணையாகைக்கு யோக்யமான ஸ்வபாவத்தையுடைய ஸம்ஸ்க்ருதஜநத்தையும், ஶிஷ்யஸமூதாய் ஆழ்வாருக்கு ரக்ஷணீயரான ஶப்தகவிகளையும் ஸூசிப்பிக்கிறது.

குழகி - எங்களை வஶீகரிக்கைக்காக சில சேஷ்டிதங்களைப்பண்ணி, எங்கள குழமணன் - எங்களுடைய ஸ்வாதீநமான ப்ரக்ருதிமையை, குழமணன் - பாவநாஸ்வாதீநமான ப்ரக்ருதியைக் கொண்டு - ஹஸித்துக்கொண்டு, கோயின்மை - மேன்மையை, நாம் ஜயித்தோமென்றிருக்கையை செய்து - ஸம்ப்ரதம், கன்மம் - கர்மம், ரக்ஷணபாகஸம்பந்தமான ப்ரயோஜநமென்றபடி. ஒன்றில்லை. யாம் - நாங்கள், பழகி யிருப்போம் - உன்னுடைய பொய்களிலே பழகியிருப்போம், வ்யவஹாரமறிந்திருப்போமென்றபடி. இத்திருவருள்கள் - இந்த ஸ்ரீக்ருபைகளானவைகள். நீ செய்கிற இந்த ப்ரஸாதங்களெல்லாமென்றபடி. பரமே - எங்களுக்கு ஸம்மதமோ, எங்களுக்கு ஸஹ்யங்களோ - எங்களுக்கு ஸஹிக்கத்தக்கவைகளோ வென்றபடி. இவ்வுலகமூன்றுக்கும் - இந்த லோகங்கள்மூன்றுக்கும், லோகத்ரயஸ்தரான பாவதிகளில் காட்டிலுமென்றபடி. அழகியார் - ஸௌந்தர்யத்தை யுடையவர்களாய், தேவிமை - தேவிகளாகைக்கு, உனக்கு தேவிகளாயிருக்கைக்கென்றபடி. தகுவார் - யோக்யரானவர்கள், பலர் - பஹுஸங்க்யர் உளர் - உளராயிருக்கிறார்கள், - அங்கேபோவென்று தாத்பர்யம்.

மூ—கழகமேறேனம்பியுனக்குமிளைதேகன்மமே* ॥ சு ॥

சன்மமன்றெங்கள்கையிற்பாவைபறிப்பதுகடன்ஞாலமுண்டிட்ட* நின்மலா நெடியாயுனக்கேலும்பிழைபிழையே

ஆ—வென்றவனருளிச்செய்ய, லோகத்திலுள்ளாரிலும் மழுங்கியானுனக்கே தேவிமைக்குறுப்பாயிருப்பார் எத்தனைவருளர்; அதுநிற்க, நீ முந்துறவெங்கள் வஸிஷ்த்திலவந்தேறாதேகொள், இதுவுனக்கு மிளைய தானகூடு மென்கிறாள். ॥ சு ॥

(சன்மமன்று) இப்படியவன் நியாயமாணனுமிருக்கச்செய்தேயும் இவளுடையவஸிஷ்த்திலேயேறி இவளுடையகையிற் பாவையைப்பறித்தருள, எங்கள்கையிற்பாவையைப்பறிப்பது உனக்கு ஸ்வரூபமோ,

இ—மருளிச்செய்கிறார் (லோகத்தில் ஸ்ரீயால்) எத்தனைவருளரென்றது - எத்தனைபேருண்டாயிருக்கிறார்களென்றபடி. ஸ்வாதந்த்ரனாரேவென்று தாத்பர்யம். கழகமேறேல என்கிறதையுரைக்கிறார் (அங்கஸ்ரீ தரிஷ்டால்) * * * * * ॥ சு ॥

✱ஏழாம்பாட்டு.✱

கழகமேறேல்நம்பியென்றித்தனை யநாதரித்திருக்கச்செய்தே அவனிவள்கையில் பாவையைப்பறிக்கை ஸஹாவிகமல்லாதிருக்க "கன்மமன்றெங்கள்கையில் பாவையைப்பறிப்பது" என்கை யஸம்பந்தமன்றோவென்ன அவதாரிப்பிக்கிறார் (இப்படியிருக்ஷியால்) கழகமேறேல் என்றிவள் நிஷேதிக்கையாலே இவளுடையமொழியில்புகிரப்பெறாதொழிந்த வெம்பெருமான்செய்யலாவதொன்றும் காணாமையாலே இவளுடைய ஸ்ரீமோசகாரணமான பாவையைச்சென்றெடுப்போமென்றுபார்க்க, இவனுடைய ஐம்மிதத்தையறிந்து பிராட்டியுந்தோழிமாருமாகப் பாவையைச்சென்று தாங்கள்எடுத்துக்கொள்ள, இவர்கள்கையில் பாவையைப்பறித்தாரென்றுகருத்து. கன்மம்என்றுஎன்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (உனக்கு ஸ்வரூபமோமென்று) நின்ம

ப—இவளிப்படிசொன்னவாறே இவனிவர்களுடைய வஸிஷ்த்திலேவந்து புகிரப்புக்கான், அத்தைக் கண்டு சொல்லுகிறாள். நம்பி - பூர்ணனே, கழகம் - எங்களுடைய வஸிஷ்த்தை, கழகம் - வஸிஷ்ம், ஏறேல் - ஏறாதே கொள்ளீர், பெரியவராகையாலே பாலைகளானவெங்கள் மொழியிலே யேறாதேகொள்ளு மென்றபடி. "தீமை செய்யுஞ்சிரீதரா" என்று எனக்கு வ்யஸிபாகையாலே நாலுபெண்கள் இருந்தவிடத்தே தீம்புசெய்கையெனக்கு ஸ்வரூபமன்றோவென்னச் சொல்லுகிறாள். உனக்கும் - தீமையே ஸ்வபாவமான உனக்கும். இளைதே - பாலிஸமேயான, கன்மம் - கர்மம். எங்கள் மொழியிலே புகிருகை யுனக்கும் பாலிஸமான க்ருத்யமென்றபடி. இவ்விடத்தே பட்டர் அருளிச்செய்வதோர்வார்த்தையுண்டு, "ஸகலஜ்ஞான ஜ்ஞாதாக்களும் உபயவிபூதிநாதருமான ஸர்வேச்வரன் நாலு இடைப்பெண்களிருந்தவிடத்தேபுக்கல்லதுநிற்கமாட்டாதனன ஸௌலப்யத்தை [illegible] அவர்கள். நீஇங்குபுகிராதேகொள் என்ன, விலங்கிட்டாப்போலே போகவும் திரியவும் மாட்டாதே தடுமாறு நின்றானென்கிற ஸௌசீல்யம் ஆரறிந்துகொண்டாடவல்லார் இந்த [illegible] எழுதியிட்டு வைத்துப்போனார்களோ" வென்றருளிச்செய்வர் இங்குகுழமணனென்றது ஸர்வமங்களத்திலே ஆழ்வார் பாசுரங்களிலே பாகவதர்களொன்றுஞ்செய்யக் காணப்பெறறிலோமென்று ஆற்றாமையிலே [illegible] உடையநங்கையார் முதலானோர் இவரெழுந்தருளியிருக்கிற திருப்புளியின்கீழே கொண்டு வந்திட்டு வைத்திருக்கிற குழமணன் முதலான பகவத்பரிகரங்களை ஸூசிப்பிக்கிறது. * * * * * * * ॥ சு ॥

எங்கள்கையில் - எங்களுடைய கையிலேயிருக்கிற, பாவை - க்ரீடோபகரணமான பாவையை. பறிப்பது - எங்களைத் தீண்டிப்பறிக்கை, சன்மமன்று - கர்மமன்று, க்ருத்யமன்று? உனக்கு ஸ்வரூபமாமென்றபடி. கடல்ஞாலம் - ஸமுத்ரவ்ருதமான ப்ருதிவியை, உண்டிட்ட - ரக்ஷித்தவனே, வயிற்றிலே வைத்து ரக்ஷித்தவனேயென்றபடி. நின்மலா - நிர்மலனே, ஜகத்ரக்ஷணத்துக்கொரு ப்ரயோஜநத்தை அபேக்ஷிக்கையாகிற தோஷமற்றவனேயென்றபடி. இப்படி ஜ்ஞானகுணாயிகனானவுனக்கித்து ஸ்வரூபமாமோவென்னச் சொல்லுகிறாள். உனக்கேலும் - உனக்காகிலும், ஸர்வஜ்ஞனான விசிஷ்டனானவுனக்காகிலுமென்றபடி. [illegible] எங்களைத்தீண்டிப்பறிக்கையாகிற ஸ்வரூபமானது ஸ்வரூபமேயாயிருக்கும்,

மூ—மழையே* வன்மமேசொல்லியெம்மை நீவிளையாடுதியதுகேட்கிலென்னைமார்* தன்மபாவமென்னு
ரொருநான்றுதடிபிணக்கே* ௭॥

பிணக்கியாவையும்யாவரும்பிழையாமற்பேதித்தும் பேதியாததோர்* கணக்கில்சீர்த்திவெள்ளக்கதிர்
ஞானமூர்த்தியினாய்* இணக்கியெம்மையெந்தோழியார்

ஆ—அநந்யப்ரயோஜநராய்க்கொண்டு ஸவஸ்தாக்களையும் வயிற்றிலேவைத்து ரக்ஷிக்கும் தாயைப்
போலே இத்தனையுமுனக்கு ரக்ஷகத்வத்தைவிளக்குமென்றிவள்சொல்ல, அதின்மேலேபனிமொழிகளை யி
வனருளிச்செய்ய, இங்ஙனே அதிஸ்நிக்தமான வசனங்களையேசொல்லி யெம்மைநீவிளையாடுதி அதுகே
ட்கில்என்னைமார், இதுகூடும்கூடாது என்றுபாராதே உன்னையுமெவ்வுதொருநாளும் சிக்ஷிப்பதும் செய்
யாரென்கிறாள். ௭॥

(பிணக்கி) இப்படியிவன் க்ருத்ரிமஞ்செய்து நம்மையிங்கிருந்து விளையாடவொட்டானாகில் நாமிங்குநின்றும்
போவோமென்றுபார்த்துத் தன்தோழிமாரோடே கூப்பிடப்போச்சப்புக நான்போகவொட்டேன் என்றவன்

ஈ—லாயென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அநந்யத்யாதியால்) ஞாலமுண்டிட்டாயென்கிறதற்குத்
தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸர்வாத்யாதியால்) உனக்கேநும்பிழைபிழையேயென்கிறதற்குத் தாத்பர்யமருளி
ச்செய்கிறார் (இத்தனையும் இதாதியால்) பாவையெடுத்து விளையாடுதியென்கையே இங்கு ஸமஸ்தமாயிருக்க
வன்மமேசொல்லி விளையாடுதியென்பானேனென்ன அவதரிப்பிக்கிறார் (அதின்மேலேயித்யாதியால்) பனிமொ
ழிகளை - ஸீதளமானஉக்திகளை, வன்மமேசொல்லியித்யாதிக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இங்ஙனேயித்யா
தியால்) தன்மபாவமென்னாரென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இதுகூடுமித்யாதியால்) ஒருநான்
றுதடிபிணக்கென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (உன்னையித்யாதியால்) ௭॥

✳எட்டாம்பாட்டு.✳

கழகமேறேல்நம்பியென்று தோழிமாருந்தானுமாய் அவனைக்கிட்டவொட்டாதபடி வ்யூஹமிட்டுக்கொ
ண்டிருக்கிற இவள் உணக்கிநீவளைத்தாலென்று தங்களையவன்வளைக்கிறதாகச்சொல்லுகை ஸங்கதமன்றேயெ
ன்ன அவதரிப்பிக்கிறார் (இப்படியித்யாதியால்) விளையாடப்போதுமின் என்னப்போந்தோமையென்கிறதற்குத்
தாத்பர்யமருளிச்செய்கிறார் (அறியாதேயித்யாதியால்) உணக்கியென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார்

ஸ—இப்போதுங்களைத்தீண்டலாகாதென்கிறதென்? ஸர்வம் ஸம்ச்லேஷஸமயத்தில் நானும் நீங்களுமிங்ஙனே
யன்றோ? வென்னப்போலே சில வசனங்களை அவனருளிச்செய்தவாறேசொல்லுகிறாள். வன்மமே - வசனத்தையே,
எம்மைச்சொல்லி - எங்களை நோக்கிச்சொல்லி, நீ விளையாடுதி - நீ விளையாடா நிற்கிறாய், அவன் மெய்யாக
ஒரு வசனம்சொல்ல-இவள் அத்தைவிளையாட்டாக்குகிறாள். அது - அந்தவிளையாட்டை, என்னை மார் - என்னு
டைய ஆனுடன்பிறந்தவர்கள், என்னுடையவ ஸஹோதரிகளென்றபடி. என்னைமாரென்று ஸஹோத
ரிகளுக்குப் பெயர். கேட்கில் - கேட்பார்களாகில், தன்மபாவ மென்னார் - தர்மம்வாவமென்றுபாரார்கள்,
உன்னைமிகவும் பாயிப்பரென்றபடி. அவர்களித்தைக்காணார்களிறேயென்ன சொல்லுகிறாள்:—ஒருநான்று - ஒன்
றேனு மொருநாள் வரையிலே, தடிபிணக்கு - தடியாலே கலஹமாம், உன்னை அத்யர்த்தம் சிக்ஷிப்பரென்றபடி.॥

யாவையும் - ஸகல சேதநங்களையும், யாவரும் - ஸகல சேதநரையும், பிணக்கி - பிணைத்து, வசமா
க்கியென்றபடி. ப்ரளயகாலத்தில் அவிபக்தநாமரூபங்களாக்கியென்கை. பிழையாமல் - தப்பாமல், அவ்வோ
சேதநருடைய கர்மங்களுக்கு ஸாங்கர்யம் பிறவாமலென்றபடி. பேதித்தும் - ஸ்ருஷ்டித்தும், ஸ்ருஷ்டிகாலம்
வந்தவாறே விபக்தநாமரூபங்க ளாக்கினாலுமென்றபடி. பேதியாதது - ஸ்ருஷ்டியாகாதான, தேவமிகாஸ
ஜாதீய ஸாவயவாதி ஸ்ருஷ்டிங்களாலே ஸம்பந்தமில்லாததான வென்றபடி. ஓர் - அத்விதீயமான, இது
ஞானத்துக்கு விசேஷணம். கணக்கில் - ஸங்க்யையில்லாத, சீர்த்திவெள்ள - கீர்த்திஸமூஹத்தை யுடைத்தா
ன, கதிர் - தேஜஸ்ஸ்வரூபத்துக்கு ப்ரகாசமான, ஞானமூர்த்தியினாய் - ஸங்கல்பரூபஜ்ஞானத்தை
உத்தியாக - ஸ்வரூபமாகவுடையவனே, ஜ்ஞானத்தை ஸ்வரூப நிரூபகமாக உடையவனே யென்றபடி.
ஸம்போதி. எம் தோழிமார் - எங்களுடைய ஸகிகளானவர்கள், எம்மை - எங்களை, இணக்கி - கூட்டிக்கொ
ண்டு, நாங்கள் விளையாட இசையும்படி வசனங்கள்சொல்லி எங்களையும் தங்களோடு கூட்டிக்கொண்டென்றபடி.

௮—விளையாடப்போதுமினென்னப்போந்தோமை* யுணக்கிநீவளைத்தாலென்சொல்லாருகவாதவரே* ।அ।
உகவையானெஞ்சமுள்ளுருகி யுன்றாமரைத்தடங்கண்விழிகளி* னகவலைப்படுப்பா

ஆ—தங்களைவளைத்தருள, அறியாதேவிளையாடப்போந்தவெங்களை உன்னுடைய ஸௌந்தர்யத்தாலே ஸிதிலமாக்கிக்கொண்டு ஸர்வேஸ்வரனான நீ வளைத்தால் உன்னையுகவாதாருனக்கென்னபழிசொல்லார்,உனக்கெங்களோடு ஸம்ஸ்லேஷம் வ்ருத்தமென்றும் சொல்லுவாரிறே. ஆனபின்பு இதிடலல்லவென்று அவனை உபாலம்பிக்கிறாள்.

(உகவையால்) தன்னை யெம்பெருமானிப்படிவளைக்கச்செய்தேயும் அவனைக்கடாக்ஷியாதேயிருந்து தான் தோழிமாரோடேகூடச் சிற்றிலிழைத்துச் சிறுசோறிட்டுவிளையாடாநிற்க இவளவனைக்கடாக்ஷியாமையாலே ஏதேனுமொருபடியாலிவள் நம்மைக்கடாக்ஷிக்கவமையுமென்றுபார்த்து இவள் தன்னைப்பார்த்தருளும்படியாக இவளுடையசிற்றிலைத் தன்னுடையதிருவடிகளாலே யழித்தருள, இவளுமவனுடைய திருமுகத்தைப்பார்த்து அவனுடைய திருக்கண்களின் அழகாலே வஸீக்ருதையாய், உன்பக்கலுள்ள

இ—(உன்னுடையவிக்ரமியால்) ப்ரவ்ருத்தினமித்தத்தை ஸம்ஹ்ருவிக்கிறார் (ஸர்வேஸ்வரஸ்வத்தாலே) என்சொல்லாருகவாதவரென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (உன்னையுகவாதாரித்யாதியால்) ஸம்ஸ்லேஷம்வ்ருத்தமென்று மிதவனுக்கிஷ்டாவதியன்றோவென்ன இதுக்குப் பாவதாத்பர்யமருளிச்செய்கிறார் (அவனை உபாலம்பிக்கிறாளென்று) நாங்களுமக்கத்ருஷ்டவிஷயங்களன்றோ? எங்களோடு ஸம்ஸ்லேஷம்வ்ருத்தமென்றால் உமக்கு தோஷமன்றோவென்று உபாலம்பரூபமாகச்சொல்லுகிறாளென்றுகருத்து. ।அ।

ஒன்பதாம்பாட்டு.

அவனைமுகம்பாராதே கடாக்ஷித்திருக்கிற விப்பிராட்டி தடங்கண்விழிகளின்கவலைப்படுப்பான் என்று தான் அவனுடைய கண்ணழகிலே அகப்பட்டதாக விப்பாட்டிலேசொல்லுகை யஸமஞ்ஜஸமன்றோவென்ன அவதரிப்பிக்கிறார் (தன்னையித்யாதியால்) சிற்றிலிழைத்துஎன்றது - மாடங்கட்டியென்றபடி. சிறுசோறிட்டென்றது - இட்டுச்சோறுசமைத்தென்றபடி. சிற்றில் - சிறியவையானக்ருஹங்கள், இழைக்கை - விரலிலேகளாலே ரசிக்கை, சிறுசோறு - சிறியவாத்துக்களிலே சமைக்குஞ்சோறு, அடுகை - பாகம்பண்ணுகை, இவன் போகவிட்டேனென்றுவளைத்தவாறே போகமாட்டாதேநின்ற இவள் இனியிவனுடையமுகம்பாராதேயிருப்போம் என்றத்யவஸித்து பேசாதேயிருந்தவாறே தன்னைநினைத்துக்கொண்டிருக்கிறாளென்றெண்ணியிருக்கும் இவளென்றுபார்த்து கத்ருவாமதேதோற்றச் சிலவாகுஷ்டிதங்களைச் செய்யத்தொடங்கினானென்றுகருத்து. ஏதேனுமொருபடியாலென்றது - கோபத்தாலேயாகிலுமென்றபடி. (அவனுடையதிருமுகத்தையித்யாதி) சிற்றிலையழித்தவாறே கோபம்பிறந்து தன்னுடையஸங்கல்பத்தைமறந்து அவன்முகத்தைப் பார்த்துவிட்டாளென்றுகருத்து. உகவையாலென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (உன்பக்கலித்யாதியால்) கண்டுநின்முக

ஈ—விளையாட - விளையாடுகைக்கு, போதுமின் என்ன - போருங்கோள் என்ன, ஸகைமாருக்களாய் வாருங்கோளென்றுசொல்லுகையாலேயென்றபடி. போந்தோமை - போந்த வெங்களை, நீ இங்கிருக்கிறதை யறியாதேவந்த வெங்களை யென்றபடி. உணக்கி - உணங்கும்படிபண்ணி, உணங்குகை ஸோஷிக்கை, உன்னுடைய ஸௌந்தர்யத்தைக்காட்டி ஸிதிலப்படுத்தியென்றபடி. நீ - ஸர்வேஸ்வரனான நீ, ப்ரவ்ருத்தியில் ஸர்வேஸ்வரத்வம் சொல்லுகிறது, வளைத்தால் - போகவொட்டோமென்று தகைந்தால். உகவாதவர் உன்பக்கல் ப்ரீதியில்லாதவர்கள், உதாஸீநரும் ஸத்ருக்களுமென்றபடி. என்சொல்லார் - எந்தவசநத்தைச்சொல்லார், ஸர்வேஸ்வரனாயிருக்கிறவன் இடைப்பெண்களோடே ஸம்ஸ்லேஷித்தானென்றிப்படி தோஷவசநத்தைசசொல்லுவார்களென்றபடி. இங்கு இணங்கிய தோழியரென்றது ஸாஜாத்யத்தாலே கலந்து ஸௌஹார்தத்தாலே ஸமவிஷயத்திலே கூட்டும் ஸமாஜத்தை ஸூசிப்பிக்கிறது. * * * * * ।அ।

உகவையால் - உன்பக்கல் ப்ரீதியாலே, உகவை - ப்ரீதி, நெஞ்சம் - எங்களுடைய நெஞ்சானது, உள்ளுருகி - உள்ளுருகுமருகி, இதுக்கு அகப்பட வென்கிறத்தோடே அந்வயம். உன் - உன்னுடைய தாமரைத் தடம் - தடாகம்போலிருக்கிற, தடித்திஸ்தலே விஸ்தாரணீயங்களாயிருக்கிற வென்றபடி. கண் - நேத்ரம், விழிகளின்வலையென்றதுவிப்பது - விழிகளாகிறவலையிலே, வீக்ஷணங்களாகிற வலையிலே யென்றபடி, வீக்ஷணம். அகப்படுப்பான் - அகப்படப்பண்ணுகைக் கிச்சையுடையவனாய், எங்கள் சிற்றிலும் -

மூ—னழித்தாயுன் றிருவடியாற்* றகவுசெய்தலையெங்கள்சிற்றிலும்யாமடுசிறுசோறுங்கண்டுநின்* முகவொளி
திகழ முறுவல்செய்துநின்றிலையே* ||௬||
நின்றிலங்குமுடியினா யிருபத்தோர்கா லரசுகளைகட்ட*

ஆ— ஸ்ரீ க்ருஷ்ணாயத்தாலே நெஞ்சுருகிக்கொண்டு உன் தாமரைத்தடங்கண்விழிகளாகிற வலையிலேநாங்கள் அகப்படுகைக்காக எங்கள்சிற்றிலும் யாமடுசிறுசோறும் உன்திருவடியால் அழித்தருளினாய், நாங்கள் விளையாடுகிறபடியைக்கண்டுகந்துகொண்டு நிற்கமாட்டிற்றில்லை, ஒன்றும்க்ருபையில்லை யாகாதேயென்றுகொண்டு தன்னுடையஅத்யவஸாயத்தை யெம்பெருமான்தன்னழகாலே யழித்ததாக அவனையின்னாதாகிறாள். ||௬||

இ—வொளியிக்ருஷிக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நாங்கள்விளையாடுகிறவிக்ருஷியால்) தரவில்லையேயென்கிறதையுரைக்கிறார் (ஒன்றும்க்ருபையில்லடாகாதேயென்று) இவளை அவன்தன்னுடைய திருக்கண்களினழகிலே யகப்படும்படிசெய்துகொண்டதே க்ருபாகார்யமாயிருக்க க்ருபையில்லையென்கிற தெங்ஙனேயென்ன இதுக்குப் பரிஹாரமருளிச்செய்கிறார் (தன்னுடையவிக்ருஷியால்) அத்யவஸாயத்தையென்றது- இவனோடேநாம் ஸம்ஶ்லேஷிப்போமல்லோமென்கிற நிஶ்சயத்தையென்றபடி. அழித்ததாகவென்றது - ஶிதிலமாக்கினதாகவென்றபடி. மேல்பாட்டிலேயிறே ப்ரணயகோபம் நிஶ்ஶேஷநிவ்ருத்தமானதாகச்சொல்லுகிறது. இன்னாதாகிறாளென்றது - வெறுக்கிறாளென்றபடி. தன் அத்யவஸாயத்தை யழித்தானென்கிறவித்தை உகப்பிலேமொவகம்பண்ணிக்கொண்டு சிற்றிலையழித்ததற்கு வெறுக்கிறாப்போலே வெளிக்குபாவித்து வெறுக்கிறாளென்றுகருத்து. அவனோடுஸம்ஶ்லேஷம் விஶ்லேஷாஸஹமாயல்லதிராமையாலே அவனோடுஸம்ஶ்லேஷித்து மீளவும் விஶ்லேஷித்து து:கவ்யஸநபரம்பரைகளை அநுபவிப்பதிற்காட்டில் ஸம்ஶ்லேஷியாதேயிருப்பதே நமக்கு ஹிதமென்றுபார்த்துப்பண்ணின அவ்யவஸாயத்தைக்கலக்கினவனையிவள் வெறுக்கவேணுமிறே. அநுகூலம்பண்ணி இவன் சிற்றிலையழித்தவாறே சிற்றஞ்சிறுகமாய் மிகவும் பேசாதிருக்கப்ராப்தையாயிருக்க அவனைக்குறித்து வார்த்தைசொல்லுகையும் நின்முகவொளிதிகழ முறுவல்செய்துநின்றிலையென்று அவனுடைய ஸௌந்தர்யத்திலே தனக்கபிநிவேஶம்தோற்றும்படி வர்ணிக்கையும் இவளுடைய அத்யவஸாயம் அழிந்ததற்கு ஜ்ஞாபகமென்றுகருத்து. ||௬||

பத்தாம்பாட்டு.

அவனோடேஸம்ஶ்லேஷிப்போமல்லோமென்றுண்டான இவளுடைய அத்யவஸாயம் ஶிதிலமாய்த்தே

ப—எங்களுடைய சிறிய இல்லுகளையும், இல் - க்ருஹம், லீலார்த்தமாக மணல்களாலே செய்யப்பட்ட மாடங்களையுமென்றபடி. யாம் அடு - நாங்கள் அடுகிற, எங்களாலே வலிக்கப்படுகிறவென்றபடி. அடுகை—உவிக்கை. சிறுசோறும் - சிறிய பாத்ரங்களிலேயிருக்கிற சோறுகளையும், உன்திருவடியால் - ஸ்வேச்சம். ஸங்கல்பத்தாலழிக்கலாவது தன் சிற்றிலிறே; இவர்களுடைய சிற்றிலாகையாலே இவற்றை ஸ்வஹஸ்தத் தழிக்கவேணுமே யிவனுக்கு. "க்ரீடாஹேதோரிதம்ஸர்வம்" என்று ஜகத்தெல்லாம் அவனுக்குச்சிற்றிலிறே. அழித்தாய் - கலைத்துவிட்டாய், கண்டு - எங்களுடைய லீலாசேஷ்டைகளைப் பார்த்துக்கொண்டு, இதுக்கு நின்றிலை யென்கிறதோடே அந்வயம். நின்முகவொளி - உன்னுடைய லாவண்யமானது, திகழ - ஹர்ஷாதிஶயத்தாலே உஜ்ஜ்வலமாய்ப்ரகாஶிக்க, முறுவல் செய்து - ஸ்மிதம் பண்ணிக்கொண்டு, நின்றிலையே - நின்றாயில்லையே, தகவு - க்ருபையை, செய்திலை - எங்கள்பக்கல் பண்ணினாயில்லை, எங்களுடைய ப்ரதிஜ்ஞையை ரக்ஷிக்கும்படி க்ருபை பண்ணினாயில்லையென்றபடி. உன்னோடு ஸம்ஶ்லேஷிப்போமல்லோமென்று நாங்கள் பண்ணின ஸங்கல்பத்தையெல்லாம் அழித்துவிட்டாயென்றுகருத்து. எங்கள் சிற்றிலும் யாமடுசிறுசோறுமுன்திருவடியா லழித்தாயென்கிறவித்தாலே ஸாவஶேஷத்தில் இனிஎம்பெருமான் இத்தனைஉபேக்ஷணனன்பு இந்த ஶரீரசேஷ்டைகளைக்கொண்டு பழையபடியை யுண்டுபடுத்து ஸஞ்சாரியாய்த் திரிவோமென்று ப்ரணயகோபத்தால் பிறந்த வாழ்வாருடைய ஸங்கல்பத்தைத் தன்திருவடிகளினழகைக்காட்டி யழித்தபடி ஸூசிதமாகிறது. ||௬||

நின்று - ஸ்தாயியாய்நின்று, இலங்கு - விளங்காநிற்கிற, முடியினாய் - கிரீடத்தையுடையவனே, முடியையுடையவன் - முடியினான், முடியினாய் என்று ஸம்போதநமிருக்கும். இருபத்தோர்கால் - ஏகவிம்ஶதிவாரம், அரசு - ராஜக்களை, களைகட்ட - உபஸர்க்க ப்ராதுர்பாவத்திலே உத்பூதம்பண்ணின, களைகட்டுகை -

மூ—வென்றிநீண்மழுவாய்வியன்ஞாலமுன்படைத்தா * யின்றிவ்வாயர்குலத்தை வீடுய்யத்தோன்றியகருமாணி ௰
க்கச்சுடர் * நின்றன்னால்வீவேபடுவோ மென்றுமாய்ச்சியோமே *
ஆய்ச்சியாகியவன்னையா லன்றுவெண்ணெய்வார்த்தையுட் சீற்ற

ஆ—(நின்றிலங்கு) இப்படியெம்பெருமானுடையவழகாலும் ஸவிஶ்லேஷஜநித ஸிரவஸிகாவஸாதத்தாலு மாகத் தன்னுடையவுடலெல்லாந்தீர்ந்து தன்னையகப்படுத்தின, அவனுடைய அழகையும், ஸௌந்தர்யாதி கல்யாணகுணங்களையும்பேசி, இப்படி மாணவானுமிருந்துவைத்து விஶ்லேஷவ்யஸநங்களாலே யெங்களையென்று மிங்ஙனே நலிவேசெய்துபோனாய், ஆய்ச்சியோமாய்ப்பிறந்து நாங்களுன்னைப்பட்டது உன்னை ப்பிரிந்தாற்படும் வ்யஸநமறியாத நீ யறியாய்காண்? என்கிறாள். ௰

இ—யாகிலும் ப்ராணயாத்ரைவமெல்லாம் நிஶ்லேஷநிவ்ருத்தமாம்படி அவனிவளுடைய திருவடிகளிலேவிழுந்து ப்ரஸாதம்பண்ணுவித்துக்கொள்ளாதிருக்க "நின்றன்னால்வீவேபடுவோமென்றுமாய்ச்சியோமே" என்றுதன க்கவனோடு நித்யமாகவுறவுதோற்றும்படி யிவள்வார்த்தைசொல்லுகை யஸமஞ்ஜஸமன்றோவென்ன கவதரிப் பிக்கிறார் (இப்படியித்யாதியால்) இப்படியென்கிறதற்குத் தீர்ந்ததென்கிறதோடே அந்வயம். இப்படியென்றது- கீழ்ப்பாட்டிலுக்தரீத்யாஎன்றபடி. அதாவது: —அவனை ஸ்ம்ருதிமாத்ரமாகப்பாராதேயிருந்த இவள் தன்சிற்றிலை அ வன்அழித்தவாறே சீற்றம்பிறந்து தன்அத்யவஸாயத்தைமறந்துவாய்திறக்கைக்குமுகமாக அவனைப்பார்க்கையாலே அவனுடைய அழகையெல்லாம் கண்டென்றபடி. ஸவிஶ்லேஷஜநிதவென்கிறவிடத்தில் ஸஶப்தம் இந்தப்பி ராட்டியைச்சொல்லுகிறது. உடல் - ப்ராணயாத்ரைவம், நின்றிலங்குமுடியினாயென்கிறதற்குத் தாத்பர்யமருளிச் செய்கிறார் (அவனுடைய அழகையுமென்று) கருமாணிக்கச்சுடர் என்கிறதின் தாத்பர்யமும் இதிலே ஸம்க்ரு ஹீதம். இருபத்தோரித்யாதி மழுவாயித்யஸ்யத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸௌர்யஶௌர்யத்தாலே) அநபிபவநீயைகளாயிருந்த தங்களைஜயித்தவ்ருத்தாந்தாலே அவனுடையஸௌர்யத்தைக் கொண்டாடுகிறா ளென்றுகருத்து. வியன்ஞாலமுன்படைத்தாயென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (காருண்யஶௌர்ய த்தாலே) இன்றிவ்வாயரித்யாதி தோன்றியவித்யஸ்த்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (வாத்ஸல்யஶௌர்யத் தாலே) ஸௌலப்யவாதத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இப்படிமாணவானுமித்யாதியால்) ௰

ய—உக்தநிர்வஹம்பண்ணுகை. வென்றி - ஜயத்தையுடையதான, நீள் - பெரியதான, மழுவாய் - பரஶ்வதை யுடையவனுன, மழு- பரஶு, மழுவுடையவன்-மழுவான், மழுவாயென்று ஸம்போதநம். ராஜாக்களையெல்லாம் ஜயித்தவனக்கு - இடைச்சிகளை ஜயிக்கை ஓரஸ்தமோ வென்றுகருத்து. வியன் - விஸ்தீர்ணமான, ஞாலம்- ஜகத்தை, முன் - பூர்வகாலத்திலே, ப்ரளயகாலத்திலேயென்றபடி. படைத்தாய் - ஸ்ருஷ்டித்தவனுன, இது வும் ஸம்போதநம். இன்று- இப்போது, இவ்வாயர்குலத்தை - இந்தகோபர்களுடைய குலத்தை, வீடுய்ய- வீட்டோடேயுய்யும்படி, "ஸவாந்தவள த்ரஷ்டு" என்கிறபடியேஸவரிகரமாக உஜ்ஜீவிக்கும்படியென்கை. தோன்றிய - அவதரித்தவனுன, கருமாணிக்கச்சுடர் - நீலரத்நத்தின் ஒளியையுடையவனே? ஸம்போதநம். ஆய் ச்சியோம்- இடைச்சிகளாகியநாங்கள், அறிவில்லாத இடைக்குலத்திலே பிறந்தநாங்களென்றபடி. ஆயர் - இ டையர், தஜ்ஜாதிஸ்த்ரீகள் ஆய்ச்சிகள். நின்றன்னால் - உன்னாலே, நின் ஸம்பந்தத்தின் மேலே ஸாமாநாதிகரண்யம். என்னும் - ஸர்வகாலமும், நலிவேபடுவோம் - பீடையையே அநுபவியாநின்றோம். உன்னுடைய விஶ்லேஷ வ்யஸநங்களால் நாங்கள் மிகவும் க்லேஶப்பட்டோமென்று தாங்கள்பட்ட துக்கங்களையெல்லாம் ப்ராண ஸமர்ப்பணமாக அவனோடே சொல்லிக்கூப்பிடுகிறபடி. * * * * ௰

ஆய்ச்சியாகிய - இடைச்சியான, அன்னையால் - தாயாலே, க்ருஷ்ணனுக்கு க்ஷத்ரியஸ்த்ரீதாயும் இடை ச்சிஒருத்தியுமாகையாலே வ்யாவ்ருத்திதோற்றுகைக்காக ஆய்ச்சியாகியவென்று விஶேஷிக்கிறது. யஶோதைப் பிராட்டியாலேயென்றபடி. இதுக்குச்சிற்றமுண்டு என்கிறதோடே அந்வயம். ஒருத்தால்பெற்றுவிட்ட தேவகி யைப்போலன்றிக்கே க்ருஷ்ணனுடைய ஶைஶவசேஷ்டிதங்களெல்லாம் அநுபவியாநிற்கிறவளாகையாலே அதி ஶயமுடையவளான யஶோதைப்பிராட்டி பொறுந்தால் அதுபொறுக்கப்போகாது என்றுகருத்தாலே ஆய்ச்சியாகியவென்று விஶேஷிக்கிறது. அன்று - பூர்வகாலத்திலே, வெண்ணெய்வார்த்தையுள் - வெண் ணெய்களவுபோயிற்றென்கிற வார்த்தைபிறந்தவளவிலேயென்றபடி. சீற்றம் - கோபத்தாலே

மூ—முண்டமூ* கூத்தவப்பன்றன்னைக்குருகூர்ச்சடகோப* னேத்தியதமிழ்மாலையாயிரத்துள்ளிவையுமோர்
பத்திசையொடு* நாத்தன்னாலவிலவுரைப்பார்க்கில்லைநல்குரவே* ||கக||

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆ— (ஆய்ச்சியாகிய) ஸகிலேஸஹியான் யஶோதைப்பிராட்டி "வெண்ணெய்களவுகண்டாய்" என்று பொடிந்தபோதும்போலே ஆழ்வார்தாம் ஷுணயகோவத்தாலே "எம்பெருமானோடுகலப்பேனல்லேன்" என்றகல அதுபொறுக்கமாட்டாதே தளர்ந்ததளர்த்தியை யநுஸந்தித்தினியராய் அவ்வெம்பெருமானையேத்தின வித்திருவாய்மொழியை யிஶாவவ்ருத்தியின்றிக்கே சொன்னார்க்கும் எம்பெருமான் ஸஹிஷ்ணுவாயிருக்கச்செய்தே பிறங்கித்தாம்பட்ட துஃகம்படவேண்டாவென்கிறார். ||கக||

திருக்குருகைப்பிரான்பிள்ளான்திருவடிகளேசரணம்.

✳நிகமனம்.✳

இ—ஆய்ச்சியிதாதி அப்பன்தன்னையித்ருஷத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸகிலேஸஹிஜாத்யாதியால்) பொடிந்தபோதுஎன்றது - ஹஸ்தபந்தம்பண்ணினபோதென்றபடி. தளர்ந்ததளர்த்தியையென்றது - க்ருஷ்ணன்தளர்ந்ததளர்த்தியையென்றபடி. இனியராயென்றது - ஶ்ரீதாராயென்றபடி. நாத்தன்னால்என்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இப்பாவவ்ருத்தியின்றிக்கேயென்று) நல்குரவுஇல்லையென்றபயித்து இதுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (எம்பெருமானித்யாதியால்) பிறங்கியென்றது - விஶேஷவராயென்றபடி. ||கக||

ஸ—உண்டு- அநுபவித்து, தாயாலே கொவகாய்மான ஹஸ்தபந்தத்தை அநுபவித்தென்றபடி. அமூ- ஸேர்தபந்தம்பண்ணினவனை, கூத்த - கூத்தையுடையவனான், தோப்புக்கரணமிடுகையாகிற கூத்தையுடையவனை யென்றபடி. ஸர்வேஶ்வரனான க்ருஷ்ணன் தோப்புக்கரணமிட்டது நர்த்தநம்பண்ணினாப்போலே மனோஹ்ருமாயிருக்கையாலே அந்தைக்கூத்தாகச்சொல்லுகிறார். அப்பன்தன்னை - அப்பனை, உபகாரகனையென்றபடி. தன்னையென்று ஸ்வஸம்பந்நாஶ்யோமம். குருகூர்ச்சடகோபன் - ஸ்பஷ்டம், ஏத்திய - ஸ்தோத்ரித்ததான, எம்பெருமானுடைய ஆஶ்ரிதவாத்ஸல்யாதி குணவ்யஞ்ஜகமாகையாலே அவனுக்கு ஸ்தோத்ரரூபமானவென்றபடி. இதுபத்துக்குவிஶேஷணம். தமிழ்மாலை - த்ராவிடஸூக்திகளுடைய, ஆயிரத்துள் - ஸஹஸ்ரத்தில், ஓர் - அத்விதீயமான, இவையுமென்கிறவிடத்தில் உகாரமர்த்தைப் பத்தோடேயந்வயிப்பது. இவைபத்தும் - இந்தபத்துப்பாட்டுக்களையும், இசையொடு - கானத்தோடே, நாத்தன்னால் - ஜிஹ்வையாலே, நா - ஜிஹ்வா, நா ஶப்தத்தின்மேலே ஸ்வாதந்த்ர்யன்ஶப்தம். உபஸ்ஸேலேஶாவவிஶேஷமின்றிக்கே வாஙிமாத்ரத்தாலேயாகிலுமென்றபடி. நவில - ஶப்திக்கும்படி, நவிலுகை - ஶப்திக்கை, உரைப்பார்க்கு — சொல்லுகிறவர்களுக்கு, ஶப்திக்கும்படிசொல்லுகையாவது ஆகாஶம்தோற்றும்படி உச்சைஸ்ஸ்வரமாகச்சொல்லுகை. நல்குரவு - தாரித்ர்யம், இல்லை, நல்குரவென்று தாரித்ர்யத்துக்குப்பேர். ஸம்ஸ்லேஷவிஶ்லேஷாஸாவமாகிற தாரித்ர்யமில்லையென்றபடி. வஸிவதுணமாக ஸம்ஸ்லேஷம்பெறுவரென்று தாத்பர்யம். ||கக||

ஜ்ஞாநவைராக்யாநுஷ்டானஶேவதி ஶ்ரீவேதாந்தராமாநுஜமஹாதேஶிகாய நம꞉.

ஶ்ரீ꞉.

த்ரமிடோபநிஷத்தாத்பர்யரத்நாவளி꞉.

(மின்னிடைமடவார்கள்.)

ஸந்த்யக்தாஹோபநாரீஜநஸமஸமதயா ஶௌஸநாதம்பராரே꞉
ந்ருத்யே ராமே ஶுபகாதமிஷஸமதயா ஶ்ரீஸமீக்ஷ்யமகாத் ।
நித்யாஶோகாந்தமாயாவிரமயிகயஶஸஸ்வமீகாரிதக்ஷ
ந்நாகுஸ்ஸேவ்யாயவஸ்யஸ்வாதீநாத்மக்ருஷ்ணம்ஸமாஸி꞉ ||எக||

(ஸந்த்யக்தாக) பந்துழலுந்தந்துபோகுநம்பி - ஸ்வார்த்தஸ்வேச்சாசனைகயாலும், (கோபநாரீஜநஸமஸமதயா) தோகைமாமயிலார்கள் நின்னருள்சூடுவார் — ஶ்ரீகோபிமாருக்கு ஸமமஸனைகயாலும், (ஶௌஸநாதம்பராரே꞉) மாயிருங்கடலைக்கடைந்த- பிராட்டியைப்பெறுகைக்காக திருப்பாற்கடலைக்கடைந்தருளு

ஈ—ரா—கையாலும், (த்ரைலோக்யரக்ஷகஸ்) ஆலினிலையிலே யேழுலகுமுண்டன்று நீகிடந்தாய் பாறையாகக் கலங்களையுந் திருவயிற்றிலேவைத்துக்கொண் டாலிலைமேலே சுக்ஸுப்தமாகக் கண்வளர்ந்தருளுகையாலும், (சுரிஸங்ஹதயா) இன்சக்கரகிழறுதொலபடையாய் - திருவாழியை திவ்யாயுதமாக வுடையவனாகையா லும், (ஸ்ரீபூமிவல்லபகஸ) அழகியாரிவ்வுலகமூன்றுக்குந் தேவிமைதகுவார்பலருளர் - பெரியபிராட்டியா ருக்கும் பூமிப்பிராட்டியாருக்கும் வல்லபனுகையாலும், (நிகிலஜகத்ஸம்ஹாரகஸ) நின்மலநெடியாய் - ஸகல ஸ்ருஷ்டிகளை உஸம்ஹரிக்கையாலும், (நிரவதிகபலஸ்) கணக்கிலசீர்த்தியெள்ளாம் - நிரவதிக கீர்த்தியையுடையவனாகையாலும், (வசீகாரீத்ருக்ஷ) தாமரைத்தடங்கண்விழிகளினக்கவேப்பாவைப்பான் - ஆஸ்ரிதரை வசீகரிக்கிற திருக்கண்மலரையுடையவனாகையாலும், (தொகஷஸம்பாவ) ஆயர்குலத்தை வீடுய்யத்தோன்றிய - ஆஸ்ரிதரான தேவர்களுடைய உத்தாரணத்தில் உபேக்ஷையுடையவனாகையாலும், வண்டுவரைப்பெருமாள் ஆஸ்ரிதரிருந்தவிடத்தே தானேவந்து மேல்விழுந்து ரக்ஷித்தருளுமென்று "நின்னிலாட்டவர்" என்கிறஶ்லோகத்திலே ஆழ்வார் அருளிச்செய்தருளினுரென்கிறுர். ௬௭ ௧௧

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆறும்பத்தில் இரண்டாந்திருவாய்மொழிமுற்றிற்று.

மூன்றுந்திருவாய்மொழி.

மூ—நல்குரவுஞ்செல்வு நரகுஞ்சுவர்க்கமுமாய்* வெல்பகையுநட்பும்விடமுமமுதமுமாய்ப்* பல்வகையும்பரந்த

ஆ—(நல்குரவும்) இப்படி எம்பெருமான்பிறத்தப்படுவோமல்லோமென்றிருந்த ஆழ்வார் தம்மோடேஸம் ஶ்லேஷிக்கைக்காகத் திருவிண்ணகரிலேயெழுந்தருளின எம்பெருமானுடைய நிரவதிகவைபவத்தாலும் ஸம்ஶ்லேஷோபஜநிதமான கலவாதத்தாலும் நிவ்ருத்தப்ரணயகோபராய் அவனோடேஸம்ஶ்லேஷித்து ஸம்ஶ்லேஷஜநித நிரவதிகப்ரீதியாலே ஸஸம்ப்ரமமாக அத்தத்திருவிண்ணகரிலே தாமவனைக் கண்டுஸம் ஶ்லேஷித்தபடியையும் இம் ப்ரஸ்தாவமான ஐஶ்வர்யத்தையும் ஸர்வேஶ்வரனுடைய ஸங்கல்பங்களையும் ஸ்ருஷ்ட்யாதி வ்யாபாரங்களையும் பேசுகிறுர். தாரித்ர்யஸாவஸ்தகமந்த்ர லேஶங்களைத் த்ருஷ்டமாக

மூன்றுந்திருவாய்மொழி.

இ—இப்படி எம்பெருமானோடு கலப்போமல்லோமென்று ப்ரணயகோபராயிருந்த ஆழ்வார்தன்னை யெம்பெருமான்வந்நுவாயித்து ஸம்ஶ்லேஷமாக்கிகொண்ட வநந்தரம் இம் விஶ்லேஷவாஸனையாலே அப்பட்டக்லேசங்களையெல்லாம் அவனுக்கு விஶேஷேண அறிவித்து நீ இனியென்னையொருநாளும் விஶ்லேஷியாதிருக்கவேணுமென்று விண்ணப்பஞ்செய்யவுமாயிருக்க அதுசெய்யாதே இத்திருவாய்மொழியிலே அவனுடைய ஸர்வஜ்ஞாநஶக்த்யாதிகளைப்பேசுகை க்ஷமமென்றேயென்ன கவதரிப்பிக்கிறுர் (இப்படியி ஸம்ஶ்லேஷமென்றதாய்த்து. விஶ்லேஷமென்றது- ஆழ்வாருடைய ஸம்ஶ்லேஷமென்றபடி. இம் ப்ர ஸ்தாவமென்றது - பிணக்கியாவையுமயாவருமென்கிறவிடத்திலே ப்ரஸ்தாவமானவென்றபடி.

முதற்பாட்டு

வாச்யார்த்தத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறுர் (தாரித்ர்யத்ரயியால்) விதியென்றது - ஸ்வரூ

ஸ— நல்குரவும் - தாரித்ர்யமும், செல்வும் - ஸம்பத்தும், நரகும்- நரகமும், சுவர்க்கமுமாய் - ஸ்வர்க்கமு மாய், தத்ப்ரவர்த்தகனாயென்றபடி. வெல் - வெல்லத்தக்கதான, வெல்லுகை - ஜயிக்கை. ப்ரத்யக்ஷமாயிருப்பவனென்றபடி. பகையும்- ஶத்ருவமும், நட்பும்-மித்ரத்வமும், விடமும்-விஷமும், அமுதமுமாய்- அவற்றுக்குத் தத்ப்ரவர்த்தகனாயென்றபடி. இச்ஶப்தங்களெல்லாம் தத்வாசக ஶப்தமாக ஸமாநாதிகரணங்க ளும்பரந்த-இப்படி ஸஹஸ்ரப்ரகாரங்களாலே வ்யாப்தனுன, விசித்ரஜகத்தை ஸ்ருஷ்டிக்கத்தக்க

மூ— பெருமானென்னையாளையானை* செல்வமல்குகுடித் திருவிண்ணகர்கண்டேனே* ॥௧॥

கண்டவின்பந் துன்பங் கலக்கங்களுந் தேற்றமுமாய்* தண்டமுந் தண்மையுந் தழலு நிழலுமாய்* கண்டு கொள்தற்கரிய பெருமானென்னையாள்வானூர்* தெண்டிரைப் புனல்சூழ் திருவிண்ணகர் நன்னகரே* ॥௨॥

ஆ— ஆஸ்ரித விஷயத்வாவதாரங்களோடு கூடின ஸர்வேச்வரனிருந்து வைத்து என்னோடே ஸம்ச்லேஷித்த வெம்பெருமானை அஸங்க்யேய கல்யாணகுண ஸம்ஸ்தானமான நித்யஜனவாஸஸ்தானமான திருவிண்ணகரில் கண்டேனென்கிறார். ॥௧॥

(கண்டவின்பம்) ஸுகதுக்க ஸம்ச்லேஷ விச்லேஷாதி நிரூபகமான பரிசேஷித நிர்வாஹகஸ்வரூப விக்ரஹ குணங்களைப் ஸாக்ஷாத்கரித்திருந்த ஸர்வேச்வரனை நான் கண்ணாலே கண்ட புளியம்படி புகுந்தருளின திருநகரி திருவிண்ணகரென்று திருநகரியை அனுபவிக்கிறார். ॥௨॥

இ— விரோதிகளானவென்றபடி. மேல்பாட்டின வ்யாக்யானத்திலே அப்படிபேசொல்லப்புகுகிறீரே; இத்தால் வரவிருக்கிற விரோதிகளான வஸ்துக்களைத் தனக்குவிபூதியாக வுடைபித்துக்கொண்டு நிற்கையாகிற ஸ்வாதந்த்ர்யமென்கிற அர்த்தமிதிருவாய்மொழிக்கு ப்ரதிபாத்யமென்று ஸித்திக்குமாய்த்து. இதனாலித்திருவாய்மொழிக்கு ஒருஸம்பந்தவிசேஷமும் ஸித்திக்கும். எங்ஙனேயென்னில்? விரோதிகளாயிருந்தவர்களை அவிரோதிகளாம்படி பண்ணின இந்த விரோதிகடந்த ஸம்பந்தத்தாலே அவனுடைய ஸ்வாதந்த்ர்ய ஸ்வாபகாரங்களையெல்லாம் இதிருவாய்மொழியிலே அநுஸந்திக்கிறாரென்று ஸித்திக்கிறது. பெருமானென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸர்வேச்வரனித்யாதியால்) என்னையாள்வானையென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (என்னோடேயித்யாதியால்) செல்வம்மல்கு குடியென்கிறதற்குத் தாத்பர்யமருளிச் செய்கிறார் (அஸங்க்யேயேத்யாதியால்) ॥௧॥

✳ இரண்டாம்பாட்டு ✳

ஸித்தாந்தத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸுகதுக்காதேத்யாதியால்) என்னையாள்வானூர் என்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நான்கண்ணாலேயித்யாதியால்) ॥௨॥

ப— இவ்வநுவாதம். பெருமான் - ஸர்வேச்வரனை, என்னையாள்வானை - விரோதியுமிருந்தவென்னை அவிரோதியாக்கியடிமைகொண்டவனை, செல்வம் - ஸம்பத்தானது, மல்கு - அபிவ்ருத்தமாயிருக்கிற, ஸம்பத்யமொத்திருக்கச் செய்தே கிட்டப்பெறாதே கிடந்த ஸ்ரீதாழ்வானைப்போலன்றிக்கே "லக்ஷ்மணோ லக்ஷ்மிஸம்பந்ந:" என்னும்படி கிட்டியடிமைசெய்யுமிளையபெருமாளைப்போலே கைங்கர்ய லக்ஷ்மீஸம்பந்நர்களான என்றபடி. குடி - ஸ்ரீவைஷ்ணவ கோஷ்டியையுடைத்தான, திருவிண்ணகர் - தேவஸ்தானம். திருவிண்ணகரிலே, கண்டேனே - காணவேணுமென்றுரையிருக்கச்செய்தே தேசாந்தரவர்த்தி பண்ணி தேசாந்தரத்திலேபோய்ச் சான்றையன்றிக்கே பசித்த விடத்தே சோறு பெறுமாப்போலே ஆசைப்பட்ட இடத்தே அநுபவிக்கப்பெற்றேனே என்றபடி. * * * * ॥௧॥

கண்ட - ப்ரத்யக்ஷமான, விஷயஜந்யமாய் வர்த்திஷ்ணுமானவென்றபடி. இன்பம் - ஸுகம், துன்பம் - துக்கம், கலக்கங்களும் - துக்கத்தால்வந்த வித்யாகார்யங்களும், தேற்றமுமாய் - தெளிவுமாய், ஸுகத்தால்வந்த வித்யாகார்யமுமாய், ஸுகதுக்காதிஸாபேக்ஷகாரகனுமென்றபடி தண்டமும் - தண்டமும், நிக்ரஹமும், வித்யாகார்யமுமடியாகவரும் அநுக்ரஹமுமென்றபடி தண்மையும் - அநுக்ரஹமும், வித்யாஸாத்யமடியாகவரும் ப்ரஸாதமுமென்றபடி தழலும் கோபஸாதனமான ஔஷ்ண்யத்தையுடைத்தான அக்நியும், தழல் - அக்நி. நிழலுமாய் - ப்ரஸாதஸாதனமான சைத்யத்தையுடைத்தான சாயையுமாய், தத்தத்ஸாத்ய காரகனுமென்றபடி. கண்டுகொள்தற்கு - ஸ்வயத்னத்தாலே காண்கைக்கு, அரிய - அசக்யனான, பெருமான் - ஸர்வேச்வரனை, என்னையாள்வானூர் - என்னையிழக்கமாட்டாமல் பின்னிடைமடவாரில் நான்செய்த மிறுக்கெல்லாம் பட்டென்னை அவிரோதியாக்கியடிமை கொண்டவனுடைய திவ்யநகரமான, இது திருவிண்ணகருக்கு விசேஷணம். தெண் - தெளிந்தான, திரை - தரங்கங்களையுடையவையான, தெண்திரையென்கிற இடத்திலே அகாரஸ்வரத்தோடு சேர்ந்திருக்கிறது. புனல் - ஜலங்களாலே, சூழ் - வரிவ்ருதமான, திருவிண்ணகர் - திருவிண்ணகரானது, நன்னகர் - ஸ்ரீவைகுண்டத்தில்காட்டிலும் நல்லநகரம். கிழ்நடந்ததாக்ருதமுடைப்பெருமையுமுதவமுகங்காட்டாத ஸ்ரீவைகுண்டமுமொருதேசமாகமாட்டுமோவென்று கருத்து. * * ॥௨॥

மூ:—நகரமுநாடுகளும் ஞானமும்மூடமுமாய்* நிகரில்சூழ்சுடராயிருளாய் நிலனாய்விசும்பாய்* சிகரமாடங்கள்சூ
ழ்திருவிண்ணகர்சேர்ந்தபிரான்* புகர்கொள்கீர்த்தியல்லாலில்லை யாவர்க்கும்புண்ணியமே* ௩ ॥
புண்ணியம்பாவம்புணர்ச்சிபிரிவென்றிவையாய்* எண்ணமாய்மறப்பாயுண்மையாயின்மையாயல்லனாய்*
திண்ணமாடங்கள்சூழ்திருவிண்ணகர்சேர்ந்தபிரான்*

ஆ—(நகரமும்) நகரஜநபதஜ்ஞாநாஜ்ஞாநதேஜஸ் ப்ரகாசாதிமத்த ஸமஸ்தபதார்த்தவாயிருந்த சிகரமாடங்கள்சூழ்திருவிண்ணகர்சேர்ந்த பிரானுடைய நிரவதிககாருண்யமல்லது மற்றுஜீவநோபாயமில்லையென்று தமக்குஜீவநோபாயமான காருண்யத்தை அநுஸந்திக்கிறார். ௩ ॥

(புண்ணியம்) புண்யபாபத்துக்கு ஹேதுவான இஷ்டவிஷய ஸம்ஶ்லேஷவிஶ்லேஷ ஸ்மரணவிஸ்மரண ஸாவாதி ஸகலபதார்த்தங்களையும் தாதாத்ம்யத்தாலேயுடையவராய்ப்பிருந்துவைத்தே தத்கதஜோஷராஸம்ஸ்ப்ருஷ்டராயிருந்த திண்ணமாடங்கள்சூழ் திருவிண்ணகர்சேர்ந்த பிரானுடையக்ருபையாலே ஸகலபதார்த்தஸாக்ஷாத்காரம் [illegible]

✳ மூன்றாம்பாட்டு ✳

இ—பதார்த்தங்களுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நகரேத்யாதியால்) ஸமஸ்தபதார்த்தவா யென்றது - ஸமஸ்தபதார்த்தவாயென்றபடி. இங்கு விசும்பாய்என்னுமளவான பதார்த்தங்களை ஸ்ருஷ்டி ப்ரளயம் ஶரீராத்மபாவநிபந்தநமாகையாலே ஹேயதவநிபந்தநபதார்த்தங்களும் வஸ்துவிஶேஷமென்று கருத்து. புகர்கொள்கீர்த்தியென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நிரவதிகேத்யாதியால்) புண்ணியமென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (உஜ்ஜீவநோபாயமென்று) ॥ ௩ ॥

✳ நாலாம்பாட்டு. ✳

இன்மையாயிருக்கத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (புண்யேத்யாதியால்) ஸாவாஸாவ என்கிறவிடத்தில் அஸாவஸப்தம் படாத்யபாவரூபமான கபாலாதிவாசம். அல்லனாயென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (தத்கதேத்யாதியால்) கண்ணனின்னருள் என்கிறதை த்ருதீயாந்தமாகவுரைக்கிறார் (க்ருபையாலேயென்று) கைதவமென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸகலேத்யாதியால்) க்ருபையாலே

அ—நகரமும் - நகரமும், நாடுகளும் - ஜநபதங்களும், நகரஜநபதங்களுக்குச் ஸூசகமான பரிமாணங்களாலே விராஜபதார்த்தங்களும் கண்டுகொள்வது. ஞானமும் - ப்ரகாஶரூபஜ்ஞாநமும், மூடமுமாய் - அஜ்ஞாநமுமாய், நிகரில் - ஸத்ருஶரஹிதமான, ப்ரகாஶநஶக்தியாலே வஸ்துக்களுக்குள்ளே அதிஶயிதமான என்றபடி. சூழ் - வ்யாப்தமான, சுடராய் - தேஜஸ்ஸாய், இருளாய் - தத்விரோதியான அந்தகாரமாய், நிலனாய் - ப்ருதிவியான பூமியாய், விசும்பாய் - ஆகாஶமுமாய். தத்தத்ரூப ப்ரகாரகன் என்றபடி. இதுக்குச்சேர்ந்த வென்கிறதோடே அந்வயம். சிகரமாடங்கள் - பர்வதசிகரங்களைபோலே யிருக்கிற பவநங்களாலே மாடம்-பவநம். சூழ - பரிவ்ருதமான, திருவிண்ணகர் - திருவிண்ணகரிலே, சேர்ந்த - பொருந்திவர்த்திக்கிற, ஸந்நிஹிதனாயிருக்கிறவென்றபடி. பிரான் - உபகாரகனுடைய, புகர்கொள் - புகரைக்கொண்டிருக்கிற, புகர் - ஔஜ்ஜ்வல்யம். திருவிண்ணகரிலே சேருகையாலே ஸ்ரீவைகுண்டத்திலகாட்டிலும் விளங்காநின்றுள்ள வென்றபடி. கீர்த்தியல்லால் - கீர்த்தியொழிய, இங்கே கீர்த்தி ஶப்தம் கீர்த்திஹேதுவான காருண்யத்தை லக்ஷிக்கிறது அவனுடையகாருண்யமொழியவென்றபடி. யாவருக்கும் - ஸர்வருக்கும், புண்ணியம் - உஜ்ஜீவநோபாயமானது, இல்லை -, அவனுடையகாருண்யமே ப்ராப்யநோபாயமென்றபடி. * ॥ ௩ ॥

புண்ணியம் - ஸுகஸாதநமான புண்யமும், பாவம் - து:க்க ஹேதுவானபாவமும், புணர்ச்சி - ஸம்ஶ்லேஷம், புண்யஹேதுமான இஷ்டவிஷய ஸம்ஶ்லேஷம், பிரிவு - விஶ்லேஷம், பாபஹேதுமான இஷ்டவிஷய விஶ்லேஷம், என்றிவையாய் - என்கிற இப்பதார்த்தங்களாய், இப்பதார்த்தங்களை ப்ரகாரமாகவுடையவனாயென்றபடி. எண்ணமாய் - ஸ்மரணமாய், மறப்பாய் - விஸ்மரணமாய், உண்மையாய் - ஸாவரூபபதார்த்தங்களாய், இன்மையாய் - அஸாவங்களாய், படாத்யபாவரூபமான கபாலாதி ப்ரகாரகனென்றபடி. அல்லனாய் - இப்பதார்த்தங்களெல்லாம் அல்லாதவனாய், தத்தத்ஸ்வரூபவாயிருக்கச்செய்தேயும் தத்கததோஷாஸம்ஸ்ப்ருஷ்டனாயென்றபடி. திண்ண - ஸ்திரங்களான, மாடங்கள் - பவநங்களாலே, சூழ - பரிவ்ருதமான, திருவிண்ணகர் - திருவிண்ணகரிலே, சேர்ந்த - பொருந்திவர்த்திக்கிற? பிரான் - உபகாரகனான,

மூ — கண்ணனின்னருளே கண்டுகொண்மின்கள்கைதவமே* ॥ ௪ ॥

கைதவஞ்செம்மைகருமைவெளுமையுமாய்* மெய்பொய்யிளமைமுதுமைபுதுமைபழமையுமாய்ச்* செய்த திண்மதிள்சூழ்திருவிண்ணகர்சேர்ந்தபிரான்* பெய்தகாவுகண்டீர்பெருந்தேவுடைமூவுலகே* ॥ ரு ॥

மூவுலகங்களுமாயல்லனாய்உகப்பாய்முனிவாய்ப்* பூவில்வாழ்மகளாய்த்தௌவையாய்ப்புகழாய்ப்பழியாய்த்*

ஆறா — ஸமஸ்தகாரணகவைபவ ப்ரவ்ருத்தி ஸம்ஸ்தானங்களும் ஸ்பஷ்டமான இவ்வர்த்தம் திருவிண்ணகரிலே ப்ரத்யக்ஷிக்கலாமென்கிறார். ॥ ௪ ॥

(கைதவம்) ஆர்ஜவானார்ஜவஸித நீலஸத்யாஸத்ய யௌவனவார்த்தக நவநவாதிரூபதார்த்தங்களெல்லாம் ஸ்வாதீநஸம்பந்தமாய் நிகிலஜகத்காரணபூதனான ஸர்வலோகங்களுக்கும் ரக்ஷகனென்கிறார் ॥ ரு ॥

(மூவுலகங்களுமாய்) நிகிலலோக ஸ்ருஷ்டி ஸம்ஹார ப்ரீத்யப்ரீதி ஸுக துக்க ஸ்ரீ ஜ்யேஷ்டா கல்யாண ஸகலபதார்த்தங்களைப் ப்ரகாரமாக உடையவனாகையாலே யாதொருபடி ஸௌலப்ய—

இ— என்கிற க்ருதியையாலே ப்ரஸித்தமர்த்தத்தையருளிச்செய்கிறார் (ஸ்பஷ்டமென்று) கண்டுகொண்மின்கள் என்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (திருவிண்ணகரிலேயித்யாதியால்) ॥ ௪ ॥

✳ ஐந்தாம்பாட்டு. ✳

பதார்த்தத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஆர்ஜவேத்யாதியால்) ஆர்ஜவம்- ஜநோபகார ப்ரவ்ருத்தம். பெருந்தேவுடை மூவுலகென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ப்ரஹ்மேத்யாதியால்) பெய்தகாவு என்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ரக்ஷகனென்று) ॥ ரு ॥

✳ ஆறாம்பாட்டு. ✳

அல்லனுமென்கிறபதமொழியப் பதார்த்தத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நிகிலே த்யாதியால்) ஸ்ருஷ்டி ஸம்ஹாரமென்றது - ப்ரீதிக்குவிசேஷணம். அல்லனுமென்று கீழ் நாலாம்பாட்டிலேசொல்லியிருக்க இக்க்ரமத்தைச்சொல்லுவானேனென்ன அதுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (கல்யாணவர்த்த—

பா — கண்ணன் - க்ருஷ்ணனுடைய. இன் - போக்யமான. அருளே - க்ருபையாலே, க்ருதியாகவுண்டான. கைதவம் - க்ருத்ரிமம், ஸர்வகாரணமான காரணவைபவாதிகளெல்லாமென்றபடி. இவையெல்லாம் அவனுடைய க்ருபையாலே யுண்டானவையென்று ப்ரஸித்தமர்த்தம். கண்டு கொண்மின்கள் - கண்டுகொள்ளுங்கோள், இவ்வர்த்தத்தை ப்ரத்யக்ஷமாகக்கண்டு கொள்ளுங்கோளென்றபடி. எல்லாருக்கும்காணலாம்படி அவனுடைய க்ருபை திருவிண்ணகரிலே ஸந்நிஹிதமாயிருக்கிற தென்றுகருத்து. * ॥ ௪ ॥

கைதவம் - அநார்ஜவம், கௌடில்ய மென்றபடி. செம்மை - ஆர்ஜவம். ஜநோபகாரப்ரவ்ருத்த மென்றபடி. கருமை - நைல்யம், வெளுமையுமாய் - தாவள்யமுமாய், மெய் - ஸத்யம், பொய் - அஸத்யம், இளமை - யௌவனம், முதுமை - வார்த்தகம், புதுமை - நூதநத்வம் - பழமையுமாய் - புராதநத்வமுமாய், தத்பதார்த்த ப்ரகாரகனென்றபடி. இதுக்குச் சேர்ந்த வென்கிறத்தோடே அந்வயம். செய்த - செய்யப் பட்டதான, காலம் செல்லச் செய்தேயும் இப்போதுசெய்தாப்போலே உஜ்ஜ்வலமாயிருக்கிறவென்றபடி. திண் - த்ருடமான, மதிள் - ப்ராகாரத்தாலே, சூழ் - பரிவ்ருதமான. திருவிண்ணகர் திருவிண்ணகரிலே, சேர்ந்த - ஸந்நிதிபண்ணியிருக்கிறவனான, பிரான் - உபகாரகன், பெய்த - வைத்துவளர்த்ததான, காவுகண்டீர், உத்யானம் கிடீர், காவு - உத்யானம். பெருந்தேவுடை - பெரிய தெய்வங்களையுடைத்தான, ப்ரஹ்மாதிதேவாதிவஸிதமானவென்றபடி. மூவுலகு - த்ரைலோக்யமானது, பிரான் பெய்தகாவுகண்டீர் என்றதிதோடே அந்வயம். உத்யானமானது உத்யானகர்த்தாவினுடைய ரக்ஷையை யுடைத்தா யிருக்குமாப்போலே த்ரைலோக்யமும் ஸர்வேச்வரனான ரக்ஷையை யுடைத்தானதென்று தாத்பர்யம். * * ॥ ரு ॥

மூவுலகங்களுமாய் - க்ருதகம் - அக்ருதகம் - க்ருதகாக்ருதகம். என்று த்ரிவிதங்களான லோகங்களையும் ப்ரகாரங்களாக உடையனாய், உகப்பாய் - ப்ரீதியாய், முனிவாய் - அப்ரீதியாய், பூவில் - பத்மத்திலே, வாழ - வாழாநிற்கிற, மகளாய் - பெண்ணாய், லக்ஷ்மியாயென்றபடி. தௌவையாய் - ஜ்யேஷ்டாதேவியாய், தௌவை - ஜ்யேஷ்டாதேவி. புகழாய் - லக்ஷ்மீகடாக்ஷமுடையவர்க்கு வரக்கடவ கீர்த்தியாய், பழியாய் - ஜ்யேஷ்டாகடாக்ஷமுடையவர்க்கு வரக்கடவ அகீர்த்தியாய், கீர்த்த்யாதி ஸகலபதார்த்த ப்ரகாரகனென்றபடி. அல்லனாய்-இவை

மூ—தேவர்மேவித்தொழுந்திருவிண்ணகர்சேர்ந்தபிரான்* பாவியேன்மனத்தேயுறைகின்றபரஞ்சுடர்* ‖௬‖
பரஞ்சுடருடம்பாயழுக்குப்பதித்தவுடம்பாய்* கரந்துந்தோன்றியுநின்றுங்கைதவங்கள்செய்யும்விண்ணோர்
சிரங்களால்வணங்குந்திருவிண்ணகர்சேர்ந்தபிரான்* வரங்கொள்பாதமல்லாலில்லையாவர்க்குமரணமே ‖௭‖

ஆ— தட்டாதேயிருக்கும், அப்படியே ஹேயவஸ்தாஸம்பந்தவ்யக்தியாலும் நிஷ்க்ருஷ்டரூபிநக்கும் ... யறிந்தபடியென்னில்? ஸம்ஸாரஹேயஸ்வபாவமான என்னுடையநெஞ்சிலேபுகுந்துவைத்தும் ... தட்டாதே நிரதிசயதீப்திபாக்ஞனாயிருக்கையாலே யென்கிறார். ‖௬‖

(பரஞ்சுடர்) நிரவதிகதேஜோமயதிவ்யரூபனைப் ஸம்ஸாரஹேயஸ்வபாவ ஸஜாதீயரூபனாய் ஸம்ஸாரஹேதுகமான உபேக்ஷ்யனை யாச்ரிதார்த்தமாகப்பிறந்தருளியும் அவர்களோடு ஸம்ச்லேஷித்தும் ப்ரதிகூலர்க்குக் கைதவம்செய்தும் விண்ணோர்சிரங்களாலவணங்குந் திருவிண்ணகர்சேர்ந்தபிரானுடைய திருவடிகளலலதொருவருக்கு ரக்ஷகமில்லையென்கிறார். ‖௭‖

(வன்சரண்) தன்திருவடிகளையாச்ரயிக்கைக்குருவேரான ஸம்ஸாரங்களையும்போக்கியருளி ...

இ— வ்யக்தியாலேஜகத்ராஹியால்) இப்போது ஸந்தோஷமேயாயிருக்கப் பாவியேனென்பான் ... மன்றோவென்ன அவதரிப்பிக்கிறார் (அதெங்ஙனேயித்யாதியால்) பாவியேனித்யாதிக்கு அர்த்தமருளிச் செய்கிறார் (ஸம்ஸாரேத்யாதியால்) ‖௬‖

✳ஏழாம்பாட்டு.✳

பரஞ்சுடருடம்பாயென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நிரவதிகேத்யாதியால்) அழுக்குப்பதித்தவுடம்பாயென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸம்ஸாரஹேயஸ்வபாவேத்யாதியால்) இதுக்கு ஸங்கதியருளிச்செய்கிறார் (ஸம்ஸாரேத்யாதியால்) கரந்துமென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (உபேக்ஷ்யனையென்று) தோன்றியுமென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஆச்ரிதார்த்தமித்யாதியால்) நின்றுமென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அவர்களோடித்யாதியால்) ‖௭‖

✳எட்டாம்பாட்டு.✳

வன்சரண்சுரர்க்குஎன்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார்(தன்திருவடிகளையித்யாதியால்) ...

பா— இத்தன்மையுமாகாதவனைப், தத்துவஹ்ருதயமே ப்ரதானஸம்பந்தமென்றபடி. இதுக்குச் சேர்ந்தவென்கிற தோடே அந்வயம். தேவர் - நித்யஸூரிகள். மேவி - ஆச்ரயித்து, தொழும் - ஸேவியாநிற்கிற. திருவிண்ணகர் - திருவிண்ணகரிலே, சேர்ந்த - ப்ரீதித்து வஸியாநிற்கிற, பிரான் - உபகாரகன், பாவியேன் - ஸம்ஸாரஹேயஸ்வபாவனான வென்னுடைய, மனத்தே - மனஸ்ஸிலே, உறைகின்ற - வஸியாநிற்கிற, பரஞ்சுடர் - உத்க்ருஷ்ட தேஜஸ்ஸ்வரூபன், என்னுடைய மனஸ்ஸிலே வஸிக்கச்செய்தேயும் நிரதிசய தீப்தியுக்தனாயிராநின்றானென்றபடி. * * * * * * ‖௬‖

பரஞ்சுடருடம்பாய் - நிரதிசயதீப்தியுக்தமான அஸாதாரண திவ்யவிக்ரஹமுடையனாய், அழுக்குப்பதித்த உடம்பாய் - ஸம்ஸாரஸம்பந்தரூபமான த்ருஷ்யமான ப்ராக்ருதஸஜாதீயசரீரகனாய், கரந்தும் - மறைந்தும், ஸர்வாந்தர்யாமியாயிருக்கச்செய்தேயும் "யோகமாயாஸமாவ்ருத:" என்கிறபடியே அஜ்ஞாதஸ்வரூபனாயிருந்தும், தோன்றியும் - ராமக்ருஷ்ணாதிரூபேண ப்ரகாசித்தும், நின்றும் - ஆச்ரிதர்க்காக நூறாண்டு பதினோராயிரமாண்டு இந்த லோகத்திலேநின்றும், கைதவங்கள்செய்தும் - க்ருத்ரிமங்கள்பண்ணியும், அதாவது: — அவதரித்தாலும் செய்தே தன்படிகள் சிசுபாலாதிகளுக்குத் தோன்றாதபடி பண்ணியுமென்றபடி. இதுக்குச் சேர்ந்தவென் கிறதோடே அந்வயம். விண்ணோர் - நித்யஸூரிகள், விண் - பரமவ்யோமம், விண்ணிலேயிருக்குமவர் விண்ணோர். சிரங்களால் - சிரஸ்ஸுக்களால், வணங்கும் - வணங்காநிற்கிற, திருவிண்ணகர் - திருவிண்ணகரிலே, சேர்ந்த - பொருந்திவஸியாநிற்கிற, பிரான் - உபகாரகனுடைய, இதுக்குப்பாதமென்கிறதோடே அந்வயம். வரங்கொள் - ச்ரேஷ்டத்வதைக்கொண்டிருக்கிற, வரம் - ச்ரேஷ்டம். "தேவாநாம் தாநவாநாஞ்ச ஸாமாந்யமதிதைவதம்", என்கிறபடியே அத்ருஷ்டியிலும் கிட்டலாம்படியான ச்ரேஷ்டத்தை யுடைத்தானவென்ற படி. பாதமல்லால் - திருவடிகளல்லது, யாவர்க்கும் - எத்தனை ஜ்ஞானவான்களுக்கும், வன்சரண் - வலியசரணம், த்ருடமான உபாயம், இல்லை. * * * * ‖௭‖

மூ — வன்சரண் [illegible] ர்க்கு வெங்கூற்றமுமாய்* தன்சரணிழற்கீழுலகம்வைத்தும்வையாதும்*தென்சர
ண் [illegible] த் திருவிண்ணகர்ச்சேர்ந்தபிரான்* னென்சரணென்கண்ணனென்னையாளுடையென்னப்பனே* அ॥
[illegible] காயிகுளாய் [illegible] ன்னைப்பெற்றவளாய்* பொன்னப்பன்மணியப்பன்முத்தப்பனென்னப்ப

ஆ — [illegible] வைக்குமவஸரங்களைப் ஆஶ்ரிதவிரோதிகளைத்தன் திருவடிகளிலவே
[illegible] ஶத்ருக்களுக்கிருந்த வெம்பெருமான் தென்திசைக்குப்புகலிடமான திரு
விண்ணகரிலே [illegible] எனக்கு ரக்ஷகமாய் எனக்குஸ்வாமியாய் என்னைக்கொண்டு ஸமஸ்தஶேஷவ்ரு
த்திகளும் [illegible] கொள்ளுமவனென்கிறார். ॥அ॥

(என்னப்பன்) [illegible] பொன்னொளியையும் ரத்நஜ்யோதியையுமுடைத்தான
[illegible] தன்னொப்பாரின்றியேயிருந்த திருவிண்ணகர்சேர்ந்த வப்பன்தன்
[illegible] தன்னுடைய வாத்ஸல்யத்தாலே பெற்றதாயும் வளர்த்ததாயும் பண்ணக்கடவதெ
[illegible] என்னுடைய [illegible] மெல்லாம்போம்படி

ஈடு — [illegible] க்குத் காரியமருளிச்செய்கிறார் (ஆஶ்ரிதரையி த்யாதியால்) வையாதும் இத்யாதிக்
குத் காரியமருளிச்செய்கிறார் (ஆஶ்ரிதவிரோதிகளை இத்யாதியால்) அசுரர்க்குவெங்கூற்றமுமாய் என்கிறதற்குக
காரியமருளிச்செய்கிறார் (அவர்களுக்கிஇத்யாதியால்) [illegible] வாக்யத்துக்குத் காரியமருளிச்செய்கிறார்
([illegible] இத்யாதியால்) ॥அ॥

ஒன்பதாம்பாட்டு.

பொன்னப்பனென்கிறதற்குக் காரியமருளிச்செய்கிறார் (சுட்டுரைத்த இத்யாதியால்) மணியப்பனெ
ன்கிறதற்குக் காரியமருளிச்செய்கிறார் (ரத்நஜ்யோதி இத்யாதியால்) முத்தப்பனென்கிறதற்குக் காரியமரு
ளிச்செய்கிறார் (அழகியதென்று) தன்னொப்பாரின்றியே யிருந்தவென்றது அப்பனுக்குவிஶேஷணம். என்
னப்பனெனக்காயென்கிறதற்குக் காரியமருளிச்செய்கிறார் (தன்னழகாலேயி த்யாதியால்) இகுளாயென்னை
ப்பெற்றவளாயென்கிறதற்குக் காரியமருளிச்செய்கிறார் (தன்னுடையவாத்ஸல்யத்தாலே இத்யாதியால்)
தந்தனன்தனதாளை யென்னமைத்திருக்க தனதாள்நிழலேயென்று நிழல்வயமாகச்சொன்னதால்

பத — [illegible] - [illegible] க்களுக்கு, வன்சரணாய் - [illegible] மான உபாயமாய், ஸம்ஶ்லேஷவிரோதிவர்க்க
[illegible] என்றபடி. தன்சரண் - தன்னுடைய திருவடிகளுடைய, நிழற்கீழ் - ஸாயையின்கீழே, உலகம் -
[illegible] அந்த ஆஶ்ரிதஜநங்களையென்றபடி. வைத்தும் - வைத்துக்கொண்டும்,
[illegible] - [illegible] அப்படிவைத்துக்கொள்ளாதேயும், அசுரர்க்கு - [illegible] வெங்கூற்
றமுமாய் - [illegible] ஶத்ருவுமாய், கூற்றம் - ஶத்ரு. கூற்றமுமாய் என்கிறதற்குச் சேர்ந்த என்கிற
[illegible] ம். தென் - தக்ஷிணமான, திசைக்கு - திக்குக்கு, சரண் - ஶரணமான, ஸம்ஸாரபய நிவ்ருத்தி
[illegible]. திருவிண்ணகர் - திருவிண்ணகரிலே. சேர்ந்த - ப்ரீதித்து வஸிக்கிறவனான, பிரான் - உப
காரகன். [illegible] ரக்ஷணமா [illegible] என்றபடி. என்கண்ணன் - எனக்கு ஸ்வாமி
[illegible] என்றபடி. கண்ணாயிருக்குமவன் கண்ணன். யத்வா — இருமேசெய்
[illegible] மேலே [illegible] அன் [illegible]. என்னை ஆளுடை - என்னை [illegible]
[illegible], என்னைக்கொண்டுஶேஷவ்ருத்திகளெல்லாம் பண்ணிக்கொள்ளுமவ னென்றபடி. என்னப்பன் -
[illegible]. * * * * ॥அ॥

பொன்னப்பன் - [illegible] போலே [illegible] ஸ்வாமியான, மணியப்பன் - ரத்நம்போலே [illegible]
தில் [illegible] - ரத்நஜ்யோதிஸ்ஸான திருமேனியையுடைய ஸ்வாமியான, முத்தப்பன் - [illegible]
கண்ணனல்லால்- க்ருஷ்ணனல்லது, சரண் இல்லைகண்டீர்- ரக்ஷகனில்லைகிடிகோள், நீக்குதற்கே என்கிறவிடத்தில்- ஏகாரத்தை அதுநிற்க என்கிறதோடே அந்வயிப்பது. அதுநிற்கவே- தன்னுடைய அந்த ரக்ஷகத்வம் ப்ரதிஷ்டிதமாகைக்காகவே, மண்ணின்பாரம்- பூபாரத்தை, நீக்குதற்கு- நிவர்த்திப்பிக்கைக்காக, வந்து- பரமவ்யோமத்தை விட்டுவந்து, வடமதுரைப்பிறந்தான்- உத்தரமதுரையிலே அவதரித்தருளினான், நும்முடைமையுண்டேல்- உங்களுக்கு சேஷமான வஸ்துக்கள் உண்டாயிருந்தனவாகில், யத்ருச்சாஸம்பந்தத்தால் வஸ்துவ்ருத்தியில் உங்களுக்கு சேஷமல்லாதவற்றை நீங்கள் அபிமாநிக்கிறதாமத்தனையென்றுகருத்து. அவனடி- அவன்திருவடிகளிலே, திண்ணம்- த்ருடமாக, சேர்த்துய்மினோ- சேரப்பண்ணுங்கோள்- ஸமர்ப்பியுங்கோளென்றபடி. நும்மது- யுஷ்மதீயங்களான, ஆதும்- ஸகலமும், அவனன்றி- அவனல்லது, மற்றில்லை- வேறொன்றில்லை, ஸர்வஸ்ய சேஷதயா அவனுக்கே சேஷமாயிருப்பதொழிய ஸ்வநிஷ்ட

(மு)

மூ— தில்லையே*

ஆதுமில்லைமற்றவனிலென்றதுவேதுணிந்து* தாதுசேர்தோட்கண்ணனைக்குருகூர்ச்சடகோபன்சொன்ன*

தீதிலாதவொண்டமிழ்களிவை யாயிரத்துளிப்பத்தும்* ஓதவல்லபிராக்கள் நம்மை யாளுடையார்கள் பண்டே* ।கக॥

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஆ— திருவடிகளிலே சேஷத்வ ஜ்ஞானத்தையுடையவர்கள், உங்களுக்காக ஸ்வீகரிக்கப்படுகிறவையும் நீங்களும் அவனுக்கே சேஷம், இதிலொரு ஸம்சயமில்லையென்கிறார். ॥(மு)॥

(ஆதுமில்லை) ஆத்மாத்மீயங்களெல்லாம் அவனுக்கே சேஷமென்று துணிந்திருந்த சடகோபன் தாதுசேர் தோட்கண்ணனைச் சொன்ன நிர்தோஷமாய் கல்யாணமான இத்திருவாய்மொழியை ஓதவல்ல ஸ்ரோதாக்கள் நமக்குப் பண்டே ஸ்வாமிகளென்கிறார். ॥கக॥

திருக்குருகைப்பிரான்பிள்ளான் திருவடிகளே சரணம்.

இ— வெளியிடுகிறாரென்று ஸம்பந்திவர்க்கத்தை. நம்மதாதுமஜ்ஞத்வாதிகளுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (உங்களுக்காக ஸ்வீகரிக்கப்படுகிறவையும் நீங்களுமித்யாதியால்) என்னவேண்டாவென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இதில் இத்யாதியால) ॥(மு)॥

✳ நிகமனம். ✳

அதிகாரத்திற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஆத்மேத்யாதியால்) சேஷம் ஸ்பஷ்டம். ॥கக॥

ஈ— மாயிருப்பதொன்றில்லையென்றபடி. எண்ணவேண்டா - சங்கிக்கவேண்டாம், இதில் ஒரு ஸம்சயமில்லையென்றபடி. ॥௧௦॥

அவனில் ஆத்த க்ருஷ்ணனில்காட்டில், மற்று - வேறுபட்டது, யாதுமில்லையென்று - ஒன்றுமில்லையென்று, நம்முடைய ஆத்மாத்மீயங்களெல்லாம் ஸ்வரூபஸ்வித விசேஷணதயா அவனுக்கே சேஷபூதங்களல்லது ஸ்வதந்த்ரமாயிருப்பதொன்றுமில்லையென்றபடி. அதுவே - அந்த அர்த்தத்தையே, துணிந்து - அத்யவஸித்து, தாதுசேர் - பராகஸம்ஸ்ருஷ்டமான, தாது - வாஸஸ்தானமாய் ப்ரவாளம், தோள்கண்ணனை - மஹாஜங்களையுடையவனான ஸ்ரீக்ருஷ்ணனை, குருகூர்ச்சடகோபன்சொன்ன - ஸ்பஷ்டம், தீதிலாத - அபத்ரரஹிதமான, தீது அபத்ரம், ஸர்வதோஷரஹிதமானவென்றபடி. ஒண் - ஒள்ளியதான, ஜ்ஞானாதிசயான வென்றபடி. தமிழ்கள் - ஸர்வாதிகாரமாம்படி த்ராவிடங்களான, இவையாயிரத்துள் - இந்தபாட்டுக்களாயிரத்துக்குள்ளே, இப்பத்தும் - இந்தபத்துப்பாட்டையும், ஓதவல்ல - அத்யயனம்பண்ணவல்லவர்களான, பிராக்கள் - உபகாரகரானவர்கள், "அப்யஸ்தேவ நஜம் ப்ராப்ய ஸம்ஸாரஸாகரம் । நவசத்ர நிஷ்டா ஸதீர்த்யா" என்னுமாப்போலே தமக்குபகாரகரென்றபடி பண்டே - இதுஓதுகிறதற்குமுன்னமே, அநாத்யநாதியான ஸம்பந்தம் வந்தகாலம் தொடங்கியென்றபடி. நம்மை யாளுடையார்கள் - நம்மைத்தங்களுக்கு தாஸராகவுடையவர்கள், நமக்குநாயகரென்றபடி. அலலேனென்னுதே பால்குடிக்கவேணுமென்று சிசுவைத் தாய்கொண்டாடுமாப்போலே கொண்டாடுகிறபடி. ॥கக॥

✳ ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமதே வரவரமுநயே நம: ✳

ஸ்ரீ:

த்விதீய பத்து தாத்பர்ய ரத்நாவளி:

(கொண்டபெண்டிர்.)

ஸம்ஸாரஸ்வாநுபந்தித்வ ப்ரணிஜநாநாம் சஹாய ஸம்பந்நாந்

ஜாதஸ்வாதந்த்ர்ய ஸ்வப்ரதிபாஸ்பாராயண க்ருதம் ।

ஸம்ஸ்ருஷ்டஸ்வாதந்த்ர்யம் ஸ்வாமிநோ நாதஸ்யைவ அதிசய

ப்ரகாஸ நித்ய ஸம்பந்தி ஸம்ப்ராப்தி நிக்ஷேப ॥௧௦௩॥

(ஸம்ஸாரஸ்வாநுபந்தி) எண்டிசையும் கீழுமேலும் முற்றவுமுண்டபிரான - அதிகாரத்திலே

ரூ—கா— எல்லாலோகங்களையும் திருவயிற்றிலேவைத்து ரக்ஷித்து அத்தாலே மிகவும் கொண்டாடப்படுகையாலும், (க்ருஷ்ணஜநநாத்) கண்ணையொன்றாலே யேழ்மராமுமெய்த வெங்கார்முகிலை- சக்ரவர்த்தித்திருமகனைப் போருதிருச்சரத்தாலே ஸத்ருஸாலங்களையும்மொழித்து "ஸம்ஹிதஸ்த்ராஸீத்" என்றிருந்த ரிஷிகளுக்கு 'ஜநயாஞ்சக்ரே' என்கிறபடியே க்ருதவிஸ்வாஸத்தை யுண்டாக்குகையாலும், (தேவக்யாநாஸாத்யஸ்வர்ஜாதக்ஷணாத்ப்ரஸ்ருத ஸர்வாங்கஜீவாதகாரம் கீர்த்யேம்) மருள்கொள்செய்கை அசுரர்மங்க வடமதுரைப் பிறந்தாககருள்கொளாளா யுய்யிலல்லால்- ஸமாஸ்ரயணஸௌலப்ய ஸ்ரவணமாத்ரமாகத் தன்வாத்ஸல்யத்தாலே வடமதுரையிலே க்ருஷ்ணனுபவந்தவதரிக்கையாலும், மேலில்பாட்டுக்கள்தோறும் 'வடமதுரைப்பிறந்தவன் வண்புகழேசரணென்றுய்ய' 'அதிர்கொள்செய்கை யசுரர்மங்க வடமதுரைப்பிறந்தாற்கு' 'மல்லைமூதூர் வடமதுரைப்பிறந்தவன் வண்புகழேசொல்லியுய்ய' 'பெற்றத்தாயன் வடமதுரைப்பிறந்தான்' 'வாழ்துணையா வடமதுரைப்பிறந்தவன்' 'மாதுகிலின் கொடிக்கொள்மாட வடமதுரைப்பிறந்த' 'மண்ணின்பாரம்நீக்குதற்கே வடமதுரைப்பிறந்தான்' என்று விரோதிநிரஸநார்த்தமாக வடமதுரையிலே வந்தவதரித்தருளினதையே ப்ரஸம்ஸிக்கையாலே இவைத்தாலேதானே சுநதோஷமும் வ்யாவ்ருத்தங்களாயிற்றென்று திருவுள்ளம். இப்படி ஸர்வஜநங்களுக்கும் ஸர்வைஸ்வர்யமான க்ருஷ்ணனுடைய திருவடிகளை ஆஸ்ரயித்தாலொழிய 'ஸ்வாரக்ஷணே வ்யாஸக்தஸ்ய கோ ஹேதுர்வா ரக்ஷணே' என்னும்படியிருக்கிற ஸம்ஸாரிசேதநனுக்கு வேறு ஸஹாயமும் ப்ராப்ரார்த்தமுமில்லையென்று ஸர்வோத்க்ருஷ்டமான சேர்த்தத்தை 'கொண்டபெண்டிர்' என்று உபக்ரமத்திலே காரியஸமாப்தம் அருளிச்செய்தருளினாரென்கிறார். ॥௧௦௭॥

"ஆவகஸவ்யாஸவிஸ்ய" என்று ஒன்பதினாயிரத்தில் பாடம். 'ஸப்தஸ்ரீஜாஸங்க்யாயாம்' என்று சிலர்பாடம், திருமலைக்கு ஸப்தகிரீ என்றும் திருநாமம் உண்டாயிருக்கிறதிறே; திருவவதாரத்திற்கு ப்ரயோஜநம் ஸாதுபரித்ராணாதி த்ரயமுமாயிருக்கச்செய்தேயும் ஒவ்வொன்றிலே நோக்காயிருக்குமாப்போலே இங்கும் 'அசுரர்மங்க' விநாஸியாலேசொன்ன திருவவதாரத்துக்கும் தாத்பர்யம்சொல்லுகையுசிதம். ஜாதகவாக- பிறந்தவன், சுஜனனதான், 'ஸம்பவாமி' என்று பிறக்கையாலும், ஸமுத்ஜாதகவாக- மூதூர்பிறந்தவன், சுத்தநாபஸமுத்ரியில் வந்துபிறக்கையாலும், தேவக்யாஜாதகவாக- அசுரர்மங்க, துஷ்டநிக்ரஹமாகப் பிறந்தருளுகையாலும், உத்தரஸ்ரீஜாதகவாக- வடமதுரை, ஸப்த முக்தி க்ஷேத்ரங்களிலொன்றில் பிறந்தருளுகையாலும், ஸப்தாங்கஸ்தாபாஜாதகவாக- திருநாமமே ஹோமமானஇடத்தில் பிறந்தருளுகையாலும், ஜயஶ்ரீ- வாழ்துணையா, நிரவதிகமான தன்க்ருபையாலே அவதரிக்கையாலும், பம்யோ- பெற்றத்தாயன் உகவாசநம்பண்ணின ஜாதாபோலே பரியுமவனுகையாலே ப்ரயோஜநவம்யாவகையாலும், க்ருஷ்ண- கண்ணன், ஸர்வஜ்ஞனாயிருக்கையாலும், என்று பொருள்கொள்ளவடுக்குமென்று நம் ஆசார்யர்கள் அருளிச்செய்வர்கள்.

ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேஸிகாய நம:.

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஒன்பதாம்பத்தில் முதற்றிருவாய்மொழிமுற்றிற்று.

முதற்றிருவாய்மொழிமுற்றிற்று.

இரண்டாந்திருவாய்மொழி.

ஸூ— பண்டைநாளாலேநின் திருவருளும்பங்கயத்தாள் திருவருளுங்* கொண்டுநின்கோயில்சீய்த்துப்பல்படிகாற் குடிகுடிவழிவந்தாட்செய்யுந்* தொண்டரோர்க்கருளிச்சோதிவாய்திறந்துன்றாமரைக்கண்களாலேநோக்காய்*

ஆ— (பண்டைநாளாலே) இப்படி யெம்பெருமானுடைய உறவுடைமையை அநுஸந்தித்து இவ்வுறவுடையவனோடே கலந்துபரிமாறவேணுமென்று ப்ரார்த்தித்துக்கொண்டு திருப்புளிங்குடியிலே போய்ப்புக்கு அவ்விடத்தில் தன்திறத்து ஸாதாரணகடாக்ஷமல்லது வேறொருவிசேஷகடாக்ஷம் பண்ணியருளக்காணாமையாலே சாலவின்னாதாராய் என்னை உன்னழகியதிருக்கண்களாலே நோக்கியருளவேணும், திருவடிகளைத் தலையிலேவைத்தருளவேணும். திருப்பள்ளியுணர்ந்து பிராட்டியோடுகூட இருந்தருளவேணும், எழுந்திருந்-

இரண்டாந்திருவாய்மொழி.

இ— இருந்தும்வியந்திலேபெற்ற ஸர்வவித ஸம்ஶ்லேஷத்திற்கு விஶ்லேஷமின்றிக்கே அத்தாலுண்டான ப்ரீதிப்ரகர்ஷத்தாலே நெடுமாற்கடிமையிலே ஶேஷத்வகாஷ்டாபந்நராய் அந்தப்ரீதியுள்ளடங்காமையாலே தொண்டர்பெண்டரிலே ஸர்வாவஸ்தையும்பண்ணி இப்படி உத்தரோத்தரமாக ஸக்தராயிருக்கிற ஆழ்வார் விஶ்லேஷதஶையில்போலே இத்திருவாய்மொழியிலே 'கண்களால்நோக்காய்' என்றும் 'நின்பாதபங்கயமே தலைக்கணியாய்' என்றும் இப்புடைகளிலே அலற்றுகை ஸம்கதமன்றோவென்ன ஸங்கதிப்பிக்கிறார் (இப்படியிதற்றையால்) உறவுடைமை- ஸம்பந்தமுடையவனாயிருக்கை; கலந்துபரிமாறவேணுமென்றது- ஸம்ஸ்லேஷ ஸம்போகாதிகளான ஸாஹசர்யஸம்ஶ்லேஷம்பண்ணி வ்யாபரிக்கவேணுமென்றபடி. கீழ்த்திருவாய்மொழியிலே அவனுடைய ஸர்வஸம்பந்தத்தை அநுஸந்தித்தவாறே இவருக்கிப்படி ஸபரிமாரிப்போது பிறந்ததென்றுகருத்து. ஸ்வத்வம்பந்தவென்றறிந்தாலிப்படி. செய்தாலல்லது தரித்திருக்கமுடியாதிறே, இங்கு ஸாதாரணகடாக்ஷமாவது- ஸூரிகளெல்லார்பக்கலிலும் ஸர்வஸாதாரணமாக ஸூரவாதிகளன்றிக்கே ஸூக்ஷ்மஸ்வாதந்த்ர்யம் செய்தருளுகை, விசேஷகடாக்ஷமாவது- தாம்அபேக்ஷித்தபடியே ஸூரவாதிக ளெல்லாம் செய்தருளுகை, சாலவென்றது- மிகவுமென்றபடி. இன்னாதாராயென்றது- கிலேஶநராயென்றபடி. ப்ரார்த்தநங்களையடையவென்றது- ப்ரார்த்தநங்களெல்லாவற்றையுமென்றபடி.

முதற்பாட்டு.

நின்திருவருளும் பங்கயத்தாள் திருவருளுமென்று பாட்டிலே ஸம்பந்தமாயிருந்தாலும் ஸ்வஸம்பந்தஸ்வ-

ஈடு— தெண்டிரை- தெளிந்ததிரைகளையுடைத்தான, திரை- தரங்கம், தெண்டிரையென்கிறவிடத்தில் ணகாரஸவர்ணமான தகாரஸம்யோகமாரகஸேயம், விகல்பதரங்கஸாரஸ்ரீயானவென்றபடி. திருமேனியின் ஸௌகுமார்யத்துக்கநுரூபமாக ஜலஸம்ருத்தியையுடையதான வென்றபடி. பொருனல்- தாம்ரபர்ணியினுடைய, தாம்ரபர்ணியோடு சேர்ந்ததானவென்றபடி. தண்பணை- குளிர்ந்தநீர்நிலங்களாலே, பணை- நீர்நிலம், சூழ்ந்த- ஸர்வவ்ருதமான, திருப்புளிங்குடி- திருப்புளிங்குடியென்கிற திவ்யதேசத்திலே, கிடந்தானே- கண்வளர்ந்தருளுகிறவனே, விபீஷணாந்வயஸாத்யத்தை பராங்முகனாய் நீ ஸர்வாதிகத்வவில் ஸம்பந்த த்தையிறே என்வரிஸரத்திலேவந்து கண்வளர்ந்தருளி யுன்னழகையெனக்குக்காட்டிற்று, அப்படியேயி ன்னமும் நான்அபேக்ஷிக்கிறதெல்லாம் செய்தருளவேணுமென்றுகருத்து. நின்திருவருளும்- நிருபாதிகமான வுன்னுடைய க்ருபையையும், பங்கயத்தாள் திருவருளும்- பங்கஜவாஸிநியினுடைய க்ருபையையும் உன்னுடையக்ருபைக்கும் நிதாநமான பெரியபிராட்டியார் க்ருபையையுமென்றபடி. உன்னுடைய வுடையீ யினுடைய க்ருபைக்கு விஷயமான என்னை நீ உபேக்ஷிக்கை உசிதமோவென்றுகருத்து. பண்டைநாளா லேகொண்டு- அநாதிகாலத்திலேபெற்று, பண்டை- அநாதிகம், நாளாலேஎன்று ஸப்தம்யர்த்தே த்ருதீயா, முன்பு நெடுநாளேதுடங்கியென்றபடி, நெடுநாள்க்ருபைபண்ணி ஸம்ஸயத்திலே கைவிடலாமோபிரானே என்றுகருத்து, நின்கோயில்- உன்னுடையதிவ்யாயதநத்திலே, சீய்த்து- ஸம்மார்ஜநாதிகைங்கர்யம் பண்ணி, சீய்க்கை- ஸம்மார்ஜநம்பண்ணுகை, இது உபலக்ஷணம், உசிதகைங்கர்யங்களைப்பண்ணி யென்றபடி, பல்படிகால்- ஸந்தாநக்ரமமாக, ஸநாதநபரம்பரையாகவென்றபடி, குடிகுடி- குடிகுடியாக,

மூ— தெண்டிரைப்பொருநற்றண்பணைசூழ்ந்த திருப்புளிங்குடிக்கிடந்தானே* ॥௧॥
குடிக்கிடந்தாக்கஞ்செய்துநின்றீர்த்தவடிமைக்குற்றேவல்செய்துன்பொன்* னடிக்கடவாதேவழிவருகின்ற

ஆ—தென்னேதிரே வந்தருளவேணும், என்றிப்புடைகளிலே தம்முடைய ஸௌலப்யங்களையுடையவனைச்சொல்லுகி றார். பிராட்டி ஸந்நிதியுமாகையாலே பண்டேயுன்னாலே விஷயீக்ருதராய் ஸர்வவிதகைங்கர்யநிரதரு மாய் என்றுங்குடியாக வடிமைசெய்துவர்த்திக்கிற வடியோங்களுக்கருளி சோதிவாய்திறந்து உன்தாமரைக்க ண்களால்நோக்காய், தெளிந்ததிரையையுடைய திருப்பொருநலோடுகூடின அழகியநீர்நிலஞ்சூழ்ந்த திருப்பு ளிங்குடியிலேவந்து கண்வளர்ந்தருளினவனே? யென்றுப்ரார்த்திக்கிறார். ॥௧॥
(குடிக்கிடந்து) ஸஸந்ததிகராய்ப் போஜநராய்க்கொண்டு உனக்கஸாதாரணமான வடிமைசெய்துஉன்திரு.

இ—த்தாலும் ப்ராணஸமத்தாலும் பஞ்சயத்தாள்திருவருளுமென்றது ஸமஸ்தைங்கர்யத்துக்கும் ஸேஷ தேஷ விவக்ஷிதமென்றுகாட்டுகிறார் (பிராட்டியித்யாதியால்) பிராட்டிக்கு ஸம்பாஷமில்லாமையாலும் ஆ த்மஸ்வரூபாநுரூப வாஸ்தல்யாதிசயத்தாலும் சேதநர்பக்கல் க்ஷமாஶ்ரயணதஶையிலே அவனுடையகடா க்ஷம் ப்ரயோஜனவியாய் 'தஸ்மிந்நவஸரே தேவி மயா தத்தம்' என்கிறபடியே தந்நாமஸம்பந்தி அவனு டையகடாக்ஷம் ஸநாதநவியாயிருக்குமென்றுகருத்து. இத்திருவாய்மொழியி னுபக்ரமமான முதற்பா ட்டில் பண்டேயுன்னாலே விஷயீக்ருதரென்கையாலே வீரக்ருதஷயகமென்கிற ஸமஸ்தகுணம் இத்திருவாய் மொழிக்குப் ப்ரதிவாத்யமென்றதாயிற்று. நின்கோயில்சீய்த்து என்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸர்வவிதேத்யாதியால்) சேஷம் ஸ்பஷ்டம். ॥௧॥

✳ இரண்டாம்பாட்டு. ✳

குடிக்கிடந்தாக்கஞ்செய்து என்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸஸந்ததீத்யாதியால்) குற்றேவ ல்லென்கிறதையுரைக்கிறார் (உனக்கஸாதாரணமித்யாதியால்) உன்பொன்னடிக்கடவாதே என்கிறதற்குத் தாத்பர்ய மருளிச்செய்கிறார் (உன்திருவடிகளித்யாதியால) படிக்களவாக நிமிர்த்தவென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செ

ப—வாத்ஸல்யஸஹிதமாகவென்றபடி. வழிவந்து- ஸாஸ்த்ரமார்க்கத்திலேவந்து, ஸாஸ்த்ரமார்க்கம் தப்பா தபடி நிஷ்டராய்என்றபடி. ஆட்செய்யும்- அடிமைசெய்யாநிற்கிற, தொண்டரோர்க்கு- சேஷபூதரான வெங்களுக்கு, தம்ம ஸம்பந்திகளையுங்கூட்டிக்கொண்டு சொல்லுகிறபடி. இப்படி அடிதடங்கி உனக்கேகுடி களாகையாலே அநந்யகதிகர்களான அடியோங்களுக்கென்றபடி. அருளி- க்ருபைபண்ணி, சோதிவாய் திறந்து- உஜ்ஜ்வலமானதிருப்பவளம் திறந்து, விஷ்ணுபோலே ரஞ்ஜநீயமான திருப்பவளத்தைத்திறந்து ஒருவார் த்தை அருளிச்செய்தென்றபடி. வார்த்தை அருளிச்செய்யும்போதுள்ள திருப்பவளத்தினழகைக் காணவேணு மென்றுகருத்தாலே சோதிவாய்திறந்தென்றிவ்வளவே அருளிச்செய்தது. உன்தாமரைக்கண்களால்- என் னுடைய தாபஸம்போலே ஶீதளவிஶாலஸ்நிக்தங்களான உன்னுடையவிலோசனங்களாலே; நோக்கா ய்- கடாக்ஷித்தருளவேணும். ॥௧॥
கொடிக்கொள்- கொடிகளைக்கொண்டிருக்கிற, கொடி- த்வஜம்; த்வஜங்களையுடைத்தான வென்றபடி. பொ ன்மதிள்- கநகமய ப்ராகாரத்தாலே, சூழ்- வரிவ்ருதமான, இதுபுளிங்குடிக்கு விசேஷணம். குளிர்வயல் சோலை- குளிர்ந்தவயல்களையும் உத்யாநங்களையும் உடைத்தான, திருப்புளிங்குடிக்கிடந்தானே- திருப்புளிங் குடி திவ்யதேசத்திலே ஶ்ரீதாநஸஹவர்த்திமாகக் கண்வளர்ந்தருளுகிறவனே, இது ஸம்போதநம்; குடி க்கிடந்து- குடியிலேகிடந்து, சேஷக்ரமாதிகரமிதப்பாதேநின்று என்றபடி. ஆக்கம்செய்து- ஸம்ருத் தியைப்பண்ணி, ஆக்கம்- வ்ருத்தி, அந்த சேஷவ்ருத்தமாநமாக பஹுவித கைங்கர்யவ்ருத்திகளை ப்பண்ணியென்றபடி. தீர்த்த நின் அடிமையென்று அநுபிப்பது. தீர்த்த- தீர்க்கமான, பாவநமானவென் றபடி. தன்னுடைய ஸ்பர்ஶத்தையாலே உதாரவ்யாபாரஷாதநீக ஸம்பந்திகமான வென்றபடி. நின்னடிமை- உன்னுடைய கைங்கர்யங்களிலே, குற்றேவல்செய்து- அஸாதாரண கைங்கர்யங்களைச்செய்து, உன்பொன் னடி- உன்னுடைய ஸ்ப்ருஹணீயமானதிருவடிகளை, கடவாதே- அதிக்ரமியாமல், உன்திருவடிகளல்லது வே றொருவ்யாபாரஷாந்தர்த்தை அறியாதேயென்றபடி. வழிவருகின்ற- அடிமைமுறைதப்பாதேநடக்கிற, வம்ஶ

மூ—வடியரோர்க்கருளிநீயொருநாட்* படிக்களவாகநிமிர்த்தநின்பாதபங்கயமேதலைக்கணியாய்* கொடிக்கோள்
பொன்மதிள்சூழ்குளிர்வயற்சோலைத்திருப்புளிங்குடிக்கிடந்தானே* ॥உ॥
கிடந்தநாள்கிடந்தாயெத்தனைகாலங்கிடத்தியுன்றிருவுடம்பசையத்* தொடர்ந்துகுற்றேவல்செய்துதொல்லடி
மைவழிவருந்தொண்டரோர்க்கருளித்*தடங்கொடாமரைக்கண்விழித்துநீயெழுந்துன்றாமரைமங்கையுநீயு*

ஆ—வடிகளல்லதறியாதே ஸர்வஸ்வமெனவதிக்கிற வடியோமுக்குக்க்ருபைபண்ணிஸர்வாத்மாக்களுக்கும் ஸாதாரணமான நின்பாதபங்கஜமே ஒருநாள்தலைக்கணியாய், கொடிக்கொள்பொன்மதிள்சூழ் குளிர்வயல்சோலைத் திருப்புளிங்குடியிலே கண்வளர்ந்தருளினவனேயென்கிறார். ॥உ॥

(கிடந்தநாள்) இங்ஙனேஒருபடியே கண்வளர்ந்தருளுகிறபிரானே உன்திருவுடம்புநோவாதோ, உன்திரு

இ—ய்கிறார்(ஸர்வாத்மத்ருஷ்டியால்) தலைக்கணியாயென்கிறவித்தாலே கீழ்ப்பாட்டிலே என்னைக்கடாக்ஷித்தருளவேணுமென்றவர் இப்பாட்டில் உன்திருவடிகளை யென்தலையில் வைத்தருளவேணு மென்கிறாரென்று ஸங்கதியிதே. ॥உ॥

✳ மூன்றாம்பாட்டு. ✳

கிடந்தநாள்கிடந்தாயென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இங்ஙனேயித்யாதியால்) பிரானேயென்றுஸம்போதநமாக நிர்தேசித்ததினாலே திருப்புளிங்குடிக்கிடந்தானே என்றதும் வ்யாவ்ருத்தம். எத்தனைகாலமித்யாதிக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (உன்திருவுடம்புநோவாதோஎன்று) இதற்குஎழுந்திருந்துஇத்யாதி

ஈ—ஸர்வஸ்வமாக ஶேஷமாய்க்கிடக்கிறவென்றபடி. அடியரோர்க்கு-அடியாரானவெங்களுக்கு, இப்படி உன்னையொழிய நாயனில்லாதவெங்களுக்கென்றபடி. அருளி- க்ருபைபண்ணி, நீ- ஸர்வஸ்வாமியானநீ, படிக்கு- ப்ருதிவிக்கு, படி- ப்ருதிவி, அளவாக- ஸப்ரமாணமாக, நிமிர்த்த- உஜ்ஜ்ரும்பித்த, த்ரிவிக்ரமதசையிலே ப்ருதிவியெல்லாம் வ்யாப்யமாகும்படி விஸ்த்ருதமாக்கப்பட்டவென்றபடி. ஸர்வாத்மாக்களுக்கும் ஸ்வதந்த்ர ஸாதாரணமானவென்கை. நின்பாதபங்கயமே- உன்னுடையபாதபங்கஜத்தையே, ஒருநாள்- ஒருநாளாகிலும், த்ருஷ்டாந்தமன்று நக்கால் நாக்குநனைக்கவேணுமென்னுமாப்போலே சொல்லுகிறபடி. தலைக்கு- என்னுடையசிரஸ்ஸுக்கு, அணியாய்- அலங்காரமாக்கியருளவேணும். ॥உ॥

திருப்புளிங்குடிக்கிடந்தானே- ஆஶ்ரிதர்க்காக திருப்புளிங்குடியிலே கண்வளர்ந்தருளுகிறவனே, இப்படியே ஆஶ்ரிதர்க்கு மற்றுமுள்ள அபேக்ஷிதங்களைச்செய்தருள வேண்டாவோஎன்றுகருத்து. கிடந்தநாள்கிடந்தாய்- நீகண்வளர்ந்தருளுகிற அழகைக்காண ஆசைப்பட்ட ஆஶ்ரிதர்க்காகக் கண்வளர்ந்தருளுகிறநாளெல்லாம் இங்ஙனேஒருபடியே கண்வளர்ந்தருளினாய், உன்திருவுடம்பு- அதிஸுகுமாரமான உன்திருமேனியானது, அசைய- அசையும்படி, அசைவு- நோவு, ஒருபடியே கண்வளர்ந்தருளுகையாலே வ்யதிதமாம்படியென்கை. எத்தனைகாலங்கிடத்தி- இன்னும் எத்தனைகாலம் கண்வளர்ந்தருளக்கடவை, நீஎல்லாம் ஆஶ்ரிதர்க்காகச்செய்யுமவனுகையாலே இனி கண்வளர்ந்தருளுகையை எனக்காகத் தவிரவேணுமென்றுகருத்து. தொடர்ந்து- அநுஸரித்து, 'யதாபாலோஸநராஜாநம் யதாவத்ஸஹமப்யநம்' என்கிறபடியே ததவஸரங்களிலே 'ஸஹஶ்ரிதோந்வதாவத்ஸ' 'அஹம்ஸர்வம்கரிஷ்யாமி' நிவேத்யோநம்நிவேத்யம் ஸ்வீகாரைஸுஶ்ரூஷயந்தே" என்னுப்போலே உன்னைப்பூர்யாசித்து அநுவர்த்தனக்கொண்டென்றபடி. குற்றேவல்செய்து- அந்தரங்ககைங்கர்யங்களைப்பண்ணி, தொல்- அநாதியான, அடிமை- ஶேஷத்வத்தினுடைய, வழி- மார்க்கத்திலே, அநாதிவ்ருத்தியிலேயென்றபடி. வரும்- வராநிற்கிற, தொண்டரோர்க்கு- தாஸபூதரானவெங்களுக்கு, இப்படிஉனக்கே அடிமையாகையாலே அநந்யகதிகளானவெங்களுக்கென்றபடி. இம்மூன்றுபாட்டிலும் தாமடிமைசெய்கிறோமென்று ஸ்வாதந்த்ர்யம்சொன்னபடியன்று, ஒருவனுக்கு அடிமையாயிருந்தவனை வேறொருவர்ரக்ஷிபாரென்று தம்முடைய அநந்யகதித்வம் வ்யஞ்ஜிப்பிக்கைக்காகச்சொன்னபடி. அருளி- க்ருபைபண்ணி, தடங்கொள்- தடாகத்தைக் கவளீகரித்துக்கொண்டிருக்கிற, தடம்- தடாகம், கொள்ளுகை- க்ரஹிக்கை, அதிவிஸ்தாரமானவென்றபடி. தாமரைக்கண்- தாமரைப்பூக்கள்போலேயிருக்கிற திருக்கண்கள், விழித்து- அவ்வழகுகளையெல்லாம் நாங்கள்கண்டநுபவிக்கும்படி திறந்தருளி, நீ- ஸர்வஜ்ஞனானநீ, எழுந்து- ஶேஷஶயநத்தில்நின்றும்உத்திதனாய், உன்தாமரைமங்கையுநீயும்- உனக்கநுரூபவேஷையாயுள்ள

மூ—எங்கள்கண்முகப்பேயுலகர்களெல்லாமிணையடிதொழுதெழுதிறைஞ்சித்* தங்களன்பாரத்தமதுசொல்வலத்
தாற்றலைத்தலைச்சிறந்துபூசிப்பத்* திங்கள்சேர்மாடத்திருப்புளிங்குடியாய் திருவைகுந்தத்துள்ளாய்தேவா*
இங்கண்மாஞாலத்திதனுளுமொருநாளிருந்திடாய்வீற்றிடங்கொண்டே* ॥ ௮ ॥

ஆ—தொழுது க்ருதஜ்ஞராய்த் தங்களுடைய ஸ்நேஹாநுகுணமாகத் தங்களுடைய ஸமர்த்தமான சொற்களாலே மிகவும் மேல்விழுந்துகொண்டாட இந்தலோகத்திலே இத்திருப்புளிங்குடியிலே பிராட்டியும்நீயுங்கூட ஒருநாளிருந்திடாயென்கிறார். ॥ ௮ ॥

(வீற்றிடங்கொண்டு) என்னுடைய கண்ணிணையானது விடாய்தீர்ந்துகுளிர உன்னுடைய செவ்விப்பூப் போலேயிருக்கிற திருமேனியையோவாதே பருகும்படியாக விலக்ஷணீயமான ஸம்ஸாரத்தில் உன்னுடைய

இ— தாத்பர்யமருளிச்செய்கிறார் (தங்களுடைய வித்யாதியால்) தமதுசொல்வலத்தா லென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (தங்களுடைய ஸக்த்யாதியால்) தலைத்தலைச்சிறந்துபூசிப்ப என்கிறதற்குத் தாத்பர்யமருளிச் செய்கிறார் (மிகவுமித்யாதியால்) இங்கணமாஞாலத்திதனுளும் என்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இந்த லோகத்திலேயித்யாதியால்) வீற்று என்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (பிராட்டியும் நீயுமென்று) ॥ ௮ ॥

✳ ஒன்பதாம்பாட்டு ✳

கண்ணிணை குளிரவென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (என்னுடைய வித்யாதியால்) பாட்டிலே தம் ஸஜாதீயர்களையும் கூட்டிக்கொண்டு அடியோங்களென்று பஹுவசநமிருந்ததேயாகிலும் இவருக்குப் ப்ராதாந்யவிவக்ஷயா வ்யாக்யாநத்தில் என்னுடையவென்று ஏகவசநமாக நிர்தேசித்தது. புதுமலராகத் தையென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (உன்னுடைய செவ்வியித்யாதியால்) செவ்வி- வைஸத்யம். பருகும்படியாகவென்கிறதற்கு இருந்தருளவேணு மென்கிறதோடே அந்வயம். இத்தால் இவ்விருப்பில் வாசிய றியமாட்டாத ஸம்ஸாரத்திலே நாம் இருப்பதெதற்காவென்னில்? அதில்மிகவும் ஆசையுடையவெங்களுக்காக இருந்தருளவேணு மென்கிறாரென்று ஸமாதிஸந்திதை. வியன்கொள்மாஞாலத் திதனுளுமென்கிறதற்குத்

ஸ— திங்கள்சேர்மாட- சந்த்ரனைக்கிட்டியிருக்கிற க்ருஹங்களையுடைத்தான், அத்யுச்ச்ரிதஸௌதமயமான வென்றபடி. திருப்புளிங்குடியாய்- திருப்புளிங்குடியிலே யெழுந்தருளியிருக்கிறவனே? திருவைகுந்தத்துள் ளாய்- அவ்வளவன்றிக்கே ஸூரிகளுக்காக ஸ்ரீவைகுண்டமென்கிற திவ்யதேசத்திலு மிருந்தருளுகிறவனே? தேவா- தேவ? பரமபதத்தில்காட்டிலும் தேஜஸ்ஸௌலப்யாதி குணங்களையுடையவனே என்றபடி. எங்கள்கண்முகப்பே- எங்களுடைய கண்முன்னே, உலகர்களெல்லாம்- லௌகிகரெல்லாரும், இணையடி- பரஸ்பரம் சேர்த்தியாலே ஸத்ருசமாய்களாம்படி அந்யூநமாயிருக்கிற உன்திருவடிகளை, இணை- அந்யூநம், தொழுது- ப்ரணாமம்பண்ணி, எழுது- எழுச்சிபெற்று, எழுச்சி- அதிசயம். இறைஞ்சி- ஆஸ்ரயித்து, உன்னைத்தங்களுக்கு ரக்ஷகனாக அத்யவஸித்து என்றபடி. தங்கள் அன்பு- உன்பக்கல்தங்களுக்கு ஸ்நேஹ மானது, ஆர- பரிபூர்ணமாகாநிற்க, பரிபூர்ணமாம்படி வர்த்தியாநிற்க வென்றபடி. தமது- தங்களுடைய தான, சொல்வலத்தால்- உக்திவைபவத்தாலே, தங்களுக்குள்ள உக்திஸாமர்த்யாநுகுணமாகவென்றபடி. இதற் குப்பூசிப்பவென்கிறதோடே அந்வயம். தலைத்தலைச்சிறந்து- ஒருவர்க்கொருவர் அதிஸ்பர்த்தராய், சிறப்பு- அதிஸ்பர்த்தி, அஹமஹமிகயாமேல் விழுந்தென்றபடி. பூசிப்ப- பூஜிக்க, ஸ்தோத்ரம்பண்ணும்படியாக வென் றபடி. இதற்கு இருந்திடாயென்கிறதோடே அந்வயம். இங்கண்மாஞாலத்து- இந்தகண்ணுடைத்தான மஹா ப்ருதிவியிலே, கண என்று இடம், மாஎன்று பூர்வம், நல்லிடங்களையுடைத்தாய் நீஸஞ்சரிக்கும்படி பூர்வமான இந்த ப்ருதிவியிலேயென்றபடி. இதனுளும்- இந்த திருப்புளிங்குடியிலும், பரமபதத்தில் போலே இவ்வூரிலுமென்றபடி. இடங்கொண்டு- திவ்யமஹிஷிகளுக்கு உசிதமான ஒருதிவ்யஸ்தானத்தை ஸ்வீக ரித்துக்கொண்டு, வீற்று- வீறுபெற்று, வீறு- உத்கர்ஷம், அதாவது:— "தயா ஸார்த்தம் ஜகத்பதி: ஆஸாஞ்சக்ரே"" என்கிறபடியே பிராட்டியோடேகூட இருந்தருளி அத்தாலேஉண்டான ஸௌபாக்யத் தையுடையவனாயென்றபடி. ஒருநாள்- ஒருநாளாகிலும், த்ருஷ்டாந்தமின் ஒருக்கால் நாக்குநனைக்கவேணுமென் னுமாப்போலே சொல்லுகிறார். இருந்திடாய்- திவ்யமஹிஷிகளோடேகூட இருந்தருளவேணும், இடாயென்றது ஸ்வார்த்தகவசனமோ. ॥ ௮ ॥

மூ— வீற்றிடங்கொண்டுவியன்கொள்மாஞாலத் திதனுளுமிருந்திடாயடியோம்* போற்றியோவாதேகண்ணிணைகுளிரப்புதுமலராகத்தைப்பருக* சேற்றிளவாளைசெந்நெலூடுகளும், செழும்பணைத்திருப்புளிங்குடியாய்* கூற்றமாயசுரர்குலமுதலரிந்தகொடுவினைப்படைகள்வல்லானே* ||௬||

கொடுவினைப்படைகள்வல்லையாயமரர்க்கிடர்கெடவசுரர்கட்கிடர்செய்* கடுவினைநஞ்சேயென்னுடையமுதே*

அ— வ்யாவ்ருத்தி தோற்றும்படி ஒருநாளிருந்தருளவேணும்; ஆஸ்ரிதருடைய து:க்கத்தைப்போக்கவல்லையாயிருந்து அவைசெய்யாதொழியலாமோவென்கிறார். ||௬||

இ— தாத்பர்யமருளிச்செய்கிறார் (விஸ்மயநீய மித்யாதியால்) வீற்றுக்கொண்டு இருந்திடாயென்றபயித்துத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (உன்னுடைய வ்யாவ்ருத்த்யாதியால்) கீழ்ப்பாட்டுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஆஸ்ரிதருடைய விதாத்யாதியால்). ||௭||

பொ— செந்நெலூடு- சிவந்தநெற்பயிர்களின் மத்யத்திலே, ஊடு- மத்யம், வாகவிஸம்பந்தங்களான கேதாரங்களிலேயென்றபடி. சேறு- நித்யஜலஸம்ருத்தியாலுள்ள கர்த்தமங்களிலே, இளவாளைகள்- பாலமத்ஸ்யங்கள், வாளை- மத்ஸ்யம், வஞ்சிம்ஸதிவாஸிகரான ப்ராப்தரைப்போலே நித்யயௌவநப்ராப்திதங்களான மத்ஸ்யங்களென்றபடி. உகளும்- ஹர்ஷத்தாலே துள்ளாநிற்கிற, உகளுகை- தலைக்குமேலே கிளம்புகை, அவ்வூரில் வஸ்துக்களெல்லாம் ஸ்வாபிமதம்பெற்றுக் களியாநிற்க நானுமென்னபிமதம் பெறவேண்டாவோ பிராநேயென்றுகருத்து. செழும்பணை- அழகிய நீர்நிலங்களையுடைத்தான, செழுமென்று அழகியது, திருப்புளிங்குடியாய்- திருப்புளிங்குடியில் எழுந்தருளியிருக்கிறவனே, கூற்றமாய்- ம்ருத்யுவாய், கூற்றம்- ம்ருத்யு, அசுரர்குலம்- அஸுரவர்க்கத்தை, முதலரிந்த- மூலத்திலே சேதித்தவனை, நிச்சேஷமாக நசிப்பித்தவனென்றபடி. இது ஸம்போதனம். கொடுவினை- ஆஸ்ரிதவிரோதிவிஷயத்தில் க்ரூரகர்மங்களான, வினை- கர்மம், படைகள்- ஆயுதங்களை, ஸ்ரீஸுதர்சநாதிகளையென்றபடி. வல்லானே- ஆளவல்லவனே, அவைகளை யதாபிமதமாக ப்ரயோகிக்க ஸமர்த்தனானவனே யென்றபடி. அடியோம்- சேஷபூதரான நாங்கள், போற்றி- மங்களாசாஸநம்பண்ணி, கண்ணிணை- உன்னைக்காணவேணுமென்று விடாய்த்த எங்களுடைய நயநயுகமும், குளிர- ஸந்தாபமெல்லாம்போய் ஆஹ்லாதயுக்தங்களாகும்படி, இதுக்குப் பருகவென்கிறத்தோடே அந்வயம். புதுமலராகத்தை- அபிநவபுஷ்பம்போலே ஸுகுமாரமான உன்திருமேனியை, ஆகம்- சரீரம், ஓவாதே- அவிச்சிந்நமாக, பருக- பாநம்பண்ணும்படியாக, 'பிபந்நேத்ராஞ்சலிபி:' என்கிறபடியே அதித்ருஷ்ணையோடே கண்களாலே புஜிக்கும்படியாகவென்றபடி. வியன்கொள்- விஸ்மயத்தைக்கொண்டிருக்கிற, வியன்- விஸ்மயம், விஸ்மயநீயமானவென்றபடி. ஸர்வவிபவாய். நிரதிசயவைசித்ர்யத்தையுடைத்தானுமாயிருக்கிற வுன்னை நினைப்பதும் செய்யாமையாலே விஸ்மயநீயமானவென்றபடி. மாஞாலத்து- மஹாப்ருதிவியிலே, இதனுள்ளும்- இதுக்குள்ளேயும், இந்தத் திருப்புளிங்குடியிலேயுமென்றபடி. அவ்விருப்பில் வாசியறிவாரில்லாத விடத்திலுமென்று ஸம்பந்த தாத்பர்யம். இடங்கொண்டு- ஸ்தாநத்தை ஸ்வீகரித்து, வீற்று- வீறுபெற்று, வீறு- உத்கர்ஷம், உன்னுடைய உத்கர்ஷம் தோற்றும்படியென்கை. இருந்திடாய்- நீ இருந்தருளவேணும். ||௬||

கொடுவினை- கொடிதானவினைகளையுடையவர்பக்கல, கொடிது- க்ரூரம், வினை- கர்மம், உன்னுடைய ஆஸ்ரிதவிஷயத்தில் க்ரூரகர்மங்களான அஸுரரிடத்திலென்றபடி. படைகள்வல்லையாய்- ஆயுதமெடுக்க ஸமர்த்தனே, மற்றையிடத்தில் ஆயுதமெடுக்கஸமர்த்தனல்லனிறே, "பரிவாரவணைக்கியா" "நமேத்வாரண [illegible]" என்று ராக்ஷிக்காநிற்குமிறே, 'ரஹஸ்ய [illegible]' ஜீவாதவேவிஸ்ருஜ ஸ்ரீதாவிவாஸநவப்ரகார்ணாக என்று அவன்ஸ்வபாவத்தைப் ப்ராக்ருதகவிகளும் சொன்னார்களிறே, அமரர்க்கு- ஆஸ்ரிதரானதேவர்களுக்கு, இடர்கெட- அஸுரப்ரயுக்தமான து:க்கம் நசிக்கைக்காக, அசுரர்க்கு- அஸுரர்களுக்கு, இடர்செய்- து:க்கங்களைப்பண்ணும்ஸ்வபாவமான, கடுவினைநஞ்சே- சீக்ரகாரியானவிஷமே, கடியது- வேகமும், கடியதானவினையையுடையது கடுவினையது, சீக்ரகாரியென்றபடி. அஸுரர்க்கு விஷமென்றதால். ஆஸ்ரிதவிரோதிநாசநம்பண்ணுவதுக்கு ஸ்வபாவமென்றதாயிற்று. என்னுடையமுதே- என்னுடைய ஸ்வாதமே.

மூ— கலிவயற்றிருப்புளிங்குடியாய்* வடிவிணையில்லாமலர்மகள் மற்றைநிலமகள்பிடிக்குமெல்லடியைக்*
கொடுவினையேனும்பிடிக்கநீயொருநாள்கூவுதல்வருதல்செய்யாயே* ௱0
கூவுதல்வருதல்செய்திடாயென்று குரைகடல்கடைந்தவன்றன்னை* மேவிநன்கமர்ந்தவியன்புனற்பொருநல்

ஆ— (கொடுவினை) ஆஶ்ரிதவிரோதிநிரஸநஸமர்த்தனுமாய், ஆஶ்ரிதவிரோதிநிரஸநஸ்வபாவனுமாய் எனக்கு நிரதிஶயபோக்யனுமாய், திருப்புளிங்குடியிலேவந்து ஸந்நிஹிதனானவனே வடிவழகுக்கொப்பில்லாத பெரியபிராட்டியாரும் அப்படியேயிருக்கிற ஸ்ரீபூமிப்பிராட்டியும் கூசிஸ்பர்ஶிக்கவேண்டும்படி ஸுகுமாரமான வுன்திருவடிகளை அதில் போக்யதையறிந்துவைத்து இழக்கைக்கீடான பாபத்தைப்பண்ணின நானும் பிடிக்கும்படி என்னையொருநாள் அங்கேயழைத்துக்கொள்ளுதல் இங்கேவருதல் செய்தருளவேணுமென்கிறார். ௧0

✱ பத்தாம்பாட்டு. ✱

இ— கொடுவினைப்படைகள் வல்லையாய் என்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஆஶ்ரிதேத்யாதியால்) அஸுரர்களித்யாதி நஞ்சேஜத்வத்திற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஆஶ்ரிதவிரோதிநிரஸநஸ்வபாவனுமாயென்று) மெல்லடியையென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸுகுமாரமானவித்யாதியால்). கொடுவினையேனும் என்கிறதைவிவரிக்கிறார் (அதில்போக்யதையித்யாதியால்). பிடிக்கும்படி யித்யாதி. பாலே கீழ்ப்பாட்டிலே திவ்யாவயவங்களைக் காணவேணுமென்றவர் இப்பாட்டிலே 'ஸர்வம்வாஸம்ப்ரஸாரய' என்று ப்ரஸாரிதமான திருவடியைப் பிடிக்கவேணுமென்று ப்ரார்த்திக்கிறாரென்று ஸங்கதி விஶேஷம். ௧0

ம— நிரதிஶயபோக்யமான உஜ்ஜீவகமேயென்றபடி. அவ்விஷயமே இவருக்குத்தேஶமாயிருக்கிறபடி. கலிவயல்- ஸஸ்யஸம்ருத்தமான க்ஷேத்ரங்களையுடைத்தான, கலி- ஸம்ருத்தம், திருப்புளிங்குடியாய்- திருப்புளிங்குடியிலே இருந்தருளுகிறவனே, இவர் கூப்பிடுதற்குக் கடல்கடைதல் ஸமுத்ரத்திலேபோதல் செய்யவேண்டா, திருப்புளிங்குடியிலே ஸந்நிஹிதமாயிற்றிவர்க்குத்தேஶம். வடிவிணையில்லா- ஸௌந்தர்யத்திலே ஸத்ருஶமில்லாதவளான, வடிவு- ஸௌந்தர்யம், இணை- ஸத்ருஶம், அவன் ஸௌந்தர்யத்திலே ஸத்ருஶனானாற்போலே இவள்ஸௌந்தர்யத்திலே ஸத்ருஶமில்லை, ப்ரம்ஹாஸ்ருஷ்டிதாவதாரியும் ஸௌந்தர்யத்திலிவளுக்கு ஸத்ருஶமாகமாட்டான், 'தவனுரூபஸத்லக்ஷணா' என்றேற்றமாய்நின்றதிறே. மலர்மகள்- பூவிலேபெண்ணானவள், தாமரைப்பூவிலுடைய ஸௌந்தர்யஸௌரப்ய ஸௌகுமார்யங்கள் ஒருபெண்ணாகப் பரிணமித்தாற்போலேயிருக்கிற பெரியபிராட்டிக்குமென்றபடி, மற்றைநிலமகள்- மற்றொருபெண்ணான பூமிப்பிராட்டியும், மலர்மகளுக்குப் ப்ரதிஸமமென்று சொல்லலாம்படியான ஸ்ரீபூமிப்பிராட்டியுமென்றபடி. பிடிக்கும்- ஸம்வாஹநம்பண்ணுமதான, மெல்லடியை- ஸுகுமாரமான திருவடியை, மெல்- ஸுகுமார, கொடுவினையேனும்- க்ரூரங்களான கர்மங்களையுடையநானும், திருவடிகளினுடைய போக்யதையையறிந்துவைத்தும் காணப்பெறாதபடியான பாபத்தையுடையவனான நானுமென்றபடி. ஸாம்யத்தாலே அவர்களைப்போலே நானுமென்றபடி. பிடிக்க- ஸம்வாஹநம்பண்ணும்படி, நீ- எனக்கு ஸர்வவிதபந்துவானநீ, ஒருநாள்- ஒருநாளாகிலும், கூவுதல்- என்னை அங்கேயழைத்துக்கொள்ளுதல், வருதல்- நீஇங்கேயெழுந்தருளுதல், செய்யாய்- செய்தருளவேணும். ௱0

குரைகடல்- கோஷத்தையுடைத்தான ஸமுத்ரத்தை, குரை- கோஷம், ஶாகவாயிலேவகஸ்ஸஸம். கடையவொண்ணாதபடி உண்ணதானமஹாப்ரயிஷ்டமான ஸமுத்ரத்தையென்றபடி. கடைந்தவன்தன்னை- ப்ரயோஜநாந்தரபரரான தேவர்களுக்காக ஶ்ரமம்பண்ணினவனை, தன்னென்று ஸ்வாமித்வப்ரயோகம், இப்படி ஆஶ்ரிதரெல்லாருக்கும் ஸுலபனானவனையென்றபடி. மேவி- ஆஶ்ரயித்து, பரபக்திரூபமாக அநுபவித்தென்றபடி, கூவுதல்வருதல்செய்திடாயென்று- என்னை அங்கே அழைத்துக்கொண்டருளுதல், நீநான் இருந்தவிடத்திலே எழுந்தருளுதல் செய்யவேணுமென்று, நன்கு- நன்றாக, அநந்யப்ரயோஜநமாகவென்றபடி, அமர்ந்த- கிட்டினவரான, ஸங்கோசித்தவனானவென்றபடி இது சடகோபனுக்கு விஶேஷணம். வியன்புனல்- விஸ்தீர்ணமான ஜலத்தையுடைத்தான, வியன்- விஸ்தீர்ணம், பொருநல்- தாம்ரபர்ணியையுடைத்தான

மூ—வழுதிநாடன்சடகோபன்* நாவியல்பாடலாயிரத்துள்ளுமிவையுமோர்பத்தும்வல்லார்கள்* ஓவுதலின்றி யுலகம்மூன்றளந்தானடியிணையுள்ளத்தோர்வாரே* ॥௧௧॥

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆ—(கூவுதல்) குரைகடல்கடைந்தவன்தன்னை ப்ராப்யப்ராபகமாகப்பற்றி கூவுதல்வருதல் செய்திடாயென்று வெகுளித்த வியன்புனல்பொருநல் வழுதிநாடன்சடகோபன் நாவியல்பாடலாயிரத்தில் இத்திருவாய்மொழியைவல்லார் ஆஸ்ரிதஸுலபனான எம்பெருமானுடைய திருவடிகளை நிரந்தரமாக ஹ்ருதயத்திலே அநுபவிக்கப்பெறுவரென்கிறார். ॥௧௧॥

திருக்குருகைப்பிரான்பிள்ளான்திருவடிகளேசரணம்.

✳நிகமனம்.✳

இ— மேவியென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (பரமைகாந்த்யாதிபால்) ஈன்கமர்ந்தளன்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அவெகுளித்தவென்று) இது சடகோபனுக்குவிசேஷணம். உலகமூன்றளந்தான் என்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஆஸ்ரிதைத்யாதியால்) சேஷம்ஸ்பஷ்டம். ॥௧௧॥

ஈ—வழுதிநாடன்- வழுதிநாட்டையுடையவரான. சடகோபன்- ஆழ்வாருடைய, நாவியல்- ஜிஹ்வாவ்யாபார ஸாத்யமான, நா- ஜிஹ்வை, இயல்- வ்யாபாரம், மநஸ்ஸஹகாரிக்கையன்றிக்கே கேவலஜிஹ்வாவ்யாபார ஸாத்யமானவென்றபடி. அதாவது:— கவிதாரசநத்தில் மநோவ்யாபாரமின்றிக்கே இவருக்கு ஸ்வபாவமாக ஜிஹ்வையிலே ஸ்வயம்பூதமானவென்கை. பாடலாயிரத்துள்- ஸாஹஸ்ரத்தில், இவையும்பத்தும்- இந்தப் பத்துப்பாட்டுக்களையும், முந்தினஉம்மை கீழ்த்திருவாய்மொழிக்குப்போலே இத்திருவாய்மொழிக்கும் ஸமவிசேஷமுண்டென்று ஸூசிப்பிக்கைக்காக, த்விதீயஉம்மை இப்பாட்டுக்களினுடைய அந்யாந்யஸமுச்சயார்த்தம். வல்லார்கள்- அப்யஸிக்கவல்லரானவர்கள், உலகம்மூன்று- லோகத்ரயத்தை, அளந்தான்- த்ரிவிக்ரமாவதாரத்திலே அளந்தவனான ஸ்வாமியுடைய, அடியிணை- சரணயுகளத்தை, உள்ளத்து- மநஸ்ஸில், ஓவுதலின்றி- விச்சேதமில்லாமல், ஓவுதல்- விச்சேதம், ஓர்வார்- த்யானிக்கப்பெறுவார், நிரந்தரமநுபவமும் பெற்று வாழ்வார்களென்றபடி. ॥௧௧॥

✳ஜ்ஞாநவைராக்யாநுஷ்டாநசேவதிஸ்ரீமதேபராங்குசதாஸாயமஹாதேசிகாய நம:.✳

ஸ்ரீ:.

த்ருதீயாவதாரஸாரஸம்க்ரஹம்.

(பண்டைநாளாலே)

லக்ஷ்மீஸம்பந்நபாதோ த்ருதபரணித[illegible] வஜ்ஞநேத்ரோபயோகாத்

ஸ்தித்யாதிஸ்த்வாதிதேஷாம் ஸ்வஹ்ருதவஸரணாச்ச ஸ்ரீமதாஜ்யேஷ்டராஜநாதாத் ।

தார்க்ஷ்யாரூட வாஸ்யம் நிகமநிலயநா [illegible]

[illegible] ॥௮௫॥

(லக்ஷ்மீஸம்பந்நபாதோ) நின் திருவருளும் பங்கயத்தாள் திருவருளுங்கொண்டு- பெரியபிராட்டியாரோடே ஒருக்காலும் பிரிவற்றவனாகையாலும், (த்ருதபரணிதல) நீ ஒருநாள் படிக்களவாகநிமிர்த்த- த்ரிவிக்ரமரூபத்தைக்கொண்டு ஜகத்தையெல்லாம் அளக்கையாலும், (வஜ்ஞநேத்ரோபயோகாத்) தடங்கொள் தாமரைக்கண்விழித்து- ஸர்வஜநமநோஹரமானகையாலும், (ஸ்தித்யாதிஸ்த்வாதிதேஷாம் ஸ்வஹ்ருதவஸரணாச்ச) புளிங்குடிக்கிடந்து வரகுணமங்கையிருந்து வைகுந்தத்துள் நின்று- திருப்புளிக்குடியிலே கண்வளர்ந்தும் வரகுணமங்கையிலே வீற்றிருந்தும் ஸ்ரீவைகுண்டத்திலே நின்றருளியும் ஸ்தாநாதிசேஷ்டிதங்களாலே ஆஸ்ரிதருடைய ஹ்ருதயத்தை அபஹரிக்கையாலும், (ஸ்ரீமதாஜ்யேஷ்டராஜநாதாத்) களமாகளிற்றினிடர்கெடத்தடத்து- அநேகாதிதமாயிருக்கவும் ஸ்வபமான முதலையின்கையிலே அகப்படுகையாலே மிகவும் இடர்பட்ட ஸ்ரீகஜேந்த்ராழ்வானை ரக்ஷிக்கையாலும், (தார்க்ஷ்யாரூட வாஸ்யம் நிகமநிலயநாத்) காய்சினப்பறவையூர்ந்து- த்ருதிவக்ஷத்தின்மேலே காயாநிற்கிற பெரியதிருவடிமேலேயேறியருளி

ஈ—தா— சேராசலிவரத்திலே நீலமேகமிருந்தாப்போலே ஸௌஹார்த்தனுங்கொண்டு ஸ்ரீ ஸார்ங்க ஸாரங்கபாணிமுதலான ஸமஸ்த திவ்யாயுதங்களை தரிக்கையாலும், (தைவதாஸ்ரயணீயதை) இமையவர்தமக்கு ஸாரங்களையாய் - தேவர்களுக்கும் ரக்ஷகனுமத்தனைபோக்கி அவர்களாலும் ஸ்வபாத்ரத்தாலே ஸ்தோத்ரிக்க உசிதனுகையாலும், சுசிஸாம்யத்தாலே மேலிரண்டுபாட்டுக்களின் அர்த்தங்களான தீவ்ரதர திவ்யாயுதங்கள் ஸம்ருத்தங்கள். திருப்புளிங்குடியாய்த் திருவைகுந்தத்துள்ளாய்தேவா - வாஸஸ்தலத்திற்காட்டிலும் இஸ்ஸம்ஸாரத்தில் நிலபாதே மிக்கதேஜஸ்ஸை யுடையவனுகையாலும், கொடுவினைப்படைகள்வல்லானே - விரோதிகளிடத்திலே க்ரூரமெவஷிதங்களைப் பண்ணக்கடவ திவ்யாயுதங்களை யுடையவனுகையாலும், '(த்ரைதாக்ஷிணாத்ய மாநாத்தேஷு)' கடுவினைநஞ்சேயித்யாதி - ஆச்ரிதருடைய துஷ்கர்மங்களை ஸவாஸநமாகப் போக்கும்வனுகையாலும், திருப்புளிங்குடி யெம்பெருமான் இச்சேதநனிடத்திலே நெடுநாளேதுடங்கி க்ருபைபண்ணுநின்றுனென்று "பண்டைநாள்" என்கிற உபகத்திலே ஆழ்வார் அநுஸந்தித்தருளினுரென்கிறுர்

ஸ்ரீமதேநிகமாந்தமஹாதேசிகாயநம:.

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஒன்பதாம்பத்தில் இரண்டாந்திருவாய்மொழிமுற்றிற்று.

மூன்றுந்திருவாய்மொழி.

மூ—ஓராயிரமா யுலகேழளிக்கும்* பேராயிரங்கொண்ட

ஆ— (ஓராயிரம்) இப்படி ஆழ்வார் அபேக்ஷிக்க நீரிங்ஙனே ப்ரார்த்திக்கவேணுமோ? நம்மோட்டைக்குடற்றுவக்கறியீரோ? என்றெம்பெருமானருளிச்செய்ய அத்தை யநுஸந்தித்தினியராகிறுர். ஓரொருதிருநாமமே ஆயிரம்படியாய் உலகேழளிக்கும்பேராயிரமுடையனுய் ஸர்வஜ்ஞஸர்வசக்தி ஸத்யஸங்கல்ப காருண்ய வாத்ஸல்ய ஸௌசீல்யாதி ஸம்பூர்ண கல்யாணகுணவிசிஷ்டனுப் வாஸுதேவ ஸங்கர்ஷண ப்ரத்யும்ந அநிருத்தாத்யவதாரவானு

- - -

முன்றுந்திருவாய்மொழி.

இ— கீழ்த்திருவாய்மொழியில் தாமபேக்ஷித்த மநோரதங்களிலொன்றும் இன்னும்ஸித்திருக்க இத்திருவாய்மொழியிலே 'நங்கள்பிரானவனே' 'என்புகழ்கோவுஞசீலம்' என்றுப்போலே அவனுடையகுணங்களைக் கொண்டாடுகை கஸம்ரதமன்றோவென்ன ஸமாதிப்பிக்கிறுர் '(இப்படியித்யாதியால்) அபேக்ஷிக்கவேன்றது - அபேக்ஷித்தவாறேஎன்றபடி. இதற்கு எம்பெருமான் அருளிச்செய்ய என்கிறதோடே அந்வயம். குடல்துவக்கு - ஒழிக்கவொழியாத ஸநாதிஸம்பந்தம், நம்மோடு குடல்துவக்குண்டாயிருக்கையாலே நம்மை ஸதாஸேவிக்கை உமக்கு ஸ்வாபாவிகமன்றோ வென்றுகருத்து - அத்தையென்கிறது - அந்தகுடல்துவக்கையென்றபடி - இனியராகிறுரென்றது - ப்ரீதராகிறுரென்றபடி. தாம் அபேக்ஷித்த மநோரதங்கள் ஒன்றும் ஸித்திக்கவில்லையாகிலும் இப்போதெம்பெருமான் இவையெல்லாமுமக்கு ஸ்வாபாவிகமாய் மேல்வரப்புகுகிறது, என்றருளிச்செய்தவாறே அவ்வாக்யார்த்தத்தாலே ஹ்ருஷ்டராய் அவ்வாக்யத்தினுடைய வாக்யார்த்தங்களாலே அவஹ்ருதவித்ருமாய் அந்தஸம்பந்தாதிகளை அநுஸந்தித்து ப்ரீதராகிறுர் என்றபடி. *

முதற்பாட்டு.

ஓர்பேரிடையனென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறுர் (ஸர்வஜ்ஞ்ஞெதத்யாதியால்) த்ருதீயபாதத்தில் நன்மையுத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறுர் (ஸாதுவெதத்யாதியால்) சதுர்த்தபாதத்துக்குத் தாத்பர்ய

- - -

ப— ஓர்- ஒருதிருநாமமே, ஆயிரமாய்- ஸஹஸ்ரஸ்வமாய், "ஸம்ஸேதாவிஸஹாஸ்ரகை" 'ஸேஷதஸ்ரதஸ்ரவ்' த்யாதிநிவசநவிசேஷத்தாலே அநேகஸங்கார்யமாயென்றபடி. உலகு- லோகங்களை, திருநாமங்கள் ரக்ஷிக்கப்புக்கால் ஒரொருத்தராகவன்றிக்கே லோகமாக ரக்ஷிக்குமென்று கருத்து. ஏழ்- ஏழுகளையும், அதிலும் ஒருலோகத்தளவே அன்றிக்கே ஸர்வலோகங்களையும் ரக்ஷிக்குமென்றுகருத்து. அளிக்கும்-ரக்ஷிக்கும் ஸஹாயங்களான, சேதநர்பண்ணின பாபங்களைப்பார்த்து 'க்ஷிபாமி' என்கிறதும் ஒருபோது உண்டாயிருக்குமவனுக்கு அங்ஙனன்றிக்கே ரக்ஷிக்கையே ஸ்வபாவமாயிருக்கும் திருநாமங்களுக்கென்று கருத்து. பேராயிரம் கொண்டது - நாமஸஹஸ்ரங்களையுடைத்தான, நாமஸஹஸ்ரங்களோடேகூடின வென்றபடி.

மூ—ஓர் பேரேடுடையன்* பேராயின காளநன்மேனியினன்* நாராயணன் நங்கள்பிரானவனே* ॥௧॥
அவனேயகன்ஞாலம் படைத்திடந்தான்* அவனேயஃதுண்டுமிழ்ந்தளந்தான்* அவனேயவனு மவனு மவனு* மவனேமற்றெல்லாமு மறிந்தனமே* ॥௨॥

ஆ—யஶோதா ஸ்தநந்தய விஶிஷ்டநீலமேகநிறத்தவனாயிருந்த நாராயணனே ஸர்வேஶ்வரனாகப் பெறுவதே என்று தம்முடைய திருவுள்ளத்தில இன்னும் பெல்லாம் தீர்ந்து எம்பெருமானுடைய ஸர்வேஶ்வரத்வத்தை அநுஸந்திக்கிறார். ॥௧॥

(அவனே) ப்ரஹ்மருத்ராதிகளும் ஈஶ்வரரல்லரோ, நாராயணனே ஸர்வேஶ்வரனென்னுமிடம் எங்ஙனே அறிந்தபடியென்னில்? அவனே ஜகத்ஸ்ருஷ்டி ரக்ஷணாதி ஸர்வேஶ்வரஸாதாரண வ்யாபாரங்களைப் பண்ணுகையாலும் வதராஶரவவஸுவைகி ஶரணவ்யூஹாதி ஸர்வோபநிஷத்துக்களுக்கும் ஸர்வஶாஸ்த்ரங்களுக்கும் தாத்பர்யத்தாலும் ஸர்வேஶ்வரன் என்னுமிடம் அறிந்தேனென்கிறார். ॥௨॥

இ—மருளிச்செய்கிறார் (நாராயணனேயித்யாதியால்) இன்னுப்பு - நிர்வாஹம். ॥௧॥

✳ இரண்டாம்பாட்டு ✳

அவனோடுதமக்குள்ள நித்யஸம்பந்தத்தை அநுஸந்திக்கவந்தவர் இப்பாட்டில் அவனுடைய பரத்வத்தை அநுஸந்திக்கை அஸம்பந்தமன்றோவென்ன வகதஸிப்பிக்கிறார் (ப்ரஹ்மேத்யாதியால்) வ்ருத்தாத்தத்திற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் ,(நிர்ணயேத்யாதி பண்ணுகையாலுமென்கிறவளவாலே) உத்தரார்த்தத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (வதராஶரவேத்யாதியால்) அதில் அறிந்தனமென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நாராயணனே இத்யாதியால்) ஶேஷம் ஸ்பஷ்டம். ॥௨॥

ப—ஓர்- அத்விதீயமான, பேருடையன்- ஶப்தத்தையுடையவன், பேரு- ஶப்தம்; "தேவாநாம் ஸஹஸ்ரஶ:" என்கிறபடியே ஸஹஸ்ரநாமங்களையும் தத்ப்ரதிபாத்யங்களான கல்யாணகுணாதிகளை உடையதான ஶப்தத்தையு முடையவனே என்றபடி. ஸர்வாதிஶயம்பண்ண ஸங்கல்பித்தவர்கள் சோறும் தண்ணீரும் ஸம்ருத்தமாக வைத்துக்கொண்டிருக்குமாப்போலே ஜகத்ரக்ஷணதீக்ஷிதனான ஈஶ்வரனுக்கும் அதுக்கு உபாதேயமாக ஆயிரம்திருநாமங்களும் கல்யாணகுண சேஷ்டிதாதிகளும் உண்டாயிருக்கிறனவென்று கருத்து. பேராயின- ஶ்ரேஷ்டமான, கார்- ஶ்ரேஷ்டம் திருமேனி ஶ்ரேஷ்டமாயிருக்கிறதென் றதேஶகாரணகம் சொன்னபடி, காள- நீலவர்ணமான, நல்- நல்லதான, ஸௌந்தர்யலாவண்யநிதியான வென்றபடி. மேனியினன்- திவ்யமங்கள விக்ரஹத்தையுடையவனான, இனனென்று ஶப்தார்த்த ப்ரதிபத்யம், நாராயணன்- அந்த ஶப்தநாமங்களிலும் ப்ரதானமான நாராயணஶப்தவாச்யனான, அவனே- அந்த ஶப்தவாச்யனே, நங்கள்பிரான்- நமக்கெல்லாருக்கும் ரக்ஷகன், ஸர்வஜீவர்களுக்கும் நிருபாதிகஸ்வாமியாகப்பெற்றோமென்றபடி. ॥

அவனே- அந்தநாராயணனே, ஏவகாரத்தால் ஸஹகாரிநிரபேக்ஷ்யம் விவக்ஷிதம். அகல்ஞாலம்- விஸ்தீர்ணமான ஸ்ருஷ்டியை, படைத்து- ஸ்ருஷ்டித்து, இடந்தான்- ப்ரளயார்ணவத்திலே மக்னமாய்க்கிடந்த பூமியை வராஹமாய் ஒட்டிக்கிடந்ததை உத்தரித்தான், அவனே- அந்தநாராயணனே, இங்கும் ஏவகாரம் ஸஹாயாந்தரநிரபேக்ஷ்யபரம்; அஃது- அந்தஸ்ருஷ்டியை, உண்டு- ப்ரளயாவத்திலே வயிற்றிலேவைத்துரக்ஷித்தது, உமிழ்ந்தான்- ஸ்ருஷ்டிகாலம்வந்தவாறே உத்காரணம்பண்ணினன், யதாபூர்வம் ஸ்ருஷ்டித்தானென்றபடி. அளந்தான்- மஹாபலிகொண்டுபோகாமே அளந்துமீட்டுக்கொண்டான். அவனே- அந்தநாராயணனே, அவனும் அவனும் அவனும்- ப்ரஹ்மாவும் ஶிவனும் இந்த்ரனும், "ஸ ப்ரஹ்மா ஸ ஶிவ: ஸேந்த்ர:" என்கிறதை அநுஸந்தித்தபடி அவர்கள் ஶரீரபூதராய் அவனே ப்ரஹ்மருத்ரேந்த்ர ஶப்தங்களுக்கும் ப்ரதானவாச்யனாயிருக்கிறவனென்றபடி. இங்கு ஏவகாரத்தால் அவர்களுக்கு ஸ்வநிஷ்டவ்யவச்சேதம்விவக்ஷிதம். அவனே- அந்த நாராயணனே, மற்றெல்லாமும்- மற்றுமுள்ள ஸர்வஶப்தங்களும், "விஶ்வம் நாராயண:" என்கிறதை அநுஸந்தித்தபடி, ஸர்வஶப்தங்களும் ஶரீரதயா ஸர்வவாச்யங்களாய், அவனே தத்வங்களுக்கு ப்ரதானவாச்யனாயிருக்குமென்றபடி, இவ்வளவும் வேதார்த்தம். அறிந்தனம்- ஆதலால் அவனே ஸர்வேஶ்வரனென்றறிந்தோமென்றபடி. ॥௨॥

மூ— அறிந்தனவேத அரும்பொருணூல்கள்* அறிந்தனகொள்க அரும்பொருளாக* அறிந்தனரெல்லா மரியைவணங்கி* அறிந்தனர்நோய்களறுக்குமருந்தே* ॥ ௩ ॥

ஆ— (அறிந்தன) ஸௌலப்யமாகையாலே நிரதிசயபோக்யனாய் ப்ரயோஜநாந்தரபரர்க்கும் ஸேவ்யனாய் ஸர்வேச்வரனான தன்னை யதாவஸ்திதமாக அறிவிக்கிற அபௌருஷேயமான ஸகலவேதங்களாலும் ஜ்ஞாநாதிகராய்த் தத்வஜ்ஞாநஸம்பந்நரான ஸத்புருஷராலும் ஸாம்ஸாரிகஸகலதுக்கபேஷஜதயா ஸர்வோபாயதயா அறியப்படுகிற அவனை நான் நிர்ஹேதுகமாக அறியப்பெற்றேனென்கிறார்.

✳மூன்றாம்பாட்டு.✳

இ— வேதசப்தத்திற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸௌலப்யாதிரூபியால்) அரும்பொருள் என்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸ்திரத்வத்தைரூபியால்) ஸ்திரத்வமும் ஸ்வபாவவிசேஷணம் நிரதிசயபோக்யதையும் ப்ரயோஜநாந்தரபரர்க்கும் ஸேவ்யனாகையால். நிரதிசய போக்ய வஸ்துக்களென்றுகருத்து. ஸௌலப்யமும் நிரதிசயபோக்யமும் ஸாக்ஷாத்காரமும் ஸ்வரூபவிசேஷணமாயிருக்கிறது. யதா:— நிரதிசயாநந்த ஸ்திரப்ரயோஜநம் ஸாத்யம். இப்போது ஸௌலப்யமாகையாலே என்கிறதற்கு ஸர்வசத்தியென்கிறத்தோடே யதேஷ்டஸர்வாஸாதாரணம் என்றுகருத்து. இப்பக்ஷத்தில் பாட்டில் அநுபவத்தில் நிரதிசயமும் ஸ்வாமித்வமுமாகிறதென்றுகருத்து. கொள்கவரும்பொருள் அறிந்தவென்றநுபித்து நூல்களுக்குவிசேஷணமாக்கி அதுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸர்வோபாயாதிரூபியால்) த்விதீயபாதத்தில் ஆதல்என்றது சிலவிடத்தில் ஸமுச்சயம்போல் ஸமுச்சயார்த்தமென்று நினைத்தருளிச்செய்கிறார் (வேதங்களாலுமென்று) அரியைவணங்கி என்கிறவிடத்தில் ஸ்வரூபவிசேஷத்தை அருளிச்செய்கிறார் (ஜ்ஞாநாதிரூபியால்) அரியைவணங்கிஎன்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார். (தன்திருவடிகளிலேயிரூபியால்) அறிந்தனரெல்லாம்என்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார். (ஸத்புருஷராலுமென்று) தாத்பர்யத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸாம்ஸாரிகரூபியால்) ஸர்வோபாயதயாஎன்றது- அதில்ஹேதுவம்சொன்னபடி. “பேஷஜம் பகவத்ப்ராப்தி ரேகாந்தாத்யந்திகீ மதா” என்கிறதை ஸ்மரிக்கிறதாகையாலே மருந்துசப்தத்திலே உபாயத்வம்ஸித்திக்குமிறே. அறிந்தனமென்று கீழ்ப்பாட்டில் க்ரியையோடேகூட்டிக்கொண்டு தாத்பர்யமருளிச்செய்கிறார் (நானிரூபியால்) இததால்கீழ்ப்பாட்டில் அறிந்தனமென்று ஸர்வேச்வரனுடைய ஜ்ஞாநலாபம் உக்தமானவாறே ஸ்ரீயப்பதியத்தாலே இப்பாட்டிலே அதை விசேஷேண கொண்டாடி அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதிஸம்பிரதாயம். ✳

ஶ— கொள்க- கொள்ளுகைக்கு, க்ரஹிக்கைக்கு, யதாவஜ்ஜ்ஞாதமென்றபடி. அரும்- அருமையான, ஸூக்ஷ்மமானஎன்றபடி. பொருள்- அர்த்தத்தை, ஸர்வேச்வரயாதாத்ம்யத்தையென்றபடி. அறிந்தன- அறிந்தனகளாயிருக்கிற, யதாவத் ப்ரதிபாதிக்கிறவையானவென்றபடி. வேத- வேதங்களாகிற, அரும்பொருள் நூல்களாதவென்றநுபிப்பது. அருமையான பொருளையுடையவையான சாஸ்த்ரங்களும், பொருள்- அர்த்தம், நூல் சாஸ்த்ரம், ஆதல்என்றது ஸமுச்சயார்த்தம், இது மேல்சொல்லப்புகுகிற ஸத்துக்களோடு வேதங்களுக்குஸமுச்சயம், ஸ்திரப்ரயோஜநமான அர்த்தத்தை ப்ரதிபாதிக்கிற வேதோபப்ரும்ஹண சாஸ்த்ரங்களுமென்று பதார்த்தம், அறிந்தன- ஸர்வேச்வரனை யதாவத்தாக அறிந்தவைகள், ஆதல்சப்தத்தை அநுஷங்கித்து அறிந்தனரெல்லாமாதல்என்று அந்வயிப்பது. ஸத்துக்களான ஸ்ரீவால்மீகிவ்யாஸ பராசராதிகளான ஸத்புருஷர்களும்என்றபடி. அரியைவணங்கி- ஹரியைஸேவித்து, ஸர்வேச்வரனை அவன்பக்கலிலே ப்ரவணராயென்றபடி. நோய்கள்- வ்யாதிகளை, ஸாம்ஸாரிகதுக்கங்களையென்றபடி. அறுக்கும்- போக்கத்தக்கதான, மருந்து- ஒளஷதமாக. அறிந்தனர்- அறிந்தார்கள், “பேஷஜம் பகவத்ப்ராப்தி” என்கிறபடியே அவனையே ஸாம்ஸாரிகதுக்கநிவர்த்தகனையும் ஸர்வோபாயனையும் அறிந்தார்களென்றபடி. அறிந்தனமென்று கீழ்ப்பாட்டில் க்ரியையை யதாயோக்யம்வரிப்பது, அப்படிப்பட்டவனை நாம்அறியப்பெற்றோம் இதென்ன! ஆச்சர்யமென்றபடி.

மூ — மருந்தே நங்கள் போக மகிழ்ச்சிக்கென்று* பெருந்தேவர் குழாங்கள் பிதற்றும்பிரான்* கருந்தேவனெம்மான் கண்ணன் விண்ணுலகந்* தருந்தேவனைச் சோரேற் கண்டாய் மனமே* ௪

ஆ — வேதங்களாலும் வேதவித்துக்களாலும் அறியவொண்ணாதவனை நான் நிர்ஹேதுகமாக உள்ளபடியே அறியப்பெற்றேனென்றுமாம். ௩

(மருந்தே) உன்னழகாலே எங்கள் போகத்துக்கு வர்த்தகனானவனேயென்று பெருந்தேவர்குழாங்கள் பிதற்றும்பிரானாயிருந்துவைத்து இங்கேவந்துபிறந்தருளி ஸ்ரீதஸாஹநனைப் தன்னையாஸ்ரயித்த நம்போல்வாருக்கும் நித்யஸித்தமான ஸ்வாநுபவத்தைத் தந்தருளும்ஸ்வபாவனான வெம்பெருமானை ஒருவண்ணம்பெற்றோம் இனியவனைச் சோரவிடாதேகிடாய் என்னெஞ்சேயென்கிறார். ௪

(மனமே) வாத்ஸல்யாதிகுணனைத் தன்னோடொப்பாரின்றிக்கே இருக்கிறவனை விடாதேகிடாய்நெஞ்சமே.

இ — ஸம்பந்தத்துக்கிந்தயோஜனையிற்சொன்ன ப்ரஸங்கமில்லையில்காட்டில் அதிகப்ரஸங்கமில்லை விசேஷித்து மென்னுகருத்தாலே பாட்டுக்கு யோஜநாந்தரமருளிச்செய்கிறார் (வேதங்களாலுமித்யாதியால) அறியவொண்ணாதவனையென்றது- த்விதீயபாதத்தில் அறிந்தனஸப்தத்தை க்ரியாபதமாக்கி கொள்கவரும்பொருளாதல் என்கிறதை க்ரியாபதத்தோடும் உத்தரார்த்தத்தில் அறிந்தனரென்கிறத்தோடும் அந்வயித்துத் தாத்பர்யமருளிச்செய்தபடி. இங்கே அறியவொண்ணாமை ஸ்வஸம்வேத்யமென. ௫

✳ நாலாம்பாட்டு. ✳

ப்ரதமபாதத்திற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (உன்னழகாலே யித்யாதியால்) கண்ணன் என்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இங்கேவந் தித்யாதியால்) விண்ணுலகம்தரும்தேவனை யென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (தன்னை யித்யாதியால்) நம்போல்வாருக்குமென்றது ஆஸ்ரிதர்க்குமென்றபடி. சோரேல் கண்டாயென்கிறவிடத்தில் அபிப்ராயமருளிச்செய்கிறார் (ஒருவண்ணம் பெற்றோமென்று 'இனி அவனை' இத்யாதியால் இப்படி கீழ்ப்பாட்டிலே தமக்குள்ள ஸமஸ்தஜ்ஞாநலாபத்தைக் கொண்டாடினவர் அது நித்யமாகச்செல்லவேணுமென்னுமாகையாலே இப்பாட்டிலே தம்மனஸ்ஸை அதிலே ஸாவதாநமாக்குகிறாரென்று ஸங்கதி த்ரஷ்டவ்யை. ௪

✳ ஐந்தாம்பாட்டு. ✳

த்ருதீயபாதத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (வாஸ்தேத்யாதியால்) இனமேதுமிலானை யென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (தன்னோடொப்பாரித்யாதியால்) இசைந்துகனமே சொல்லினேன் என்கிற

த்விதீயயோஜனைக்கு ஸ்வாபதேசம்.

ப — அரும்பொருளாதல்- ஐதரேயஜ்ஞாதஸாத்யமல்லாத பொருளானமையை, ஆதல்என்றது ஸாவதாரி விஷயமாய் பொருளாதல்என்றது பொருளானமையென்றபடி. அறிந்தன- அறிந்ததுகள், "யதோவாசோ நிவர்த்தந்தே" என்றதிறே; அரியைவணங்கி- ஹரியைஸேவித்து, தஸ்நேஹக்ருதராயென்றபடி. நோய்களறுக்குமருந்து- ஸர்வஸ்ரேஷ்டனையே ஸம்ஸாரரோகபேஷஜனாக, அறிந்தனரெல்லாம்- அறிந்தவரான ஸர்வஸ்ரேஷ்டர்களும், கொள்கவரும்பொருளாதல் அறிந்தனர்- ஸ்வயம், இப்படி ஸாரவதர்னாக வேதங்களாலும் வேதவித்துக்களாலும் அறியப்பட்டவனை நாம்அறிந்தனமென்று கீழ் க்ரியையோடேயந்வயம். ௩

நங்கள்- எங்களுடைய, போகமகிழ்ச்சிக்கு- போகாநுபத்திற்கு, மகிழ்ச்சி- ஆநந்தம். ஆநந்தஸ்வரூப வஹோமஜாத்யாநந்தத்திற்கென்றபடி. மருந்தேயென்று- விஸேஷியபோலே வர்த்தகனானவனே யென்று, பெருந்தேவர்- உத்க்ருஷ்டரான தேவர்களுடைய, நித்யஸூரிகளுடைய என்றபடி. குழாங்கள்- ஸமூஹங்கள், பிதற்றும்பிரான்- க்ரமமாகச்சொல்லி ஸ்தோத்ரம்பண்ணும்படி உபகாரகனை, பிதற்றுகை- அக்ரமமாகச்சொல்லுகை. கருந்தேவன்- நீலவர்ணனைக்கொண்டு ஜ்யோதிர்மயனை, கண்ணன்- க்ருஷ்ணனாய் அவதரித்தவனை, எம்மான்- அத்தால் நமக்கெல்லாம் ஸ்வாமியானவனை, விண்ணுலகம்தரும்தேவனை- பரமபதத்தைத்தந்தருளும் ஸ்வபாவனானதேவனை, மனமே- என்னுடைய மனஸ்ஸே, சோரேல் கண்டாய்- விடாதேகிடாய், கண்டாயென்றது நிர்ப்பந்தம். ௪

மூ—மனமேயுன்னை வல்வினையேனிரந்து* கனமேசொல்லினேனிது சோரேற்கண்டாய்* புனமேவியபூந்தண் டுழாயலங்க* லினமேதுமிலானை யடைவதுமே* ॥ரு॥

அடைவதும்மணியார்மலர்மங்கைதோள்* மிடைவதுமசுரர்க்குவெம்போர்களே* கடைவதுங்கடலுளமு தமென்மனம்* முடைவதுமவற்கேயொருங்காகவே* ॥சு॥

ஆ—உனக்கடியேனாயிருக்கிறேனென்று பின்னையும் நெஞ்சையிரக்கிறார். ॥ரு॥

(அடைவதும்) 'அவனைவிடாதேகிடாய்' என்று நான்சொல்லிமுடிப்பதற்குமுன்னே அவனுடையசெய ல்களிலே என்னெஞ்சானது ஒருகடலுடைந்தாப்போலே உடைந்துகிடக்கப்பெற்றேனென்று தம்முடைய

இ—தற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (உனக்கித்யாதியால்) "பின்னையும்" இத்யாதியால் கீழ்ச்சொன்னதையே ஆதராதிசயத்தாலே அநுபாஷிக்கிறாரென்று ஸங்கதிஸூசிகை. ॥ரு॥

✳ ஆறாம்பாட்டு. ✳

தாத்பர்யவாக்யத்தில் அபிப்ராயமருளிச்செய்கிறார் (அவனையித்யாதியால்) இத்தால் கீழ்த்தாம் பண்ணின உபதேசம் ஸபலமாயிற்றென்று நெஞ்சையுகக்கிறாரென்று ஸங்கதிஸூசிதமாயிற்று. வா க்யார்த்தத்தை ஸங்க்ரஹிக்கிறார் (அவனுடையவித்யாதியால்) தாத்பர்யவாக்யத்துக்குத் தாத்பர்யமருளி ச்செய்கிறார் (என்னெஞ்சானதித்யாதியால) கடலுடைந்தாப்போலே உடைந்துகிடக்கப்பெற்றேனென்றது— ஸாஹஸமாய்க்கொண்டு ப்ரவாஹமாகப் ப்ரவேசித்துப் பின்பு ஒருவராலும்மீட்கவொண்ணாதே தானும்

ஊ— புனமேவிய- புனத்தில் மேவியிருப்பதான, புனம்- க்ஷேத்ரம். மேவுகை- பொருந்துகை, க்ஷேத்ர த்திலே நன்றாகவளர்ந்திருப்பதான வென்றபடி. பூம்- தர்சநீயமான, தண்- சீதளமான, துழாயலங் கல்- துளஸீமாலையை யுடையவனை, அலங்கல்- மாலை, இனமேதுமிலானை- உபமானமொன்றுமில்லாத வனை, இனம்- உபமானம், ஸாத்ருச்யத்தில் ஸஜாதீயனானவனை யென்றபடி. அடைவதும்- அடையவேணும். ஸாவதாரணம். நிரந்தரமாக அநுபவிக்கவேணு மென்றபடி. இவ்விடத்தில் 'வகாரம் மிகுதி அகாரம்' என்னு மாப்போலே கீழ்ப்பாட்டோடே இப்பாட்டுக்கு ஸம்பந்தமாயிருக்கிறது. இதைச்சொல்லினே னென்கி றதோடேயாதல் இரந்து என்கிறதோடேயாதல் அந்வயிப்பது. மனமே- என்னுடையமனஸ்ஸே, இது- இந்த அர்த்தத்தை, நிரந்தரமாக அநுபவிக்கையை யென்றபடி. சோரேல்கண்டாய்- விடாதேகிடாய், உன்னை- ஸர்வவிஷயத்தில் ப்ராவண்யமே ஸ்வபாவமாயிருக்கிற உன்னை, வல்வினையேன்- ஸர்வவிஷயத்தில் ஸுலப மான உன்னையும் அநுவர்த்தித்துச்சொல்லுமாப்போலே சொல்லும்படியான பாபத்தைப்பண்ணின நான், இரந் து- ப்ரார்த்தித்து, கனமே- த்ருடமாகவே, சொல்லினேன்- சொன்னேன். ॥ரு॥

அடைவதும்- தனக்குப்ராப்யமாக ஸம்ச்லேஷிப்பதும், ப்ராப்யப்ராபகநிஷ்டவிசேஷ:. அணி- ஆபரணங்களாலே, ஆர்- பூர்ணமான, மலர்மங்கைதோள்- ஸர்வாபரணபூஷிதையாய் நித்யாநபாயினியா ன பெரியபிராட்டியார்திருத்தோளை, தோளழகிலே ஈடுபட்டு மற்றொருவிஷயவைலக்ஷண்யமும் காணமாட் டாதே அத்தோளிலே சாய்ந்துகிடக்குமென்றுகருத்து. மிடைவதும்- நிரந்தரமாகச்செய்தருளுவதும், மி டைதல்- நிரந்தரமாகச்செய்கை, அசுரர்க்கு- அஸுரர்களுக்கு, வெம்போர்களே- உக்ரங்களானயுத்தங்க ளே, வெம்என்று உக்ரம், போர்- யுத்தம், அவன்செய்தருளுவதும் "ஹதாரம் பரிஷஸ்வஜே" என்கிறபடி யே அவள்திருத்தோள்களை உத்தேச்யமாக ப்ராவண்யம்பண்ணுகைக்கு உபாயமாக ஆச்ரிதஜநஸம்ரக்ஷ ணார்த்தமாக ஸமரஸாஹஸங்களே யென்றபடி. கடைவதும்- மதனம்பண்ணுவதும், கடலுள்- ஸமுத்ர த்தில், அமுதம்- அம்ருதம், அவன்மதனம்பண்ணுவதும் 'ஸ்வஸ்தி தவாஸ்து மஹாபாஹோ ஸ்மரணம் ஸமுத்ரமந்தநே ததா । க்ஷீரோதமந்தநார்த்தாய ப்ராதுர்பூதா ஸுதா பயோநிதே' என்கிறபடியே அவளுடைய கடாக்ஷவிசேஷம்பெறுகைக்கு உபாயமாக க்ஷீ ரார்ணவத்தில் அம்ருதத்தையென்றபடி. என்மனம்- என்னுடையமனஸ்ஸானது, ஒருங்காக, ஏகாக்ரமாக, விச்சேதமின்றிக்கேயென்றபடி. உடைவதும்- ப்ரவாஹத்தாலே ப்ரவிஷ்டமாவதும், அவற்கே- அ ந்தவிசேஷங்களையுடையவனை ப்ராப்யனுக்காகவே, அவனை அநுபவிக்கைக்காகவேயென் றபடி. அவதாரணத்தால் மற்றொருவிஷயங்களிலும் கண்ணோட்டமில்லையென்றபடி. அவன் ஸம

மூ—ஆகஞ்சேர்நரசிங்கமதாகியோர்* ஆகம்வள்ளுகிராற்பிளந்தானுறை* மாகம்வைகுந்தங்காண்பதற்கென்மன*
ஏகமெண்ணுமிராப்பகலின்றியே* ॥எ॥

ஆ— நெஞ்சைப்புகழுகிறார். ॥கூ॥

(ஆகஞ்சேர்) இந்தரூபத்தை அநுபவித்துப், பின்னையும் ஸம்ஶ்லேஷ விஶ்லேஷங்களைச் செய்தருளினவன்தன்னை அவனிருக்கிற திருநாட்டிலே சென்று காணவேணுமென்றாசைப்படாநின்றது, அதுவோ அதி துஸ்தரமாயிராநின்றது, என்னெஞ்சைக்கொண்டென்செய்கேனென்று நோகிறார். ॥எ॥

இ— மீளமாட்டாதே கிடக்கப்பெற்றேனென்றபடி. ॥கூ॥

✳ஏழாம்பாட்டு✳

ஸம்கதி ஸந்தர்ஶநம் கீழே சொன்னதை அநுவதிக்கிறார் (இந்தரூபத்தை அநுபவித்தென்று) இதுக்கு ஆசைப்படாநின்றது என்கிறத்தோடே ஸம்பந்தம். இத்தால் தம்முடைய நெஞ்சுக்குக் கீழ்ப்பாட்டிலபிறந்த ஆஸக்தி முதிர்ந்ததென்கிறாரிப்பாட்டிலென்று ஸங்கதி ஸித்தமித. பூர்வார்த்தத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (பின்னையுமித்யாதியால்) உத்தரார்த்தத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அவனிருக்கிறவித்யாதியால்) அதில் மாகமென்கிறவிடத்தில் மாஶப்தத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அதுவோஅதித்யாதியால்), பாட்டுக்குப் பலிதார்த்தமருளிச்செய்கிறார் (என்னெஞ்சைக்கொண்டித்யாதியால்) ॥வ॥

✳எட்டாம்பாட்டு.✳

தம்முடைய மநஸ்ஸுக்கு பகவத்விஷயத்தில்பிறந்த ப்ராவண்யாதிஶயத்தை அருளிச்செய்யாநின்றவரிப் பாட்டிலே திருமலையை தேவர்கள் தொழுவார்களென்றுசொல்லுகை யஸம்கதமன்றோவென்ன வஙகாசிப்

ஶ— ப்ரகாரத்தாலு, மாஸக்திபண்ணுவதும் பெரியபிராட்டியார் பக்கலிலேயே என்மநஸ்ஸாதிகவும் ஆஸக்தி பண்ணுமதும் அந்தபரமபுருஷன் பக்கலிலேயே, இவையிரண்டும் மற்றொருவிஷயத்தில இல்லையென்று ஈரிளுவகாரங்களாலும் ஸூசிதமாகிறது, அவன்பிராட்டிபக்கல் எப்படி ஆஸக்தனாயிருக்கும் அப்படி என் மனம் பரமபுருஷன்பக்கல் ஆஸக்தமாகிறதென்று தாத்பர்யம். ॥கூ॥

ஆகம்சேர்- ஒருஶரீரத்திலேசேர்ந்திருக்கிற, ஆகம்- ஶரீரம், நரசிங்கம்- நரத்தையும்ஸிம்ஹத்தையும் உடைத்தான, ஶரவ்யாபாதிரிதிபேஶ: நரஸ்ஸிம்ஹஸ்வங்களையுடைத்தான வென்றபடி. அதாகி- அந்தஸ்வபாவாய், நரனென்றுதல் ஸிம்ஹமென்றுதல் சொல்லவொண்ணாதபடி விலக்ஷணஸ்வபாவாகையாலே அதாகியென்று ஸாமாந்யநிர்தேஶித்தது. ஓராகம்- ஒருஶரீரத்தை, பராமரோதவாகாபிநூமான ஹிரண்யஸம்ரக்ஷத்தையென்றபடி. வள்ளுகிரால்- வளர்ந்தஉகிராலே, உஜ்ஜ்வலநகாயத்தாலே யென்றபடி, பிளந்தான்- விதாரணம்பண்ணினவன், காணவேணுமென்றெல்லாருக்கு மாசைபிறக்கும்படி ஸம்ஶ்லேஷவிஶ்லேஷமுடையவனான ஸர்வேஶ்வரனென்றபடி உறை- வஸியாநிற்கிறவிடமான, மாகம்- ஆகாஶமான, மா- மஹத்து, கம்- ஆகாஶம்; பரமேவ்யோமிவாஜநஸாமேவமாய் பரமேவ்யோமமென்று ஶ்ருதிகளாலே ஓதப்பட்டதானவென்றபடி. வைகுந்தம்- ஸ்ரீவைகுண்டத்தை, காண்பதற்கு- காணுகைக்கு, என்மனம்- என்னுடையமநஸ்ஸானது, இராப்பகலின்றி- அஹோராத்ரவிஶேஷமின்றிக்கே, ஏகம்- ஏகாக்ரமாக, ராத்ரி ஒருகார்யமும் பகலொருகார்யமுமாயிருக்குமிறே நாட்டார்க்கு, என்னெஞ்சுக்கெப்போதுமிதுவேகார்யமாயிற்றென்று கருத்து. எண்ணும்- மநோரதியாநிற்கும, இத்தனைவ்யவஸாயமான நெஞ்சைக் கொண்டு நானென்னசெய்யக்கடவேனென்று நோகுறபடி. ॥எ॥

இருவினையும், புண்யபாபரூபங்களான அவித்யாகர்மங்களையும், இன்றிப்போக- இல்லாமல்போக, நிஶ்ஶேஷமாய்ப்போம்படியென்கை. கெடுத்து- நஶிப்பித்து, இதற்கு உய்யக்கொள்வானென்கிறத்தோடே ஸம்பந்தம். ஒன்றி- ஸம்ஶ்லேஷித்து, திவ்யஸௌந்தர்யாதிகளை ஸாக்ஷாத்கரிப்பித்தென்றபடி ஆக்கை புகாமை- ஶரீரங்களிலே ப்ரவேஶியாதபடி, இந்தவிதமான ஜந்மங்களை அடையாதபடியென்கை, உய்யக்கொள்வான்- உஜ்ஜீவிப்பிக்கையே ஸ்வபாவமுடையவனான ஸர்வேஶ்வரன், நின்ற- ஸர்வஸ்ரக்ஷணத்துக்கு நின்றருளுகிறஸ்தலமான, வேங்கடம்- ஸ்ரீவேங்கடமென்கிற, நீணிலத்துள்ளது- ஶாஶ்வதமான

மூ—இன்றிப்போகவிருவினையுங்கெடுத்* தொன்றியாக்கைபுகாமையுய்யக்கொள்வா* னின்றவேங்கடநீணிலத் துள்ளது* சென்றுதேவர்கள்கைதொழுவார்களே* ॥௮॥

தொழுதுமாமலர்நீர்சுடர்தூபங்கொண்* டெழுதுமென்னுமிதுமிகையாதலிற்* பழுதில்புகழ்ப்பாம்பணைப்பள்ளியாய்த்* தழுவுமாறறியேனுனதாள்களே* ॥௯॥

ஆ—(இன்றிப்போக) அவனைக்காண்கைக்குத் திருநாட்டிலேபோகவேணுமோ, இங்கே அணித்தாகத்திருமலையிலேயன்றோ அவன்நின்றருளுகிறதென்னில்? அத்தால் என்னெனக்கு, அங்குச்சென்றடிமைசெய்வார் அயர்வறுமமரர்களல்லரோவென்கிறார். ॥௮॥

(தொழுது) உமக்குத்தானங்கேசென்றடிமைசெய்கைக்குத் தட்டென்னென்னில், ஹேயப்ரத்யநீககல்யாணகுணவிசிஷ்ட சேஷசேஷாசந ஸமாராதநோபகரண திவ்யத்ரவ்யங்களாலே வரிவஸ்யாபரனான உன்திருவடிமலர்களிலே அத்யந்தஹேயைகஸ்வரூபனான நானடிமைசெய்கைக்கநர்ஹனென்கிறார். ॥௯॥

(தாளதாமரையான்) தம்முடைய அநர்ஹாநுஸந்தாநத்தாலே அவன் திருவடிகளிலடிமைசெய்கையில்

இ—பிக்கிறார் (அவனையித்யாதியால்) அணித்தாக- ஸமீபமாக, நீணிலத்தென்கிறவிடத்தில் அபிப்ரேதார்த்தமருளிச்செய்கிறார் (அததாலென்னெனக்கென்று) த்ருதீயவாக்யத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அங்குச்சென்றித்யாதியால்) ॥௮॥

✱ ஒன்பதாம்பாட்டு. ✱

நித்யஸூரிகளடிமைசெய்கிற இடமாகையாலே நாமவ்விடத்துக்கநர்ஹரென்றென்று கீழ்ச்சொன்ன அர்த்தத்தையே தழுவுமாறித்யாதியாலே சொல்லுகிறதாகையாலே இப்பாட்டு ஸாகாங்க்ஷையன்றோவென்ன அவதாரிப்பிக்கிறார் (உமக்குத்தானித்யாதியால்) தாம் அநர்ஹரென்னுமிடம் கீழ்ப்பாட்டிலே ஸூசிதமாயிருக்கையாலே அத்தை இப்பாட்டிலே வெளியிடுகிறாரென்றதாயிற்று. த்ருதீயவாக்யத்துக்குத் தாத்பர்யமருளிச் செய்கிறார் (ஹேயேத்யாதியால்) சேஷனைச்சொன்னது உபலக்ஷணமென்றுகருத்தாலே சேஷாசநாதிக்ரஹணம். ப்ரதமபாதத்தினர்த்தத்தை ஸங்க்ரஹிக்கிறார் (வரிவஸ்யேத்யாதியால்) சதுர்த்தவாக்யத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அத்யந்தமித்யாதியால்) ॥௯॥

✱ பத்தாம்பாட்டு. ✱

இப்படிதாம் அநர்ஹரென்றநுஸந்தித்தால் வாசிககைங்கர்யம்பண்ணுகை யுசிதமல்லாமையாலே இப்பாட்டில் அவனைஸ்தோத்ரிக்கை அஸங்கதமன்றோவென்ன அவதாரிப்பிக்கிறார் (தம்முடையவித்யாதியால்).

ப—ஸந்நிதியிலே இராநின்றது, மீட்சி- ஸௌலப்யமாய் ஸ்வரூபத்தைக்காட்டுகிறது, திருமலையையுடைத்தாகையாலே ஸ்வப்ரதானமான ஸந்நிதியிலே யிராநின்றதென்றபடி. ஆனால்தானெனக்கென்ன ப்ரயோஜநமென்றுகருத்து. சென்று- அத்திருமலையிலேபோய், கைதொழுவார்கள்- கைங்கர்யஞ்செய்தருளுவர், தேவர்கள்- நித்யஸூரிகளன்றோ, ஆதலாலவ்விடத்துக்கு நாமாரென்றபடி. ॥௮॥

பழுதில- பழுதில்லாத, பழுது- ஹேயம், ஹேயப்ரத்யநீகமானவென்றபடி. தொல்- அநாதியான, புகழ்- கல்யாணகுணங்களையுடையவனான, பாம்பு- சேஷனாகிற, அணை- சய்யையில், பள்ளியாய்- கண்வளர்த்தியையுடையவனே? பள்ளி- சயநக்ரியை, பள்ளியையுடையவன் பள்ளியான், பள்ளியாயென்று ஸம்போதநம், மாமலர்- ஸௌரப்யங்களையும், ஸ்வரூபமான வாஸநாதிபுஷ்பங்களையு மென்றபடி, நீர்- அர்க்யாதிஜலங்களையும், சுடர்- தீபாதிதேஜஸ்ஸுக்களையும், தூபம்- தூபத்தையும், கொண்டு- எடுத்துக்கொண்டு, தொழுது- ஸேவித்து, கைங்கர்யங்களைப்பண்ணியென்றபடி. எழுதுமென்னுமிது- எழுவோமென்கிறவிது, கைங்கர்யவ்யாஜநிதர்சனத்தாலே உஜ்ஜீவிக்கிறோமென்கிறவிதுவென்றபடி. மிகை- அபராதம், இப்படி கைங்கர்யத்தில் அதிநிவிஷ்டர் சேஷசேஷாசநாதிகளாக அஸங்க்யாதருளரென்றபடி. ஆதலில- இப்படி ஸமர்த்தசக்த திவ்யபார்ஷதர்கள் உனக்கடிமைசெய்கையாலே, உனதாள்கள்- உன்னுடைய திருவடிகளை, தழுவுமாறு- ஸம்ச்லேஷம்பண்ணும்ப்ரகாரத்தை, ஆறு- ப்ரகாரம், கைங்கர்யம்பண்ணும்ப்ரகாரத்தையென்றபடி. அறியேன்- அறியமாட்டுகிறிலேன், நானுனக்கடிமைசெய்கைக்கு அநர்ஹனென்றபடி. ॥௯॥

மூ— தாளதாமரையானுனதுந்தியான்* வாள்கொணீள்மழுவாளிபுன்னாகத்தான்* ளாராய்த்தொழுவாருமமரர்க* ளுநுமென்புகழ்கோவுனசீலமே* ॥௰॥

மூ—கூட்டுண்டுநீங்கியகோலத்தாமரைக்கட்செவ்வாய்* வாட்டமிலென்கருமாணிக்கங்கண்ணன்மாயன்போற*
கோட்டியவில்லொடுமின்னுமேகக்குழாங்கள்காள்* காட்டேன்மினும்முரு வென்னுயிர்க்கதுகாலனோ॥
உயிர்க்கதுகாலனென்றுமமையாளிரநதேறகுநீர்* குயிறபைதலகாள் கண்ணனுமமேகுழறிக்கொண்டீர்*

ஆ—(கூட்டுண்டு) என்னோடுகூட்டுண்டுநீங்கி அதினாலொருவாட்டமினறியே ஆஶ்சர்யமான வடிவையுடையவ னும் ஶாமளாதி திவ்யாவயவங்களையுடையனும் ஹாரகேயூராதி திவ்யபூஷணபூஷிதனுமாயிருநத கண்ண னைப்போலேயிருந்த 'கோட்டியவில்லொடு மின்னுமேகக்குழாங்கள்காள்' இந்தவ்யஸநத்தின்மேலே காட்டே ன்மின் நும்முரு என்னுயிர்க்கதுகாலனென்கிறாள். ॥எ॥

(உயிர்க்கது) கண்ணனுடைய திருநாமங்களைசசொலலில் நான்முடிவன்; அவற்றைச்சொலலாதொழிய

✳ ஏழாமபாட்டு ✳

இ— உபமாநபூதமானமேகத்திற்கு 'கோட்டியவிலலொடுமின்னு' என்று விஶேஷணஞ்சொன்னதால் உபமேயத்துக்கபேக்ஷிதமான வைலக்ஷண்யத்தையருளிசசெய்கிறார் (ஶாமளாதயாதியால) யத்வா- கோலக்க ண்ணனென்றநுபவித்து கோலஶப்தத்துக்குத் தாத்பர்யஞ்சொன்னதாகவுமாம். ॥எ॥

✳ எட்டாமபாட்டு. ✳

உயிர்க்கதுகாலனென்கிறதற்குத் தாத்பர்யமருளிசசெய்கிறார் (கண்ணனுடையவிதயாதியால்) இதில் வாக்யார்த்தமருளிச்செய்கிறார் (அவற்றையிதயாதியால) என்றும்மையிதயாதிக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார்

ஶ— கடாக்ஷஸாபேக்ஷமாகச் சொல்லாதே கிடாயென்றபடி. இது என்காதுக்கிதமென்னுமிலே தவ நாராயணஸ்ப்ருஹையென்றபடி. ॥கூ॥

கூட்டுண்டு- என்னோடே ஸம்ஶ்லேஷத்தையநுபவித்து, நீங்கிய- நீங்கினவனை, விஶ்லேஷித்துப்போன வனையென்றபடி. வாட்டமில்- அத்தாலொருவாட்டமிலலாதவனை, மாயன்- ஆஶ்சர்யபூதனை, வடி வத்திற்காட்டில் மகிமையிதஸௌந்தர்யங்களை யுடையவனையென்றபடி. இதையே விவரிக்கிறார். கோலத் தாமரைக்கண- ரமணீயதாமரைஸத்ருஶநேத்ரனை, கோலம்- ரமணீயம், கண்ணென்கிறவிடத்தில் ணகார ஸ்வஸம்ஹிதாயாம் டகாராதேஶ:. செவ்வாய்- அருணாதரனை, என்கருமாணிக்கம்- விஶ்லேஷத்தாலு மெனக்கு மறக்கவொண்ணாதபடி நீலாத்தம்போலே நீலாங்காஷ்ரயியான, என்- என்னுடையவனை, ஸம்ஶ்லேஷதஶையிலே கையைக்காலைப்பிடித்தெனக்கு மிகவும் ஸுலபனாயிருந்தவனையென்றபடி. கண்ணன் போல்- க்ருஷ்ணனைப்போலே, கோலக்கண்ணன்போலென் றநுபவித்தவக்ஷத்தில் ஶ்யாமளாதி திவ்யாவயவ திவ்ய பூஷணங்களான அலங்காரங்களையுடைய க்ருஷ்ணனைபபோலேயென்பது, கோலம்- அலங்காரம், கோட்டிய வில்லொடு- வளைந்திருக்கிறஇந்த்ரதநுஸ்ஸோடே, கோட்டியது- வளைந்தது, மின்னு- மின்னுகின்றுள்ள, இந்த்ர தநுஸ்ஸையும் ஸௌதாமிநீகளையு முடையவனையென்றபடி. மேகக்குழாங்கள்காள்- மேகபங்க்திகாள்?, குழாம்- பங்க்தி, நும்முரு- உங்களுடையரூபத்தை, காட்டேன்மின்- எனககுக் காட்டாதிருங்கோள், ஏ னெனில்? அது- அந்தரூபமானது, அலங்க்ருதமான வவன்திருமேனிக்கு ஸத்ருஶமான வுங்களுடைய ரூபமானதென்றபடி. மேகங்களுடையவடிவைப் பாாக்கமாட்டாதே பராங்முகியாயிருந்து 'அது' என்று பரோக்ஷமாக நிர்தேஶிக்கிறாள். என்னுயிர்க்கு- விரஹஜ்வரதப்தையான வென்னுடைய ப்ராண னுக்கு, காலன்- ம்ருத்யு. அத்தைக்கண்டா லென்ப்ராணனானது விரஹாக்நியாலே தக்தமாய்விடு மென்றபடி. ॥எ॥

குயில்பைதல்காள்- கோகிலபாலகங்காள், பைதல்- பாலகம், உங்கள்பாலாத்தை யென்ப்ராணன் விஷயத்திலே காட்டிவிட்டிகோளென் றுகருத்தாலே பாலகங்களென்கிறாள். அது- அந்த திருநாமமானது, உ யிர்க்கு- என்ப்ராணனுக்கு, காலனென்று- ம்ருத்யுவென்றுசொல்லி, வீடிக்கிறதா த்மன்றிக்கே ஸம்ஹரி த்தேவிடுமென்று சொல்லியென்றபடி. உம்மை- நீங்களாகப்ப்ரார்த்தித்து என்காரியஞ் செய்யககடவிகோ ளான வுங்களை, யானிரந்தேற்கு- நானுகயாசித்தவெனக்கு, யாமென்றது ஆத்ருகவசநமெவ ஸமுஹித ஸத்தைக் காட்டாநின்றுகொண்டு மறக்கவொண்ணாமையை த்யோதிப்பிக்கிறது. நீங்களாகச்செய்யவேண்டிய

மூ—தயிர்ப்பழஞ்சோற்றொடு பாலடிசிலுந்தந்துசொற்* பயிற்றியநல்வளமூட்டினீர்பண்புடையீரே* ॥அ॥
பண்புடைவண்டொடுதும்பிகாள் பண்மிழற்றேன்மின்* புண்புரைவேல்கொடுகுத்தாலொக்குநும்மின்குரல்*

ஆ— வேணுமென்று உங்களைநானிரக்க, பின்னையுமவற்றையே சொல்லிக்கொன்றிகோள், நானுங்களைவளர்த்த ப்ரயோஜநமழகிதாகப்பெற்றேனென்று தன்குயில்களை யின்னாதாகிறாள். ॥அ॥

(பண்புடை) பண்புடைவண்டொடு தும்பிகாள்? அவனைப்பிரிந்த வ்யஸநத்தின்மேலே அவன்திருநாமங்களைப் பாடுகிற வித்துவொன்றும் பொருந்தலாயிருந்ததில்லை, பண் மிழற்றேன்மின் என்ன? 'அவன் திருநாமங்களைப்பாடுகை உனக்கது ஜீவியமல்லவோ' என்ற, அவைசொல்ல; அவன் தன்னழகைக காட்டியென்னை

இ—(என்றுங்களையிகழ்வால) உதாஹரணத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நானுங்களையிகழ்வால்) முதற்பாட்டிலே சந்த்ரகாசங்களைக்குறித்துச்சொன்னாள், இங்கேதான்வளர்த்த குயில்களைச்சொல்லுகிறாளாகையாலே பாநராக்கியிலலையென்றுகருத்து. இன்னாதாகிறாளென்றது- வெறுக்கிறாளென்றபடி. ॥அ॥

✳ ஒன்பதாம்பாட்டு. ✳

புண்புரையென்கிற த்ருஷ்டாந்தாம்ஸத்தால தாவுஷ்டாநிகத்தி லஸிப்ரேதமானவர்த்தை யருளிச்செய்கிறார் (அவனையிகழ்வால்) நும்மின்குரலென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அவன்திருநாமங்களையிகழ்வால) வேல்கொடுகுத்தாலொக்குமென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஒன்றுமிகழ்வால்) காட்டேன்மின் நும்முருவென்கிறவிடத்திற்போலே யிங்கும் பண்மிழற்றேன்மினென் றிவ்வளவேயமைந்திருக்கையாலே உதாஹரணம் மதவெஷிதவவநமன்றோவென்ன வவதாரிப்பிக்கிறார் (அவன்திருநாமங்களைப்பாடுகைபுனக்கிகழ்வால்) அவைசொல்லவென்றது- அவைசொன்னவாகத் தனக்குத்தோற்றினவாறேயென்

ஈ—காயத்தை நான்தானே பாவித்தவெனக்கு என்றபடி. அவன்திருநாமங்கள் என்ப்ராணனுக்கு ஆதாரங்களாகையாலே அவற்றைநீங்கள் சொல்லாதொழியவேணுமென்று பாவித்தவெனக்கென்று பாவார்த்தம். ஆதாவாகையாலே நிபதிக்கலாயிருக்கச்செய்தேயு முங்களையாணப்புகுந்தவளான வெனக்கென்று பாவநவ த்வாயோமத்துக்குத் தாத்பர்யம். இதுக்கு குழறியென்கிறத்தோடே யந்வயம். எனக்குக் குழறியென்றது- என்னைக்குறித்துக் குழறியென்றபடி. நீர்- நிர்தயரானநீங்கள், கண்ணன்நாமமே- க்ருஷ்ணனுடைய திருநாமங்களையே, ஏவகாரத்தால நானெத்தை ப்ரதிஷேதித்தேன், அத்தையேயென்றபடி. குழறி- அவ்யக்தமதுரமாகச்சொல்லி, கொன்றீர்- என்னைக்கொன்றிகோள், நிர்தயரானநீங்கள் ப்ராணாபஹாரகரானிகோளென்று பாவார்த்தம். தயிர்பழம்சோற்றொடு- தயிரோடுகூடின பழையதானவந்நத்தோடே, பாலடிசிலும்- க்ஷீராந்நமும், உங்கள்பருத்துக் கநுகுணமாக ப்ராதக்காலத்திலே தயிரோடுகூடினவந்நமும் மற்றகாலத்துக்கு க்ஷீராந்நமுமாக விப்படி தத்தத்காலங்களுக் குசிதங்களான வஸ்துக்களை யெல்லாமென்றபடி. தந்து- உங்களுக்குக்கொடுத்து, சொலபயிற்றிய- சொல்லுகளைப்பயிலப்பண்ணினதுக்கு, பயிலுகை- அப்யஸிக்கப்பண்ணுகை, அவன்திருநாமங்களாகிற சொல்லுகளை அப்யஸிப்பித்ததுக்கு என்றபடி. அப்யஸிப்பித்ததற்கு ப்ரத்யுபகாரமாக வென்றுகருத்து. நல்வளம- நல்லஸாவத்தை, வளம்- ஸம்பத்து, ஊட்டினீர்- ஸாக்ஷிப்பித்திகோள், என்னையிதிஸேஷ:. இது உபாலம்பிக்கிறபடி, பண்புடையீர்- நல்ல ஸ்வபாவத்தை யுடையீர்களென்று உபாலம்பகர்ப்பமான ஸம்போதநம், பண்- ஸ்வபாவம், ரக்ஷகவிஷயத்தில் நிஷ்டுராயிருந்திகோளென்று கருத்து. ॥அ॥

பண்புடை- நல்லஸ்வபாவத்தையுடைத்தான, வண்டொடு- ஸ்வரங்களோடேகூடின, தும்பிகாள்- ப்ரமரவிஸேஷங்காள், வண்டு- ஜம்பஸ்வரமநுகரிக்கும்ப்ரமரம், தும்பி- ஷட்ஜஸ்வரமநுகரிக்கும்ப்ரமரம், நும்- உங்களுடைய, இன்- மதுரமான, குரல்- த்வநியானது, இதுக்குக் குத்தாலொக்குமென்கிறத்தோடே யந்வயம். புண்புரை- வ்ரணத்தின்விவரத்திலே, புரை- விவரம், வேல்கொடு- வேலென்கிறவாயுதத்தைக்கொண்டு, குத்தாலொக்கும் குத்தினால் ஸத்ருஸமாகாநிற்கிறது, குத்தினாலெப்படி து:ஸஹமாயிருக்கும், அப்படி து:ஸஹமாயிருக்கிறதென்றபடி. விரஹதஸையின்மேலே உங்கள்ஸ்வரமுங்கூடினது வ்ரணத்தின் மேலே தீக்ஷ்ணமாயுதத்தால குத்தினதுபோலே யிருக்கிறதென்று பாவார்த்தம். பண்- கானத்தை, ஸாகாங்க்ஷமானத்தை யென்றபடி. மிழற்றேன்மின்- மிழற்றாதிருங்கோள், மதுரமாக ஸப்தியாதிருங்கோளெ

மூ—தண்பெருநீர்த்தடந்தாமரைமலர்ந்தாலொக்கும்* கண்பெருங்கண்ணன் நம் மாவியுண்டெழநண்ணினான் ॥ கூ ॥
எழநண்ணிநாமுநம்வானநாடனோடொன்றினோம்* பழனநன்னாரைக்குழாங்கள்காள் பயின்றென்னினி*
இழைநல்லவாக்கையும்பையவேபுயக்கற்றது* தழைநல்லவின்பந்தலைப்பெய்தெங்குந்தழைக்கவே* ॥ ௰ ॥

ஆ—மாய்த்துப் போனான்காண் என்கிறாள். ॥ கூ ॥

(எழநண்ணி) அவன்கருத்துப்படியே நானும்முடிந்தேன், என்னுடையவாக்கைபுகளர்ந்தது, பழனநன்னாரைக்குழாங்கள்காள் பயின்றென்னினி என்றுசொல்லி பின்னையும் நான்பட்டபாடொருவரும் படாதொழிந்திடுக என்றுசொல்லிக்கொண்டு முடிந்தாளென்கிறதிப்பாட்டு. ॥ ௰ ॥

இ—றபடி. உத்தராயத்தில் கண்ணனித்ருஷத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அவன்தனனழைகைகாட்டியென்று) நம்மாவியித்ருஷிக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (என்னையித்ருஷியால்) ॥ கூ ॥

✳ பத்தாம்பாட்டு. ✳

வானநாடனோடொன்றினோமென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அவனித்ருஷியால்) த்ருதீய பாதத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (என்னுடையவித்ருஷியால்) பழனநன்னாரையித்ருஷியாலே ஸஹ்ருதயமாயிருக்கிற நாரைக்குழாங்கள் தன்னைமுடிக்கைக்கு உசிக்கிறனவாகவெண்ணி அவற்றைக்குறித்து வார்த்தைசொல்லுகிறாளென்று ஸம்கதி ஸூசிதமென்க. சதுர்த்தபாதத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நான்பட்டவித்ருஷியால்) வானநாடனோடொன்றினோ மென்கிறவிடத்தில் ஸூசிதமிதிப்ராப்யப்ராப்தாலே யிவ்வாக்யாநதாமே யிவள்முடிந்ததாகத் தோற்றுகையாலே யாவரிதநவாக்யங்களைச்சொல்லுகை யுக்தமன்றோவென்ன வருளிச்செய்கிறார் (என்றுசொல்லிக்கொண்டித்ருஷி) ஒன்றினோமென்கிறவிடத்தில் ஸூசிதமிதி மிவ்வுவரிதநவாக்யோதாஹரண விலம்பஸஹாயமாய்க்கொண்டு அநந்தரபாவியான முடிவைக் காட்டுகிறதென்றுகருத்து. முடிந்தாளென்கிறதிப்பாட்டென்றது—ஸமஷ்டிதஃ ஸூக்திவாஷியாநிற்கிறதென்றபடி ॥ ௰ ॥

ஸ—ன்றபடி. தண்- ஶீதளமான, பெருநீர்- ஸம்ருத்தமானஸலிலத்தில், தடம்- பெரியதான, தாமரை- பத்மமானது, மலர்ந்தாலொக்கும்- விகஸித்தாலதுக்கு ஸத்ருஶமாயிராநின்றுள்ள, பெருங்கண்ணென்று மாறியமைப்பது, ஈஷத்விஸ்தீர்ணலோசநரானான, கண்ணன்- க்ருஷ்ணனவன், நம்மாவி- நம்முடையப்ராணனை, ஸாதிஶயபோசநம், உண்டு- ப்ரஸித்து, கபளீகரித்துக்கொண்டென்றபடி. எழ- போகைக்கு, நண்ணினான்- கிட்டினான், ஸகாஶத்தானானென்றபடி. விஶ்லேஷித்துப்போனானென்கை. ॥ கூ ॥

நாமும்- இங்கேயிருந்தவனைஸேவிக்க வாசைப்பட்டிருந்தநாமும், எழ- போகைக்கு, நம்மைமுடிக்கக்கோலியிருக்கிற வவன்ஸங்கல்பத்துக்கநுகுணமாக விந்தஶரீரத்தை விட்டுபோகைக்கென்றபடி. நண்ணி- கிட்டி, ஸகாஶராயென்றபடி. நம்வானநாடனோடு- நமக்கு ப்ராப்யமான பரமபதமாகிற நாட்டையுடையவனோடே, வானம்- பரமபதம், நாட்டையுடையவன் நாடன், ஒன்றினோம்- ஸங்கதராநோம் அவனுடைய ஸங்கல்பாநுகுண ராநோமென்றபடி. முடிந்துபோகாநிற்கிறோமென்று வர்த்தமானே பூதவத்ப்ரயோகம். இழைநல்ல- இழைபோலே நல்லதான, இழை- ஆபரணம், அவனுக்காபரணம்போலே ஸ்ப்ருஹணீயமானவென்றபடி. ஆக்கையும்- என்னுடையஶரீரமும், பையவே- க்ரமத்திலே, புய- புபதலே, கைவிட்டுபோகையையென்றபடி. கற்றது- அப்யஸியாநின்றது, ஶரீரம்போகத்துடங்கிற்றென்றபடி. பழன- கேதாரங்களில், பழனம்- கேதாரம், நல்- நல்லவையான, கேதாரங்களிலே ஸஞ்சரிப்பவைகளாயிருக்குமவைபான வென்றபடி. நாரைக்குழாங்கள்காள்- நாரைவர்க்கஸமூஹங்காள், இனி- இப்படிநான்முடிந்தபின்பு. பயின்று- ஸங்கதீபவித்து, பயிலுகை- கூடுகை, என்- என்னப்ரயோஜநம், நீங்கள் ஸங்கதீபவித்தாய்க்கொண்டு ஸம்ஶ்லேஷம் பண்ணுகிறதற் கென்னப்ரயோஜநமென்றபடி. என்னை முடிக்கநினைக்கிறவனுடைய ஸங்கல்பாநுகுணமாக நான்முடியாதபோதன்றோ வுங்களுக்கு விசிக்கவேண்டுவதென்றுகருத்து. இப்படி வ்யஸநமிகுத்து முடியாநிற்கிறவள் தன்துக்கப்பொறுமையாலே நான்பட்டதுக்கமொருவரும் படாதொழியவேணுமென்கிறாள்மேல். எங்கும்- எல்லாதேஶமும், தழை- தழைத்ததான, பாஹுள்யமானவென்றபடி. நல்ல- துக்கமிஶ்ரமல்லாததான, இன்பம்- ஸுகத்தை, பகவதநுபவம் பரமஸுகாநுபவஸுகத்தையென்றபடி. தலைப்பெய்து- அடையப்பெற்று, தழைக்க- ஸம்ருத்தமாகக்கடவது. ॥ ௰ ॥

மூ — இன்பத்தலைப்பெய்தெங்குந்தழைத்தபல்லூழித்தூழி* தன்புகழேத்தத்தனக்கருள்செய்தமாயனைத்* தென்குருகூர்ச்சடகோபன்சொல்லாயிரத்துள்ளிவை* ஒன்பதோடொன்றுக்குமூவுலகுமுருகுமே* ॥கக॥

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஆ — (இன்பம்) பின்னையும் "[illegible]" என்னும்படியாலே தாமுளராய் மேலருளிச்செய்கிறார். ஆநந்தவிதாக்களுக்கு நிரவதிகஸ்வபாவமாய் லோகமெல்லாம் நிறைந்த தன்புகழை ஸர்வகாலமுமேத்தேனும் தனக்கருள்செய்த மாயனைத் தென்குருகூர்ச்சடகோபன் சொல்லாயிரத்துள் இத்திருவாய்மொழியிற்சொன்னவார்த்தையை யநுஸந்திப்பார் என்படியாகவேலவென்கிறார். ॥கக॥

திருக்குருகைப்பிரான் பிள்ளான் திருவடிகளே சரணம்.

✱ நிகமனம். ✱

இ — இப்படி ஆநந்தவிசேஷத்திற்சொன்ன முடிவு ஸர்வதேசத்திலும் விஜயமாகையாலே மேல்பாடக்கூடுமோவென்ன வலதசிப்பிக்கிறார் (பின்னையும் [illegible]) இன்பம்தலைப்பெய்தென்கிறத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் ([illegible]) [illegible] தாத்பர்யமருளிச்செய்கிறார் (சொன்னவார்த்தையை [illegible]). ॥கக॥

வ — இன்பம்தலைப்பெய்து - ஸம்பத்தையடைந்து, ஆநந்திப்பார்க்கு நிரவதிகஸம்பந்தமாமென்றபடி. எங்குந்தழைத்த - லோகமெல்லாம் வ்யாபியாநின்ற தன்புகழ் - தன்னுடைய கல்யாணகுணத்தை, பல்லூழிக்கு - பலகல்பங்கள், பல் [illegible] ஸர்வகாலமுமென்றபடி. ஏத்த - ஸ்தோத்ரம்பண்ண, தனக்கருள்செய்த - இங்கு தனக்கென்றது ஸம்ஸ்லேஷத்தைச்சொல்லும், 'மயர்வறமதிநலமருளினன்' என்கிறபடியே தமக்கு க்ருபைபண்ணினவனான மாயனை - ஆச்சர்யசேஷ்டிதனை, இதுக்கு சொல்லென்கிறதோடே அந்வயம். தென் - ஸுந்தரமான, குருகூர்ச்சடகோபன்சொல் - திருநகரியையுடையவரான ஆழ்வாரருளிச்செய்ததான, ஆயிரத்துள் - ஸஹஸ்ரத்தில், இவை - இப்படிப்பட்டவையான, ஆநந்தவிசேஷத்தை சொன்னவையான வென்றபடி. ஒன்பதோடொன்றுக்கும் - ஒன்பதுபாட்டோடே கூடின ஒருபாட்டுக்கும், ஜீவநத்தில் நசையோடே கேவலபட்ட ஒன்பதுபாட்டுக்கும், ஜீவநத்தில் நசைபறுத்து கேவலப்பட்ட பத்தாம்பாட்டுக்குமென்றபடி. மூவுலகும் - விஶேஷஜ்ஞரோடு விஶேஷஜ்ஞரல்லாதாரோடு வாசியற ஸகல லோகமுமென்றபடி. உருகும் - வைஶத்தாலே த்ரவீபூதமாம். ॥கக॥

✱ ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமதே நிகமாந்தமஹாதேஶிகாய நம: ✱

ஸ்ரீ:

த்ரமிடோபநிஷத்தாத்பர்யரத்நாவளி:

(இன்னுயிர்ச்சேவலும்)

ப்ராணஸ்தாநந்தகாதிப்ரவிஸ்ருதமஹிமா [illegible]

[illegible] ஸ்வாமித்வாத்ஸ்வாத்மதாநோ [illegible] ।

[illegible] க்ருஷ்ண [illegible]

[illegible] ॥க0எ॥

(ப்ராணஸ்த்ராண:) என்னுயிர்க்கண்ணபிரானை ஸ்ரீதருக்கு ப்ராணஸ்தநாயிருக்கையாலும், (சதுர்த்தகாஸ:) வித்தகன்கோவிந்தன் - விஸ்மயநீயனாயிருக்கையாலும், (ஸர்வஸ்வலோகிதாநந்த) அவன்கையதே ஸகிதுஸ்வினனாகையாலும், (ஸவ்யாஸவ்யாஸ:) நந்தண்ணன்மாயன் - ஸ்ரீதருக்கு ஸௌலப்யமுடைய தாகையாலும், (ஸ்ரீவக்ஷஸ்தாவாஸ:) நம்பி நமர்வன் - பெரியபிராட்டியாரைத் திருமார்விலேயுடையவனாகையாலும், (நவ கேஜநதாஸ:) என்னருப்பிர்க்காகுத்தன் - ஸம்ஸாரத்திலே ஸக்ருதவிந்தித்திருமகள ஸ்யவதன்மையாலும், (நீலரத்நஸ்மதாப:) வாட்டமில்லன் கருமாணிக்கம் - ஒளிமாறாத நீலரத்நம்போலேயிருக்கிற திவ்ய விக்ரஹத்தையுடையவனாகையாலும், (க்ருஷ்ணகாஸ:) கண்ணன்றாமே - க்ருஷ்ணனாய் வந்தவதரித்தனையாலும், (ஸ்வபத்மநேத்ர) தடந்தாமரைமலர்த்தலைக்கண்ணை நுங்கண்ணன் - ஸர்வஜ்ஞமான திருக்கண்ணை [illegible]

[[illegible] என்றும் பாடமுண்டு]

ஈடு — த: — யுடையவனுடையனாலும், (வாத்ஸல்யாதிசயத்தாலே) நம்மை அநாதரித்துப் போனன்றிறே. - ஸமஸ்தகல்யாண குணங்களாலும், எம்பெருமான் ஸ்ரீ சார்ங்கதநுர்தரன் ஆனதுபடி ஸ்வதந்த்ரஸ்வரூபங்களை ஸ்வீகரிக்கிறவனுக்கு "இன்னுயிர்ச்சேவலும்" என்கிற ப்ரகரணத்திலே ஆழ்வாரருளிச்செய்தாரென்கிறார். ॥ கo ॥

ஸ்ரீமதே ரங்கராமாநுஜமஹாதேஶிகாய நம:.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஒன்பதாம்பத்தில் ஐந்தாந்திருவாய்மொழி முற்றிற்று.

*

ஆறாந்திருவாய்மொழி.

மூ — உருகுமால்நெஞ்சமுயிரின்பரமன்றிப் * பெருகுமாலவேட்கையுமென்செய்கேன்றொண்டனேன் *

ஆ — (உருகுமால்) இப்படி எம்பெருமானைப்பிரிந்த வ்யஸநத்தாலே முடிந்து பின்னையும் நெடும்போது கூட உஜ்ஜீவிக்கைக்கு ஸஹாயமாயிருக்க வாழ்வார், திருக்கார்க்கரைமருவிமாயன் பண்டென்னோடு கலந்து பரிமாறின பரிமாற்றங்களை நினைக்க நினைக்க ப்ரீதிஶயத்தாலே நன்னெஞ்சழிந்து நீராயுருகாநின்றது இப்படி படாநின்றால்

ஆறாந்திருவாய்மொழி.

இ — இப்படி வரிதவ்ரமாயிருக்கிற வாழ்வாரிப்போது தமக்கொரு ஸம்ஶ்லேஷமும் ஸம்பந்தமுமின்றிக்கேயிருக்க விந்திருவாய்மொழியிலே சிறியவென்னாருயிருண்ட திருவருளென்றும், தாமென்னை முற்றப்பருகினனென்றும் இப்புடைகளிலே அவன் குணங்களைச்சொல்லி ஸஞ்ஜோஷிக்கைக்கு யஸம்ஸதமன்றோவென்ன வதாரிப்பிக்கிறார் (இப்படியிருத்தபால) திருக்கார்க்கரையென்று - ஒரு உகந்தருளினதிவ்யதேஶம், பண்டென்றது - இருத்தும்வியந்திலென்றபடி. மற்றுள்ள திருவாய்மொழிகளில ஸம்ஶ்லேஷம்போலன்றிக்கே நிரதிஶயமாக ஸம்ஶ்லேஷித்தது இருத்தும்வியந்திலேயாகையாலே அதுவேயிறே 'தஸ்ய ஸம்ஸ்ம்ருத்ய ஸம்ஸ்ம்ருத்ய' என்கிறகணக்கிலே யாழ்வாருக்கு விமர்ஶித்து ஸ்ம்ருதிவிஷயமாகத்தக்கது. லோககவிதையில பிராட்டி ராமவிஶ்லேஷதஶையிருக்கச்செய்தேயும் திருவடியைக்கண்ட ஸந்தோஷஸமயத்தாலே 'ஸமா த்வாதஶ தத்ராஹம் ராகவஸ்ய நிவேஶநே । புஞ்ஜாநா மாநுஷாந் போகாந் ஸர்வகாமஸம்ருத்திநீ' என்று திருவயோத்யையிலே பெருமாளுந்தானுமொருபடிப்படப் பன்னிரண்டாண்டு கலந்தகலவியை ஸ்மரித்து ப்ரீதையானாப்போலே ஆழ்வாருமிப்போதொரு ஸம்ஶ்லேஷமும் ஸம்பந்தமின்றிக்கே விஶ்லேஷதஶையமாயிருக்கச்செய்தேயும் 'ஸத்ருஶாத்ருஷ்டசிந்தாத்யா: ஸ்ம்ருதிபீஜஸ்ய போதகா:' என்கிறபடியே விஷாதஸ்மரணாதிகளாலே இருத்தும்வியந்தில ஸம்ஶ்லேஷத்தைஸ்மரித்து ப்ரீதியாலே யவனுடைய குணங்களைச்சொல்லி ஸஞ்ஜோஷிக்கிறாராகையாலே யிது ஸங்கதமென்றபடி. *

முதற்பாட்டு.

இவ்வவதாரிகையில் முதற்பாட்டின ஸ்வரூபம ஸங்க்ரஹிதம. அதில் திருக்கார்க்கரையித்யாதியாலே உத்தரார்த்தமும், ப்ரீதிஶயத்தாலே யித்யாதியாலே பூர்வார்த்தமும், இப்படி படாநின்றால் இத்யாதியாலே

ஸ — தெருவெல்லாம் - குறுந்தெருவோடு நெடுந்தெருவோடு வாசியற ஸகலவீதிகளிலும், காவி - கருநெய்தல் புஷ்பங்கள், காவியென்று காவிப்பூக்கும் கருநெய்தலுக்கும் பெயர். கமழ் - பரிமளியாநிற்கிற, நகரத்தைச்சுற்றிலும் திவ்யஸரஸ்ஸுக்கள் வர்த்திக்கிறதுக்களாயிருக்கையாலேயென்று கருத்து. திருக்கார்க்கரை - திருக்கார்க்கரையென்கிற திவ்யதேஶத்திலே, மருவிய - ஸாதரமாக வஸிக்கிற, மருவியவனை, ஸாக்ஷம்போலே தேஶவிப்ரகர்ஷமும் அவதாரங்கள்போலே காலவிப்ரகர்ஷமுமின்றிக்கே யிருந்தவனை யென்றபடி. மாயன்தன் - ஆஶ்சர்யபூதனுடைய, தன்னையென்று ஸாக்ஷிகம். ஆஶ்சர்யமான ஸௌந்தர்யாதிகளை யுடையவனுடைய வென்றபடி. மாயம் - ஆஶ்சர்யங்களை, இவைகளை நினைக்க நினைக்கவாமீருப்பாரை வநவதத்துருப்போலே யென்னை யநுபவிக்கைத்துப் பண்டென்னோடு ஸம்ஶ்லேஷித்த ஆஶ்சர்யங்களை யென்றபடி. நினைதொறே - ஸ்மரிக்கிறவந்தோறும், நெஞ்சம் - ஜ்ஞானத்துக்கு ஆஶ்ரயகாரணமான நெஞ்சானது, உருகும் -

மூ— தெருவெல்லாங்காவிகமழ் திருக்காட்கரை* மருவியமாயன் றன் மாய நினைதொறே* ||௧||

நினைதொறுஞ்சொல்லுந்தொறு நெஞ்சிடிந்துகும்* வினைகொள்சீர்பாடிலும் வேமெனதாருயிர்* சுனைகொள் பூஞ்சோலைத் தென்காட்கரையென்னப்பா*

ஆ— மாயங்களை நினைக்கை தவிரலாம்போ; என்னுடைய நிரவதிகமான வ்யஸநமானது தவிர வொட்டுகிறதில்லை நானென்செய்கே னென்கிறார். ||௧||

(நினைதொறும்) எல்லாருடைய து:க்ஙளையும் போக்கக்கடவதான வுன்னுடைய விக்ரமணங்களை நினைத்தல் சொல்லுதல் பாடுதல்செய்யில் என்னெஞ்சு மிவ்வாத்மாவும் மாயாகின்றன, நீரிக்கனோயிடுபடுகைக்கு உம்மு

இ— த்விதீயவாதிகாத்பர்யமும் சொல்லிற்றாயிற்று. தவிரவொட்டுகிறதில்லை யென்றிவ்வுபக்ரமத்தில் சொன்னவித்தாலே இத்திருவாய்மொழிக்கு விஸ்லேஷாஸஹத்வமென்கிற ஸம்லக்ஷணம் ப்ரதிவாத்யமென்று ஸூசிதமாயிற்று. ||௧||

* இரண்டாம்பாட்டு. *

வினைகொள்சீரென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (எல்லாருடையவித்யாதியால்) இனி வாடு வர்ணத்திலுள்ள வடிக்களுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நினைத்தலித்யாதியால்) நினைவுசொல்லுக்களிலே நெஞ்சுக்கும் பாடலிலே ஆத்மாவுக்கும் விகாரம் பாட்டில்தோற்றுகிறதேயாகிலு மர்த்தஸ்வபாவத்தாலே இவைஇரண்டுக்கும் மூன்றுக்ரியைகளிலும் ஸர்வப்ரகாரம் விவக்ஷிதமென்றுகருத்து. மாயாநின்றனவென்றது- மிகவும் வ்யாகுலப்படாநின்றனவென்றபடி. அவன்குணங்களைக் கொண்டாடினாப்போலே நினைகிலேனித்யாதியாலே தாம்ஸங்கல்பம்பண்ணினதைக் கொண்டுகை யநுவிதமன்றோவென்ன வினாக்குத் தாத்பர்யஞ்சொல்லுகைக்காக வவதாரிப்பிக்கிறார் (நீரிக்கனோயித்யாதியால்) திறத்தில்- விஷயத்தில்,

ஈ— வ்யூத்க்ரமத்தாலே த்ருவியாகின்றது. ஆல்- விஷாதத்யோதகம். நெஞ்சைநிறுத்துபநுஸந்திக்க முடிகிறதில்லையென்று விஷாதப்படுகிறபடி. ஆனால் ஸாரணத்தைத் தவிர்ந்தாலோவென்றில்? வேட்கையும்- அபிநிவேசமும், அநுஸந்தாநஸாரஸ்யத்தாலே பிறந்த வுத்தரோத்தராபிநிவேசமு மென்றபடி. உயிரின் பரமன்றி- ஆத்மாவின் ஸாமன்றிக்கே, ஆத்மாவுக்குப் பொறுக்குமளவன்றிக்கே யதிப்ரவ்ருத்தமாயென்றபடி. பெருகும்- ப்ரவ்ருத்தியாநிற்கிறது, வேட்கையுமென்கிறவிடத்தில் ஸமுச்சயத்தால் அநுஸந்திக்க வொண்ணாதபடி நெஞ்சுருகி வாயிக்கிற ஜாதமன்றிக்கே அபிநிவேசமு மதிப்ரவ்ருத்தமாய் மறந்திருக்கவொட்டாதபடி பாயிக்கிறதென்றபடி. ஆல்- விஷாதாதிசயத்யோதகம். தொண்டனேன்- ஸம்லக்ஷணவிஷயத்தில் வ்யவஸாயனான நான் தொண்டன்- வ்யவஸாயன், இச்சம்பந்தத்தாலே தன்னைச்சொல்லிக்கொள்ளும்போது தொண்டனே னென்றாரிவம். என்செய்கேன்- எத்தைச்செய்யக்கடவேன், நெஞ்சையுருகாமல் நிறுத்தவோ, அபிநிவேசப்ரவாஹத்தைமட்டுப்படுத்தவோ, அவன் குணங்களை அநுஸந்தவிஷயமாகாதபடி விலக்கவோ, என் வ்யவஸாயத்தைத்தவிரவோ வென்றபடி. இவையொன்றும் முக்யமன்றென்று கருத்து. ||௧||

சுனைகொள்- ஸரஸ்ஸுக்களைக்கொண்டிருக்கிற, சுனை- ஸரஸ்ஸு, ஸரஸ்ஸுக்களையுடைத்தானவென்றபடி பூஞ்சோலை- தர்சநீயமான வுத்யாநத்தையுடைத்தான, பூம்- தர்சநீயம், தென்- ஸுந்தரமான, காட்கரை- திருக்காட்கரையென்கிற திவ்யநகரத்தையுடையவனான, என்னப்பா- என்னுடையஸ்வாமியே, வினை- எல்லாருடைய து:க்ஙளையும், வினைசப்தமிங்கே லக்ஷணயாது:க்ஙவாசகம். கொள்- கொள்ளுமவையான, கொள்ளுகை- அபஹரிக்கை, நசிப்பிக்கக்கடவையான வென்றபடி. எல்லார்க்கும் து:க்ஙங்களைப்போக்குமவை யென்னையொருவனையும் வ்யாகுலப்படுத்துகிறன வென்றுகருத்து. சீர்- ஸௌசீல்யாதிகுணங்களை நினைதொறும்- ஸ்மரிக்குங்காலமெல்லாம், நெஞ்சு- என்நெஞ்சானது, இடிந்து- ப்ரமித்ததாய், சொல்லுந்தொறும்- சொல்லுங்காலமெல்லாம், உகும்- உருகும், நீராயுருகாநிற்கும், பாடிலும்- அக்குணங்களை நம்பண்ணிலும், எனது- என்னுடைய, ராஹ்யஸிரோவஹிதமான. ஆர்- ஸ்வாஸ்யமான, ஆர்தல்- த்ருப்தியாய் ஸ்வாஸ்யத்தைக்காட்டுகிறது, உனக்கு ப்ரீதமானவென்றபடி: உயிர்- ஆத்மாவானது, வேம்- ஸந்தாபி

மூ— நினைகிலேனுனக்காட்செய்யுநீர்மையே* ॥௨॥

நீர்மையால்நெஞ்சம்வஞ்சித்துப்புகுந்தென்னை* யீர்மைசெய்தென்னுயிராயென்னுயிருண்டான்* சீர்மல்கு
சோலைத்தென்கார்க்கரையென்னப்பன்* கார்முகில்வண்ணன்றன்கள்வமறிகிலேன்* ॥௩॥

ஆ—டையதிறத்தில் நான்செய்ததென்னென்னில்? நான் உன்னையடிமைகொள்ளுகிறோம என்றுகொண்டுவந்து, நீயென்திறத்துச்செய்தருளின செயல்களை நினைக்கலாமோவென்கிறார். ॥௨॥

(நீர்மையால்) உம்மைபடிமைகொள்கைக்கு மேற்படச்செய்ததுண்டோவென்னில்? அடிமைகொள்வாரைப்போலே யென்னெஞ்சை வஞ்சித்துப்புகுந்து தன்குணங்களாலும் செயல்களாலுமென்னைமாய்த்து, என்னுயிராய் என்னுயிரை ஸ்வீகரித்தருளினன், முந்தறமெய்யரைபபோலேவந்து புகுந்தபடியும், பின்னைச்செய்த

இ— அதுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார். (நானுன்னையடிமையித்யாதியால்) காமுகன் காமிநீவிஷயத்தில்போலே எம்பெருமான்தம்பக்கல் ஸௌஹார்த்தத்தைக்கொண்டு உபகாரமெய்யழிந்து ஸம்ஶ்லேஷித்தபடியைத் தாமதர்க்கிசைந்திருந்தவளவைக்கண்டு தாமாள்ச்செய்ததென்று விநயோக்தியாலேசொல்லி யதைக்கொண்டாடுகிறாரென்றுகருத்து. நினைக்கலாமோவென்றது- நினைக்கஶக்யமோவென்றபடி. பவா:— க்ருதஜ்ஞதயத்தாலே நீ உபகாரமாகச்செய்தாலும் நானதைநினைக்கை யுசிதமோவென்றபடி. ஆதலாலதை யென்வாயால் சொல்லமாட்டேனென்கிறாரென்றுகருத்து. இத்தால் கீழ்ப்பாட்டில் தாமநுஸந்தித்த வைலக்ஷண்யத்தை ஹ்ருதயத்தாலே அவனைக்குறித்துச்சொல்லுகிறாரென்று ஸங்கதியும்ஸூசிதம். ॥௨॥

✳மூன்றாம்பாட்டு.✳

அவன்குணங்களைச்சொல்லி ஸந்தோஷிக்கிற ப்ரகரணத்திலே யிப்பாட்டிலேயவனை வஞ்சகனாகச்சொல்லுகை யஸங்கதமன்றோவென்ன விதுக்குத் தாத்பர்யஞ்சொல்லுகைக்காக வவதாரிப்பிக்கிறார் (உம்மையித்யாதியால்) நெஞ்சம்வஞ்சித்துப்புகுந்து என்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அடிமைகொள்வாரையித்யாதியால்) என்னைநீர்மையா லீர்மைசெய்தென்றதயித்துத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (தன்குணங்

வ்யா— ஶயமாற்றமாட்டாமையாலே தவ்யமாகாநிற்கிறது, அப்படிநாமுமக்குச் செய்வதென்னென்னில்? நான்— உனக்கத்யந்தவிதேயனானநான், உனக்காட்செய்யும்நீர்மை. உனக்கடிமைசெய்யும்ப்ரகாரத்தை, நீர்மை- ப்ரகாரம், பண்டுநீ உபகாரமாக ஸம்ஶ்லேஷிக்கும்தசையில உனக்கிஷ்டவிநியோகார்ஹனா யிருந்தபடியையென்றபடி. நினைகிலேன்- நினைக்கமாட்டேன், நீசெய்தது கரைகடைந்ததாகையாலே யதைநினைக்கமாட்டுகிறிலேனென்றுகருத்து. ॥௨॥

நெஞ்சம்- என்னுடையமநஸ்ஸை, வஞ்சித்துப்புகுந்து- நம்மை யடிமைகொள்ளவருகிறோமென்று ஹ்ருதித்தம்ஶீகரிக்கும்படி பண்ணிக்கொண்டுவந்துபுகுந்து, என்னை- ஶேஷஶேஷிபாவமுறை தப்பாமே யடிமைசெய்வித்துக்கொள்ள வந்தானென்றிருக்கிறவென்னை, நீர்மையால்- நல்லஸ்வபாவத்தால், தன்னுடைய ஸௌஶீல்யத்தாலும் தகாதமாய் ஶேஷஶேஷிபாவமுறையழியும்படி யத்யந்தஸ்நேஹமான வ்யவஹாரத்தாலுமென்றபடி, ஈர்மைசெய்து- த்ரவ்யப்படுத்தி, ஈர்மை- ஈஷிக்கை, இங்கு த்ரவ்யப்படுத்துகிறதைச் சொல்லுகிறது, அந்த குணாநுஸந்தாநாதிஶயம் பொறுக்கமாட்டாதே த்ரவ்யப்படும்படிபண்ணியென்றபடி. என்னுயிராய்- எனக்குப்ராணனாய், எனக்குத்தன்னைப்பிரியில் யஸிக்கவொண்ணாதபடியாயென்றபடி. என்னுயிர்- என்னாத்மாவை, உண்டான்- ஸ்வீகரித்தவனான, ஶரீரஶரீரஸம்பந்தப்ரயுக்த ஶேஷஶேஷிபாவத்தைப்பெற்றுப்போலே யநுஸந்தித்தவனானவென்றபடி. சீர்மல்கு- ஶ்ரீப்ரவஸ்ஸியாநிற்கிற, மல்குகை- ப்ரவஸிக்கை, உபசாரவசஸ்வஸௌந்தர்யமாகாநின்றுள்ள வென்றபடி. என்னை யநுஸந்திக்கப்பெற்றவனுடைய ஸந்தோஷத்தாலே யவ்வூருக்குங்கூட ஶோபாதிஶயமுண்டாயிற்றென்றுகருத்து. சோலை- உத்யாநங்களையுடைத்தான, தென்- அழகியதான, கார்க்கரை- அந்தத்திவ்யநகரத்தையுடையவனான, என்னப்பன்- எனக்கு நிருபாதிகபந்துவான, கார்முகில்வண்ணன்தன்- காளமேகவர்ணனுடைய, என்னையநுஸந்தித்து திருமேனியும் ஶோபாதிஶயம்பெற்றதென்றுகருத்து. கள்வம்- க்ருத்ரிமங்களை, முந்தறஶேஷிபாவமுறை தப்பாமல்வருவானைப்போலே வந்து நான் உபீக்ருதனானபின்பு ஶேஷஶேஷிபாவமுறை மாறாடி யத்யந்தமாக வென்னைஸ்வீகரித்தவிந்த க்ருத்ரிமங்களையென்றபடி. அறிகிலேன்- அறியமாட்டுகிறிலேன், யதார்த்தமோ அயதார்த்தமோவென்று

ரூ — அறிகிலேன் றன்னுள்ளனைத்துலகுமிறக* நெறிமையா னூமவற்றணிறகும்பிரான்* வெறிகமழ்சோலைத் தென்காட்கரையென்னப்பன்* சிறியவென்னாருயிருண்டதிருவருளே* [illegible]

ஆ — படியும், ஒருவன் வஞ்சித்தபடி யொன்றுமறிகிலேனென்கிறார். [illegible]

(அறிகிலேன்) உம்முடைப்பிறத்தில் அவன்றனை ஸ்வீகரித்தானால் சிகலுண்டோவென்னில், ஸ்வீகரித்தானால்தான் மற்றுள்ளதோடு நெறிகேடாமை கலந்துபரிமாறுமாப்போலே பரிமாறவமையாதோ, தானென்னைஸ்ரஜித்தருளி நெறிகெடும்படி பரிமாறவேணுமோ, இவ்வஸ்திவெளத்துக் கொருமுடிவு காண்கிறிலேனென்கிறார். [illegible]

(திருவருள்) திருவருள்செய்பவன்போலே யென்னுள்ளேபுகுந்து என்னை ஸ்ரஜித்தருளுகையன்றியே என்னுருவமுங்கூட ஸ்ரஜித்தருளினான், ஒருவனஸிநிவெளமிருக்கும்படியே இது மூந்தறவந்துபுகுநதருளினபடி.

இ — களவுமிகாரியால்) கள்வமறிகிலே னென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார், (மூந்தறவிகாரியால்) [illegible]

நாலாம்பாட்டு.

கீழ்ப்பாட்டிற்சொன்னவசனத்தைதே 'என்னுருவிருண்டதிருவருளறிகிலேன' என்றுசொல்லுகிறதாகையாலே இப்பாட்டு வ்யாக்யானமென்றேவென்ன விதுக்குத் தாத்பர்யஞ்சொல்லுகைக்காக வவதரிப்பிக்கிறார் (உம்முடையவிகாரிபால) சிகலுண்டோவென்றது- செய்யலாவதுண்டோவென்றபடி. அதீவவாதத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸ்வீகரித்தானாலதானிகாரியால) நெறிகெடாமையென்றது- தன்மெஷியான முறைதப்பாமேயென்றபடி. அதீவவாதஸ்வாரஸ்யத்தால் காரியவாதத்துக்கு உசிதவசனத்தைய நுளிச்செய்கிறார் (தானென்னையிகாரியால்) அறிகிலேனென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இவ்வஸிநிவெளத்துக்கிகாரியால்) [illegible]

ஐந்தாம்பாட்டு.

அதீவவாதத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறா (என்னைஸ்ரஜித்தருளுகையிகாரியால்) இதுவேயிப்பாட்டுக்கு ஸங்கதியுமாயிறறு. கணங்கள்வங்கனென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இதுமுந்த

மு — நிரூபிக்கமாட்டுகிறிலேனென்றபடி. ஸவ்ரயிகளைவனிப்படி யென்பக்கல் வ்யாமோஹம்பண்ணக்கூட்டுது வுமிவனத்ஸவம் உசமாயிருக்கையாலே யிதுபொய்யென்னவுங்கூடாது, ஆதலால் நான் [illegible] வென்றபடி. இதுத்தும்மியதில் 'மருள்தானீதோ மாயமயக்குமயக்கே' என்கிறதையிந்ருசொல்லுகிறார். [illegible]

(தன்னுள்- தன் ஸங்கல்பத்திலே, அனைத்துலகும- ஸமஸ்தலோகங்களும், நிறக- 'ஏதஸ்ய வா அக்ஷரஸ்ய ப்ரஶாஸநே' [illegible] கொண்டு மெஷஸவ வ்யாபாரத்து முறைதப்பாமலிருக்க வென்றபடி. தானும்- மெஷியான தானும், வஸ்துவும் அவை முறைதப்பாதிருக்குமாப்போலே தானும்முறைதப்பாதிருக்கிறு னென்கைக்காக. நெறிமையால- உபாஸநையால், நெறி வழியாய் உபாஸநையைக் காட்டுகிறது. மெஷிக உபாஸநை தப்பாமலென்றபடி. அவற்றுள்- அந்த லோகங்களுக்குள்ளே, நிற்கும்- வஸிக்குமவனை, பிரான்- உபகாரகனை, வெறி- வாஸநையாலுண்டு, கமழ்- வ்யாபிக்கிற, 'ஓஷதிவாசம் வ்ருக்ஷாமதிம' [illegible] சோலை- உத்யானங்களையுடைத்தான, தென்காட்கரை- அழகியகாட்கரையை யுடையவனான, என்னப்பன்- என் ஸ்வாமியானவன், சிறிய- க்ஷுத்ரனான, என்- என்னுடைய, ஆர்- அவன் [illegible] ஆர்த லாயிக்யமாய் ஸ்வாதந்த்ர்யத்தையைக்காட்டுகிறது. இவர் தாம் தமமை [illegible] நினைத்திருக்கச்செய்தே அவன தனக்கு ஸ்வாதந்த்ர்யமான [illegible] நினைத்திருக்கிறானென்று கருத்து. [illegible] ரை- ஶூத்தவை, உண்ட- திருவருள்- ஸ்ரஜித்தருளின விந்த ஸ்வாதந்த்ர்யமான [illegible] தயையை, அருள்- க்ருபை, இங்கு [illegible] அறிகிலேன்- அறியமாட்டுகிறிலேன், வாசிதெளிக்க முடிகிறதில்லையென்றபடி. இப்பாட்டில் [illegible] க்கிதத்தையுண் அவருக்குத்தன்னெறி யாவற்றிற்கொண்டு நின்றேழிந்தாரே' என்றும் இதுத்தும் [illegible] தென்ன வசனத்தை யிங்கு மதார்வாதித்தபடி. [illegible]

மூ— திருவருள்செய்பவன்போலென்னுட்புகுந்* துருவமுமாருயிருமுடனேயுண்டான்* திருவளர்சோலைத் தென்காட்கரையென்னப்பன்* கருவளர்மேனியென்கண்ணன்கள்வங்களே* ||ரு||

என்கண்ணன்கள்வமெனக்குச்செம்மாய்நிற்கு* மங்கண்ணனுண்டவாருயிர்க்கோதிது*

ஆ— அது பின்னைநின்றுசெய்தருளினபடி; இதுஒருவன் கள்வங்களேயென்கிறார். ||ரு||

(என்கண்ணன்) ஒருநாளிங்ஙனே யவன்கையிலகப்பட்டால பின்னைபதில் அகப்படாதே பரிஹரிக்கவொண்ணாதோ என்னில்? நாடோறுமெய்ம்மெய்யேயென்னை யடிமைகொண்டருள வருகிறானென்றெனக்குத்தோற்றும்படிவந்து கதிவுடைம் என்னுடையவை யறிவழியும்படி போஜித்துப்போம. போனவாறே பின்னைபு

இ—றவித்யாதியால்) இதுவென்றது- ஸேஷிஸ்வபாவம்கெடுக்கலயாதே யடிமைகொள்வாரைப்போலே வந்ததென்றபடி. அதுவென்றது- ஹேயமானவென்னுடைய தேஹத்தையுங்கூட தனக்கு பரமபோக்யமாக அநுபவித்ததென்றபடி. ||ரு||

✳ ஆறும்பாட்டு. ✳

அவன்செய்வது க்ருத்ரிமமென்று தாமறிந்துசொல்லாநிற்கச்செய்தே அவன் க்ருத்ரிமமெனக்குச் செவ்வையாய்த்தோற்றுமென்றுசொல்லுகை யஸங்கதமன்றோவென்ன விதுக்குத் தாத்பர்யமருளிச்செய்லுகைக்காக வவதாரிப்பிக்கிறார் (ஒருநாளித்யாதியால்) இப்போது க்ருத்ரிமமென்று தோற்றுகிறதேயாகிலும் அவன்முகத்தைக்கண்டவாறே மெய்யென்று தோற்றுகிறதென்கிறாராகையாலே ஸங்கதமென்றதாயிற்று. ஆத்யவாக்யத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நாடோறுமித்யாதியால்) த்விதீயவாக்யத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (கதிவுமித்யாதியால) கதிவுமென்றது- க்ரியாவிஶேஷணம். இது தேவகலோகஷமாய் கதிவு

ஈ— திருவருள்- ஸ்ரீகைங்கர்யத்தை, 'வழுவிலாவடிமைசெய்யவேண்டுநாம்' என்று நானாசைப்பட்டபடியே அடிமைகொள்ளுகையாகிற ப்ரஸாதவிகாரத்தையென்றபடி. செய்பவன்போல- செய்யப்புகுகிறவன்போலே, தனக்கொன்றும்அபேக்ஷிதமன்றிக்கேயெனக்கேயுபகாரமாக செய்யநிற்கிறவன்போலே யென்றபடி. என்னுள்- என்நெஞ்சிலே, புகுந்து- ப்ரவேஶித்து, உருவமும- ரூபத்தையும், என்ஶரீரத்தையுமென்றபடி. ஆர்- அதிகமான, தனக்கு ஸ்வாத்யமானவென்றபடி. உயிரும்- ஆத்மாவையும், உடனே- கூடவே, ஹேயோபாதேயவிபாகமின்றியேயென்றபடி. உண்டான்- போஜித்தவனை, தேஹாஸோமம்பெற்றதாக அநுபவித்தவனையென்றபடி. திருவளர்- ஸ்ரீவ்ருத்தியாநின்றுள்ள, என்னை யநுபவிக்கப்பெற்ற ஸந்தோஷத்தாலே அவ்வூர்ச்சோலையும் தழைத்ததென்றுகருத்து. சோலை உத்யாநங்களையுடைத்தான, தென்- ஸுந்தரமான, காட்கரையென்னப்பன்- திருக்காட்கரையென்கிற திவ்யநகரத்தையுடைய வென்ஸ்வாமியான, கருவளர்- கறுப்புவளராநின்றுள்ள, என்னோடு ஸம்ஶ்லேஷத்தாலே காந்திவ்ருத்தியாநின்றுள்ளவென்றபடி. மேனி- திருமேனியையுடையவனை, என்கண்ணன்- எனக்குஸுலபனான க்ருஷ்ணனுடைய, கள்வங்களே- க்ருத்ரிமங்களானவாஶ்சர்யங்கள், கள்வங்களேயென்கிறவிடத்தில் ஸ்வரத்தாலே விஸ்மயம்விவக்ஷிதம். வரும்போதொருபடியும் பின்பொருபடியுமான க்ருத்ரிமவ்ருத்திகளென்ன வாஶ்சர்யங்களென்றபடி. ஸஹாவஸ்தானத்தால் அடிமைகொள்வானைப்போலேவந்து தானென்பக்கல நிரபேக்ஷனாயிருக்கையும் விரோதியான ஶரீரத்தை நிவர்த்திப்பானைப்போலேவந்து அதைத்தனக்கு பரமபோக்யமாக போஜிக்கையும் தானெனக்கு போக்யமாக வருவானைப்போலே வந்து என்னைத்தனக்கு போக்யமாக போஜிக்கையும் என்பேறாக வருவானைப்போலே வந்து தன்பேறாகத்தலைக்கட்டிக்கொள்ளுகையுமாகிற க்ருத்ரிமவ்யாபாரவிஶேஷங்கள் விவக்ஷிதங்கள். ||ரு||

என்கண்ணன்கள்வம்- என்பக்கல ப்ரேமவ்யாமுக்தமான க்ருஷ்ணனுடைய வ்யாபாரங்கள், எனக்கு- அவன்முகத்தைக்கண்டவாறே பரவஶனாயிருக்கும ஸ்வபாவனானவெனக்கு, செம்மாய்நிற்கும்- ருஜுவாயிருக்கும், செம்மென்றுருஜு, க்ருத்ரிமமென்றுதோற்றாதே மெய்யென்றுதோற்றுமென்றபடி. அங்கண்ணன்- அழகிய கண்ணையுடையவன், அங்கண்ணனென்று சுதிவுமனுக்குப்பேர். உண்ட- அநுபவித்ததான, என்- என்னுடைய, ஆர்- அவன்போக்யமான, இதுவுயிர்கோது- இந்தவுயிர்க்கோதானது, கோது- நிஷ்ப்ரயோஜனம், நிஸ்ஸாரமாய்விட்ட விஷயதாவானதென்றபடி. அவனிதை யநுபவிக்கும்போது ரஸாதிஶயத்தாலே யறிவழிந்த விஷயதாவானதென்கை. புன்கண்மை- புல்லிதானகண்ணுடைத்தாகுகையை, புல்லியது- சிறும், கண-

மூ—புன்கண்மையெய்திப் புலம்பி இராப்பகல்* என்கண்ணனென்றவன் கார்க்கரையேத்துமே* [illegible]
கார்க்கரையேத்தும் மதனாட்கண்ணன் வென்றும்* வேட்கைநோய் கூர நினைந்து கரைந்துருகு* ஆட்கொள்
வானொத்தென் ஆருயிருண்டமாயனால்* கோட்குறைபட்டதென்னாருயிர் கோளுண்டே* [illegible]

ஆ—இவ்வவஸ்தையானது நெடும்போதுகூட வ்யவஸாயமாய் அவனையாசைப்பட்டு என்கண்ணா! என்கண்ணா என்றலற்றி அவனெழுந்தருளியிருந்த திருக்கார்க்கரையை ஏத்தாநிற்குமென்கிறார். [illegible]
(கார்க்கரையேத்தும்) இப்படி அவனைக்காணவேணுமென்னு மாசையாலே அவனை நினைத்தலைந்து, அவ லஞ்சுமவளவிலே, பின்னையும் பண்டுபோலே யென்னை யடிமை கொள்வாரைப்போலே வந்து புகுந்து, என் னுயிரைமுழு ஸாஜித்துப் பின்னையும் ஸாஜிபாதாணயிருக்கு மென்கிறார். [illegible]

இ—அறுமென்று, வ்யவஸாயம்- அறிவழியும்படியென்றது- கோதமஸூத்ரத்திற்சொன்னபடி. ஏவகாதி ஸமபத்தாலே ஜோஷிகமாம்படியென்கை. பாட்டெல்லாம் மேகவாக்யமாயிருக்க வ்யவஹாரத்தில் ஸாஜித்துப் போமென்னு இவ்வேகவாக்யஸேபம் பண்ணினது- அவன்கூத்து உம் அவன்தேவத்தைக்காணும்போது மெய் யுகவேதோற்றுமென்றும் க்ருதிமென்றறியும்படி மேலேயுமவன்பக்கலென்னுதாவுக் காசைபோகாதென்று மிவ்வபயத்திலும் பாட்டுக்குத் தாத்பர்யமென்று காட்டுகைக்காக. புன்கண்மையெய்தி யென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நெடும்போதுக்ருதியால்) புலம்பியென்கிறதில் [illegible] அருளிச் செய்கிறார் .(அவனையாசைப்பட்டுஎன்று) மேலேஷம் ஸ்பஷ்டம். [illegible]

* ஏழாம்பாட்டு *

மேலொரு கலைவிமேஷம் சொல்லுகைக்காக கீழ்ச்சொன்னதை யநுவதிக்கிற திப் பூர்வ வாக்ய மென்று காட்டுகிறார் (இப்படி யித்யாதியால்) இப்படி யென்கிறதற்கு அலற்றி யென்கிறதோடே அந்வயம். பூர்வ— கீழ்ப்பாட்டில் மோககார்யமான வ்யவஸாயம் கலோகமன்றாகிலும் ஸ்வீதமாகையாலே யதுவு மிங்கநுவதிக்க யோக்யமாகையால் இப்படி என்கிறத்துக்கு அவஸன்னமான வென்கிறதோடே அந்வயமாக வுமாம். இவ்வநுவாதத்தாலே யிப்பாட்டுக்கு கீழ்ப்பாட்டோடே யவாந்தரஸங்கதியும் ஸித்தமாயிற்று. த்விதீய வாக்யத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அவஸன்னமானவாறே யென்று) என்னுயிரிதிமேஷம். த்ருதீய வாக்யத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (பின்னையுமித்யாதியால்) சதுர்த்தவாக்யத்துக்குத் தாத்பர்யமருளிச் செய்கிறார் (பின்னையும் ஸாஜிபாதாணயிருக்குமென்று) இத்தால் ஐந்தாம்பாட்டிலே யென்னுதாவையும் ஸ ரீரத்தையும் தனக்கு போக்யமாக வநுபவிப்பானென்றவ ரிப்பாட்டிலே அப்படி யநுபவித்தானென்

ப—ஆகநதி, எய்தி- அடைந்து, இப்படி ஜோஷிதமாயிருந்தது அவனநுபவித்துப்போன நெடும்போதானபின் புன்கண்மை வைவர்ண்யமாயென்றபடி. இராப்பகல்- நக்தந்திவம், என்கண்ணனென்று எனக்கு ஸுலபனா கண்ணனென்று, புலம்பி- ப்ரலபித்து. அவன்கார்க்கரை- அவனுடைய திருக்கார்க்கரையை, ஏத்தும்- ஸ்தோத்ரியாநிற்கும், அவனெழுந்தருளியிருக்கிற திருக்கார்க்கரையை அவனைக்காணவேணுமென்னுமாசையாலே கொண்டாடாநிற்குமென்றபடி. [illegible]

என்- என்னுடைய, ஆர்- அவனுக்கு போக்யமான, உயிர்- ஆத்மாவானது, கார்க்கரை— அவனெழுந் தருளியிருக்கிற திருக்கார்க்கரையை, ஏத்தும- அவனைக்காணவேணு மென்னுமாசையாலே ஸ்தோத்ரியாநிற்கும், அதனுள்- அதுகளுள்ளே நிற்கிற, கண்ணனென்னும்- க்ருஷ்ணா? என்றழையாநிற்கும், வேட்கை நோய்- அபிநிவேச வ்யாதியானது, நோய்- வ்யாதி, கூர- கூரும்படி, வளர்க்கும்படி யென்கை. நினைந்து- அவனை ஸ்மரித்து, கரைந்து- சிதிலமாய், உகும்- நீராயுருகாநிற்கும், இப்படி யாசைப்பட்டவாறே யிருக்குமவகாரமாக அவனமப்போலேவந்து ஸாக்ஷாத்தாலே யநுபவிக்கவும் போவதினன்கிறார்மேல். ஆட்கொள்வானொத்து- என்னை யடிமைசெய்வித்துக் கொள்ளுகிறவனுக்கு ஸத்ருசனாய், என்னைக்கொண்டு மேஷியான அடிமை செய்வித்துக் கொள்ளுகிறவனைப்போலே வந்தென்றபடி என்னுயிருண்ட- என்னுதாவைத்தனக்கு போக்யமாக வநுபவித்தவனான, மாயனால்- ஆச்சர்யசேஷ்டிதனாலே, இது க்ருத்ரிமமென்று தோற்றாதபடி யிருக்கிற வ்யாபாரங்களாலே யென்றபடி, கோளுண்டு- கொள்ளப்படுவதை யநுபவித்து, அநுபவிக்கப்படுகை யைப் பெற்றேனென்றபடி. கோட்குறைபட்டது- கொள்ளுகையிலே குறைப்பட்டது யாதொன்றாக ஸாஜித்து,

மூ—கோளுண்டானன்றிவந்தென்னுயிர்தானுண்டான்* நாளுநாள்வந்தென்னைமுற்றவுந்தானுண்டான்* காள
நீர்மேகத்தென்காட்கரையென்னப்பற்கு* ஆளன்றேபட்டதென்னாருயிர்பட்டதே* ॥௮॥
ஆருயிர்பட்டதெனதுயிர்பட்டது* பேரிதழ்தாமரைக்கட்கனிவாயதோர்* காரெழில்மேகத்தென்காட்கரைக்

ஆ—(கோளுண்டான்) இப்படியென்னுயிரை ஸாத்மிப்பித்த பின்னையுமபூஜிபாதானுப் வந்து போஜிக்கும், இப்படி நாளுநாளும்வந்து என்னை போஜித்தருளினன், நான் தனக்கடிமையானவித்தனையன்றோ, என்னையிங்ஙனேபடுத்தவேணுமோவென்கிறார். ॥௮॥

(ஆருயிர்) அவன் உம்முடையதிறத்தில் விசேஷமாகச்செய்ததுண்டோ தன்னோடுபரியாறுவாரை யெல்லாரையுமப்படியன்றோபடுத்துவதுஎன்னில்; அவனால் நானபட்டபாடு திருநாட்டிலுள்ளார்தாம்பட்டாரோ,

இ—தாவுனதில்லையென்கிறாரென்றிப்பாட்டுக்கு ஸ்யாநஸங்கதியும் ஸூசிதையாயிற்று. ॥௯॥

எட்டாம்பாட்டு

ஸ்யஸோதத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இப்படியித்யாதியால்) ஆளன்றேபட்டதென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நான்தனக்கித்யாதியால்) என்னாருயிர்பட்டதென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (என்னையிங்ஙனேயித்யாதியால்) இத்தால் நாள்தோறுமென்னை அநுபவியாநின்றாலும் பெறாப்பேறுபெற்றாப்போலே போஜிக்கிறவிவனுடைய ப்ரணயித்வமொன்றும் பொறுக்கமாட்டுகிறிலேனென்கிறாரென்று ஸங்கதியுஞ்சொல்லிற்றாயிற்று. ॥அ॥

ஒன்பதாம்பாட்டு

ஸௌசீல்யஸ்வாபாவ்யகாரணத்திலே 'ஆருயிர்பட்டதெனதுயிர்பட்ட' தென்று ஸ்வாபாவநம்பண்ணுகைக்கு ஸங்கதமன்றோவென்ன விதுக்குத் தாத்பர்யஞ்சொல்லுகைக்காக அவதாரிப்பிக்கிறார் (அவனித்யாதியால்) ஸ்யஸோதத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அவனால்நானித்யாதியால்) மேல் வாக்யத்துக்குத்

மூ—பட்டதன்றிக்கே யிராநின்றதென்றபடி. அவனிதை யநுபவித்ததும் பின்னையும் அபூர்ணமாக அநுபவியாதாரைப்போலே த்ருஷ்ணனாயிராநின்றானென்று தாத்பர்யம். ॥௭॥

கோளுண்டானன்றிவந்து- கொள்ளையுண்டானன்றியேவந்து, அநுபவத்தையொருங்காலும் பெற்றவனல்லாதவனாய் வந்ததென்றபடி. தானென்னையொருக்காலும அநுபவித்தறியாதே அபூர்வமாகவநுபவிக்கப்பெற்றாப்போலே வந்ததென்கை. என்னுயிர்- என்னாத்மாவை, தான்- ஸர்வஜ்ஞனான தான், உண்டான்- அநுபவித்தான், நாளுநாள்வந்து- இதுதானொருநாளன்றியே நாள்தோறும்வந்து, அவனுடைய அப்பொழுதைக்கப்பொழுதென்னாராவமுதம் இருக்கும்படி யிதுவென்றுகருத்து. என்னை- நிரதிசயபோக்யனானவென்னை, முற்றவும்- க்ருத்ஸ்நத்தையும், என்ஸ்வரூபத்தோடு குணங்களோடு சரீரத்தோடு வாசியற வெல்லாவற்றையுமென்றபடி. தானுண்டான்- ஸ்வயம்போஜித்தான், தன்பேறாகவே யநுபவித்தானென்றபடி. காளநீர்மேக- காலவர்ணமாய் ஜலபூர்ணமான, மேகம்போலிருக்கிறவனான, தென்காட்கரையென்னப்பற்கு- அழகிய திருக்காட்கரையில்வஸிக்கிற வென்னுடைய நிருபாதிகஸம்பந்தியான ஸ்வாமிக்கு, ஆளன்றேபட்டது- அடிமையன்றோபுக்கது, அன்றேயென்றது- அன்றோவென்றபடி. அடிமைபுகுந்ததத்தனை போக்கி ராவணாதிகளைப்போலே யெதிரம்புகோத்ததோவென்றபடி. என்னாருயிர்பட்டதே- என்னுடைய ஸ்வரூபமான வாத்மாபட்டதென்னவாச்சர்யம், பட்டதேயென்கிறவிடத்தில ஸாரவிசேஷத்தாலே விஸ்மயம் விவக்ஷிதம், இப்படியடிமைபுக்க விவ்வாத்மாவை யித்தனைபடுத்தவேணுமோ, ஸர்வமும்பொறுக்கலாம் இந்தப்ராணவத்தம் படுத்துகிறபாடொன்றும் பொறுக்கமுடிகிறதில்லையென்றுகருத்து. ॥அ॥

பேரிதழ்- பெரியவிதழையுடைத்தான, இதழ்- தளம், ஸங்க்ஷேபத்தாலே விசாலதளஸாலியானவென்றபடி. தாமரைக்கண்- தாமரைஸாத்ருஶ்யம்போலேயிருக்கிற கண்களையுடைத்தான, கண்ணென்கிறவிடத்தில் ஸமயிநீல டகாரலோபம். கனிவாயது- கனிபோலேயிருக்கிற வாயையுடைத்தான, கனி- பழம், பிம்பபலஸாம்யமானவென்றபடி. வாயையுடைத்தானது- வாயது, ஓர்- லோகவிலக்ஷணமான, சமுதாயவைலக்ஷண்யத்தைச்சொல்லுகிறபடி. காரெழில்- கறுத்தவெழிலையுடைத்தான, எழில்- ஔஜ்ஜ்வல்யம், மேகம்போலேயிருக்கிற நீலமேகஶ்யாமளனை யென்றபடி. தென்காட்கரை- அழகிய திருக்காட்கரையை

மூ— கோயில்கொள்* சீரெழில்நாற்றடந்தோட் டெய்வவாரிக்கே* ௯

வாரிக்கொண்டுன்னை விழுங்குவன் காணிலென்* ஆர்வுற்றவென்னையொழியவென்னின்முன்னம்* பாரித்துத் தானென்னை முற்றப்பருகினான்*

ஆ— தனக்கென்ன குறையுண்டாயிப்படிச்செய்தருளினானென்கிறார். ௯௰

(வாரிக்கொண்டு) "நீர் தாமவனை ஸ்பர்சியாதே உம்மை ஸ்பர்சிக்கக்கொடுத்துக்கொண்டிருப்பானேன்" என்னில்? உன்னைக்காணில் வாரிக்கொண்டுவிழுங்குவன் என்று நான் மநோரதித்துக்கொண்டிருக்க எனக்குத்தன்னை

இ— தாத்பர்யமருளிச்செய்கிறார் (தனக்கித்யாதியால) என்னகுறையென்றது— அழகிலகுறையோ வொ ஶ்வர்யத்திலகுறையோவென்றபடி. ஸர்வாதிஶயித ஸௌந்தர்யமான ஸ்வரூபவிலேயிறே யெல்லாருமாஸக்திபண்ணுவது, ஸர்வைஶ்வர்யஸம்ருத்தாலும் தானேயதிஶயிதனாயிருக்க வென்பக்கலித்தனை யாஸக்திபண்ணுவதென்னவாஶ்சர்யமென்கிறாரென்றகருத்து. ௯௰

✱ பத்தாம்பாட்டு. ✱

அவனுடைய வஸிநிவேஶாதிஶயத்தைச் சொல்லவந்த விப்ரகரணத்திலே 'வாரிக்கொண்டு' இத்யாதியாலே தம்முடைய வஸிநிவேஶத்தைச்சொல்லுகை யஸம்பந்தமன்றோவென்ன வஸ்தாபிக்கிறார் (நீர்தாமித்யாதியால்) ஆர்வுற்றவென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (மநோரதித்துக்கொண்டிருக்கவென்று) என்னையொழியவென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (எனக்குத்தன்னையித்யாதியால்) காரொக்கு

ப— கோயில்கொள்- கோயிலாகக்கொண்டவனை, தனக்கு நித்யவாஸஸ்தாநமாகவுடையவனையென்றபடி. சீரெழில்- சீரையுமெழிலையுமுடையவனை, சீர்- ஸ்ரீ; வீரஸ்ரீயையும் ஸௌந்தர்யத்தையுமுடையவனை யென்றபடி. நால்— ஒருகல்பதருவுக்கு நாலுஶாகைகளிருக்குமப்போலே நாலாயிருக்கிற, தடம்- பெரியதுகளான, "சதுர்பாஹு" "ஶாகைஸ்வரிவோகா:" என்கிறபடியே வ்ருத்தாயதஸம்ஹதஸம்ஹநந ஸம்ஹீநங்களானவென்றபடி. தோள்- புஜங்களையுடையவனை, தெய்வவாரிக்கு- தெய்வஸமுத்ரத்துக்கு, வாரி- ஸமுத்ரம், ப்ராக்ருதஸந்நங்களுக்கு ஸமுத்ரம்போலே தெய்வங்களுக்கு உபஜீவ்யமான ஸமுத்ரமான வாரிக்காயென்றபடி. வாரிக்கு ஸாம்யமாயென்கை. எனதுயிர்பட்டது— என்னாத்மா பட்டபாடுகளை, ஆருயிர்பட்டது- ஆருடையவாத்மாபட்டது, நித்யஸூரிகளுடைய வாத்மாதான் பட்டதோவென்றபடி. என்னாத்மாவானது அவனாலே ஸ்பர்சிக்கப்படுகிறதென்னுமிடத்தே யவனுடைய ஸர்வாங்கஸௌந்தர்யஸம்பத்திகளைக்கொண்டு ஆநந்தாதிஶயத்தாலே ஶோகமோஹாதிகளையடைந்து வ்யாகுலப்பட்டாப்போலே நித்யஸூரிகளுடைய வாத்மாவும் பட்டதில்லையென்றபடி. நவோமேஷமான தாருண்ய நாயகஶ்ருங்காரத்திலே ஸாக்ஷாத்விகாரங்கள் ப்ரளயநாயகிபிறகாட்டிலும் விஞ்சியிருக்குமாப்போலே அநாதிஸம்ஸாரியாயிருந்த விவருக்கு வாஸுதேவஸம்ஶ்லேஷம் புதியதாய்வந்ததாகையாலே ரஸாதிஶயக்ருதமான வெயாகுலீ நித்யஸூரிகளிற்காட்டிலும் விஞ்சியிருக்குமென்று நஞ்சீயாருளிச்செய்தார். ௯௰

காணில்- காணப்பெற்றேனாகில், உன்னை- ஸர்வஶேஷியானவுன்னை, வாரிக்கொண்டு- பிறர்க்கொன்றும் ஶேஷியாதபடி ஸ்ரவித்துக்கொண்டு, விழுங்குவன்என்று- கபளீகரிப்பனென்று, ஸநகஶேஷதயாதிகளுக் கவகாஶமில்லையாம்படி "ஸஹஸம்ஸர்வம்கரிஷ்யாமி" என்கிறபடியே நானே ஸர்வவிதகைங்கர்யங்களையும்பண்ணி யநுபவிக்கவேணுமென்றென்றபடி. ஆர்வு- அபிநிவேஶத்தை, உற்ற- அடைந்தவனை, என்னையொழிய என்னைத்தவிர, எனக்குத்தன்னை ஸ்பர்சிக்கவொண்ணாதபடியாக வென்றபடி. என்னில்முன்னம்- தன்னை ஸ்பர்சிக்கவுத்யோகிக்கிற வென்னிலும்முன்னமே, பாரித்து- ஸாபித்து. அபிஸம்ரம்பங்களுடனென்றபடி. தான்- விஹாராய் ஸங்கல்பனதான், என்னை- கணாவாய் ஸங்கல்பனவென்னை, முற்ற- காகல்யேந, நிஶ்ஶேஷமாகவென்றபடி. ரஸாதிஶயத்தாலே பிரேமாவேஶமாகையாலே இவ்வாத்மாவையுண்டுபோயிற்றென்னும்படியாக வென்றபடி. பருகினான்- பானம்பண்ணினான், "வஸாஸாம்ஶேஷம் ஸர்வாந்நாத்யம்விஶவிஷ்ய" என்கிறபடியே தன்ஸ்நேஹவேஷிதங்களைக்காட்டி யென்னை நீராயுருக்கிப் பானம்பண்ணினானென்றபடி. என்னை முற்றவும் தானுண்டானென்று அவனுண்டபடிசொன்னாரிறே. உண்டவனுக்கு தண்ணீருமவேண்டியதாகையால் தண்ணீர்குடித்தபடி சொன்னாரிதில், இத்தாலவனுடைய உண்ணுஞ்சோறு

மூ—காரொக்குங்காட்கரையப்பன் கடியனே* ।௰॥

கடியனாய்க்கஞ்சனைக்கொன்றபிரான்றன்னைக் கொடிமதிட்டென்குருகூர்ச்சடகோபன்சொல்* வடிவமை யாயிரத்திப்பத்தினாற் சன்ம* முடிவெய்தி நாசங்கண்டீர்க ளெங்கானலே* ॥கக॥

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஆ—ஸாத்மிக்கவொண்ணாதபடி யென்னில் முன்னம்பாரித்துத்தானென்னை முற்றப்பருகினான், தன்னாலே விளைபக்கடவ ஸமஸ்தத்தினளவும்பாராதே ஸர்வேஶ்வரனான தேவும் தன்னளவிலேவஞ்சித்தாப்போலே யென்னுடைய சிறுமைபாராதே யென்னளவிலிங்ஙனே க்ருதார்த்தமாகச் செய்தருளவேணுமோவென்கிறார். ।௰।

(கடியனாய்) ஆஶ்ரிதர்க்காக வேதேனுஞ்செய்யிலு மிங்ஙனே யதார்த்தமாகச்செய்தருளும் ஸ்வபாவனை யிருந்தவனைச்சொன்னவிப்பத்து, ஸமஸ்தஸம்பந்திகளாயிரான நம்முடைய ஸம்ஸாரத்தை ஸகாரணமாகப் போக்குமென்கிறார். ॥கக॥

திருக்குருகைப்பிரான்பிள்ளான் திருவடிகளே சரணம்.

இ—மென்கிற தேவஸ்வபாவத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (தன்னாலேயித்யாதியால்) ।௰

✳ நிகமனம். ✳

ஸ்வபாவத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஆஶ்ரிதர்க்காகவித்யாதியால்) சன்மம்முடிவெய்தி யித்யாதிக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸமஸ்தேத்யாதியால்) ॥கக॥

ஈ—பருகுநீர் இருக்கும்படி சொல்லிற்றாயிற்று. காரொக்கும்- தேவத்துக்கு ஸத்ருஶமாகாநின்றுள்ள, காரென்றுதேவம், தேவம்போலே ப்ரத்யுபகாரத்தைப்பாராதே க்ருதார்த்தமாக்குமவனைக ஸ்வபாவனையென்றபடி. காட்கரையப்பன்- திருக்காட்கரையில் நித்யவாஸம்பண்ணுமவன், கடியன்- ஶீக்ரகாரீ. ஸ்வார்த்தத்தில்தானே முந்திக்கொள்ளுமவனென்றபடி. ॥௰॥

கடியனாய்- ஶீக்ரகாரியாய், கம்ஸனுடைய ப்ரயத்னத்திற்காட்டில் முற்பட ஸம்ஹரித்தவனென்றபடி. கஞ்சனை- கம்ஸனை, கொன்ற- ஸம்ஹரித்தவனை, பிரான்றன்னை- அத்தாலே ஆஶ்ரிதருக்கு உபகாரகனானவனை, தன்னையென்று ஸ்வாமித்வம். கொடிமதிள்- த்வஜவிராஜித ப்ராகாரஶாலியான, கொடி- த்வஜம், உபலக்ஷணமிது. தென்குருகூர்ச்சடகோபன்- அழகிய திருநகரியையுடையவரான வாழ்வார், திருநகரிக்கு நிர்வாஹகரான வாழ்வாரென்றபடி. சொல்- சொன்னதான, வடிவமை- அழகுவடிவமைமாயிருக்கிற, வடிவு- அழகு. அமைவு- வடிவிக்கு, ஸங்க்ரஹகாரமொழிபோன்ற வென்றபடி. ஆயிரத்துள்- ஸஹஸ்ரத்தில், இப்பத்து- இந்தப்பத்தினாலே, சன்மம்- ஜந்மமானது, ஜநநமரணங்களையானதென்றபடி. முடிவு- ஸமாப்தியை, எய்தி- அடைந்து, வாஞ்ஜநநம்வராமலென்றபடி. எங்கானல்- நம்முடைய த்ருஷ்டத்வேஷ்யான து, கானல்- த்ருஷ்டத்வேஷ், நம்முடைய ஸாவதான்ய ப்ரத்யக்ஷவிஷயமான ஸம்ஸாரமானதென்றபடி. எம்மென்று ஸம்பந்திகளைக்கூட்டிச்சொல்லுகிறது. இத்திருவாய்மொழிகற்பாரை ஸம்பந்திகளாக ஸ்வீகரித்துநிர்தேஶித்தபடி. நாசங்கண்டீர்கள்- நாஶமாம்கிடிகோள், நிஶ்ஶேஷமாக நசிக்கும் கிடிகோளென்றபடி. கண்டீர்களென்றாலே இதில்ஸம்ஶயமில்லையென்றபடி. ॥கக॥

✳ ஜ்ஞாநவைராக்யநிதாநமெனவயிஶ்ரீவேதாந்தாசார்யஜகதேஶிகாய நம:. ✳

ஶ்ரீ:.

த்ரமிடோபநிஷத்தாத்பர்யரத்நாவளி:.

(உருகுமால்நெஞ்சம்.)

ஆஶ்ரிதாகாதிஹந்தா பவித்தயா வாஞ்சனாத்மகர்மார

ஶக்யஸ்பர்ஶஸ்ருதிராஜமூர்த்தநாதயாஸ்யத்ரக்ஷகத்வாத் ।

ஔதார்யாதேர்விஶிஷ்டாதவிரவஸ்ஸதாம்ஸங்கநிவர்த்தஸம்ஹா

விஶ்ராந்தௌ நவமேரஹஸ்யஷ்டிஸம்ஜீவகஸ்வேஜ்ஞானப்ரஸாதம் ॥௬௦॥

(ஆஶ்ரிதாகாதிஹந்தா) மருவிபுமாயன்றன்- ஆஶ்ரிதவிரோதிகளை யுடையவனுக்கையாலும்,

ஸ்ரீ — ர்த்தா — (ஸவிலாஸஸ்மிதபாவ) தென் தார்க்கணியென்னப்பட — ஸவிலாஸஸ்மிதராகையாலும், (ஸதாநாத்மஸம்ருத்தா) என்னுயிராயென்னுயிருண்டான் — ஸதாநாத்மாவாயிருக்கையாலும், (ஸமஸ்தாஸக்தஸம்ருத்த) தன்னுளனைத் துலகும்நிற்கநெறிமையாற்றானுமவற்றுணிற்கும்பிரான் — ஸகலவஸ்துக்களுக்கும் தானாதாரமாய் அவற்றை யாதாரமுமாகவுடையனாய் இவ்வழிசர்வடநாஸமர்த்யாங்கனைகையாலும், (ஜலதகாந்திய) கருவளர்மேனி — கறுப்புவளராநிற்கையாலே நீலமேகம்போலேயிருக்கிற திருமேனியை யுடையவனாகையாலும், (ஸ்வநாகஷீரக்கவாச) என்கண்ணன்கள்வம் — கார்க்கரைமேத்துமத்தனுட் கண்ணுவென்றும் — ஆஸ்ரிதர்க்குஸுலபனுமாய் இவர்களுடைய ஹ்ருதயத்தை யபஹரிக்குமவனாகையாலும், (ஔதார்யபரிபூரிதவிஸ்த்ரதவிவ) காளநீர் மேகத்தென்கார்க்கரையென்னப்பற்கு — காலமேகம்வர்ஷிக்குமாப்போலே எல்லார்க்கு மபிமதங்களைவர்ஷிக்கும் ஔதார்யாதிஸயத்தை யுடையவனாகையாலும், ஆஸ்ரிதஸௌலப்யத்தாலே பேரிதழத்தாமரைக்கண்” என்று த்ருஷ்ட்யதராசாரணமான வைபவமிவைகளும் ஸம்ருதிக்கப்படுகிறது. (ஸவஸ்தாகாரக்ஷணதிவ்ய ஸம்ஹாத) என்னில்முன்னம்பாரித்து — ஸம்ஸாரிகளின் நாசனத்திலே யிவர்களைக்காட்டிலும் தானேமுன்னே பூரணனுமவனாகையாலும், எம்பெருமான் விஸ்வாரணத்துக்கஸமர்த்னென்று “உருகுமால்நெஞ்சம்” என்கிறதஸம்க த்திலே ஆழ்வார் ப்ரதிபாதித்தருளினரென்கிறார். ௧௦௬௩

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஒன்பதாம்பத்தில ஆறாந்திருவாய்மொழிமுற்றிற்று.

ஏழாந்திருவாய்மொழி.

மூ— எங்கானலகங்கழிவாய்இரைதேர்ந்திங்கினிதமருஞ்*

ஆ— (எங்கானல்) இந்தவஸ்தாவஸ்திதமான ஞானஸம்யாதஜநிதஸ்ம்ருதியானது மாறி ஸந்த்ராவ்ருத்தமே தலையெடுத்து கந்யாவஸ்தைத்தாலே தூதப்ரேஷணம்பண்ணுகிறார்.

ஏழாந்திருவாய்மொழி.

இ— இப்படி ஸந்தோஷராயிருக்கிறவாழ்வார் கந்யகைபரிதாவஸ்தையில்போலே இத்திருவாய்மொழியிலே தூதப்ரேஷணம்பண்ணுகை யுக்தமன்றோவென்ன வவதரிப்பிக்கிறார் (இந்தவஸ்தாவஸ்த்யாதியாவ) கீழ்த்திருவாய்மொழியில் விஷயாநுபவ ஞானஸ்மரணாதிசயத்தாலே த்ருப்திநடந்ததேயாகிலும் ஸம்ஸ்லேஷம் தலைக்கொண்டு ஸந்தோஷமாயிருந்ததாகையாலே யிப்போதும் ஸம்ஸ்லேஷாஸக்தரில்லாமையாலே பின்னையும் ஸந்தாபமே உஜ்ஜ்வலமாய்விட்டதாகையாலே மிகவுமார்த்தராகையாலே தூதப்ரேஷணம்பண்ணுகை ஸம்பவமென்றதாயிற்று. தூதப்ரேஷணம்பண்ணுகிறாரென்றது — வடிவையோர்த்தே ஸாரிஜீவித்தை யெம்பெருமானுக்கறிவிக்கிறாரென்றபடி. இத்தாலித்திருவாய்மொழிக்கு யுடைகலிவுஷயவிஷய ஸம்வித்பமென்கிற ஸம்வதனம் வ்யஞ்ஜநமென்றதாயிற்று. *

ஸ— எங்கானல் — எங்கள்கானலுடைய, கானல் — ஸமுத்ரதீரவநம், இங்கு மனைவ்யதிரஉத்யானவாரம். உங்களுக்குவயோமாஸமரம்படி எங்களுக்கொரு உத்யாநமுண்டாகப் பெற்றதேயென்றுகருத்து. அகம் — உள்ளில். இப்படியுள்ளே ஸம்ஸ்ரிதராய் வந்திருக்கும்படி யுங்களை ஸதாஸம்ஸமாகப் பெற்றோமேயென்று கருத்து. கழிவாய் — கழியினிடத்திலே, கழி — ஸமுத்ரநதிகளுடைய ஜலஸம்வாஸஸ்தாநவிசேஷம் — வாயென்று இடம். இரை — ஆஹாரத்தை, தேர்ந்து — தேடி, “ஸ்வதேஹாஸக்தஸம்கிதம்” என்கிறபடியே எங்கள் தேஹவிதரவிஷயங்களான வஸ்துக்களை நீங்கள் ஸ்வீகரிக்கவும் ஸாம்யம்பெற்றோமேயென்று கருத்து. இங்கு — இந்த ஸந்நிதிதேசத்திலே, தன் ஸௌந்தர்யத்தாலே யென் நெஞ்சை கவளீகரித்துக்கொண்டு என்னை விஸ்லேஷித்துப்போய் அநுவிடவேண்டும்படியாயிருக்கிற வவனைப்போலன்றிக்கே ஸந்நிஹிதராகப்பெற்றோமேயென்று கருத்து. இனிது — ஸுகமாக, நிர்ப்பயமாக வென்றபடி. க்ரியாவிசேஷணம். அமரும் — ப்ரதிஷ்டிதராயிருக்கிற என்பதுகல் ஸௌஹார்த்தத்தாலே இங்கே நித்யவாஸஸ்தரராயிருக்கிற

அ— செங்கால மடநாராய் திருமூழிக்களத் துறையும்* கொங்கார்பூந்துழாய்முடியெங்குடக் கூத்தர்க்கென் றூதாய்* நுங்கால்களென்றலைமேற் கெழுமீரோ நுமரோடே* ||௧||

ஆ— தன்னைப்பிரியில் நான்தரிக்கமாட்டாததொருபடி, தன்னழகாலும் தன்செயல்களாலும என்னைத்தோற்பித் தடிமையாக்கி என்னோடுகலந்த நளிப்போய் திருமூழிக்களத்திலே யிருந்தருளின வெம்பெருமானுக்கென் திறம் சொல்லவேணும், உங்களுக்கடிமையே நானிருக்கிறேன, என்று நாரைகளை யிரக்கிறாள் ௧௭

முதற்பாட்டு.

இ— கொங்கார்பூந்துழாய்முடி யென்குடக்கூத்தர்க்கென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (தன்னைப்பிரியில் த்ருஷியால்) அதில்தன்னழகாலுமென்றது- கொங்கார்பூந்துழாய்முடியென்கிறதற்குத் தாத்பர்யஞ்சொன்னபடி. தன்செயல்களாலுமென்றது- குடக்கூத்தர்க்கென்கிறதற்குத் தாத்பர்யஞ்சொன்னபடி. என்னைத் தோற்பித்தி த்ராஷியாகச்சொன்னது- எம்மென்கிறபதத்தில விவக்ஷிதார்த்தஞ்சொன்னபடி. என் தூதாயென் கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (என்திறஞ்சொல்லவேணுமென்று) திறம்- ப்ரகாரம், என்விரஹக்லேஶத் தையென்றபடி. ஶேஷீயவாக்யத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (உங்களுக்கடிமையாக) தன்னழகா லுமென்றதாலும் நாரைகளையென்றதாலும இப்பிராட்டி எம்பெருமானுடைய வழகிலேயீடுபட்டு அவனோடே ஸம்ஶ்லேஷித்து விஶ்லேஷித்தவளாய், விரஹவ்யஸநிநியாய், தன்னாற்றாமையாலே ஸ்வஸ்தாநத்திலநின்று ஸமீ பஸ்தலதேஶத்திலேசென்று அங்கேயிருந்தன சிலபக்ஷிகளைக்கண்டவளாய், தன்னுடையஸகிகளும் தன் னோடு ஸமாநதுக்கிகளாகையால் அவர்கள் காரியக்ஷமரல்லாமையாலும், தான் வ்யஸநாதிஶயத்தா லறிவழிந்திருக்கையாலே 'தான்சொல்லுகிறவார்த்தையை அவையறியா' என்று விவேகிக்கமாட்டாமையா லும், அவற்றைத் தூதுபோகப் ப்ரார்த்திக்கிறாளென்று கருத்து. தன்னைப்பிரியில் த்ருஷியாலே விஶ்லேஷத்தி லென்னை யரித்திருக்கவொட்டாத ஸௌந்தர்யத்தையுடையவனென்கையாலே ஸ்வதேஶத்தில் அஞ்சிறை யமடநாரையில் ஔதார்யஸாம்யம பற்றாசாகவும், வைகல்பூங்கழிவாயில் ஶேஷித்வஸம்பந்தம் பற்றாசாகவும்,

ஈ— வென்றபடி. செங்கால- சிவந்தகாலே யுடையீர்களான, என்முடியிலிருக்கும் காலபோலே யிராநின்றது நான்தலையிலே வைத்துக்கொள்ளப்புகுகிற காலுமென்று கருத்து. மடநாராய்- முக்தங்களான நாரைகாள்?, நாராய் யென்று ஜாத்யேகவசநம். திருமூழிக்களத்து- திருமூழிக்களமென்கிற திவ்யநகரத்திலே, உறையும்- வஸி யாநிற்கிறவனான, தூதுபோவார்க்கு ஸுலபனும்படி, ஸந்நிஹிதனாயிருக்கையாலே. வாக்யத்திலும் ஏற ஞ்சொல்லுகிறபடி. கொங்கார்- ஸௌரபமயமான, கொங்கு- ஸௌரபம, பூம்- தர்ஶநீயமான துழாய் முடி- திருத்துழாயைத் திருமுடியிலேயுடையவரான, எங்குடக்கூத்தர்க்கு- என்னுடைய குடக்கூத்தர்க்கு, எம்மென்று ஆத்மநிர்வசநம். இங்கு பஹுவசநாபிப்ராயமாவது ஸௌலப்யாதிஶயத்தால தன்னுடைய திவ்யாலங்காராதி ஸௌந்தர்யங்களாலும் விசித்ரசேஷ்டிதங்களாலுமென்னை வஶீகரித்தவனான வென்றபடி. குடக்கூத்தாவது- இடையர பாலகுடத்தைத் தலையிலேவைத்துக்கொண்டு ஆடும் ந்ருத்தவிஶேஷம், குடக் கூத்துடையவர்- குடக்கூத்தர். விசித்ரசேஷ்டிதங்களையுடைய க்ருஷ்ணனுக்கென்றபடி. என் தூதாய்- என்னு டைய தூதிலேயாய், தூது- உக்திகருத்யம், உக்தமான உக்திகருத்யத்திலே அபிகரித்தென்றபடி. இதுசெய்கிறோமென் றங்கீகரித்தென்றபடி. இதுக்குக்கெழுமீரோவென்கிறத்தோடே அந்வயம். அங்கீகா ரமாத்ரத்தாலே நானுங்களுக்கு ஸ்வமமாகையாலே நீங்களெனக்கு நித்யஸேவ்யர்களென்று கருத்து. நுமரோடே- பக்ஷீயர்களோடே, உங்களுடைய ஸாரஸாதிகளோடேகூடவென்றபடி. இங்கு ஸா பதேஶத்தில், "ஶ்ரவணவ்யாபாரவ்யாவ்ருத்தி:" "ஶ்ரவணவ்யாபாரவ்யாவ்ருத்தி:" "ஶாஸ்த்ரார்த்த ஸம்ஶோதநபரா:" என்றது விவக்ஷிதம். நுங்கால்கள்- எங்களுக்குவகரிஷ்டரான வுங்களுடையதிருவடி களை, என்தலைமேல்- உங்களையாஶ்ரயித்து உஜ்ஜீவிக்கவிருக்கிற வென்னுடைய ஸ்வதத்ரமாத்திலே, தலையென்று உத்தமாங்கவ்யபதேஶம், ஸமஷ்டிஷயத்தில் ஸம்ஸாரானவர்களுடைய ஸாரம்ஸோஜத்தை ஸம்பந்தப்பெ றுகிறதென்னும் ப்ரீதியாலே தன்ஶிரஸ்ஸைக்கொண்டாடுகிறபடி. அழகியமயிர்முடியுடையார் பூச்சூடவாசைப் படுமாப்போலே ப்ரீதியாலேசொல்லுகிறபடி. கெழுமீரோ- சேரீர்களோ, கெழுமை- சேர்க்கை, சேர்த்தருள வேணுமென்றபடி. வையுங்கோளென்னாதே சேருங்கோளென்றத்தாலே யென்தலையுமுங்கள்திருவடிகளும்

மூ—நுமரோடும்பிரியாதேநீருநுஞ்சேவலுமாய்* அமர்காதற்குருகினங்காளணிமூழிக்களத்துறையு* மெமராலும்
பழிப்புண்டிங்கென்றம்மாலிழிப்புண்டு* தமரோடங்குறைவார்க்குத்தக்கிலமேகேளீரே* ॥௨॥

ஆ—(நுமரோடும்) 'அவருக்குச்சொல்லும் ஸந்தேசத்தைக்கேளுங்கோள்' என்று குருகுகளையழைத்தவ
த்து நடுவேதன்னைவாலே 'தம்மாலுபேக்ஷிதையாய் என்பந்துக்களாலும் கர்ஹிதையாயிங்கேயிருக்
கு மிவ்விருப்பென்செய்ய? விவ்விருப்பில் முடிகைபோதன்று' என்று தம்மிலேசொல்லி யின்னதாய், பின்னையுமவ
ஹனை விடமாட்டாமையாலே 'தாமுந்தம் வாஜனங்களுமாயிருந்தவிருப்பைக் காண்கைக்கு நானர்ஹதை
யாயிழந்துபோமித்தனையோ' என்று கேளீரென்றுகொண்டு தான்சொல்லப்புக்கவார்த்தையை யவற்றுக்குச்
சொல்லி முடிக்கிறாள். ॥௨॥

இ—பொன்னுலகாளீரிலே ஸுஹ்ருத்ரோடைகாஸ்யம் பற்றாசாகவும், தூதுவிட்டவர் இத்திருவாய்மொழியிலே
தன்னழகைக்கண்டநுபவித்தவர்கள் விஶ்லேஷத்தில் தரிக்கமாட்டுவர்களோ' என்று அறிவிக்கவே எழுந்த
ருளும் என்றிப்படி ஸாரூப்யம்பற்றாசாகத் தூதுவிடுகிறாளென்று ஸங்க்ரஹிக்கமாயிற்று. இப்படி இந்நாலுதி
ருவாய்மொழிகளுக்குமுள்ள அவாந்தரவிஶேஷங்களை "ஸ்வாபதேஸாஹ்வாது விஶ்லேஷம்பாரவஶ்யத
ஏகாந்த்யஸாரூப்ய ஸௌஹார்த்யகாத்ரகு:" என்று உரைக்காரர் ஸங்க்ரஹித்தருளினார். ॥௩॥

✳ இரண்டாம்பாட்டு. ✳

வக்ஷ்யமாணத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அவருக்கித்யாதியால்) கீழ்நாரைகளைப் ப்ரார்
த்தித்தவள் அவற்றுக்குச் சொல்லவேண்டும்வார்த்தையை வ்யஸநாதிஶயத்தாலே வந்தகலக்கத்தாலே
குருகுகளைநோக்கிச்சொல்லுகிறாளென்று ஸமுதாயார்த்தம். த்ருதீயபாதத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்
கிறார் (நடுவேயித்யாதியால்) தன்னைவாலேயென்கிறதற்கு இன்னதாயென்கிறத்தோடே அந்வயம். என்செய்யவெ
ன்கிறதற்குக்கீழோடேயந்வயம். இதென்னப்ரயோஜநத்தை ஸாதிக்கைக்காக விருக்கிறதென்றபடி. இன்னதாய்த்
திவிக்ஷண்ணையாய், சதுர்த்தபாதத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (பின்னையுமித்யாதியால்) மாட்டாமை
யாலேயென்கிறதற்குச் சொல்லியென்கிறத்தோடே அந்வயம். ॥௨॥

ஈ— ப்ரீதிநக்கை யிவையிரண்டுக்கும் ஸாதாரணதர்மமென்றுகருத்து. ஓகாரத்தால் இதுஶேஷிக
ளுக்கு ஸ்வரூபமன்றோ? இது ப்ரார்த்திக்கவேணுமோ வென்றபடி. ॥௩॥

நுமரோடும் ஸ்வகீயரோடும், உங்கள்பந்துக்களோடுமென்றபடி. ஶப்தம் உத்தரவாக்யத்தோ
டே ஸம்பந்திக்கும். பந்துக்களோடும்பிரியாதே தம்பதிகளாக ஸம்ஶ்லேஷித்துமிருக்கிறவென்று வாக்ய
பதார்த்தம். பிரியாதே- விஶ்லேஷியாதே, நீருநும்சேவலுமாய்- பதிவ்ரதாபதிகளான நீ
ரும் ஸ்வோசிதபதிகளான பதிகளுமாய், சேவல்- ஸாஹசர்யம், அமர்- அமர்ந்திருக்கிறவை
யான, விஶ்லேஷமின்றிக்கே ஸம்ஶ்லேஷித்திருக்கிறவையான வென்றபடி. இப்படி ஸர்வதாஸம்ஶ்லேஷஸம்ப
த்ரான நீங்கள் விஶ்லேஷதுக்கவிதையான வென்துக்கங்களைப் போக்கவேண்டாவோ வென்றுகருத்து.
காதல்குருகினங்காள்- காதலையுடைய குருகின்ஸமூஹங்காள்?, காதல்- ப்ரேமம், காதல்குருகென்று ஸமா
ஸவாக்யவிவக்ஷை. குருகு- நாரையிலேஜாதிவிஶேஷம், இனம்- ஸமூஹம், ஸர்வஸ்வாமிநீகள்
ளான குருகுஸமூஹங்காளென்றபடி. அணி- அழகியதான, மூழிக்களத்து- திருமூழிக்களமென்கிற
ப— மணித்தடத்தடி— நீலரத்நதடாகம்போலேயிருக்கிற திருவடிகளையுடையவனை, மணியென்று நீலரத்நம், தடம்போலிருக்குமது தடத்து, தடத்தடியென்று ஸமாஸம், நீலரத்நதடாகம்போலே ஸந்தாபஹரங்க ளான திருவடிகளையுடையவனை வென்றபடி. மலர்க்கண்கள்- விகஸிதபத்மஸத்ருச நயநங்களையுடையவ னை, பவளச்செவ்வாய்- ப்ரவாளாருண திவ்யாதரமாயிருப்பான, அணிக்கொள்- ஆபரணங்களைக்கொண்டி ருக்கிற, அணி- ஆபரணம், கடகாங்கதாதிதிவ்யாபரணபூஷிதங்களான வென்றபடி. நால் சதுஸ்ஸங்க்யங்களான, தடந்தோள்- மதகஜசுண்டாஸமங்கள்போலே பெரியவையான புஜங்களையுடையவனை, தெய் வம்- தெய்வமான, இவ்வழகுகளாலே த்யாதநனைவென்றபடி. தைவயாநமார்க்கத்திலே பவன்வழித் துணையாக நாம்போம்பொழுது ப்ரஸந்நமானவடிவும் தன்னுகப்புத்தோற்றும்படியான வீக்ஷணவிசங்க ளையும் “நாஸாரயதிஸாத்ராஸம் வாஹநப்ராஸவ்யஸம்ஸ்ரிதா” என்கிறபடியே வழியிலேநமக்கவாஸ்ரயமாக க்கடவ நாலுதிருத்தோள்களையு முடையவனைவென்று பட்டார்த்யம். அசுரரை- ஆச்ரிதவிரோதிகளா னவஸுரர்களை, என்றும்- ஸர்வகாலத்திலும், ஸுரர் ஆச்ரிதர்க்கு ஆச்ரிதரக்ஷித்தபோதெல்லாமென்ற படி. துணிக்கும்- வம்ஸிக்குமவனை, வல் வலியனை, பலிஷ்டனைவென்றபடி. அரட்டன்- மிடுக்கன், உ ஷாவீரனென்றபடி. நமக்கவிரோதிநாமவிரோதிகளையெல்லாம் வசீகரிக்க வல்லவனென்று தா த்பர்யம். வசீஷ்டம்- மதநகாஸாரம், உறை- நித்யவாஸம்பண்ணுகிறஸ்தலமான, நணித்து- நணுகினதா ன, ப்ரத்யாஸந்நமானவென்றபடி, ஸ்ரீவைகுண்டம்போலன்றிக்கே ஸர்வஸுலபமானவென்கை நம்முடைய நல்லரண்- நமக்கு நல்லப்ராப்யமான, அரண்- ஸாக்ஷிதஸ்தாநம், பொழில்திருமோகூர்- உத்யாநங்களை யுடைத்தான திருமோகூரை- நாம்- அவனைவழித்துணையாக ஸேவிக்கிறநாம், அடைந்தனமே- அடையப் பெற்றோமே. ||கூ||

என்றும்- ஸர்வகாலத்திலும், இந்த உகாரஸ்ய ஸம்பந்தாயாம்ஸெ ஷஷ்டீ, நமக்கு- பரமபோகார்த்தி களான நமக்காக, நாமடைந்த- இத்தையடைகைக்கு ஸாஹ்யம்பண்ணி நாமடைந்ததான, நல்லரண்— ப்ராப்யபூமி, திருமோகூரிதிஷேஷ: கீழ்ச்சொன்னதை வீப்ஸாவஸ்யத்தாலே யநுவதித்தபடி. [illegible] பூர்வர்களான தேவர்கள், தங்களாபத்துக்கு பரமபோக்யங்களை நிதாநங்களை வஸ்யவஸித்தவர்கள

மூ—தீமைசெய்யும்வல்லசுரரையஞ்சிச்சென்றடைந்தால்* காமரூபங்கொண்டெழுந்தளிப்பான்திருமோகூர்* நாமமேநவின்றெண்ணுமினேத்துமினமர்காள்* ||௰||

ஏத்துமினமர்காளென்றுதான்குடமாடு* கூத்தனைக் குருகூர்ச்சடகோபன் குற்றேவல்கள்* வாய்த்தவாயிரத்துளிவைவண்டிருமோகூர்க்* கீத்தபத்திவையேத்தவல்லார்க்கிடர்கெடுமே* ||கக||

ஆ—விரோதிகளைநிரஸித்து ரக்ஷித்தருளுமவனெழுந்தருளியிருந்த திருமோகூரினுடைய திருநாமத்தைச் சொல்லி யவ்வூரை யேத்துங்கோளென்கிறார். ||௰||

(ஏத்துமின்) என்னுடைய திவ்யமானவெஷ்டிதங்களை யுகந்திருப்பாரெல்லாம் வந்தேத்திவாழுங்கோளென்று தான்குடமாடுகூத்தனைக் குருகூர்ச்சடகோபன்சொன்ன வாயிரத்திலித் திருமோகூரைச்சொன்ன வித்திருவாய்மொழியைக்கொண்டவ்வூரை யேத்துங்கோளென்கிறார். ||கக||

திருக்குருகைப்பிரான்பிள்ளான்திருவடிகளேசரணம்.

இ—விக்ருதியால்) ஆஸ்ரிதஸௌலப்யத்தாலே நல்லமரர்சென்றடைந்தால என்கிறதின்தாத்பர்யமும் ஐஸ்வர்யநாமமானவடியென்றத்தாலே காருண்யஸௌசீல்யமும் விரோதிஸ்வபத்தாலே தீமையிக்ருதியினுடைய தாத்பர்யமும் சொல்லிற்றாயிற்று. (திருநாமத்தையிக்ருதியால்) கீழேயவ்வூரைவந்து ஸேவியுங்கோளென்றவரிப்பாட்டிலேயதற்கு ஸக்தியில்லாதார் அதின்திருநாமத்தைச்சொல்லிக்கொண்டு ஸ்துதியுங்கோளென்கிறாரென்றுஸம்கதிஸூசிதை. ||௰||

✳ நிகமனம். ✳

எமர்காளென்பதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (என்னுடையவிக்ருதியால்) ஶேஷம்ஸ்பஷ்டம். ||கக||

ஸ—தைவர்களென்றபடி. இதுக்கு அடைந்தாலென்கிறத்தோடே யந்வயம். தீமைசெய்யும்- அஶ்ரேயஸ்ஸைச் செய்கிறவர்களான, வீர்யாதிஶயரான வென்றபடி. வல்- வலியரான, அசுரரையஞ்சி- அஸுரர்களுக்கு பயப்பட்டென்றபடி. சென்று- அவனிருந்தவிடத்திலேபோய், அடைந்தால்- ஶரணம்புக்கால், காமரூபங்கொண்டு- அவர்களுடைய விஷாநுரூபமான விக்ரஹத்தை பரிக்ரஹித்துக்கொண்டு, எழுந்து- புறப்பட்டு, அளிப்பான்- ரக்ஷிக்குமவனுடைய, அஸுரர்களை நிரஸித்தந்த தைவர்களை ரக்ஷிக்குமவனுடைய வென்றபடி. திருமோகூர்- அவனுக்கு திவ்யநகரியான திருமோகூருடைய வென்றபடி. நாமமே- திருநாமத்தையே, அவதாரணத்தால் லௌகிகஶப்தங்கள் வ்யாவ்ருத்தங்கள். எமர்காள்? அஸ்மதீயர்காள், நம்மோடே தேஹமோராநுபாயமுடையவநாக ரூஷர்காளென்றபடி. நவின்று- வாயாலேசொல்லி, நவிலுகை- சொல்லுகை, எண்ணுமின்- உதவிலும் விஷியுங்கோள், ஏத்துமின்- அவ்வளவிலே பர்யவஸியாதே ப்ரீதியாலே ஸ்துதியுங்கோள். ||௰||

எமர்காள்?- அஸ்மதீயர்காள், நம்முடைய திவ்யசேஷ்டிதங்களையுகந்தநுபவிக்கும் அநந்யப்ரயோஜநங்களான என்றபடி. ஏத்துமினென்று- ஸ்தோத்ரம்பண்ணுங்கோளென்று, ஸ்துதிபரவஸராயிருக்கிறநீங்கள் இந்த விஷ்ணுதிவ்யசேஷ்டிதங்களை ஸ்துதித்து ரஸியுங்கோளென் றபிப்ராயமுடையனாயென்றபடி. தான்- ஸ்வயம், ஸர்வேஶ்வரனாயிருக்கச்செய்தேயும் நீர்வாஹவிஹாரமன்றிக்கே பரஸ்பராவாதநைநேக ப்ரயோஜநனான தானென்றபடி. குடமாடு- குடத்தாலேயாடின, பால்க்குடத்தைத் தலையிலேவைத்துக்கொண்டாடின வென்றபடி. கூத்தனை- கூத்தையுடையவனைக்குறித்து, குருகூர்ச்சடகோபன்- ஸர்வோத்க்ருஷ்டநகரியிலே யிருக்கிற வாழ்வாருடைய, குற்றேவல்கள் அந்தரங்கைங்கர்யங்களான, வாசிககைங்கர்யங்களான வென்றபடி. வாய்த்த- வாய்த்தான, ஸ்துதிபனானவனுக்கு ஸித்தித்தானவென்றபடி. ஆயிரத்துள்- ஸஹஸ்ரத்தில், இவை- இந்த பத்துப்பாட்டுக்கள், வண்- உதாரமான, ஸர்வைஶ்வர்யப்ரதமானவென்றபடி. திருமோகூர்க்கு- ஸ்பஷ்டம். ஈத்தபத்து- ஸமர்ப்பிக்கப்பட்டதஶகம், ஈகை- ஸமர்ப்பிக்கை, இவை- இந்தபாட்டுக்களை, ஏத்தவல்லார்க்கு- ஸ்துதிக்கவல்லவர்களுக்கு, ப்ரீதியோடே சொல்லவல்லவர்களுக்கென்றபடி. இடர்- து:க்கமான து, ஸம்ஸாரவஸாநத்திலே வழித்துணையில்லாத து:க்கமானதென்றபடி. கெடும்- நஷ்டமாம், அந்த காலத்தே வழித்துணையாமென்றபடி. ||கக||

ஜ்ஞாநவைராக்யபூஷணாய ஸ்ரீமதே வேதாந்தராமாநுஜமஹாதேசிகாய நம:.

ஸ்ரீ:.

த்ரமிடோபநிஷத்தாத்பர்யரத்நாவளி:.

(தாளதாமரை.)

தைத்யாநாம் நாஶகத்வாத்விஹ்ருததுலஸிகாதாமவத்த்வாஜ்ஜயித்வாத்

ஸர்பாதீஶேஶயத்வாந்நிரவதிகமஹஜ்ஜ்யோதிருத்தாரவத்த்வாத் ।

லோகஸ்ரஷ்ட்ருத்வயோகாதுபரயஸுதயா ஶ்ரீஸமாலிங்கிதத்வாத்

மாகாரேரேஷ்ணுஷ்டிஃஸ்வ்யாஜ்ஜஷுத்தநாதாந்திஶ்ஸ்வ்யததிதேநாஸ்யாயி ||கஅ௦||

(தைத்யாநாம் நாஶகத்வாத்) நன்கமர்ந்துநின்றசுரரைத்தகர்க்கும்- விரோதிகளானவஸுரரை நிரஸிக்குமவனுகையாலும், (விஹ்ருத துலஸிகாதாமவத்த்வாத்) ஈன்றண்டுழாய் அலங்கலங்கண்ணி- ஶ்ரமஹரமாய்க் குளிர்ந்திருக்கிற திருத்துழாய்மாலையாலே திகழாநிற்கிற திருவபிஷேகத்தை யுடையனுகையாலும், (ஜயித்வாத்) தேவர்கள்நாடவென்றிம்மூவுலகு- தேவர்களாஶ்ரயிக்க ஶத்ருவர்க்கத்தை வெல்லுமவனுகையாலும், (ஸர்பாதீஶேஶயத்வாத்) படர்கொள்பாம்பணைப் பள்ளிகொள்வான்- தன்னோட்டைஸம்ஶ்லேஷத்தாலே வளராநின்றுள்ள திருவனந்தாழ்வான்மேலே பள்ளிகொள்ளுமவனுகையாலும், (நிரவதிகமஹஜ்ஜ்யோதி:) சுடரொளியொருதனிமுதல்வன்- நிரவதிகமாய் ஸர்வோத்க்ருஷ்டமான தேஜஸ்ஸையுடையனுகையாலும், (உத்தாரவத்த்வாத்) கூத்தன்கோவலன்- க்ருஷ்ணனுய்வதரித்து குடக்கூத்துமுதலான ஶ்ரீநாஹாஸிவேஷ்டிதங்களைப்பண்ணுமவனுகையாலும், (லோகஸ்ரஷ்ட்ருத்வயோகாத்) வான்பெரும்பாழ் தனிமுதலாவித்யாதி- ஸ்ருஷ்டிஸமயஸம்ஹாராதி க்ருதேண ப்ரஹ்மாதிதேவர்களோடேகூட வெல்லாலோகங்களையும் ஸ்ருஷ்டித்தவனுகையாலும், (உபரயஸுதயா) தயாதன்பெற்ற- ஸ்ருஷ்டமான ஜகத்தினுடைய ரக்ஷணார்த்தமாக வஸுதேவ புத்ரனாகவதரிக்கையாலும், (ஶ்ரீஸமாலிங்கிதத்வாத்) மணித்தடம்- ஸ்ரீதகௌஸ்துபதடாகம்போலே ஶ்ரீஸமாமான வடிவையுடையவனுகையாலும், ஶோப்யஶப்தத்தாலே மேலிற்பாட்டில் 'காமரூபங்கொண்டெழுந்தளிப்பான்' என்றுசொல்லப்படுகிற ஸஹாயத்வமும் ஸம்ஹ்ருஷிக்கப்படுகிறது. இப்படிகளாலே திருமோகூர் காளமேகப்பெருமாளே யிசைவதற்கு வழித்துணையென்று "தாளதாமரை" என்கிறதஶகத்திலே ஆழ்வாராலே யறுதியிடப்பட்டதென்கிறார். ||கஅ௦||

ஸ்ரீமதேநிகமாந்தமஹாதேஶிகாயநம:.

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

பத்தாம்பத்தில முதற்றிருவாய்மொழிமுற்றிற்று.

இரண்டாந்திருவாய்மொழி.

ஆ— (கெடுமிடராயவெல்லாம்) இப்படிஸ்ரீவைஷ்ணவர்களோடேகூட திருமோகூரிலெம்பெருமானை யநுபவித்துத் திருவனந்தபுரத்திலேயு மவர்களோடேகூட வநுபவிக்கைக்காக திருவனந்தபுரத்திலே

இரண்டாந்திருவாய்மொழி.

இ— ஸ்ரீவைகுண்டநகரத்துக் கெழுந்தருளவுத்யுக்தரான வாழ்வாரிங்குள்ள சிலதிருப்பதிகளை யநுபவிக்கிறரென்று கீழ்த்திருவாய்மொழியின் ஶேஷத்திற்சொன்னத்தாலே யித்திருவாய்மொழிக்கும் ஸங்கதிஸித்தமாயிற்றென்று ஸங்க்ஷேபித்தியாநின்றுகொண்டு முதற்பாட்டுக்கு வ்யாக்யானஞ்செய்தருளுகிறார் (இப்படியித்யாதியால்) அதில் அநுபவிக்கைக்காக என்னுமளவும் ஸங்கதிஸங்க்ஷேபம். *

முதற்பாட்டு.

அடிபரவுதும் தொண்டீர்வம்மினேயித்யாதிகளாலே ஸ்ரீவைஷ்ணவர்களைக்குறித்து ஸம்போதித்துக்கொண்டவனை யநுபவித்ததே யவர்களோடேகூட வநுபவித்ததென்றுகருத்து. அநுபவிக்கைக்காக என்கிறதற்கு உபஸ்காராகாங்க்ஷத்தில் க்ரியையோடேயந்வயம். ஶேஷவாக்யத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (திருவனந்த

மூ— குமரனார் தாதைதுன்பந்துடைத்தகோவிந்தனாரே* ||சா||
துடைத்தகோவிந்தனாரே யுலகுயிர்தேவுமற்றும்* படைத்தவெம்பரமமூர்த்திபாம்பணைப்பள்ளிகொண்டான்* மடைத்தலைவாளைபாயும்வயலணியனந்தபுரம்* கடைத்தலைசீய்க்கப்பெற்றாற்கடுவினைகளையலாமே* ||
கடுவினைகளையலாகுங் காமனைப்பயந்தகாளை*

ஆ—(துடைத்த) ஸ்ரீகஜேந்த்ராழ்வானோடு ஸஹாவனாய் ஸகலகாரணமாகையாலே ஸர்வேஸ்வரனான எம்பெருமான் கண்வளர்ந்தருளுகிற திருவனந்தபுரத்திலே சென்றடிமைசெய்யப்பெறில் நம்முடைய து:க்கமெல்லாம்போம் அடிமைசெய்யப்போருங்கோளென்கிறார். ||எ||

இ— துடைத்த என்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸ்ரீகஜேந்த்ராதியால்) உலகுயிரித்யாதிக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸகலேத்யாதியால்) பரமமூர்த்தி என்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸர்வேஸ்வரனானவித்யாதியால்) கடைத்தலை சீய்க்கப்பெறில் என்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (சென்றித்யாதியால்) கடுவினையித்யாதிக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நம்முடைய வித்யாதியால்) து:க்கமெல்லாமென்றது ப்ராப்திவிரோதியான து:க்கமெல்லாமென்றபடி. இத்தால்கீழ்ப்பாட்டிலே திருவனந்தபுரத்திலே போயடிமைசெய்யவேணுமென்று சொன்னவர்த்தத்தை உபபாதிக்கிறதிப்பாட்டென்று ஸங்கதிஸூசிதை. ||எ||

ப— கேளுங்கோள், குமரனார்தாதை-ஸ்ரீப்ரத்யும்நபிதாவினுடைய, குமரன்- ஸ்ரீப்ரத்யும்நன், ஸர்வஜ்ஞத்வாதிஷாட்குண்யபூர்ணனாய் ஸர்வஸ்மாத்பரனான, தாதை- பிதா, தேவகியாகையாலே ஸர்வஸ்மாத்பரனான ஸ்ரீப்ரத்யும்நனுக்குங்கூட உத்பாதகனான ராமனுடையவென்றபடி. துன்பம்- ஸம்ஸாரதுக்கத்தை, துன்பம்- து:க்கம், துடைத்த- நிஸ்ஸேஷமாகப்போக்கினவரான, கோவிந்தன்- கோவிந்தனே, ஸர்வஜ்ஞாதிஷாட்குண்யபூர்ணனான ஸ்ரீகிருஷ்ணனையென்றபடி. நாமும்போய்நணுகவேண்டும். நாமுமங்கேபோயடிமைசெய்யவேணும், நணுகுகை- கிட்டுகை, அடிமைசெய்கையென்றபடி. ||சா||

துடைத்த- ஸ்ரீகஜேந்த்ராழ்வானோடு ஸஹாவனானவென்றபடி. கோவிந்தனார்- கோக்களைரக்ஷிக்கையாலே திர்யக்குகளுக்குங்கூட ஸுலபனான, ஸர்வஜ்ஞாதிஷாட்குண்யபூர்ணன். ஏகாரம்வாக்யாலங்காரம். உலகு- லோகங்களையும், உயிர்- ஜீவாத்மாக்களான ப்ராணிகளையும், தேவும்- தேவஜாதியையும், மற்றும்- மற்றுமுள்ள ஸகலபதார்த்தங்களையும், படைத்த- ஸ்ருஷ்டித்தவனான, எம்- ஸ்வாமியான, ஸ்ரீகேஸவனானவென்றபடி. பரமமூர்த்தி- ஸர்வாதிகனான, மூர்த்தி- ஸர்வஸ்வாமிகம், பாம்பணை- நாகஸயநத்திலே, பள்ளிகொண்டான்- கண்வளர்ந்தருளுகிற ஸ்ரீபத்மநாபனுடைய, இதற்கு அனந்தபுரத்தோடே அந்வயம். மடைத்தலை- மடைகளுடைய ஸமீபத்திலே, மடை- கேதாரங்களுடைய ப்ரவேசஸ்தானம், வாளை- மத்ஸ்யங்கள், பாயும்- பாய்கிற, ஜலஸம்ருத்திகளுடைய ஆதிக்யத்தாலே உகளிதாயாவநம் பண்ணுகிறதென்றபடி. வயல்- கழனிகளை, அணி- அலங்காரமாகவுடைத்தான, அனந்தபுரம்- திருவனந்தபுரத்தில், கடைத்தலை- தலைக்கடையிலே, வெளித்திருமுற்றத்திலேயென்றபடி. சீய்க்கப்பெற்றால்- திருவலகு திருப்பணிசெய்யப்பெற்றால், சீய்க்கை- ஸம்மார்ஜநம்பண்ணுகை, இது உபலக்ஷணம், ஸம்மார்ஜநாதிகைங்கர்யங்களைப் பண்ணப்பெற்றாலென்றபடி. கடுவினை- கடூரமான து:க்கத்தை, வினைஸப்தமிங்கே லக்ஷணயாது:க்கபரம், ப்ராப்திவிரோதியான து:க்கத்தையென்றபடி. களையலாம்- நிஸ்ஸேஷமாகப்போக்கலாம், பாரதந்த்ர்யத்திலுண்டாகக்கடவ கைங்கர்யமெல்லாமிங்கேயுண்டாமென்றபடி. ||எ||

கடுவினை- கடூரமான கர்மத்தை, ப்ராப்திவிரோதியான கர்மத்தையென்றபடி. களையலாகும்- நிஸ்ஸேஷமாகப்போக்கலாம், நாம்சொல்லுகிறத்தைச் செய்வதிகோளாகில் என்று கருத்து. அதென்னென்? சொல்லுகிறார்மேல். காமனை- மந்மதனை, பயந்த- பெற்றவனான, ஸௌந்தர்யலாவண்யாதிகளாலே அதிஸயி... சொல்லுகிறார்மேல். காமனை- மந்மதனை, பயந்த- பெற்றவனான, ஸௌந்தர்யலாவண்யாதிகளாலே அதிஸயிதனான மந்மதனுக்குங்கூட உத்பாதகனாகையாலே நிரவதிகஸௌந்தர்யாதிநிதியானவென்றபடி. காளை- திவ்யயுவாவான, காளையென்றுயுவாவுக்குப்பேர், காமனைப்பெற்றிருந்தாலும் 'ப்ரஸவாத்ஜநயுவாநம்'

மூ—இடவகைகொண்டதென்பரெழிலணியனந்தபுரம்* படமுடையரவிற்பள்ளிபயின்றவன் பாதங்காண*
நடமினோநமர்களுள்ளீர் நாமுமக்கறியச்சொன்னோம்* ॥அ॥
நாமுமக்கறியச்சொன்ன நாள்களுநணியவான* சேமநன்குடைத்துக்கண்டீர் செறிபொழிலனந்தபுரம்*

ஆ—(கடுவினை) ஸமாஶ்ரயணீயனாய் ஸர்வஸ்வாமியான எம்பெருமான், எல்லாருக்கும் ஸந்நிதானம்பண்ணிக்கொண்டிருக்கிற திருநகரி திருவனந்தபுரம் என்று சொல்லாநின்றார்கள். நாமும் அங்கே கண்வளர்ந்தருளுகிற அவன்திருவடிகளைக் காணப்போமின்கோள், இஸ்ஸூக்தியை நீங்களறியாமையாலே யிழக்கலாகாதென்று உங்களுக்கறிவித்தோமென்கிறார். ॥அ॥

(நாமுமக்கு) சேமநன்குடைத்தான திருவனந்தபுரத்திலே சென்றெம்பெருமானுக்கு அடிமைசெய்ய

✳ எட்டாம்பாட்டு ✳

இ— காமனைப்பயந்தகாளையென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸமாஶ்ரயேத்யாதியால்) த்விதீயபாதத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (எல்லார்க்குமித்யாதியால்) படமுடையித்யாதி உள்ளீரென்னுமளவுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (நாமுமித்யாதியால்) காணப்போமின்கோளென்றது- காணவாருங்கோளென்றபடி. இத்தால் கீழ்ப்பாட்டிலே திருவனந்தபுரத்திலேபோய் ஸாயுஜ்யத்தை யநுபவியுங்கோளென்றவரிப்பாட்டிலே விஶேஷத்தை யநுபவியுங்கோள் என்கிறாரென்று ஸங்கதி ஸூசிதை. ஶேஷம் ஸ்பஷ்டம். ॥அ॥

✳ ஒன்பதாம்பாட்டு. ✳

தூபநல்வித்யாதி ஏதத்தாத்பர்யத்தை ஸங்க்ரஹிக்கிறார் (எம்பெருமானுக்கித்யாதியால்) மாய்ந்தறுமித்யா

ப—என்கிறநீதி ஸநாதனமாய் காராதவ்யாபகபளவநஸ்வாமியான க்ருஷ்ணனென்றபடி. இட- இடுகைக்கு, இடுகை- கொடுக்கை, ஆஶ்ரிதர்க்காதானம் பண்ணுகைக்காகவென்றபடி. வகை- வகையாக, உபாயமாகவென்றபடி. கொண்டது- பரிக்ரஹித்தருளினஸ்தலமென்றபடி. யத்வா- இடவகைகொண்டது- இடமாகக்கொண்டது, வகை- ப்ரகாரம், ஆஶ்ரிதர்க்காதானம்பண்ணுகைக் குசிதஸ்தலமென ஸ்வீகரித்தருளினதென்றபடி எழிலணி- அழகாலேயலங்க்ருதமான, எழில- அழகு, அனந்தபுரம்- திருவனந்தபுரம், என்பர்- என்றுசொல்லாநிற்பார்கள், திவ்யஜ்ஞானஸ்வாமிகளிதிஶேஷ:. இது ஶைகாமஹம், ஆதலால நடமினோவென்று மேலோடேயந்விதமாகிறது, படமுடை- ஃபணங்களையுடைத்தான, ஸஹஸ்ரஶீர்ஷமஹாவிஸ்தாரஸம்ஸ்தானத்தாலே விகஸிதஃபணனாயென்றபடி. அரவில்- நாகத்தின்மேலே, ஶேஷன்மேலென்றபடி. பள்ளி- ஶயநத்திலே, கண்வளருகையிலேயென்றபடி. பயின்றவன்- பரிசயம்பண்ணினவனுடைய, நிரந்தரமாகக் கண்வளர்ந்தருளுகிற ஸ்ரீபத்மநாபனுடையவென்றபடி. பாதங்காண- திருவடிகளைக்கண்டநுபவிக்கைக்கு, நமர்களுள்ளீர்- நம்முடையவர்களாயுள்ள ஜநங்காள், நடமினோ- நடவுங்கோள், நாம்- அவன்கண்வளர்ந்தருளுகிறவழகின் சீர்மையறிந்தநாம், உமக்கு அவ்வடிவைக்காணவேணுமென்கிற அபேக்ஷையுடையவுங்களுக்கு, அறியச்சொன்னோம்- அறியும்படிசொன்னோம். ॥அ॥

செறிபொழில்- ஸஹிவ்ருக்ஷங்களான வ்ருக்ஷஸங்களையுடைத்தான, அனந்தபுரம்- திருவனந்தபுரமானது, சேமம்- க்ஷேமத்தை, இங்கு பதார்த்த மகாரத்துக்கு ஸம்ஹிதாயாம்லோப:. நன்கு- நன்றாக, உடைத்துக்கண்டீர்- உடைத்தானது கிடீர்கோள், ஆஶ்ரிதர்களெல்லாம் ஸம்ருத்தக்ஷேமராயிருக்கும் கிடீர்கோளென்றபடி. இது ஶைகாமஹம், ஆகலால வாமனனடிக்கென்றேதகவினைகள் தாமேமாய்ந்தறும் என்றதுவயிக்கிறது, தூபம்- தூபத்தையும், இங்கும் பதார்த்தமகாரத்துக்கு ஸம்ஹிதாயாம் லோப:. நல்விரை- தேஹநாதிநாநாவிதஸுரபிகளான, மலர்கள்- புஷ்பங்களையும், துவளற- தோஷமில்லாதபடி, துவள்- தோஷம், தேஹநிர்மால்யாதிகளும் க்ருமிகீடாதிகளுமாகிற தோஷமில்லாதபடியென்கை. யத்வா- ஜ்ஞானாஶ்ரயவிஷயதோஷமில்லாதபடியென்றவுமாம். ஆய்ந்துகொண்டு- ஸ்ருஷ்டிபரமப்ரேமத்தோடே ஸம்பாதித்துக்கொண்டு, வாமனனடிக்கென்று- தன்னுடைமைபெறுகைக்குத் தானிரப்பாளனாய்ப்படி யாஶ்ரிதவ்யாமோஹவானான ஸ்ரீவாமனன்திருவடிகளுக்கென்று ஸங்கல்பித்து, ஏத்த- ஸ்தோத்ரிக்க, தத்ஸ்ரீகாரார்த்தமாகவவனுடைய ஸ்ரீபாதிகுணங்களை ஸ்தோத்ரிக்கவென்றபடி. வினைகள்- ஶரீரங்களான, தாமே- ஸ்வயமேவ

மூ— தூ (ம)ப நல்விரைமலர்களிவையாய்ந்துகொண்டு* வாமனனடிக்கென்றேத்தமாய்ந்தறும்வினைகடானே ॥
மாய்ந்தறும்வினைகடாமே மாதவாவென்னநாளும்* ஏய்ந்தபொன் மதிளனந்தபுரநகரெந்தைக்கென்று*
சாந்தொடுவிளக்கந்தூபந்தாமரைமலர்கணல்ல* ஆய்ந்துகொண்டேத்தவல்லாரந்தமில்புகழினாரே* ௰॥

ஆ— உங்களுடைய ஊர்வோக்களெல்லாம் தானேபோம், ஆனபின்பு அடிமைசெய்கைக்குவகாரணமான விரோதி கழியுமதற்குமுன்னே யிப்போதே சென்றடிமைசெய்யுங்கோள், நாமுமக்கறியச்சொன்னோமென்கிறார். ॥௯॥
(மாய்ந்தறும்) அவன் திருநாமங்களிலே யேதேனுமொருதிருநாமத்தைச்சொல்ல அடிமைசெய்கைக்கு விரோதியானவையெல்லாம் தானேபோமென்று சொல்லிமுடித்து திருவனந்தபுரத்திலே போயெம்பெருமானுக்கடிமைசெய்யும் பாக்யவான்களாரோதான், என்றுகொண்டு அவர்களைக்கொண்டாடுகிறார். ॥௰॥
(அந்தமில்) ஸ்ரீபக்தர்களுக்கு ஸ்ரீயபதிகள் ஸௌஹார்த்தமாமாப்போலே திருநாட்டிலுள்ளார்க்கும்

இ— கீழ்க்குக் காருண்யமருளிச்செய்கிறார் (உங்களுடையவிக்ருதியால) ப்ரயோஜனத்துக்குத காருண்யமருளிச்செய்கிறார் (அனன்யோபாயதியால்) முடிவதற்குமுன்னே யென்கிறவிதத்தால கிழத் திருவனந்தபுரத்திலே போயடிமைசெய்யுங்கோள் என்றவிப்பாட்டிலே ஸீக்ரமாகப்போய்ச் செய்யுங்கோளென்கிறாரென்று ஸங்கதி ஸங்கதி. ப்ரயோஜனத்தில் ஸகிகாருண்யமருளிச்செய்கிறார் (நாமுமக்கிக்ருதியால்) ॥௯॥

✱ பத்தாம்பாட்டு ✱

ப்ரயோஜனத்துக்குக் காருண்யமருளிச்செய்கிறார் (அவன் திருநாமங்களிலேயிக்ருதியால்) சொல்லிமுடித்தென்கிறவிதத்தால் இப்படிச்சொன்னவர்களுக்கு எல்லாமுவஸ்ஸாரமிப்பாட்டென்று ஸங்கதியுமவஸ்தை. முடித்துஎன்கிறதற்கு கொண்டாடுகிறாரென்கிறத்தோடே யன்வயம். மேல்வாக்யத்துக்குத் காருண்யமருளிச்செய்கிறார் (திருவனந்தபுரத்திலேயிக்ருதியால்) ॥௰॥

✱ நிகமனம். ✱

உத்தராயத்துக்குக் காருண்யமருளிச்செய்கிறார் (ஸ்ரீபக்தர்களுக்கிக்ருதியால்) அமராவதில் பைந்தொடி

ம— மாய்ந்து- நசித்து, அறும்- அற்றுப்போம், நிரவஶேஷமாய்விடுமென்றபடி. தானே என்கிறவிதத்தால் பால்குடிக்கநோய்தீருமாப்போலே ஸ்வயம்ப்ரயோஜனமாக கைங்கர்யரஸத்திலே ரஸிக்கவே துக்கங்கள் தன்னடையேபோமென்றபடி. ஆகலால் அங்கேபோ யடிமைசெய்யுங்கோளென்றபடி. நாமுமக்கறியச் சொன்னோம் என்றதும் ‘வைற்றனாள்வரையலலேதறிகிச்சென்று’ என்று வாக்யம் நாமுங்களுக்குத்தெரியச்சொன்ன ஸர்வாவஸாநமுள்ளதும், நணிய- கிட்டினவையாக, நணியவை- கிட்டினவை, ஆன- ஆய்த்தின, ஆகலால் மீண்டப்போ யடிமைசெய்யுங்கோளென்று கருத்து. ப்ரயோஜனாதிகளிலே மகாரம் த்விதீயாக்ஷரமாயிருக்க த்ருதீயவாக்யத்திலே நாமணவவிரையென்று பகாரம் த்விதீயாக்ஷரமாயிருந்தாலும் இதுவொருவாகையாலே வணங்கநவப்ராஸாலங்காரத்துக்குக் குறையில்லை. தூமணல்விரையென்று இப்படியுமொருபாடமுண்டு என்று ரையில நிர்வாஹம். இப்பக்ஷத்தில் ப்ரதமஸ்ப்தமான தூமஸப்தமே ப்ரயோகம். ॥௯॥
மாதவாவென்ன- ஸ்ரீயபதி என்கிறதிருநாமத்தைச்சொல்லவே, வினைகள்- கர்மங்கள், கைங்கர்யவிரோதியான கர்மங்களென்றபடி. தாமே- ஸ்வயமேவ, மாய்ந்து- நசித்து, அறும்- அற்றுப்போம், நிரவஶேஷமாய்விடுமென்றபடி. நாளும்- ஸர்வகாலமும், ஏய்ந்த- அநுரூபமான, பொன்மதிள்- கநகமய ப்ராகாரத்தையுடைத்தான, அனந்தபுரநகர்- திருவனந்தபுரமென்கிற திவ்யநகரத்தில், எந்தைக்கென்று- ஸ்வாமிக்கென்று ஸங்கல்பித்து, இதுக்கு ஆய்ந்துகொண்டு என்கிறத்தோடே யன்வயம். சாந்தொடு- சந்தனத்தோடேகூட, விளக்கம்- தீபத்தையும், தூபம்- தூபத்தையும், தாமரைமலர்கள்- தாமரைப்புஷ்பங்களையும், நல்ல- நன்றாக, ஸமஸ்தகந்தாதிகளாகிற தோஷமில்லாமலென்றபடி ஆய்ந்துகொண்டு- கேஶகீடாதிகளில்லாதபடி ஶோதநமாக ஸ்வீகரித்துக்கொண்டு, ஏத்தவல்லார்- தாங்கள் ஸம்பாதித்த உபகரணங்களை பகவத்ஸமர்ப்பித்தருளின ஸ்ரீக்கியாலே ய்வினைஸ்துதிக்கவல்லார்கள், அந்தமில்புகழினார- அந்தமில்லாதகீர்த்தியையுடையவர்கள், புகழுடையவர்- புகழினார், நித்யஸ்ரீவைஷ்ணவர்களென்றபடி ॥

மூ—அந்தமில்புகழனந்தபுரநகராதிதன்னைக்* கொந்தலர்பொழிற்குருகூர்மாறன்சொல்லாயிரத்துள்* ஐந்தினோடைந்தும்வல்லாரணைவர்போயமருலகில்* பைந்தொடிமடந்தயர்தம்வேய்மருதோளிணையே* ॥கக॥

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

ஆ—இத்திருவாய்மொழிவல்லார் போக்யமாவாரென்கிறார். ॥கக॥

திருக்குருகைப்பிரான்பிள்ளான்திருவடிகளேசரணம்.

இ—மடந்தையரென்று நித்யவிபூதியிலுள்ளார் நாயிகாஸ்தாநீயராகவுந் தோற்றும்படி யிப்பாட்டிலே நிர்தேஶமிருந்ததேயாகிலு மவர்களுக்கு மிவர்களுக்கும் ஶேஷஶேஷித்வத்தில் மாறாட்டமாகிறவ தளவிதர்ஶ்யாமைக்காக வத்ஸஹோஹ்யஸூத்ர தாத்பர்யமாக வ்யவஹாரம்பண்ணுகை யுசிதமென்றுநினைத்து அவர்களை நாயகஸ்தாநீயராகவு மிவர்களை நாயிகாஸ்தாநீயராகவும் வ்யவஹாரத்திலே நிர்தேஶித்தருளினார். ॥கக॥

ஈ—அந்தமில்புகழ்- அந்தமில்லாத புகழையுடையவனை, அநவதிக கல்யாணகுணநிதியான வென்றபடி, இது ஆதிக்குவிஶேஷணம். அனந்தபுரநகர்- திருவனந்தபுரமென்கிற திவ்யநகரத்திலேயிருக்கிறவனை, ஆதிதன்னை- ஸகலகாரணபூதனை, இதற்கு சொல்என்கிறத்தோடே யந்வயம். கொந்தலர்- கொத்துகளலருகிற, அநவரதவிகஸத்ஸுமநோவிராஜிதங்களானவென்றபடி. பொழில்- உத்யாநங்களையுடைத்தான, குருகூர்- திருநகரியில், மாறன்- மாறனென்கிறகுடிப்பேரையுடையவரான வாழ்வார், சொல்- அருளிச்செய்ததான, ஆயிரத்துள்- ஸஹஸ்ரத்தில், ஐந்துனோடைந்தும் -கேவலஸ்வரூபோபதேஶரூபமான மாயாவஞ்சகத்தோடேகூடத் தம்மையுங்கூட்டிக்கொண்டுபதேஶித்த மாயாவஞ்சகத்தை, வல்லார்- அப்யஸித்தவர்கள், போய்- அர்சிராதிமார்க்கத்தாலேபோய், அமருலகில்- அமர்ந்தலோகத்திலே, காலக்ருதபரிணாமமில்லாமையாலே நித்யப்ரதிஷ்டிதமான ஸ்ரீவைகுண்டலோகத்திலே யென்றபடி. பைந்தொடி- பசுத்ததொடியையுடையவர்களான, பசுத்தது- அழகியது, தொடி- ஹஸ்தாபரணம், ரமணீயஹஸ்தாபரணஶாலிகளான வென்றபடி. மடந்தையர்தம்- ஸ்த்ரீகளுடைய, தம்- ஸ்வாபேக்ஷயோமம், வேய்மரு- வேயோடே மருவத்தக்கவையான, வேயென்று மூங்கில, மருவுகை- பரிசயம்பண்ணுகை, ஶீதலத்வாதப்ரஶஸ்தகுணங்களால் வ்யஜாதரவம்ஶகாண்டங்களுக்கு ஸத்ருஶங்களானவென்றபடி. தோளிணை- புஜங்களுடைய யுக்மத்தை, அணைவர்- ஸம்ஶ்லேஷிப்பர், அவர்களுடைய புஜபாஶாஶ்லேஷத்தைப் பெறும்படிதாங்கள் அவர்களுக்கத்யந்தவிஷயராவரென்றபடி. நாயிகாநாயகர்களுக்கு பரஸ்பரமுள்ள ப்ரணயரஸம்போலே அத்யந்தமாய் பரஸ்பராபிநிவேஶியான நித்யஸூரிகளுடைய ப்ரீதிக்கு பாத்ரபூதராவரென்று வாக்யார்த்தம், அவர்களுக்கத்யந்தபோக்யராவரென்று பரமதாத்பர்யம். கெடுமிடராயவெல்லாம் கேசவாவென்னஎன்று திவ்யதேஶநவநாதிப்ராப்யங்களெல்லாம் போமென்று முற்பட ப்ரதிஜ்ஞைக்கையாலும் அணைவர்போயமருகிலென்று, அர்சிராதிமார்க்கத்தாலே திவ்யதேஶப்ராப்தியை ப்ரதிஸம்ஹரிக்கையாலும் வ்யுபதேநக்லேஶாபோஹம் ஸாதிதமாகையால் வ்யுக்லேஶஹரமென்கிற ஸமஸ்தார்த்தமித்திருவாய்மொழிக்கு ஸங்க்ரஹார்த்தமென்றுஸூசிதம். ॥கக॥

ஜ்ஞாநவைராக்யநிஷ்டாநஶேவதி ஸ்ரீஶடகோபராமாநுஜமுநயே நம:.

ஸ்ரீ:.

த்ரமிடோபநிஷத்தாத்பர்யரத்நாவளீ:.

(கெடுமிடராயவெல்லாம.)

ஊபெ ஸ்ரீகேஶவஶப்தோ நந்தவரிதவஹாயீஶகேதோஸ்யொஹா
நாஸஞ்ஞாஸ்வதிக்லாநநோபவரிஷதாநோதிஸூததமஸூநா ।
வ்யாபாரொரஶ்யஷ்டிநாவைப்ரவிவ ஸாஜஹஶாயிகோபவை ஶ்ரீதைர்ஈ:
ரஜ்ஞ்யேகேஶாவஹதா ஸதிவஹபாநித்யநக்ஶாரி:. ॥௧௦௫॥

(ஸ்ரீகேஶவஶப்த)கெடுமிடராயவெல்லாம் கேசவாவென்ன- விரோதிநிரஸநஸாமர்த்யத்தையாலும், (அநந்தவரித) அனந்தபுரநகர்மாயன்நாமம்- ஆஶ்சர்யசேஷ்டிதங்களையுடையவனாகையாலும், (வஹாயீஶகேதோஸ்யொஹா)

ஜீ — கா — ஜநம்புட்கொடியுமொன்றே- பெரியதிருவடியை த்வஜமாகவுடையனாகையாலும். (ஸுவாஸகவாஸ) வாசமேகமழுஞ்சோலை வயலணியனந்தபுரமித்யாதி- அணித்தான திருவனந்தபுரத்திலே வஸிக்கையாலும் (வஸிஷ்வாஸ) அண்ணலார்கமலபாதம்- எல்லார்க்கும்ஸ்வாமியாகையாலும், (ஸர்வஸம்ஷ்டிர்ஸ்ரஷ்டாதிதேவ ஸ்ரேஷ்டர்) அமரராய்த்திரிகின்றார்கட்காதிசேரணந்தபுரத்து- ப்ரஹ்மாதிகளான தேவர்களுக்கும் நிர்வாஹகனாகையாலும், (ஸ்ரவமபராஸ்ருஷ்டிஸம்ரக்ஷி) அடைத்தகோவிந்தனே யுலகுயிர்தேவும் மற்றும்படைத்த- வஸ்தாவிஜயஜஙாஜாதத்தோடேகூட விந்தலோகங்களையெல்லாமுண்டாக்கி ரக்ஷிக்குமவனாகையாலும், (ஸவிஸர்கஜஸ்மாயிஸ்ஸ்ரஷ்ட்ருத்வஸ்ருஷ்டி) படமுடையரவில்பள்ளி பயின்றவன்- தன்னோட்டை ஸம்ஸ்லேஷத்தாலே விகஸிதபணங்களையுடையனான திருவனந்தாழ்வான்மேலே கணவளர்ந்தருளுகையாலும், ஸௌலப்ய பாத்தாலே வாமனனடிக்கென்றேத்த மாய்ந்தறும்வினைகள்தானே- மாதவாவென்ன என்று மேலிரண்டுபாட்டிற்சொல்லப்படுகிற வாஸநகலேசயவாஸங்கள் ஸம்ஹ்ருஷ்டதங்கள். இப்படிகளாலே திருவனந்தபுரத்தெம்பெருமான் தன்னையாச்ரயித்த விச்வேதநருக்கு போம்வழியில்வரும் க்லேசங்களைப்போக்காநிற்கிறானென்று "கேசவாய" என்கிறசுலோகத்திலே காரிஸுநு அருளிச்செய்தாரென்கிறார். ௧௧௦௫

ஸ்ரீமதே ரமாநுஜாய நம:.

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

பத்தாம்பத்தில் இரண்டாந்திருவாய்மொழிமுற்றிற்று.

மூன்றாந்திருவாய்மொழி.

ஜீ —(வேய்மருதோளிணை) இப்படியெம்பெருமானோடுகலந்து பரிமாறிச்செல்லாநிற்கச்செய்தே இவ்ப்ரக்ருதியிலே தாமிருந்தவிருப்பைக்கண்டு 'இவ்ப்ரக்ருதிஸம்பந்தம் காரணமாக வெம்பெருமான்விடிலோ' என்றுள்ள அதிசங்கையாலே பயஸன்னராகிறார், வண்டுவரைப்பெருமாளோடே கலந்துபரிமாறச்செய்தே பசுமேய்க்கப்போங்காலம ப்ராப்தமானவாறே 'இவனினிப்பசுமேய்க்கப்போகிலோ' என்றுள்ள அதிசங்கையினாலே அக்கோபிமாரவஸ்தைகளானுப்போலே பயஸன்னராய் அவர்களுடையபாசுரத்தாலே பலற்றுகிறார், திருவாய்

மூன்றாந்திருவாய்மொழி.

இ— இப்படி ஸந்தோஷராய்க்கொண்டு தத்தவ்யஸனங்களி லெம்பெருமானை யநுபவியாநிற்கிற ஆழ்வார் இத்திருவாய்மொழியிலே விரஹிதகோபிகாவிலாபவாக்குகளைப் பேசிக்கொண்டவஸன்னராங்க பஸம்கத மன்றோவென்ன? ஸங்கதிப்பிக்கிறார் (இப்படியித்யாதியால்) கண்டுஎன்கிறதற்கு அவஸன்னராகிறாரென்கிறத்தோடே யந்வயம். 'தடமுடைவயலனந்தபுரநகர்புகுதுமின்றே' என்று தாமுபதேசித்தபடியே ஸ்ரீவைஷ்ணவர்களும் தாமுமாகத் திருவனந்தபுரத்துக்குப்போக வுத்யோகித்து தத்க்ஷணத்திலே போகப்பெறாமையாலே இதற்கு ப்ரதிபந்தகமேதென்று விமர்சிக்கப்புக்கு தாமிந்தப்ரக்ருதியிலே யிருந்தவிருப்பைக் கண்டாரென்றுகருத்து. எம்பெருமான் விடிலோஎன்றது- இந்தப்ரக்ருதியில் இன்னமும் நம்மைவைத்தாலோ வென்றபடி. இப்படி அநுபவம் நடவாநிற்கச்செய்தே அதிசங்காதிசயத்தாலே அவஸன்னராகிறாராகில் வண்டுவரைப்பெருமாளோடே ஸம்ஸ்லேஷமாயிருக்கச்செய்தே ஏதேனுமோரதிசங்கையினாலே அவஸன்னையான பிராட்டியினுடைய பாசுரத்தைப்பேசுகை பாதிதமாமத்தனைபோக்கி "வேய்மருதோளிணைமெலியுமாலோ" இத்யாதியாலே விரஹிணியாய்த் தன்னுடைய ஸமகாஸ்ப்ர்யாதிகளைச்சொல்லி விலபிக்கிறவளுடைய பாசுரங்களைப்பேசுகை பாதிதமோவென்ன? ஸங்கதிப்பிக்கிறார் (வண்டுவரைப்பெருமாளோடேயித்யாதி) இப்படி கோபிமார்களவனோடேகூட விருக்கச்செய்தே அதிசங்காதிசயத்தாலே பயஸன்னரானார்களாகில் வேய்மருதோளிணையித்யாதியாலே தங்களை விரஹிணிகளாகச் சொல்லக்கூடுமோவென்ன? ஸங்கதிப்பிக்கிறார் (திருவாய்ப்பாடியிலித்யாதியால்) வருமளவிலென்கிறதற்கு கொண்டுஎன்கிறத்தோடே யந்வயம். போனானாகக்கொண்டுஎன்றது- போனானாகவே நினைத்துஎன்றபடி. அதாவது:— இனியிவன் பசுமேய்க்கப்போகிலோ

ஆ— வேய்மருதோளிணைமெலியுமாலோ மெலிவுமென்றனிமையும்யாதுநோக்காக்* காமருகுயில்களும் கூவுமாலோ கணமயிலவைகலந்தாலுமாலோ*.

ஆ— பாடியிற் பெண்பிள்ளைகள் வண்டுவரைப்பெருமானோடேகூட வெழுந்தருளியிருக்கச்செய்தே அவன் பசுமேய்க்கப்போங்காலம் வருமளவில் அவன்போனதைக்கொண்டு பிரிந்தார்படும் வ்யஸநமெல்லாம்பட்டு, வ்யஸநத்தையும் பிரிந்தவவன்கொடுமையையும் தோழிமாருக்குச்சொல்லுமாப்போலே அவன்றன்னைக்குறித்துச் சொல்லுகிறாள், உன்னைப்பிரிகையாலே, என்னுடையதோள்கள் மெலியாநின்றன, இவற்றின்மெலிவு மென்தனிமையும். மொன்றும்பாராதே இக்குயில்களானவை உன்திருநாமங்களைக் கூவாநின்றன, அதின்மேலே மயில்களும்

இ—வென்று தங்களுக்குண்டான வத்ஸம்காவாஸநாப்ரகர்ஷத்தாலே அவன்போனதாகவே தங்களுக்குத் தோற்றுகையாலே அவன்போனதாக ஹ்ருதித்துஎன்றபடி. இத்தால் ஸ்வாநுஸம்ஸ்காரஸ்வரஸமென்கிற ஸமாஸமர்த்தித்திருவாய்மொழிக்கு ப்ரதிவாத்யமென்று ஸூசிதமாயிற்று. இப்படியவன் பசுமேய்க்கப்போனதாக ஹ்ருதித்தார்களாகில் "தாமரைக்கண்கள்கொண்டீர்தியாலோ" இத்யாதியாலே அவனைநோக்கி வார்த்தை சொல்லக்கூடுமோவென்ன? ஸமர்த்திப்பிக்கிறார் (தோழிமார்க்கித்யாதி) "தாம்தம்மைக்கொண்டகல்தல் தகவன்றென்றுரையீரே" என்று தாம்போகிறவர் தம்மையிங்கேவைத்தனரோ போகக்கடவதென்று, கலங்கும் ப்ரக்ருதிகளான இவர்களுக்கிப்போது அவன்போனதை நிரூபமிருக்கச்செய்தேயும் அவன் ஸந்நிஹிதனாகவும் தோற்றக்கூடுகையாலும் லோகத்திலும் ஸ்வப்நத்தில் த்ருஷ்டவிஷயத்தைப்போலே, இதுவும் ப்ரத்யக்ஷஸமாநமாக இப்படியும் ஒருவ்ருத்திவிஶேஷமுண்டாகையாலும் அவனைநோக்கி வார்த்தைசொல்லக் கூடுமென்றுகருத்து. *

முதற்பாட்டு.

வேய்மருவித்யாதிக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (உன்னையித்யாதியால்) மெலிவுமித்யாதியையுரைக்கிறார் (இவைத்தனித்யாதியால்) காமருவித்யாதிக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இக்குயில்களித்யாதியால்) கோகிலமயூராதிகளான உத்தீபகங்களைச் சொல்லியலற்றுகிறவிடத்திலே உத்தீபகமென்ன ப்ரஸித்தமல்லாத-

ஈ— வேய்மரு- வேயோடேமருவுமவையான, வேய்- மூங்கில், மூங்கிலுக்குஸத்ருஶங்களானவென்றபடி. வர்ணஸாம்யத்தங்களாகையாலே, வ்ருத்தாவஸம்ஸ்காரஸத்ருஶங்களான வென்கை. ஸம்ஶ்லேஷஸமயத்திலே இப்படிக்கொண்டாடிக்கொண்டு அநுபவிக்குமவையான வென்றுகருத்து. தோளிணை- என்னுடைய ஜங்களுடைய யுக்மமானது, ஸந்த்ராந்துமுண்டான சேர்த்திபழகைச்சொல்லி நீ வாய்வெருவுமபடி அழகமாயிருக்கிற வென்தோள்களானவை யென்றபடி. மெலியும்- ஸ்விரஹத்தாலே க்ருஶமாகாநின்றது, ஆல் ஓ- ஹா, கஷ்டம், கஷ்டத்தால் விஷாததிஶயம் ஸூசிதம்; என் என்கிறவத்தை காகாக்ஷிந்யாயேந ஸந்நிதாநங்களிலே யந்வயிப்பது. என்மெலிவும்- ஸ்வாஸாதிஸாமாநாலான என்னுடைய காஶ்யத்தையும், என்தனிமையும்- விரஹஸஹிஷ்ணுவல்லாத என்னுடைய விரஹத்தையும், யாதும்- ஒன்றையும், நோக்கா- பார்க்கிறனவில்லை, விரஹிணியாய் அத்தாலே க்ருஶையாயிருக்கிறவிவளுக்கு நம்முடைய த்வநிகள் பாதகங்களென்று விஶேஷிக்கிறனவில்லையென்றபடி. குயில்களுமென்றதை காகாக்ஷிந்யாயேந விஶேஷணமாக்குமவயித்து இவ்வாக்யத்துக்கு, ஶேஷபூரணம்பண்ணிக்கொள்வது, காமருகுயில்களும்- அழகிய கோகிலங்களும், காமருவென்று அழகியது, யதா- காவென்று- உத்யாநமாய், உத்யாநத்திலே மருவியிருக்கிற கோகிலங்களுமென்னுமாம். ஸ்வபா- காமருவுதல்- ஸஹவாஸமாய் பரஸ்பரஸம்ஶ்லேஷரஸாஸ்வாதிதவங்களான கோகிலங்களுமென்றபடி. ஸஹவத்தால் நீராருமன்றிக்கே யிவையும் பாதகங்களாகாநின்றதென்றபடி, கூவும்- கூவாநின்றன, ஆலோ- ஹா, கஷ்டம், என்தஶையைக்கண்டாகிலிவைத்துக்கு வாயைப்புதைக்கவேண்டாவோ என்றுகருத்து. அவைகணமயிலென்று மாறிபயிப்பது. அந்தக்கணமயிலானவை பரஸ்பரஸம்ஶ்லேஷரஸத்தாலே, மணம்மணமாயிருக்கிறவந்த ஸமூஹங்களானவையென்றபடி. "ஸமூஹவாநிநஸமூநம் ரக்ஷஸாநக்ஷத்ரதாஸ்ரியா" என்கிறகணக்கிலே பரஸ்பரஸம்ஶ்லேஷஸமூஹங்களான அவைத்தைத்தான் கண்டுகொண்டு பார்க்கமாட்டாமையாலே ஸமூஹத்தைமாறிவைத்து அவையென்று பராக்ஷமாக நிர்தேஶிக்கிறாள், கலந்து- பரஸ்பரஸந்நிதியாலே ஸம்ஶ்லேஷித்து, ஆலும்- ஸம்ஶ்லேஷித்தஹர்ஷத்தாலே ஸம்ஸ்ருத்தம்பண்ணுகின்றன, ஆலுகை- ந்ருத்தம்பண்ணுகை, ஆலோ- ஹா கஷ்டம், இவளுடைய

மூ— வாமருவிநிரைமேய்க்கநீபோக்கொருபகலாயிரமூழியாலோ* தாமரைக்கண்களகொண்டீர்தியாலோ
தகவிலைதகவிலையேநீகண்ணா* ||௧||
தகவிலைதகவிலையேநீகண்ணா தடமுலைபுணர்தொறும்புணர்ச்சிக்காராச்*

ஆ— கலந்தாலாகின்றன. ஒருபகல்பிரியுமளவில் இங்ஙனேபடவேண்டுமோவென்னில்? நீ பசுமேய்க்கப்போனவாறே அவ்வொருபகற்றானாயிரமூழியாகாநிற்கும், அதின்மேலே நீயுமுன்னுடைய கண்களாலேயென்னையீராநின்றாய், உன்னைப்பிரிந்து நானிங்ஙனே படாநிற்கச்செய்தே எங்களைப்பிரிந்து நீயிருக்கவல்லையாவதே நீயிருந்தயோகத்திலும் இல்லையாகாதே க்ருபை, யோகத்திலே சிறிதுக்ருபையுண்டாகிலும் முன்பக்கலிலொரு க்ருபையில்லையென்கிறாள். ||௧||

(தகவிலை) ஸம்ஶ்லேஷஜநிதமான நிரவதிகநிர்வ்ருதி செல்லாநிற்கச்செய்தே யிப்படிபடுகிறதென்னென்ன?"

இ— பகலைச்சொல்லுகை யஸங்கதமன்றோவென்ன ஸங்கதிப்பிக்கிறார் (ஒருபகலித்யாதியால்) தகவிலையென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (உன்னைப்பிரிந்தித்யாதியால்) நீயே தகவிலையென்றதாயிதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (யோகத்திலேசிறிதவித்யாதியால்) ||௧||

✳ இரண்டாம்பாட்டு. ✳

வேய்மருதோளிணைமெலியுமாலோ என்று விரஹஜநிதகார்ஶ்யத்தைச்சொன்னபோதே தனக்கு ஸம்ஶ்லேஷரஸவிஶேஷம் ப்ரத்யக்ஷமாயிருக்க தடமுலையென்றுதுடங்கி கனவெனநீங்கி என்றிப்பாட்டிலேயத்தைச்சொல்லுவானேனென்ன ஸங்கதிப்பிக்கிறார் (ஸம்ஶ்லேஷேத்யாதியால்) தடமுலையித்யாதி கனவென

ஈ— விரஹதசையிலே நாம் ஸாரஸ்யஸம்ஶ்லேஷித்திருக்கையும் ந்ருத்தம்பண்ணுகையும் ஸ்வப்நமென்றறிந்து பீருகிறதைவில்லையென்னுகருத்து. மருவினஆநிரையென்றதாயிப்பது. மரு- உன்னோடேமருவினவையான. 'மேய்ந்தபுல்லும்கடவாய்வழிசோர' என்கிறபடியே உன்பக்கலிலேப்ரேமாதிகளான வென்றபடி. இன- ஸம்ஶ்லேஷத்தங்களான; விஶ்லேஷதசையிலே க்ருபைபண்ணாதவுன்னுடைய க்ருபைக்கு வஷிணேவிஷயமாம்படி ஸம்வ்யங்களானவென்றபடி. ஆநிரை- ஆக்களுடையநிரையை, ஆஎன்று மொக்கள், நிரை- பங்க்தி, மேய்க்க- ஸாரணம்பண்ணுகைக்காக, நீபோக்கொருபகல்- நீபோகிறவொரு க்ஷணஸ்ஸானது, ஆயிரமூழி ஸஹஸ்ரகல்பமாகாநின்றது, ஆலோ- ஹாகஷ்டம், எங்களைப்பிரிந்து வுனக்கநாகூலமாயிருக்கிறபகல்களுக்கு ப்ரதிகூலமாவதென்னுகருத்து. தாமரைக்கண்கள்கொண்டு- தாமரஸஸத்ருசங்களான வுன்னுடைய திருக்கண்களைக்கொண்டு, ஈர்தி- நீஈராநிறபுதி, நீபசுமேய்க்கப்போனு லென்னெஞ்சைவிட்டுப்போகாதேநிற்கிற வுன்னுடையகண்ணழகாலே யப்பகலெல்லாம் யென்னைநீ வீபியாநின்றாயென்றபடி. ஆலோ- ஹாகஷ்டம், நீபசுமேய்க்கப்போனு லுன்கண்ணழகை யென்னெஞ்சிலேவைத்துப் போகவேணுமோ வென்னுகருத்து. தகவிலை- க்ருபையில்லை, தகவு- க்ருபை, நீயெங்களைப்பிரிந்து யபிககலாவதே நீயிருந்தயோகத்திலும் க்ருபையில்லையென்றபடி. கண்ணா- க்ருஷ்ண, நீயேதகவிலை- நீயேக்ருபையுடையையல்லை, அவதாரணத்தால் யோகத்திலேசிறிது க்ருபையுண்டானாலும் நீயொருவனுமே க்ருபையுடையவனல்லையென்றபடி. தகவிலாதவன்- தகவிலன், இச்ஶப்தத்தாலே ஸம்போதனைச்சொல்லும்போது தகவிலையென்றாமிவையமாயிருக்கும். ||௧||

கண்ணா- பெண்பிறந்தார்க்கு ஸத்ருனென்று ப்ரஸித்தனான க்ருஷ்ண?, நீ- பெண்களுக்கு ஸம்மாயிருக்கும் ஸ்வபாவனென்று, ப்ரஸித்தனான நீ, தகவிலைதகவிலையே- க்ருபையுடையையல்லை, அவாக்கியால் ஒரு ப்ரகாரத்தாலும் க்ருபையுடையையல்லையென்றபடி. அவதாரணத்தால் இது நிஶ்சிதமென்றபடி. தடமுலை- விஶாலங்களான ஸ்தநங்களுடைய, தடம்- விஶாலம், ஸம்ஶ்லேஷதசையிலே விஶாலமேகாந்தமாதி ஸௌந்தர்யங்களைச்சொல்லிச்சொல்லி நீயநுபவிக்கும்படியானவென் ஸ்தநங்களுடைய வென்றபடி. புணர்தொறும்- ஶ்லேஷம்தோறும், புணர்- ஶ்லேஷம், நீ ஶ்லேஷம்பண்ணும் க்ஷணந்தோறும் என்றபடி. புணர்ச்சிக்காரா- ஸம்ஶ்லேஷத்துக்கடங்காததான, புணர்ச்சி- ஸம்ஶ்லேஷம், ஸம்ஶ்லேஷத்தினளவன்றிக்கே யதிப்ருத்தமான வென்றபடி. அதாவது ஸம்ஶ்லேஷகாலத்தளவாயிருக்கையன்றிக்கே [illegible] வமே [illegible]

மூ— சுகவெள்ளம்விசும்பிறந்தறிவைமூழ்கச்சூழ்ந்ததுகனவெனநீங்கியாங்கே* அகவுயிரகமகந்தோறுமுள் புக்காவியின்பரமல்லவேட்கையந்தோ* மிகமிகவினியுன்னைப்பிரிவையாமால் வீவநின்பசுநிரைமேய்க்கப் போக்கே* ॥உ॥

வீவநின்பசுநிரைமேய்க்கப்போக்குவெவ்வுயிர்கொண்டெனதாவிவேமால்*

ஆ— அந்தநிரதிசயஸம்ச்லேஷமெல்லாம் ஸ்வப்நஸமமாய் உன்பக்கலிலுள்ள நிரதிசயஸ்நேஹத்தினாலே பசுமேய்க்கப்போக்குக்காரணமாக நீபிரிகிறுயென்று நான்முடியக்கிடாய்ப்புகுகிறதென்கிறள். ॥உ॥

(வீவநின்) உன்பசுமேய்க்கப்போக்குக்காரணமாக நான்முடிவன், விரஹாக்நியாலே யென்னுடைய ஆத்மா தஹ்யமாந

இ— வித்யுக்ததுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறர் (அந்தநிரதிசயவித்யாதியால்) த்ருதீயபாதத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறர் (உன்பக்கலிலுள்ளவித்யாதியால்) ஸ்நேஹத்தினாலேஎன்றதற்கு முடியக்கிடாய்ப்புகுகிற தென்கிறத்தோடேயந்வயம். உன்னைப்பிரிவையாம் நின்பசுநிரைமேய்க்கப்போக்கு என்றந்வயிப்பது. இதற்குஸமர் தாத்பர்யமருளிச்செய்கிறர் (பசுமேய்க்கவித்யாதியால்) வீவன்என்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறர் (நான்முடியவித்யாதியால்) ॥உ॥

✳ மூன்றாம்பாட்டு ✳

துணையில்லையென்கிறத்தோடு ஸம்ஹிதாஸாரத்தால் யானிருந்துஎன்கிறதற்குப் ஸமித்தஸம்பந்தத்தை

ஸ— ஸமும் ஸம்பாவதிக்கும்படி யதிஸந்ஸ்நேஹமான வென்கை. சுகவெள்ளம்- ஸுகஸாகரமானது, வெள்ளம்- ஸாகரம், விசும்பிறந்து- ஆகாசத்தையதிக்ரமித்துப்போய், இறக்கை- த்யஜிக்கையாயிங்கு ஸங்கோசத் தைச்சொல்லுகிறது, நிஸ்ஸீமமாய் என்றபடி. அறிவை- என்னுடைய போதத்தை, இதற்கு சூழ்ந்து என்கிறத்தோடேயந்வயம். மூழ்க்க- மூழ்க்கும்படி, என்னுடையவறிவெல்லாம்போய் நான் மோஹிக்கையாம் படியென்கை. சூழ்ந்து- வ்யாபித்து, அது- அந்த ஸுகஸாகரமானது, கனவெண- ஸ்வப்நமென்னும்படி நீங்கி- நிவ்ருத்தமாய்ப்போய், அதுகனவெனநீங்கி என்கிறவிடத்தில் சூழ்ந்து என்கிற க்ரியாத்வயத்தாலே ஆநந்தயந்தோற்றுகையால் ஸுகஸாகரமானவப்போதே நிவ்ருத்தமாய்ப்போய்விட்டதென்று சோகம் தோற்றுகிறது. நீ பசுமேய்க்கப்போகவுத்யமித்தவாறே என்றுகருத்து. ஆங்கே- அவ்வவஸ்தையிலே இதுக்கு உள்புக்கு என்கிறத்தோடேயந்வயம். வேழ்க்கை- ஸுநிவேசமானது, உத்தரோத்தர ஸம்ச்லேஷாபிநி வேசமானதென்றபடி. அகவுயிர்- அந்தர்கதமான ப்ராணனுடைய, அகமகந்தோறும்- அந்தர்கதப்ரதேசங்கள்தோறும், ப்ராணவ்யாபித்திருக்கிற சரீராந்த: ப்ரதேசங்களெங்குமென்று பாவம். உள் புக்கு- உள்ளேப்ரவேசித்து, ஆவியின்பரமல்ல- ஆத்மாவின்பாரமன்று, அதற்காச்ரயமான விக்ரஹத் தால்பொறுக்க முடிகிறதில்லையென்றபடி. அந்தோ- அய்யோ! விரஹவ்யஸநமுனக்கு நானுபதேசிக்க வேண்டுவதே ஸம்ச்லேஷரஸமிருவருக்குமாயிருக்க விச்லேஷது:க்க மெனக்கொருத்திக்குமேயாவதே என்று கருத்து. இனி- இதின்மேலே, இத்தனை க்லேசானுபவங்களுக்குமேலே யென்றபடி. மிகமிக- மேலமேலென, உத்தரோத்தரமாகவென்றபடி. உன்னைப்பிரிவையாம்- உன்னை விச்லேஷிக்கையுண்டாம்படியான, பிரிவை என்கிறவிடத்தில் ஐகாரம் வாக்யாலங்காரம். பிரிவு- விச்லேஷம், நின்பசுநிரைமேய்க்கப்போக்கு- உன்னுடைய கோஸம்ரக்ஷணார்த்தமான கமநத்தாலே, போக்கென்று த்ருதீயார்த்தேப்ரதமா. வீவன்- நான்முடிவன், வீவனென்கிறவிடத்தில் அகாரஸ்ய நகாரோவர்ணலோப:. வீவுதல்- முடிதல், ஸம்ச்லேஷ ஸஹதானவுன்னுடைய கமநமானது யென்னை முடித்துவிடுமென்று பாவம். ஆதலால் காலத்ரயத்திலும் எனக்கு ஸுகமும் காணேனென்றுகருத்து. ஆல்- ஹா! ॥உ॥

நின்பசுநிரைமேய்க்கப்போக்கு- உன்னுடையகோஸம்ரக்ஷணார்த்தமானகமநத்தாலே, த்ருதீயார்த்தே ப்ரதமா, வீவன்- நான்முடிவன், பசுமேய்க்கை எனக்குஸ்வயம்மன்றோ அதெனக்குதவிரப்போமோ என்றிராதே அதுஉனக்கு ஸ்வயமாய்க்கிடாய் ஸஹிக்கப்புகுகிறதென்றுகருத்து. அதெங்ஙனேயென்னவத்தை யுபபாதிக்கிறள்மேல், எனதாவி- என்னுடையாத்மாவானது, உன்னைப்போலே என்றிராதேகிடாய் யென்னையுமென்றபடி. வெவ்வுயிர்க்கொண்டு- உஷ்ணமானநிச்வாஸத்தையுடைத்தாய், வெவ்வியது- உஷ்ணமானது, உயிர்- நிச்வாஸம், விரஹது:க்கத்தாலே உஷ்ணமாகநிச்வஸித்துஎன்றபடி. வேவம்- வேவாநின்றது, நிச்வாஸவாதவெ ங்களாலே யுலர்ந்து விரஹாக்நியாலே தஹ்யமாநமாகாநின்றதென்றபடி. ஆல்- ஹா, துணை- இத்தசையிலே

மூ—யாவருந் துணையில்லை யானிருந் துன்னஞ்சனமேனியையாட்டங்காணேன்* போவதன்றொருபகனீயகன்றாற்பொருகயற்கண்ணிணைநீருநில்லா* சாவதிவ்வாய்க்குலத்தாய்ச்சியோமாய்ப் பிறந்தவித்தொழுத்தையோர்தனிமைதானே* ॥௩॥

தொழுத்தையோர்தனிமையுந்துணைபிரிந்தார்துயரமுநினைகிலை கோவிந்தாவுன்*

ஆ—மாகாநின்றது. பின்னையொருதுணையுமில்லை, உன்வரவுபார்த்துக்கொண்டு நான்தனியேயிருப்பன், என்துணையான உன்னைவரவுகாணேன், நீயகன்றால் யிப்பகலெல்லாம் போவதுஞ்செய்யாது, இக்கண்ணணீருநில்லாது, இந்தவொருதலைமாத்திரமான ஸ்நேஹமானது சாலப்பொல்லாதாகாதேயென்கிறாள். ॥௩॥

இ—அருளிச்செய்கிறார் (உன்வரவிக்ருதியால்) உன்னஞ்சனவிக்ருதிக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (என்துணையிக்ருதியால்) காரியவாசகத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இந்தவொருதலையிக்ருதியால்) ஒருதலைமாத்ரமானவென்றது— உனக்கென்பக்கல் ஸ்நேஹமன்றிக்கே யென்கொருத்திக்குமே யுண்டாயிருக்கிறதானவென்றபடி. சாலப்பொல்லாதுஎன்றது- மிகவும்பொல்லாது என்றபடி. மரணபர்யந்தமாக்கிவிடுமென்கை. இக்கால் கீழ்ப்பாட்டிலே உன்னுடையபசுமேய்க்கப்போக்கில் நான்முடிவனென்றுசொன்னவளிப்பாட்டிலே முடியும்ப்ரகாரத்தை விஸ்தரிக்கிறாளென்று ஸங்கதிசொல்லிற்றாயிற்று. ॥௩॥

ஸ—யெனக்குத்துணையாவார், யாவருமில்லை- ஒருவருமில்லை, துணையானநீ கைவிட்டுப்போனாய், என்வ்யஸநத்தைப்பார்க்கமாட்டாமையாலே தோழிமார் எனக்குமுன்னேமாய்ந்து கிடவாநின்றார்கள், குயில்மயில்துடக்கமானவையெனக்கு உள்பகையாய்விட்டதென்றுகருத்து யானிருந்து- நான்ஜீவித்திருந்து, நீபிரிந்தால் வரக்கடவ மரணத்தைத்தான் க்ஷணத்திலேயடையப்பெற்றேனோ, இன்னமொருக்கால் காணுமோவென்றுநசையாலேயப்போதே முடியப்போகிறதில்லை, க்ஷணந்தோறு முன்னைக்காணாமையாலே வ்யஸநமும் முடிகிறதில்லையென்றுகருத்து. உன்னஞ்சனமேனியை- அஞ்ஜநம்போலே உஜ்ஜ்வலமான வுன்திருமேனியை, ஆட்டங்காணேன்- ஸஞ்சாரத்தைக்காணேன், ஆட்டம்- ஸஞ்சாரம், திகழ்க்கும் த்ருஷ்டிவிஷயமாவதொருவிதமும் உன்னழகியதிருமேனியோடேகூட வென்கண்முன்னேவந்து ஸஞ்சரிக்கக்காணேனென்றபடி. நீயகன்றால்- நீவிஶ்லேஷித்துப்போனால், ஒருபகல்- ஒருஅஹஸ்ஸுதானும், போவதன்று- போகத்தக்கதன்று, முடிகிறதில்லையென்றபடி. பொருகயல்- பொருகிறகயலைப்போலேயிருக்கிற, பொருகை- யுத்தம்பண்ணுகை, கலஹமாயிருக்கிற மத்ஸ்யங்கள்போலே விரஹவ்யஸநாதிஶயத்தாலே பக்ஷ்மங்களான வென்றபடி. கண்ணிணை- நயநயுகளத்தினுடைய, நீரும்- ஜலமும், நீருமென்கிறவிடத்தில் ஸமுச்சயார்த்தமகாரஸ்யாவ:. நில்லா- நில்லாது, என்னாலே நிறுத்தமுடியாதென்றபடி. போகிறவுன்னைத்தகைய ஶக்யமானாலும் பெருகிறகண்ணீரைத்தகைய முடிகிறதில்லையென்றுகருத்து. இவ்வாய்க்குலத்து- இந்தகோபகுலத்தில், ஆய்ச்சியோமாய்- இடைச்சிகளாய், ஆய்ச்சியர் இடைச்சியர், இச்ஶப்தத்தாலே தங்களைச்சொல்லிக்கொள்ளும்போது ஆய்ச்சியோமென்று ரூடமாயிருக்கும், பிறந்த- ஜநித்தவர்களான, இத்தொழுத்தையோம்- இந்ததொழுத்தைகளானவெங்களுடைய, தொழுத்தை- நிக்ருஷ்டை, இசஶப்தத்தாலே தங்களைச்சொல்லிக்கொள்ளும்போது தொழுத்தையோமென்று ரூடமாயிருக்கும், கிங்கரிகளானவிந்த வெங்களுடையவென்றபடி. தனிமைதான்- தனிமையானது, தாமென்றுஸாயிக்கம், ஏகாகித்வமானதென்றபடி. அதாவது:— நீயெங்களையுபேக்ஷித்திருக்கச்செய்தே எங்களுக்குண்டான மும்பக்கலுள்ள வொருதலைக்காமமானது என்கை. சாவது- மரித்துப்போமது, மிகவும் பொல்லாததுஎன்றபடி. ஏதேனுமொன்றைபொல்லாதது என்றுசொல்லப்புக்கவர்கள் அதுபாழ்த்தது என்று சொல்லுமாப்போலே சாவது என்றுசொல்லுகிறாள். ॥௩॥

தொழுத்தையோம்தனிமையும்- உன்னழகுக்குத்தோற்றுனக்கு கிங்கரிகளான வெங்களுடைய விரஹத்தையும், துணைபிரிந்தார்துயரமும்- எங்களுக்குத்துணையான வுன்னைப்பிரிந்துகிடக்கிற வெங்களுடைய து:கத்தையும், நினைகிலை- நினைக்கிறாயில்லை, பராமர்சிக்கிறாயில்லையென்றபடி. பிரிகிறவர் நாங்களென்றுமெங்களுக்குவருகிற து:கம் உன்னைப்பிரிகையால் வருகிறதென்றும் பராமர்சிக்கிறாயில்லையென்றபடி. அதாவது:— க்ஷணஸம்ஶ்லேஷைக ஜீவிகஸ்வபாவைகளாகையாலே யுன்னைப்பிரிந்தால் நாங்களொருக்ஷணம் ஜீவிக்கலாமோ "ந ஜீவேயம் க்ஷணமபி" என்னும்படி நீ ஸ்நேஹபாத்ரமாகையாலும் யுன்னைப்பிரிந்தால்வரும் து:கமுமயவிஶ்லேஷியிலுந் தானடங்குமோவென்று கருத்து. கோவிந்தா- கோவிந்

மூ— தொழுத்தனிற்பசுக்களையேவிரும்பித்துறந்தெம்மை [விட்டிட்டு] இட்டவைமேய்க்கப்போதி* பழுத்தநல்லமுதினின்சாற்றுவெள்ளம் பாவியேன்மனமகந்தோறுமுள்புக்கு* அழுத்தநின்செங்கனிவாயின கள்வப்பணிமொழிநினைதொறுமாவிவேமால்* ||ச||

ஆ—(தொழுத்தையோம்) அடியோங்களதனிமையையும் உன்னைப்பிரிந்து நாங்களபடுகிற வ்யஸநத்தையுமெண்ணாம்பாராதே உன்னுடைய பசுக்களையேபுகந்து எங்களைத்துறந்துபோகட்டு அவைமேய்க்கப்போதியென்னை, 'உன்னுடையகடாக்ஷமே யாபகமாயிருக்கிற நான் உன்னைப்பிரிந்துபோகையாவதென்' என்றாப்போலே ஸாரூபமாய் போக்யதமமாய் சுகிதஸ்பரமாயிருப்பன சிலபணிமொழிகளை யருளிச்செய்தருள இவையிறே நினைக்கநினைக்கவென்னை மாய்க்கிறனவென்கிறாள் ||ச||

✳நாலாம்பாட்டு.✳

இ— துணைபிரிந்தார்துயரமுமென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (உன்னைப்பிரிந்தித்யாதியால்) எங்களைத்துறந்தித்யாதியாலே ஸம்மதியுமஸம்மதியும். எங்ஙனேயென்னில்? கீழொருதலைக்காமமென்று தான் சொன்னவர்த்தத்தை யிப்பாட்டிலேயவன் தங்களையுபேக்ஷிக்கிற ப்ரகாரத்தைச்சொல்லி யுபபாதிக்கிறாளென்று ஸம்மதமாகிறது. அவனுடைய ஸௌந்தர்யலாவண்யாதிகளநேகங்களிருக்கப் பணிமொழியை விசேஷித்துச்சொல்லுகிறது எதென்ன? வ்யதிபபிக்கிறார் (உன்னுடையகடாக்ஷமேயித்யாதியால) ஸாரஸ்யமாய் போக்யதமமாய் சுகிதஸ்பரமாயென்கிறவிதத்தாலே த்ருதீயவாதாத்பர்யம். ஸம்ப்ருஹீதமாய்த்து. நினைதொறுமித்யாதிகளுக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (இவையிறேயித்யாதியால) ||ச||

ய— இது ஸாபிப்ராயஸம்போதநம், கோவிந்தாபிஷேகம்பண்ணினது கோகோபஜாதிகளிரண்டையும் ரக்ஷிக்கைக்காகவன்றோ? கோஜாதிரக்ஷணமோ த்ருதத்துக்கோ வென்றுகருத்து. உன்- உன்னுடைய, இதுக்கும் பசுக்களோடேயந்வயம். உனக்கு ரக்ஷ்யங்களானவென்றபடி. இதுவும் ஸாபிப்ராயவிசேஷணம். உனக்கு ரக்ஷ்யவர்க்கமிரண்டாயிருக்க ஒன்றையேவிரும்புகை யுசிதமோவென்றபிப்ராயம் தொழுத்தனில்- தொழுவென்று மாட்டுத்தொழுவம், தன்என்றது ஸாமீப்யம், ஒருவாஸஸ்தானதேசத்திலே நீவளைத்துவைத்த ஜந்துக்களை, யோரக்ஷிக்கலாவது, உன்தோளையே யவலம்பநமாகப் பத்திவிடாதாரை ரக்ஷிக்கலாகாதோ என்றுகருத்து. பசுக்களையே- கோக்களைத்தானே, ஏவகாரணம், தங்களையவஜ்ஞையாமையைக் காட்டுகைக்காக, உன்னைப்பிரிந்தால் வ்யஸநப்படவறியாதவற்றையோ நீரக்ஷிப்பது, பிரிந்தால் வ்யஸநப்படுவாரை யாதரிக்கலாகாதோவென்றுகருத்து. விரும்பி- ரக்ஷித்து. எங்களையணைத்துக்கொண்டு கிடக்கச்செய்தேயும நெஞ்சுபசுக்களின்மேலேயாய்த்திருப்பது, இங்குள்ளது திவ்யாபிரமணமே யென்றுகருத்து. எம்மை- எங்களை, துறந்து- பரித்யஜித்து, அவைத்தின்பக்கலாஸக்தியாலே யெங்கள்பக்கல ஸம்மதத்தைவிட்டுஎன்று வடதாத்பர்யம். இட்டு- எறிந்துவிட்டு, த்ருணங்களைப்போகட்டுமாப்போலே யெங்களைப்போகட்டுவிட்டு என்றபடி. அவை- அந்தப்பசுக்களை, மேய்க்கப்போதி- மேய்க்கைக்காகப்போகாநிற்புதி, ஆதலால நாங்கள் ஒருதலைக்காமத்தால் வரிதவிபாநின்றோமென்றுகருத்து உங்களையொழிய வெனக்காஸ்யாபரணமுண்டோ வென்றாப்போலே சில விநயோக்திகளை யவனருளிச்செய்ய அதைக்கேட்டுச சொலலுகிறாள்மேல, பழுத்த- பரிபக்வமான, பரிபக்வமானவென்றபடி. நல- நலலதான, நிர்தோஷயானவெனறபடி. அமுதின்- அம்ருதத்தினுடைய, இன்சாறறுவெள்ளம். இனியசாறறுவெள்ளம்போலேயிருக்கிற. இனியது- போக்யமானது, போக்யதமஸாரம்போலே யிருக்கிறவெனறபடி. இது பணிமொழிக்கு விசேஷணம். நின்- உன்னுடைய, செங்கனிவாயின்- சிவந்தபிம்பம்போலேயிருக்கிற திருப்பவளத்தினுடைய, இதுக்குப் பணிமொழியோடே அந்வயம். கள்வ- க்ருத்ரிமங்களான, எங்களுடைய ஸர்வஸ்வாபஹாரக்ஷமங்களானவென்றபடி. பணிமொழி- தாழ்வையுடைத்தான சொற்களை, பணி- தாழ்வு, மொழி- உக்தி, ஸவிநயோக்திகளையென்றபடி. பாவியேன்- சுக்ருதமும் விஷமாம்படியான பாபத்தையுடையேனான வென்னுடைய, மனமகந்தோறும். ஹ்ருதயாகாரப்ரதேசங்கள்தோறும், உள்புக்கழுத்த- உள்ளேபுக்கழுந்தும்படிபண்ண, எனக்குமறக்கவொண்ணாதபடி என்னெஞ்சிலேவைத்து ஸ்வீகரிக்கையாலேயென்றபடி. நினைதொறும்- நினைக்குஞ்க்ஷணங்களிலெல்லாவற்றிலும், ஆவி- என்னுடைய ப்ராணனானது, வேம்- வேவாநின்றது, தஹ்யமானமாகா

மூ—பணிமொழி நினைதொறுமாவிவேமால்பகனிரைமேய்க்கியபோயகண்ணா* பிணி[மது]அவிழ்மல்லிகைவாடை தூவப்பெருமதமாலையும்வந்தின்றாலோ* மணிமிகுமார்பினின்முல்லைப்போதென்வனமுலைகமழ்வித்துன் வாயமுதந்தந்து* அணிமிகுதாமரைக்கையையந்தோவடிச்சியோந்தலைமிசைநீயணியாய்* ॥௫॥

ஆ—(பணிமொழி) 'பசுமேய்க்கப் போகாதிருக்கச்செய்தே இப்படிப்படுகிறதென்' என்ன பசுமேய்க்கப் போனாயேயல்லையோ பசுமேய்க்கப்போய் பகலுமெல்லாம் முடிந்து பிணியவிழ்மல்லிகைவாடைதூவப் பெருமதமாலையும் வந்ததுகிடாய் ஈண்டபகலெல்லா முன்னைப்பிரிந்தாலுள்ள வ்யஸநமெல்லாந்தீரும்படி என்னையொருக்காலபுல்கி ஸூக்தஸஞ்ஜீவநமாய் ஸூக்தங்களுமான திவ்யோக்திகளாலே யென்னையுஜ்ஜீவிப்பித்து என்னுடைய வார்த்தியெல்லாம் போம்படி யுன்னுடைய வழகியதிருக்கைகளை யென்றலையிலே யொருக்கால் வைத்தருளா யென்கிறாள். ॥௫॥

✳ ஐந்தாம்பாட்டு ✳

இ— பசுக்களைமேய்க்கிறாய் எங்களைவிட்டு அவைத்தைமேய்க்கப்போகாநின்றாயென்று கீழ்ப்பாட்டிற்சொன்னவர்த்தத்தை பகல்நிரையித்யாதியாலே யிப்பாட்டிலுஞ் சொல்லுவானேனென்ன வதரிப்பிக்கிறார் (பசுமேய்க்கவித்யாதியால்) பகல்நிரையித்யாதிக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (பசுமேய்க்கப்போனாயேயல்லையோவென்று) உதீபவாதத்திலர்த்தத்தை யருளிச்செய்கிறார் (பசுமேய்க்கப்போய்ப் பகலுமெல்லாம்முடிந்துஎன்று) மணிமிகுவித்யாதிக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஈண்டபகலெல்லாமித்யாதியால்) உன்வாயமுதந்தந்துஎன்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (ஸூக்தஸஞ்ஜீவநமித்யாதியால்) தாமீபவாதத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (என்னுடையவித்யாதியால்) ॥௫॥

ஈ—கின்றதென்றபடி. ஆல்- ஹா! ।௬।

பகல்- திவாவெல்லாம், நிரை- கோவர்க்கத்தை, நிரையென்று வர்க்கம். இங்கே கோவர்க்கம் விவக்ஷிதம். மேய்க்கிய- மேய்க்கைக்காக, போய- போய்விட்டவனான, கண்ணா- க்ருஷ்ணா? பணிமொழி- உன்னுடைய ஸவிநயோக்திகளை, நினைதொறும்- நினைக்கிறக்ஷணந்தோறும், ஆவி- என்னுடையப்ராணனானது, வேம்- வேகாநின்றது, தஹ்யமாநமாகாநின்றதென்றபடி. ஆல்- ஹா, பிணியவிழ்- கட்டவிழ்கிற, பிணி- கட்டு, தத்ஸ்வபாவமான ஸங்கோசம்போய் விகஸிப்பாநிற்கிறவென்றபடி. மல்லிகை- மல்லிகையை, மல்லிகாகுஸுமத்தையென்றபடி. வாடை- உத்தரமாருதமானது, தூவ- தூவாநிற்க, வீசாநிற்கவென்றபடி. இதுக்கு வந்தின்றாலோவென்கிறத்தோடே யந்வயம். பெருமதம்- மஹாத்பமான, உத்தமஜம்போலே ஹர்ஷமாஹியானவென்றபடி. தனக்கு பாதகமாயிருக்கையாலே இப்படிசொல்லுகிறாள், மாலையும்- ஸாயம்ஸந்த்யையும், வந்தின்று- வந்துவிட்டது, ஆலோ- ஹாஹா, மணிமிகு- மணியானது மிகுந்திருக்கிற, ஸ்ரீகௌஸ்துபமென்றும் பரம்பியிருக்கிறவென்றபடி. மார்பினில்- உன்னுடைய வக்ஷஸ்தலத்தில், முல்லைப்போது- முல்லைபுஷ்பங்களாலே, என்வனமுலை- என்னுடையவழகிய ஸ்தநங்களை, வனமென்று- அழகியது, கமழ்வித்து- வாஸிப்பித்து, கமழ்விக்கை- வாஸிப்பிக்கை, உன்திருமார்பின் முல்லைப்பூவாலே என்முலைகளைப் வாஸிப்பிக்கவேணுமென்கையாலே ஸம்ச்லேஷித்யாகுபன்றியே ஸம்ஸ்லேஷத்தாலே ஸாத்ஸம்ச்லேஷத்தையபேக்ஷித்தபடி. உன்வாயமுதம்- உன்னுடைய வாகம்ருதத்தை, உன்னுடைய ஸ்ம்ருதோக்திகளையென்றபடி, தந்து எனக்குத்தந்தருளி, கர்ணாம்ருதங்களான வுன்னுடைய உக்திகளாலே என்னையாச்வாஸிப்பித்தென்றபடி. அணிமிகு- அணிகள் மிகுத்திருந்துள்ள, அணி- அலங்காரம், ரத்நாங்குலீயகாதிதிவ்யாபரணசோபிதமானவென்றபடி. தாமரைக்கையை- தாமரைப்பூவைப்போலேயிருக்கிற வுன்னுடைய திருக்கையை, இதுக்கு அணியாயென்கிறத்தோடே யந்வயம். அடிச்சியோம- உனக்கு கிங்கரிகளானவெங்களுடைய, அடியான்- கிங்கரன், ஸ்ரீத்யாதகெ டிடைச்சியென்னுமாப்போலே அடிச்சியென்றாகிறுவமாயிருக்கும், இச்சப்தத்தாலே தங்களைச்சொல்லிக்கொள்ளும்போது அடிச்சியோமென்று ஏகவசனமாயிருக்கும், தலைமிசை- தலைமேலே, நீ- எங்களுக்கு ஸூக்தஸஞ்ஜீவியான நீ, அணியாய்- அலங்காரம்போலே வைத்தருளவேண்டும், அந்தோ- அய்யோ! இது கஷ்டமான க்ஷேபணமாகும் ॥௫॥

மூ— அடிச்சியோந்தலைமிசைநீயணியாயாழியங்கண்ணாவுன்கோலப்பாதம்* பிடித்ததுநடுவுனக்கரிவையரும்
பலரதுநிற்கவெம்பெண்மையாற்றோம்* வடித்தடங்கண்ணிணைநீருநில்லாமனமுநில்லாவெமக்கதுதன்னாலே*

ஆ—(அடிச்சியோம்) உன்னுடைய அழகியதிருக்கைகளை அடியோங்களுடைய தலையிலேவைத்தருளித் திருக்கண்களாலே குளிரப்பார்த்தருளாயென்று பின்னையுமிங்ஙனேசொல்லுமளவில் 'ஒருபகல்மாத்திரமேயன்றோ பசுமேய்க்கப்போய் நான்பிரிந்திருப்பது இதுக்கிங்ஙனேபடவேணுமோ' என்று அவன்சொல்ல பசுமேய்க்கப்போகையாவது உனக்கபிமதைகளாயிருப்பாரோடே நீகலந்து பரிமாறுகையிறே, ஆனபின்பு இங்ஙனே படவேணுமோவென்று சொல்லலாமிறே யுனக்கு, அதுநிற்க நாங்களுன்னைப்பற்றியல்லது தரிக்கமாட்டாத பிறவிபிறக்கையாலே உன்னைப்பிரியில் நாங்கள்தரிக்கமாட்டோம் இக்கண்ணுநீருநில்லாது நெஞ்சுதளராநின்றது ஆதலால் நீ பசுநிரைமேய்க்கப்போகிறதெங்களுக்கொன்றும் பொறுக்கவொண்ணாது எங்களுயிரானது விரஹாக்நியாலே வேவக்கிடாப்புகுகிறதென்கிறாள். ॥ ௬

✳ ஆறும்பாட்டு ✳

இ— அடிச்சியோமித்யாதிக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (உன்னுடையவித்யாதியால்) ஆழியங்கண்ணா என்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (திருக்கண்களாலேயித்யாதியால்) அவனுடைய பசுமேய்க்கப்போக்குநிமித்தமாக வ்யஸநப்படுகிறவிப்பாட்டிலே உனக்கரிவையரும் பலரித்யாதியாலே நாயிகாந்தரஸம்ஶ்லேஷநிமித்தமாக வ்யஸநப்படுகை ஸங்கதமன்றேயென்ன விதுக்குத் தாத்பர்யஞ்சொல்லுகைக்காக அவதாரிப்பிக்கிறார் (பின்னையுமிங்ஙனேயித்யாதியால்) சொல்லுமளவிலென்கிறதற்கு அவன்சொல்லவென்கிறத்தோடே அந்வயம். அதுநடுவுனக்கரிவையரும்பலர் என்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (பசுமேய்க்கப்போகையாவதித்யாதியால்) அதுநிற்க வெம்பெண்மையாற்றோமென்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (அதுநிற்கவித்யாதியால்) வெடிப்புஎன்கிறதற்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (எங்களுக்கொன்றுமித்யாதியால) வேமெமதித்யாதிக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (எங்களுயிரானதித்யாதியால்) ॥ ௬ ॥

ப— அடிச்சியோம்— அநந்யகதிகளானவெங்களுடைய, தலைமிசை— தலைமேலே, நீ— ஸர்வேஶ்வரனான நீ, அணியாய்— அலங்காரமாகவைத்தருளவேணும், உன்தாமரைக்கையை இதிஶேஷ꞉. ஆழியங்கண்ணா— ஸமுத்ரம்போலே அழகியகண்களையுடையவனே, ஆழி— ஸமுத்ரம், அம்— அழகியது, அகாதஸமுத்ரம்போலே அதிதீர்க்கவிஶால ஶீதலஸ்வச்சகம்பீர ரமணீயகாந்திகல்லோலிதங்களான திருக்கண்களையுடையவனே யென்றபடி. இது ஸாபிப்ராயஸம்போதநம், உன்திருக்கண்களாலே யென்னைக்குளிரக் கடாக்ஷித்தருளவேணுமென்றபிப்ராயம், அதுநடுவு— அந்தப்பசுமேய்க்கப்போகிற வ்யாபாரத்தின்நடுவே, உன்கோலப்பாதம்— உன்னுடைய அலங்காரபூதையான திருவடியை, பிடித்து— அவலம்பித்து, தங்களுக்கு போக்யமாகப்பற்றியென்றபடி. உனக்கு— நிரதிஶயஸௌந்தர்யனான வுனக்கு, அரிவையரும்— அபிமதைகளாயிருப்பார்களும் அரிவையர்— அபிமதைகள், பலர்— அநேகருளர், யத்வா, அரிபர்— அருமையான யௌவநத்தையுடையவர்கள், ஶைஶவமென்னலாம்படி ஸூக்ஷ்மமான யௌவநத்தையுடையவர்களானவென்றபடி உனக்குப்பலர்— உனக்கநேகர்களுண்டென்றபடி. அதுநிற்க— அதுகிடக்கிடு, நீமற்றும்சிலபோகிமாரை விரும்புகிறாயென்று அதுக்கு ரோஷிக்கப்படுகிறோமல்லோமென்றபடி. எம்பெண்மை— எங்களுடையஸ்த்ரீத்வத்தாலே, த்வதீயாபேக்ஷயா, நாங்கள் பெண்பிறவியில் பிறக்கையாலேயென்றபடி. ஆற்றோம்— பொறுக்கமாட்டோம், உன்னைப்பிரியில் தரிக்கமாட்டோமென்றபடி. உங்களுக்கு த்வதீயம் ஸ்வாபாவிகமானால் வ்யாக்ஷின்வருமளவும் வருந்தியாகிலும் தரிக்கவேண்டாவோவென்னில் எங்கள்நிலையைப் பார்க்கமாட்டாயோ வென்கிறாள்மேல், வடி— கூரியதுகளான, வடியென்று கூரியது, ஸூக்ஷ்மகடாக்ஷ தீக்ஷ்ணதங்களானவென்றபடி. யத்வா— நாடகஸூத்ரபலிதமாகுமாம்படி தீக்ஷ்ணகடாக்ஷ வீக்ஷணஶாலிகளானவென்றபடி. தடம்— விஶாலங்களான, ஸம்ஶ்லேஷதஶையிலே யுன்னைவிப்படி கொண்டாடுமவையானவென்றபடி. கண்ணிணை— நேத்ரங்களுடைய யுகளத்தில், நீரும்— பாஷ்பஜலமும், ஶோகஜந்யமான இதிஶேஷ꞉. நில்லா— நில்லாது, மனமும்— எங்களுடைய ஹ்ருதயம், அந்தர்விஷயாஸுவோ இதிஶேஷ꞉, நில்லாது— ஸ்திரமாயிராது, தரித்திருக்கமாட்டுகிறதில்லையென்றபடி. அதுதன்னாலே— இப்படி ஹ்ருதயாஸ்தைர்யமாகையாலே, நின்பசுநிரைமேய்க்கப்போக்கு— உன்னுடைய கோஸம்ரக்ஷணார்த்தமான ஸஞ்சாரமானது, எமக்கு— எங்களுக்கு, வெடிப்பு— உத்வேககரம், ஜ்வாலை

மூ—வெடிப்புநின்பசுநிரைமேய்க்கப்போக்குவேமெமதுயிரழல்மெழுகிலுக்கே* ॥௬॥

வேமெமதுயிரழன்மெழுகிலுக்குவெள்வளைமேகலைகழன்றுவீழ்* தூமலர்க்கண்ணிணைமுத்தஞ்சோரத்துணை

முலைபயந்தெனதோள்கள்வாட* மாமணிவண்ணாவுன்செங்கமலவண்ண மென்மலரடிநோவநீபோ*

ஆ— (வேமெமதுயிர்) விரஹாக்நியாலே எங்களுயிர்வேவ ஆஶ்ரயம்முடிகையாலே வளைகளும் மேகலையும் கழன்றுவீழ உன்னைக்காணாமையாலே புதுக்கணித்தவென்கண்கள் அருவிசோர்ந்து துணைமுலைபயந்து என் தோள்கள்வாட அதின்மேலே உன்திருமேனியும் ஸுகுமாரமான வுன்திருவடிகளும்நோவ நீபோய்

✱ எழாம்பாட்டு ✱

இ— வேமெமதுயிரென்று தொடங்கி வெள்வளையித்யாதியை யநந்தரம் நிர்தேசித்ததுக்குத் தாத்பர்யமருளிச் செய்கிறார் (ஆஶ்ரயமித்யாதியால்) கழன்றுவீழவென்றதுக்கு தோள்கள்வாடவென்கிறத்தோடே அந்வயம். தூமலரென்கிறவிஶேஷணத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (உன்னையித்யாதியால்) பூர்வம் உன்னைக்கண்டு ஸந்தோஷமாயிருந்தவையான வென்றபடி. அதன்மேலேயென்கிறதற்கு நோவவென்கிறத்தோடே அந்வயம். மாமணிவண்ணாவித்யாதிக்குத் தாத்பர்யமருளிச்செய்கிறார் (உன்திருமேனியுமித்யாதியால்) எவன்கொலாங்கே

ஸா— ஸமமென்றபடி. வெடிப்பு என்று உபத்ரவமானதுக்குப்பேர், எமதுயிர்- அஸ்மதீயமான ஆத்மாவானது, அழல்மெழுகில்- அக்நிமத்யமான மெழுகில்காட்டில், அழல்- அக்நி, உக்கு- உருகி, வேம்- விரஹாக்நியாலே தக்தமாய்விடும். ॥௬॥

